திராவிட இயக்க இதழ்கள்

தொகுதி - 1

இ. சுந்தரமூர்த்தி
மா.ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

திராவிட இயக்க இதழ்கள்

தொகுதி 1

பதிப்பாசிரியர்

இ. சுந்தரமூர்த்தி
மா.ரா. அரசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies
இரண்டாவது முதன்மைச்சாலை
மைய்ப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Dravida Iyakka Idhalgal, Part - I
Editors	:	E. Sundaramoorthy M.R. Arasu
Publisher	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani, Chennai - 600 113 Ph:22542992
Publication No	:	541
Language	:	Tamil
Date of Publication	:	2005
Edition	:	First
Paper used	:	TNPL 18.6 Kg Maplitho
Size of the Book	:	Demy 1/8
Printing Types	:	10 Points
No. of Pages	:	xii+204
No. of Copies	:	1200
Price	:	Rs.60/- (Rupees Sixty only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject	:	Studies on Tamil Journalism

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113.

பதிப்புரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தனது ஆய்வுப் பணிகளுக் கிடையே மாநில, தேசிய, உலக அளவிலான பல்வேறு கருத்தரங்குகளை நிகழ்த்தித் தமிழ் வளர்ச்சிக்கு அரும்பணி யாற்றிவருகிறது என்பதைத் தமிழ் உலகம் நன்கறியும். நிறுவனம் தொடங்கியகாலம் தொட்டுப் பல்வேறு பொருண்மைகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன. கருத்தரங்கக் கட்டுரைகள் தொகுக்கப்பெற்று நூலாக்கம் செய்யப்படு கின்றன. இவ்வரிசையில் இந்நிறுவனத்தில் 'இதழியல்' என்ற பொதுப் பொருண்மையில் 11 கருத்தரங்குகளை இந்நிறுவனம் நடத்தியுள்ளது.

தமிழகத்தில் அரசியல், சமுதாய பொருளாதார மாற்றங்களுக்கு இதழ்கள் குறிப்பிடத் தக்க பணியாற்றியுள்ளன. தமிழக வரலாற்றில் சமூக,அரசியல் பொருளாதார மாற்றங்களுக்குத் திராவிட இயக்கங்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளன. இவ்வியக்கங்களின் வளர்ச்சிக்கு இவற்றின் இதழ்கள் காரணமாக இருந்தன. இத்தகு இயக்கங்களின் இதழ்களை ஆய்வுசெய்து ஆவணப்படுத்தும் நிலையில் இவ்வியக்கங்களின் உண்மையான வரலாற்றை நாம் அறிய முடியும்.

இந்நிலையில் திராவிட இயக்க இதழ்கள் பற்றி நடத்திய கருத்தரங்கின் வெளியீடாகத் **திராவிட இயக்க இதழ்கள் தொகுதி–1** என்ற இந்நூல் இந்நிறுவனத்தால் வெளிக்கொணரப்பெறுகின்றது. 'திராவிடன்' தொடங்கிப் 'புது வாழ்வு' முடிய ஏழு இதழ்களும் வரலாற்று நிகழ்வுகள், செயற்பாடுகள் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் ஆற்றிய பெரும்பணி ஆகியவற்றை தெளிவுற எடுத்துக் கூறுகின்றன. இவ்வகையில் **திராவிட இயக்க இதழ்கள் தொகுதி–1** என்ற நூலை வெளியிடுவதில் இந்நிறுவனம் பெருமையடைகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும் **தமிழ் வளர்ச்சி பண்பாடு – மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு பு. ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும் **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

ஒளி அச்சுக்கோப்புச் செய்த திரு. சு. கண்ணன், திருமதி என். இலட்சுமிக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் அச்சகத் தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை

நாள் : 22-6-05

இயக்குநர்

பதிப்புரை

திராவிட இயக்கத்தின் வளர்ச்சியில் அவ்வியக்கத்தைச் சேர்ந்த இதழ்களுக்கும் பெரும் பங்கிருக்கிறது. பிற எந்த இயக்கங்களைவிடவும் தமிழகத்தில் இதழ்களின் தாக்கத்தால் மக்களையும் தலைவர்களையும் ஒருங்கிணைத்ததில் திராவிட இயக்க இதழ்களின் பணி முதன்மையானது; முறையான பதிவுக்கு உரியது.

தென்னிந்திய நல உரிமைச்சங்கம் - நீதிக்கட்சி - திராவிடக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என, ஒன்றிலிருந்து ஒன்றாக, படிப்படியாகப் பல்வேறு பரிணாமங்களில் வளர்ந்த இவ்வியக்கங்களின் ஆணிவேர்களாகத் திகழ்ந்தவை நூற்றுக்கும் மேற்பட்ட திராவிட இயக்க இதழ்களாகும். தியாகராசச் செட்டியார், தந்தை பெரியார் காலம் முதற்கொண்டு இக்காலம் வரையிலும் 'திராவிட இயக்க ஏடு' என்ற தலைப்பிட்டே பல இதழ்கள் தமிழகத்தில் தோன்றி வளர்ந்திருக்கின்றன.

காங்கிரஸ் பேரியக்கம், பொதுவுடைமை இயக்கம் ஆகிய தேசிய இயக்கங்களைப் போலவே திராவிட இயக்கமும் தோற்றம் பெற்றது. திராவிட இனத்தின் பண்பாட்டை, வளத்தை, மொழியை, ஆளுமையை இங்குவாழும் சிறுபான்மை பிராமணர்கள் எப்படிச் சிதைத்துக் கொண்டிருந்தனர் என்பதை மிகவும் வேகமாக, மக்களிடம் அவர்களுக்கு உகந்த வெளிப்படையான, வீறுமிக்க, கவித்துவமான எளிய ஒரு புதிய மொழிநடையில் திராவிட இயக்கத்தின் இதழ்கள் கொண்டு சென்றன. அவற்றின் வரலாற்றை இதழ்கள் வழியாக இனம் கண்டு கொள்வது பிறிதொரு முறையில் திராவிட இயக்க வரலாற்றைத் தெரிந்து கொள்வதாக அமையும்.

அனைத்து இதழ்களையும் ஆய்வுக்கு உட்படுத்தி ஆராய்வது என்பது மிகப்பெரிய இதழ்ப்பணி என்பதை உணர்ந்து, தமிழ் இதழியல் போக்கை உணர்ந்துகொள்ள நடத்தப்பெறும் இக்கருத்தரங்கில் திராவிட இதழ்களின் பணிகளைத் தெரிந்து கொள்ளவும் மேலும் பலர் இத்தளத்தில் உழைத்திடவும் இரண்டு தொகுதிகள் கொண்டுவருவது என முடிவு செய்யப்பட்டது. அதன்படி தேர்வு செய்யப்பெற்ற இதழ்கள் இத் தொகுதிகளில் இடம் பெறுகின்றன. இம் முதல் தொகுதியில் ஏழு இதழ்கள் குறித்த விரிவான செய்திகள் கட்டுரையாளர்களால் தரப்பட்டுள்ளன.

பேராசிரியர் மா. இளஞ்செழியனின் கருத்தரங்கத் தொடக்கவுரையும் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றது.

கருத்தரங்கத் தொடக்கவுரை

முதன்மையான திராவிட இயக்க இதழ்களில் ஒன்றான போர்வாள் இதழின் ஆசிரியரும் பேராசிரியருமான திருமிகு மா. இளஞ்செழியன் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து, திராவிட இயக்க வரலாற்றோடு அதன் இயக்க இதழ்களையும் குறிப்பிட்டு விரிவான உரையாற்றினார். அவர் திராவிட இயக்க இதழ்களின் காலகட்டத்தை நான்காக வகைப்படுத்தி, இவ்விதழ்கள் அவற்றின் காலப்பகுதியில் இயக்கத்தை எவ்வாறு வளப்படுத்தின; இளைஞர்களை எப்படியெல்லாம் திராவிட இயக்கத்தின்பால் ஈர்த்தன; தமிழ் உரைநடையில் எதுகை மோனை, அடுக்குத் தொடர்கள் போன்றவற்றின் துணையோடு 'திராவிடத் தமிழ் நடை' என்ற ஒன்றை எவ்வாறு உருவாக்கின என்பதையெல்லாம் தமது தொடக்கவுரையில் விளக்கியுள்ளார். இயக்கத்திற்கு வளம் சேர்க்க எத்தனை வகையான இதழ்களை யெல்லாம் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த தலைவர்களும் பிறரும் நடத்தினார்கள் என்பது பற்றியும் விரிவான தரவுகளைத் தந்துள்ளார்.

திராவிட இயக்க இதழியல் போக்குகளைக் கூறும்பொழுதே அவ்இயக்கம், அன்றைய தமிழ்நாட்டில் செல்வாக்குடன் திகழ்ந்த காங்கிரஸ் மற்றும் பொதுவுடைமை இயக்கம் ஆகியவற்றிற்கு எத்தளங்களில் மாற்றாக வளர்ந்தது என்பதையும் இணைத்துக் காட்டுகிறார். இறுதியாகத் திராவிட இயக்க இதழ்கள் செய்த சாதனைகளை ஒன்பது அடிப்படை பண்புக்கூறுகளாகப் பகுத்துச் செறிவாக விளக்கித் தம் கருத்தரங்க உரையை நிறைவாக நிகழ்த்தி, கருத்தரங்கிற்குச் சிறப்பான தொடக்கத்தையும் ஏற்படுத்தித் தந்தார்.

திராவிடன் (1917)

பிராமணர் அல்லாதாரை ஒருங்கிணைக்கும் நோக்கில் 1917ஆம் ஆண்டில் 'திராவிடன்' இதழ் தோன்றியது. இவ்விதழை அச்சிட்டு வெளியிடுகின்றவராகச் சர்.பி. தியாகராச செட்டியார் திகழ்ந்தார். "இத்தமிழ்த் தினசரிப் பத்திரிகையில் ராஜாங்க விஷயங்கள், விவசாய சமாச்சாரங்கள், வியாபார சங்கதிகள். . . . முதலிய பல விஷயங்களும் தக்க வித்வான்களால் எழுதப்பட்டுவரும். நமது நோக்கங்களை முன்னுக்குக் கொண்டுவர முயலுவார்கள் என்று நம்புகிறோம்" என்ற அறிவிப்போடு 'சவுத் இந்தியன் பீப்பில்ஸ் அஸோசியேஷன் லிமிடெட்' வழியாகத் திராவிடன் வெளிவந்தது.

திராவிடர்கள் பிராமணர் அல்லாதவர்கள்; அவர்கள் தென்னிந்தியாவில் மக்கள் தொகையில் பிராமணர்களைவிடப் பலமடங்கு அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள் என்றாலும் எல்லாப் பதவிகளிலும் சுகங்களை அனுபவிப்பதிலும் ஆங்கிலேயர்களின் அரசு இயந்திரங்களை இயங்கச் செய்வதிலும் பிராமணர்களே முன்னின்றார்கள். அதனால் அவர்களின் நலன்கள் பாதுகாக்கப்பட்டுத் திராவிடர் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன என்ற கருத்தாக்கத்தைத் திராவிடன் இதழ் சிறப்பாகத் தமிழர்கள் மனத்தில் நிலைபெறச் செய்தது. இவ்விதழின் தலையங்கங்கள் சிறப்பானவை.

காங்கிரஸ் தேசிய நீரோட்டத்தில் மக்களை ஒருங்கிணைக்க இதழ்களை நடத்திய காலத்தில், அதற்கு நேர் எதிர்நிலையில் தமிழர், சீர்திருத்தம், மொழியுணர்வு, வர்ணாசிரம தர்மக் கொள்கைக்கு எதிர்ப்பு போன்ற பல நிலைகளில் இவ்விதழ் செயல்பட்டது. இதில் மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை, வெ.ப.சுப்பிரமணிய முதலியார், எஸ்.எஸ். அருணகிரிநாதர், நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை, ரா.பி. சேதுப்பிள்ளை போன்ற பலர் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர்.

புதுவை முரசு (1930)

"சுயமரியாதைக் கொள்கைகளைப் பிரெஞ்சிந்திய மக்களின்பால் பரவச் செய்து அவர்கட்குக் கிடைத்துள்ள 'சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்' என்னும் மூன்றின் உண்மை நலன்களை அவர்கள் அனுபவிக்கும் வகையில் 'பிரெஞ்சுக் குடியரசு வாழ்க' என முழங்குவது நம் புதுவை முரசின் கடனாம்" என்ற அறிவிப்போடு புதுவை முரசு இதழ் புதுவையிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

ம. நோயல் என்பவர் இவ்விதழை 10.11.1930இல் தொடங்கி நடத்தினார். புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் கவிதைகள், கட்டுரைகள் பல வெளிவருவதற்கு இவ்விதழ் இடமளித்தது. புரட்சிக்கவிஞரின் 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப்பாட்டு', 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' ஆகியன புதுவை முரசின் வெளியீடுகளாக வெளிவந்தன. இவற்றைப்போன்றே முற்போக்குச் சிந்தனை கொண்ட பல நூல்களும் புதுவை முரசு பதிப்புகளாக வந்துள்ளன.

இவ்விதழில் தலையங்கம் ஒன்றும் 'உடன்முழக்கு' என்ற தலைப்பில் துணைத் தலையங்கம் ஒன்றும் இடம்பெற்றன. இவற்றில் முற்போக்குச் சிந்தனைகள், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம், வைதீக எதிர்ப்பு போன்றன முன்னிலைப் படுத்தப்பட்டன.

புதுவை முரசில் பாரதிதாசனோடு மா. சிங்காரவேலர், குத்தூசி குருசாமி, எஸ். சிவப்பிரகாசம், சாமி சிதம்பரனார் போன்றோர் எழுதினர். இவ்விதழில் பாரதிதாசன் ஏராளமான புனை பெயர்களில் கவிதைகள், கட்டுரைகள், கதைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார்.

விடுதலை (1935)

சமூக ஏற்றத்தாழ்வுகள், பண்பாட்டுச் சீரழிவுகள், தமிழ்மொழி ஏற்றம் இழந்த நிலை, மூடப் பழக்க வழக்கங்கள், பெரும்பான்மை தமிழர்கள் சிறுபான்மை பிராமணர்களிடம் கடவுளின் பெயரால் அடிமைப்பட்டுப்போன நிலை போன்ற அனைத்திலிருந்தும் மக்கள் விடுபட 'விடுதலை' இதழ் தோன்றியது. தமிழகத்தில் நீதிக்கட்சி வலுவாக இருந்த காலத்தில், 1-6-1935இல் தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தார் இவ்விதழைத் தோற்றுவித்தனர். பின்னர் பெரியாரே இவ்விதழை நடத்தினார். அறிஞர் அண்ணா, அ. பொன்னம்பலனார், மணியம்மை, சாமி சிதம்பரனார், கி. வீரமணி போன்ற பலர் பெரியாரோடு இணைந்து இவ்விதழை வளர்த்தனர். விடுதலை, பல செய்தித்தாள்களுக்கு இடையில், கருத்து இதழாக வளர்ந்து திராவிட இயக்கத் தத்துவத்தைத் தமிழகத்தில் பரப்புவதற்குப் பெரிதும் துணைநின்றது.

கலப்புமணம், சாதி ஒழிப்பு, மதச்சடங்குகளை ஒழித்தல், பிராமணர் அல்லாதாருக்குச் சமூகநிதி கிடைக்க ஏற்பாடுகள் செய்தல், பொதுவுடமை இயக்கத்தோடு தேவையான இடங்களில் இணைந்து செயலாற்றும் பாங்கு போன்றவற்றில் கருத்துவழிப் பிரச்சாரத்தை விடுதலை தொடர்ந்து செய்தது. அத்துடன் சமூகத்தில் பின்தங்கியவர்களுக்கு இட ஒதுக்கீடு முதற்கொண்டு பல நல்ல நிகழ்வுகளை ஏற்படுத்தியதில் விடுதலையின் பங்களிப்பு பெரிது.

திராவிடநாடு (1942)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் முதல்வராகத் தமிழ்நாட்டில் பதவி வகித்த பேரறிஞர் அண்ணா அவர்களால் திராவிட நாடு 1942ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது. இவ்விதழின் பெரும்பாலான பக்கங்களில் அண்ணா அவர்களே திராவிடச் சிந்தனைகளுக்கான கருத்துகளைப் பல தளங்களில் எழுதுவது வழக்கம். மக்களிடையே நிலவி வந்த மூட நம்பிக்கைகளை எடுத்துக் காட்டி மக்கள் அவற்றைக் களைந்து பகுத்தறிவு வழி நிற்க வேண்டும் என்ற முயற்சியில் எழுதப்பட்டவைகளே மிகுதியாக உள்ளன. கடவுளின் பெயரால் நிகழும் அநீதிகள், புராணங்கள் வழி அறிவை

அடகுவைத்து வாழும் அவல நிலைகள் . . . சமய நூல்கள் ஆகியவற்றைக் கண்டித்து எழுதிய பகுதிகள் ஏராளம் என்று திராவிட நாடு இதழின் உள்ளடக்கம் பற்றிக் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார். 'சந்திரோதயம்', 'நீதிதேவன் மயக்கம்', 'சந்திரமோகன்' ஆகிய நாடகங்கள், 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற கட்டுரைத் தொடர், தம்பிக்கு எழுதிய கடிதங்கள் ஆகியன இவ்விதழில் அண்ணாவின் குறிப்பிடத்தக்க படைப்புகளாகும்.

இந்தி எதிர்ப்புத் தொடர்பான செயல்பாடுகள் பற்றிய விவரங்கள், திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டுத் தேசிய நீரோட்டத்தில் இருந்துகொண்டே திராவிடரின் உரிமைகளுக்காகப் பாடுபட்ட நிகழ்வுகள் போன்ற இயக்கத்தின் இன்றியமையாத செயல்பாடுகளை இயக்கத்தாரின் மனங்களில் வலிமையாகப் பதிய வைத்து அவர்களை இயங்க வைத்த வகையில் ஓர் இயக்கமாகவே திகழ்ந்தது அண்ணாவின் திராவிட நாடு.

முரசொலி (1942)

கலைஞர் மு. கருணாநிதி 1942இல் முரசொலி இதழை வெளிக்கொணர்ந்தார். அண்ணாவைப் போலவே எல்லோரையும் கவர்ந்திழுக்கும் தமக்கானதொரு உரைநடைப் பாணியைத் தம் எழுத்தில் இவர் கையாண்டார். எதுகை, மோனை, சொற்செட்டு, நேருக்குநேர் உரையாடும் பாங்கில் அமைந்த எழுத்துமுறை ஆகியவை முரசொலிக்குத் தமிழகத்தில் சிறப்பான வரவேற்பைத் தந்தன.

திருவள்ளுவர் ஆண்டைப் போலவே பெரியார் ஆண்டை அறிமுகப்படுத்தி முரசொலி புதுமைசெய்தது.

முரசொலியின் தலையங்கங்கள், மிகச் சிறப்புடன் அந்தக் காலத்தில் இளைஞர்களைத் தம்பால் ஈர்க்கும் தன்மையில் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் எழுதப்பட்டன. தொடக்கத்தில் வார ஏடாகவே வெளிவந்த முரசொலியில் இதழாசிரியர் தலையங்கங்கள் எழுதுவதோடு நாட்டு நடப்புச் செய்திகளையும் மிகச் சிறப்பாக அவருக்கே உரிய தமிழில் வெளியிட்டார். அத்துடன், அவருடைய புதையல், வெள்ளிக்கிழமை, சுருளி மலை, ரோமாபுரிப் பாண்டியன் போன்ற நாவல்களும் வார முரசொலியில்தான் வந்தன.

முரசொலியில் பயிற்சி பெற்றுத் தம் எழுத்தாற்றலை வளர்த்துக் கொண்டவர் பலர். அவர்களுள், நாஞ்சில் மனோகரன், முரசொலி மாறன், எஸ்.எஸ். தென்னரசு, பா. செயப்பிரகாசம்,

பி.சி. கணேசன், கே. சொர்ணம், அமிர்தம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இன்றும் தொடர்ந்து வெளிவரும் முரசொலி, திராவிட இயக்க இதழியல் வரலாற்றில் தடம் பதித்த இதழாகும்.

போர்வாள் (1947)

காஞ்சி மணிமொழியாரும் அவருடைய மகனான மா. இளஞ்செழியனும் இணைந்து இவ்விதழை நடத்தினர். இது, 16.8.1947இல் இருந்து வெளிவரத் தொடங்கியது. போர்வாள் இதழ், திராவிட நாடு பெறுதல் என்னும் நோக்கத்தில் முனைப்பாகத் தன் கடமையைச் செய்துள்ளது. இவ் இதழின் தலையங்கம் ஒன்று, "இழந்த விடுதலையைத் திரும்பப் பெறவேண்டும் என்று உறுதி செய்து கொண்டு, 'பெற்றால் திராவிட நாடு, இல்லையேல் இடுகாடு' என்ற சூளுரை தந்துவிட்டு. . . . ஆயிரமாயிரம் இளங்காளைகளின் கரங்களிலே நேரேசென்று தங்குவது இவ்வாள்" எனப் போர்வாளின் பெருமையைக் கூறுகிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் பேரறிஞர் அண்ணா அவர்களும் பாராட்டிய இவ்விதழ் மக்களின் மனங்கவர்ந்த இதழாக இருந்தது. திராவிடக் கொள்கையில் பிடிப்புக் கொண்ட இளைஞர்கள் இவ்விதழைத் தவறாது படித்தமையைப் பெரியாரும் பாராட்டியுள்ளார். 'பெரியார் சிறப்பு மலர்', 'பெரியார் பிறந்தநாள் மலர்', 'தி.மு.க. முதலாண்டு நிறைவு நாள் மலர்', 'தி.மு.க. முதலாவது மாநாட்டு மலர்', 'கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு மலர்' போன்றவற்றை வெளியிட்டு, போர்வாள் ஓர் அரிய தகவல் பெட்டகமாகத் திகழ்ந்ததும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். ஐம்பதுகளில் திராவிட முன்னேற்றக் கழக நாட்குறிப்பைப் போர்வாள் வெளியிட்டது. இதில் இக்கழகத்தின் உறுப்பினர்களின் பெயர்கள், சட்டதிட்டங்கள், கோட்பாடுகள், முகவரிகள் போன்ற பல அரிய தகவல்கள் இருந்தன. காஞ்சி மணிமொழியார் உருவாக்கிய 'திராவிடப் பத்திரிகையாசிரியர் சங்கம்' என்ற அமைப்பும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

புதுவாழ்வு (1948)

1948இல் தொடங்கி 1949ஆம் ஆண்டிலேயே நின்றுபோன இதழ் புதுவாழ்வு. இதனை நடத்தியவர் பேராசிரியர் க. அன்பழகன். பத்து மாதங்கள் மட்டுமே வெளிவந்த இவ்விதழின் தலையங்கங்கள் சிறப்பாகக் குறிக்கத்தக்கன. திராவிடக் கொள்கைகளை விளக்கும் தலையங்கங்களாக அவை அமைந்தன. ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு கோணத்தில் அவற்றை ஆசிரியர் எழுதியுள்ளார். இந்தி

எதிர்ப்பு, மொழியுணர்வு, பழந்தமிழ் இலக்கியங்களைத் தமிழ்மக்கள் அறியுமாறு செய்தல், இயக்கப் பணிகளில் கழகத்தார் செயல்பட வேண்டிய நடைமுறைகளை அறிவுறுத்தி வழிப்படுத்துதல் போன்ற பல்வேறு செய்திகளின் அடிப்படையில் இவ்விதழின் கட்டுரைகள் அமைந்துள்ளன. படிப்பவர் மனங்களில், சொல்லவந்த செய்திகளைப் பதிய வைக்கும் எளிய, உணர்ச்சிமிக்க நடையைக் கையாண்டுள்ளார் இதழாசிரியர்.

இவ்விதழில் மு.வ., இரா. நெடுஞ்செழியன், அப்துல் அஜீஸ், அரங்கண்ணல், அ. மீனாம்பாள் போன்றோர் தம் எழுத்துக்களைப் பதிவு செய்துள்ளனர்.

நிறுவனச் சார்பில் நடைபெறும் இதழியல் கருத்தரங்குகளில் ஆய்வுரை, அமர்வுத் தலைமையுரை, கருத்துரை, சிறப்புரைகள் வழங்குவதற்கு உரிய அறிஞர்களைத் தேர்வு செய்யும் குழுவினர் முனைவர் பொற்கோ, முனைவர் இரா. இளவரசு, முனைவர் இ. சுந்தரமூர்த்தி, திரு. மா.ரா. அரசு ஆகியோருக்கு நன்றி

இவ்விதழியல் கருத்தரங்குகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தோடு இணைந்து நடத்த இசைவளித்ததோடு கருத்தரங்குகள் சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு நல்கிய இந்நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கு நன்றி.

இந்நூல் வெளியீட்டில் பெரிதும் ஈடுபாடும் ஆர்வமும் காட்டிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

பல்வேறு காலங்களில் பல்வேறு உயரிய நோக்கங்களுக்காகத் தொடங்கப்பெற்ற இதழ்களைக் கட்டுரையாளர்கள் அரிதாகத் தேடிச் சிறப்பாக வடிவமைத்துத் தந்திருக்கிறார்கள். அவர்களின் கட்டுரைகள் முறையாகத் தொகுக்கப்பெற்று நூல்வடிவம் பெறுவது தமிழ் ஆய்வாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் நலம்பயக்கும் என்பதில் ஐயமில்லை. தகவல் பெட்டகமாகக் கட்டுரைகளை உருவாக்கிய அனைவருக்கும் நன்றி.

இந்நூல் உருவாகும்போது அச்சுப்பணிகளில் பெரிதும் துணைநின்ற முனைவர் கி. ஜெயகுமார் அவர்களுக்கு நன்றி.

பொருளடக்கம்

1.	தொடக்கவுரை	-	மா. இளஞ்செழியன்	1
2.	திராவிடன்	-	பெ.சு. மணி	14
3.	புதுவை முரசு	-	மலையமான்	56
4.	விடுதலை	-	இறையன்	69
5.	திராவிட நாடு	-	கு. விவேகானந்தன்	92
6.	முரசொலி	-	பி.எல். இராசேந்திரன்	111
7.	போர்வாள்	-	ப. மகாலிங்கம்	156
8.	புதுவாழ்வு	-	கூவ. எழிலரசு	182

கட்டுரையாளர்கள்

1. பேராசிரியர் மா. இளஞ்செழியன்
39. கே.டி.எஸ். மணி தெரு
மாமல்லன் நகர்
காஞ்சிபுரம் - 631 502

2. திரு. பெ.சு. மணி
11. இராமகிருஷ்ணாபுரம்
இரண்டாவது தெரு
மேற்கு மாம்பலம்
சென்னை - 600 033

3. முனைவர் மலையமான்
பழைய எண்: 632
ரங்காச்சாரி சாலை
சென்னை - 600 018

4. திரு. இறையன்
பெரியார் திடல்
50, ஈ.வெ.கி. சம்பத் சாலை
வேப்பேரி
சென்னை - 600 007

5. முனைவர் கு. விவேகானந்தன்
2217, AF - பிளாக், ஏழாவது தெரு
11ஆவது மெயின் ரோடு
அண்ணா நகர்
சென்னை - 600 040

6. திரு பி.எல். இராசேந்திரன்
167, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை
சென்னை - 600 014

7. முனைவர் ப. மகாலிங்கம்
ஒருங்கிணைப்பாளர்
நாட்டு நலப்பணித்திட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

8. முனைவர் கூ.வ. எழிலரசு
தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
சேலம் - 636 001

கருத்தரங்கத் தொடக்கவுரை

பேராசிரியர் மா. இளஞ்செழியன்

திராவிட இயக்கமும் திராவிட இயக்க இதழ்களும்

திராவிட இயக்கத்தால் இயக்க இதழ்கள் வளர்ந்திருக்கின்றன. அதுபோலவே இயக்க இதழ்களால் திராவிட இயக்கமும் வளர்ந்திருக்கிறது. எனவே இயக்கத்தின் தோற்றம், வளர்ச்சி, காலந்தோறும் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டால்தான் இயக்க இதழ்களின் சிறப்பு இயல்புகளையும் சாதனைகளையும் தெளிவாக உணரமுடியும்.

திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக் கட்டங்கள்

திராவிட இயக்கத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், அதனை நான்கு கால கட்டங்களாகப் பிரிக்கலாம் என்பது என் கருத்து.

முதல் கட்டம் : 1916 முதல் 1925 வரை

அரசியல் துறையிலும் அரசாங்க நிர்வாகத்திலும் தென்னகத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியினரே முழு ஆதிக்கம் செலுத்துவதை அகற்றவும், மிகப் பெரும்பான்மையாக உள்ள ஏனைய மக்களுக்கு உரிய நியாயமான உரிமைகளைப் பெற்றுத்தரவும் 1916இல் தோன்றிய மாபெரும் இயக்கமே திராவிட இயக்கம். அந்த ஆண்டில் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்ட அமைப்பே, பிற்காலத்தில் நீதிக் கட்சி என்று அழைக்கப்பட்ட, 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' (South Indian Liberal Federation) ஆகும். இந்த இயக்கத்தைத் தோற்றுவித்த பெருந்தலைவர்கள் சர். பி. தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர், டாக்டர் சி. நடேச முதலியார் ஆகிய மூவர் ஆவர்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தைத் தோற்றுவித்தபோதே, அத்தலைவர்கள் மிக்க முன்யோசனையுடன், 'திராவிடன்' என்னும் தமிழ் நாளிதழ், 'ஆந்திர பிரகாசினி' என்னும் தெலுங்கு நாளிதழ், 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில நாளிதழ் ஆகியவற்றைத் தொடங்கி நடத்தலாயினர். இக்கால கட்டத்தில் தோன்றிய திராவிட இதழ்களில் தலையாய இடத்தைப் பெறுவது, திராவிடன் நாளிதழே. இந்த இதழ்,

1916 முதல் 1931 வரை 15 ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்றது. நெடுங்கால உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்த திராவிடப் பெருங்குடி மக்களைத் தட்டி எழுப்பி, அவர்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் இந்த இதழ் ஆற்றியுள்ள பணி ஈடு இணையற்றது; 20ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தின் வரலாற்றில் தனி முத்திரை பதித்திருப்பது. இந்த இதழின் ஆசிரியர் குழுவில் இருந்த ஜனகசங்கர கண்ணப்பர், பக்தவத்சலம் பிள்ளை, பெரும்புலவர் மணி திருநாவுக்கரசு முதலியார், புலவர் எஸ்.எஸ். அருணகிரிநாதர், பண்டித வில்வபதி செட்டியார், சுவாமி உருத்திரகோட்டீஸ்வரர் ஆகியோருள் பெரும்பாலோர் தமிழ்ப் புலவர்களாக இருந்தது சிறப்பாகக் குறிக்கத்தக்க செய்தி ஆகும். திராவிட இயக்க வரலாற்றில் தொடக்கக் காலத்திலிருந்தே, வீறு பெற்று எழுந்த திராவிட இன உணர்ச்சியோடு, சிறந்த தமிழ்ப் பற்றும் தமிழ் உணர்வும் கூடவே வளர்ந்து வந்திருப்பதை இச்செய்தி நன்கு எடுத்துக்காட்டுகிறது.

ஜஸ்டிஸ் என்னும் ஆங்கில நாளிதழ், படிப்பறிவு மிக்க மக்களிடத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்ததால், அந்நாளிதழின் பெயரே ஜஸ்டிஸ் பார்ட்டி (Justice Party) என்று கட்சியின் பெயராக மக்களால் அழைக்கப்படும் நிலை ஏற்பட்டது. ஜஸ்டிஸ் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நீதி என்பது பொருள். எனவே ஜஸ்டிஸ் பார்ட்டி என்று ஆங்கிலத்திலும், நீதிக்கட்சி என்று தமிழிலும் அழைக்கப்படும் மரபு உருவாகி, இன்றளவும் அம்மரபே நிலைத்து நிற்கிறது. கட்சியின் அதிகாரப் பூர்வமான பெயர் மறைந்துவிட்டு, கட்சியின் நாளிதழின் பெயரால் கட்சி அழைக்கப்படும் மரபு நிலைத்திருப்பது, திராவிட இயக்க வளர்ச்சியில் இதழ்களின் செல்வாக்கு எவ்வளவு வலிமையாக இருந்தது என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக்காட்டுகிறது.

இக்கால கட்டத்தில் வெளிவந்த, திராவிட இயக்க இதழ்களில் பிராமண ஆதிக்க எதிர்ப்பும், பிராமணத் தலைவர்களின் பிடியில் சிக்கிய தென்னாட்டுக் காங்கிரசை எதிர்ப்பதுமே முதலிடம் பெற்றன. திராவிட நாகரிகச் சிறப்பு, தமிழ் முதலிய திராவிட மொழிகளின் பெருமை முதலியன சற்றுக் குறைந்த அழுத்தத்துடன் எழுதப்பட்டன.

இரண்டாம் கட்டம் : 1925 முதல் 1937 வரை

1925இல், அதுவரை தமிழ் நாட்டுக் காங்கிரசின் மாபெரும் தலைவர்களில் ஒருவராக விளங்கிவந்த பெரியார் ஈ.வே.ரா.

காங்கிரசைவிட்டு வெளியேவந்து, 1927இல் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். சாதிவேற்றுமையை ஒழித்தல், பெண் அடிமைத்தனத்தை அகற்றல், மூட நம்பிக்கைகளை முறியடித்தல், காலத்துக்கு ஒவ்வாத சடங்கு சம்பிரதாயங்களை ஒதுக்கித் தள்ளுதல், சமயச் சடங்குகள் அற்ற சீர்திருத்தத் திருமணங்களை நடத்தல், மத எதிர்ப்பு, கடவுள் மறுப்பு முதலிய அதிதீவிரக் கொள்கைகளை அளவற்ற எதிர்ப்புக்கு இடையே, தமிழகம் முழுவதும் இந்த இயக்கம் மிகவேகமாகப் பரப்பலாயிற்று. நீதிக் கட்சியின் தலைவர்களால் சுயமரியாதை இயக்கத்தின் மத எதிர்ப்பு, கடவுள் மறுப்பு முதலிய தீவிரக் கருத்துகளை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்றாலும் அந்த இயக்கத்தின் மற்ற கொள்கைகளில் அவர்கள் உடன்பாடு உடையவர்களாக இருந்தனர். பேராற்றல் படைத்த காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்கும் அவர்களுக்குச் சுயமரியாதை இயக்கத்தின் ஆதரவு தேவைப்பட்டது. ஆகவே இக்கால கட்டத்தில் நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் தனித்தனியாக - ஆனால் - ஒன்றுக்கு ஒன்று இணக்கமாகப் பணியாற்றின. இரண்டிற்கும் இடையே முரண்பாடு இல்லை; வேறுபாடுதான் இருந்தது. இக்கால கட்டத்தில் சுயமரியாதை இயக்கத்தை நாடு முழுவதும் பரப்புவதில் தலைசிறந்த இடத்தைப் பெற்றது, பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஈ.வே.ரா. அவர்களால் நடத்தப்பட்ட 'குடி அரசு' என்னும் வார இதழே ஆகும். தமிழகத்தின் சமுதாய வாழ்க்கையில் இந்த இதழ் ஏற்படுத்திய அளவு மாற்றங்களை, அதே வேகத்தோடும் விறுவிறுப்போடும் வேறு எந்த இதழும் ஏற்படுத்தவில்லை. இது வரலாற்றில் பதிந்துவிட்ட உண்மை. இந்த இதழைப் பெரியார் காங்கிரஸ் கட்சியில் இருந்தபோதே தொடங்கி விட்டார் என்பதும், இரண்டோர் ஆண்டுகளுக்குப் பின் சுயமரியாதை இயக்கச் சூறாவளியாகச் சுழன்று சுழன்று பணியாற்றிய இந்த இதழின் தொடக்கவிழாவுக்குத் தலைமை தாங்கி நடத்தியவர், சைவ சமயப் பெருந்துறவியும் ஆற்றல் மிக்க தமிழ் அறிஞருமாகிய ஞானியார் அடிகள் என்பதும் இங்கே தவறாமல் குறிக்கப்படவேண்டிய செய்திகள்.

மூன்றாம் கட்டம் : 1937 முதல் 1949 வரை

இக்கால கட்டத்தில் குறிப்பிடவேண்டிய செய்திகள் இரண்டு. 1937இல் சென்னை மாகாணம் என்று அக்காலத்தில் அழைக்கப்பட்ட பகுதிக்கு முதலமைச்சராக இருந்த திரு. இராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்ட கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து, திராவிட

இயக்கம் அறப்போர் தொடுத்து நடத்தியது முதலாவது செய்தி. இப்போரின் விளைவாகத் தமிழ் உணர்வு பொங்கி எழுந்தது. முன் எப்போதும் இல்லாத அளவு திராவிட இயக்கத்திலும் இயக்க இதழ்களிலும் தனித்தமிழ் உணர்வும் தமிழ் இலக்கிய ஆர்வமும் இக் காலகட்டத்தில் முதலிடம் பெற்றன.

இக்கால கட்டத்தின் இரண்டாவது செய்தி, நீதிக்கட்சியும் சுயமரியாதை இயக்கமும் நெருங்கிவந்து, இரண்டும் ஒன்றாக இணைந்த நிலையாகும். 1937 பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பெருவெற்றி பெற்றது; நீதிக்கட்சி படுதோல்வி அடைந்தது. இத் தோல்வியால் மனம் உடைந்த நீதிக்கட்சித் தலைவர்கள் பலர் பொதுவாழ்வை விட்டே விலகிவிட்டனர். சிலர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டனர். இத்தகைய சூழ்நிலையில் நீதிக் கட்சியை அழிவிலிருந்து காக்கும் பொறுப்பு, சுயமரியாதை இயக்கத்தின் தோள்களில் விழுந்தது.

1938இல் சுயமரியாதை இயக்கத் தலைவர் பெரியார் அவர்களே நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே ஆண்டு டிசம்பர் திங்களில் சென்னை மாநகரில் நடைபெற்ற நீதிக்கட்சியின் 14ஆவது மாநாட்டுக்கும் பெரியாரே தலைமை தாங்கினார். நீதிக் கட்சித் தலைவராகப் பெரியார் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, அக்காலத்தில் சுயமரியாதை இயக்கத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்த தமிழ் அறிஞர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம், கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விசுவநாதம் அவர்கள் கட்சியிலிருந்து விலகியபின் சுயமரியாதை இயக்கத்தின் சிந்தனைச் சிற்பியாக விளங்கிய அறிஞர் அண்ணா, செயலாளர் பொறுப்பை ஏற்றார். நீதிக்கட்சியின் தலைவர், செயலாளர் முதலிய முக்கியமான பொறுப்புகள் யாவும் சுயமரியாதைத் தலைவர்களிடம் வந்துவிட்ட பிறகு, இயற்கையாகவே, நீதிக்கட்சிக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் இருந்த வேறுபாடுகள் குறைந்து, இரண்டு இயக்கங்களும் கிட்டத்தட்ட ஒன்றே என்னும் நிலை ஏற்பட்டு விட்டது.

1944இல் நீதிக்கட்சியின் 16ஆவது மாநில மாநாடு சேலம் நகரில் நடைபெற்றபோது, நீதிக்கட்சியின் அதிகார பூர்வமான பெயர் (official name) தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்பதற்குப் பதிலாக, இனி, 'திராவிடர் கழகம்' என அழைக்கப்படும் என்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அறிஞர் அண்ணா அவர்களால்

கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட இத் தீர்மானம், பெரியார் அவர்களாலும் மற்ற தலைவர்களாலும் 'அண்ணாதுரைத் தீர்மானம்' என்றே செல்லமாக அழைக்கப்பட்டது. ஆண்டுகள் செல்லச்செல்ல, திராவிடர் கழகம், ஏறத்தாழ சுயமரியாதை இயக்கமாகவே பணியாற்றத் தொடங்கிவிட்டது.

இக்கால கட்டத்தில் நடைபெற்ற திராவிட இயக்க இதழ்களில், நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகிய இரண்டின் கருத்துகளும் இடம் பெற்றன. 1942இல் அறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட 'திராவிட நாடு' வார இதழ், இக்கால கட்டத்தின் திராவிட இயக்க இதழ்களின் தலைசிறந்த பிரதிநிதியாக விளங்கி, 1963 வரை நடைபெற்றது. திராவிட இயக்க இதழ்களில் மட்டுமல்லாமல், பொதுவாகத் தமிழ் இதழியல் வரலாற்றிலேயே, திராவிட நாடு ஈடு இணையற்ற ஓர் இடத்தைப் பெற்றுவிட்டது என்பது முழு உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை. ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்களின் இதயங்களைக் கவர்ந்த இலட்சிய கீதமாக அது விளங்கியது. தமிழ் எவ்வளவு ஆற்றல் மிக்க மொழி என்னும் உண்மை, திராவிட நாடு இதழில் அண்ணா அவர்களால் தீட்டப்பட்டுவந்த அழகிய எழுத்தோவியங்களால் தெள்ளத்தெளிவாக விளங்கியது. திராவிட இயக்கத் தோழர்கள் மட்டும் அல்லாமல், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்கூட, அந்த இதழின் கவர்ச்சிமிக்க தமிழ் நடைக்காக அளவற்ற ஆர்வத்துடன் வாரந்தோறும் அதைப் படிக்கலாயினர். ஞாயிறுதோறும் காஞ்சிபுரத்திலிருந்து வெளிவந்த அந்த இதழ், சென்னை உட்பட வெளியூர்கள் அனைத்திலும் திங்கட்கிழமை காலை கிடைக்கும். திங்கட்கிழமை எப்போது வரும் வரும் என்று ஒவ்வோர் ஊரிலும் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆவலுடன் காத்திருந்து, அன்றைய பொழுது விடிந்ததும் பத்திரிகைக் கடைகளுக்கு ஓடிச்சென்று இதழை வாங்கி, எல்லையற்ற ஆர்வத்துடன் இதழ் முழுவதையும் படித்து விட்டுத்தான் வேறுவேலை பார்ப்பது அக்கால வழக்கம். பொது இடத்தில் அமர்ந்து கொண்டு, ஒருவர் அந்த இதழை உரத்த குரலில் படிப்பதும், அவர் அருகில் அமர்ந்து கொண்டு ஏராளமான இளைஞர்கள் அதை ஆர்வத்துடன் செவிமடுப்பதும், அக்காலத்தில் பல்வேறு ஊர்களில் திங்கள்தோறும் நடைபெற்ற ஓர் அரிய காட்சி ஆகும்.

இந்தக் கால கட்டத்துக்கு இரு ஆண்டுகளுக்கு முன்பே - அதாவது 1935இல் தொடங்கப்பட்டு, இன்றளவும் தொடர்ந்து

நடைபெற்று வருகிற திராவிட இயக்க நாளிதழ் ‘விடுதலை’ ஆகும். 1935இல் நீதிக்கட்சித் தலைவர்களால் அக்கட்சியின் அதிகார பூர்வமான ஏடாகத் தொடங்கப்பட்ட இந்த நாளிதழ், 1937இல் நீதிக்கட்சி சட்டமன்றத் தேர்தலில் பெருந்தோல்வி அடைந்த பிறகு, பெரியாரின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் கொள்கைகளைப் பரப்பும் சீரிய பணியில் அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக விடுதலை நாளிதழ் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது, சிறப்பாகக் குறிக்கத்தக்க செய்திகளில் ஒன்று.

நான்காம் கட்டம் : 1949 முதல் தற்காலம் வரை

1949இல் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என்னும் ஆற்றல் மிக்க அமைப்பு உருவாகி, மளமளவென வளர்ந்தது. அக்கழகம் அது தோன்றிய பதினெட்டே ஆண்டுகள் முடிந்த நிலையில், 1967இல் தமிழகத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில், ஆள் பலமும் பண பலமும் படைத்த மாபெரும் சக்தியாகிய காங்கிரஸ் கட்சியையே படுதோல்வி அடையச்செய்து, ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியது. தமிழகம் மட்டும் அல்லாமல் இந்தியா முழுவதுமே திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த மாபெரும் வெற்றியைக் கண்டு வியந்து பாராட்டும் நிலை ஏற்பட்டது. இந்த வெற்றியை உருவாக்கியதில் அக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற ‘திராவிடநாடு’, ‘நம்நாடு’, ‘முரசொலி’ முதலிய பல்வேறு இதழ்களுக்குக் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு. இது நடுநிலையாளர் எவரும் மறுக்கமுடியாத உண்மை.

முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களால் 1942இல் துண்டுத் தாள்கள் வடிவத்தில் தொடங்கப்பட்டு, செல்வாக்குமிக்க வார இதழாக வளர்ந்து, 1956 முதல் ஆற்றல் மிக்க நாளிதழாக வெளிவந்து கொண்டிருக்கும் முரசொலி இதழ், இக்கால கட்டத்தின் திராவிட இயக்க இதழ்களின் பிரதிநிதியாகக் கொள்ளத் தக்கது ஆகும். அறிஞர் அண்ணாவின் ‘திராவிட நாடு’ இதழுக்கு அடுத்தபடியாகத் தமிழர் சமுதாயத்தில் தலைசிறந்த செல்வாக்கைப் பெற்று, ஒளிவீசித் திகழ்வது இந்த ஏடு. இந்த இதழின் வாயிலாகக் கலைஞர் அவர்கள் தீட்டிவரும் ‘நீட்டோலை’ முதலிய பகுதிகள், ஆயிரக்கணக்கான வாலிபர்களின் உள்ளங்களைக் கவர்ந்த வசீகர கீதங்களாக இருந்து வருகின்றன. அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, 1971, 1989, 1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில்

திராவிட முன்னேற்றக் கழகம் வியக்கத்தக்க வெற்றிகளை ஈட்டி, ஆட்சியை அமைத்ததில், முரசொலி முதலிய திராவிட இயக்க இதழ்களுக்கு மறுக்க முடியாத பங்கு உண்டு.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் முதலிய வேறு பல அமைப்புகளின் சார்பில் சில நாளிதழ்களும் வார இதழ்களும் இக்கால கட்டத்தில் தோன்றி, அவ்வவற்றின் கட்சிகளின் வளர்ச்சிக்காகவும் கட்சிக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவும் பணிபுரிந்து வருகின்றன.

திராவிட இயக்க இதழ்களின் சிறப்புக் கூறுகள்

1. ஏராளமான இதழ்கள்: 1916இல் திராவிட இயக்கம் தொடங்கப்பட்டதிலிருந்து தற்காலம் வரை நடத்தப்பட்ட திராவிட இயக்க இதழ்கள், குறைந்தது இருநூறுக்கு மேல் இருக்கும். இவற்றில் விடுதலை நாளிதழ் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகவும், முரசொலி இதழ் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அண்ணாவின் திராவிட நாடு வார இதழ், 1942 முதல் 1963 வரை - 21 ஆண்டுகள் நடைபெற்றிருக்கிறது. பெரியாரின் குடியரசு வார இதழ், ஏறத்தாழ அதே அளவு ஆண்டுகள் நடத்தப் பட்டிருக்கிறது. பல இதழ்கள், சில மாதங்களோ சில ஆண்டுகளோ நடைபெற்று, அதன்பின் நின்றுவிட்டிருக்கின்றன. இன்று தொடக்க உரை ஆற்றும் நானும் என் அருமைத் தந்தையார் காஞ்சி. மணிமொழியார் அவர்களும் இணை ஆசிரியர்களாக இருந்து நடத்திய போர்வாள் வார இதழ், 1947இல் தோன்றி, 1954 வரை நடத்தப்பட்டு, 1955, 1956 ஆகிய இரண்டு ஆண்டுகள் நிறுத்தப்பட்டிருந்து, 1957, 1958 ஆகிய ஆண்டுகளில் மீண்டும் நடத்தப்பட்டது. திராவிட இயக்க இதழ்கள் நடைபெற்ற கால அளவு எத்தகையதாக இருந்தாலும், இருநூறுக்கு மேற்பட்ட இதழ்கள் இந்த இயக்கத்தின் சார்பில் நடைபெற்றிருக்கின்றன என்பது, இந்த இயக்கத்திற்கே உரிய ஒரு தனிப் பெருமை. தமிழ் நாட்டிலுள்ள காங்கிரஸ், கம்யூனிஸ்ட் முதலிய வேறு எந்த அரசியல் இயக்கத்தின் சார்பிலும் இவ்வளவு வியக்கத்தக்க எண்ணிக்கையில் இதழ்கள் நடைபெறவில்லை என்பது, இச்சமயத்தில் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தியாகும்.

2. திராவிட இதழ்களின் பொற்காலம்: 1916இல் நீதிக்கட்சி தொடங்கப்பட்டதிலிருந்து 1942 வரை, நீதிக்கட்சி, சுயமரியாதை

இயக்கம் ஆகியவற்றின் சார்பில் நடைபெற்ற இதழ்களின் மொத்த எண்ணிக்கை, ஐம்பதிற்கும் குறைவாகவே இருக்கும். 1942இல் அறிஞர் அண்ணாவின் திராவிட நாடு இதழ் தொடங்கப்பட்டு, தமிழ் நாட்டில் மாபெரும் செல்வாக்குப் பெற்றபின், திராவிட இயக்கச் சார்பில் ஏராளமான இதழ்கள் தோன்றின. 1942 முதல் 1962 வரை உள்ள கால கட்டத்தைத் திராவிட இதழ்களின் பொற்காலம் என்றே குறிப்பிடலாம். இக்கால கட்டத்தில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட திராவிட இதழ்கள் புதிதாகத் தோன்றியுள்ளன.

3. தலைவர்கள் யாவரும் இதழாசிரியர்கள்: 1942க்குப் பிறகு திராவிட இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் அனைவருமே இதழாசிரியர்களாக இருந்துள்ளனர். இந்த இயக்கத்தின் தனிச்சிறப்புகளில் இதுவும் ஒன்று. திராவிடத் தலைவர்கள் இதழாசிரியர்களாக அமர்ந்து நடத்திய இதழ்கள் சிலவற்றை, எடுத்துக் காட்டுகளாக இங்கே குறிப்பிடலாம்.

பெரியார் ஈ.வே.ரா. - குடியரசு, பகுத்தறிவு, புரட்சி, விடுதலை

அறிஞர் அண்ணா - திராவிட நாடு, காஞ்சி

கலைஞர் கருணாநிதி - முரசொலி, முத்தாரம்

பேராசிரியர் அன்பழகன் - புதுவாழ்வு

நாவலர் நெடுஞ்செழியன் - மன்றம்

கவிஞர் பாரதிதாசன் - குயில்

கவிஞர் கண்ணதாசன் - தென்றல்

திருமதி. சத்தியவாணி முத்து - அன்னை

சி.பி. சிற்றரசு - தீப்பொறி, தீச்சுடர்

கே.ஏ. மதியழகன் - தென்னகம்

ஏ.வி.பி. ஆசைத்தம்பி - தனிஅரசு

இராம. அரங்கண்ணல் - அறப்போர்

ஏ.பி. ஜனார்த்தனம் - தோழன்

காஞ்சி.மணிமொழியாரும்
மா. இளஞ்செழியனும் - போர்வாள்

1967இல் ஒன்பது பேர் கொண்ட தி.மு.க. அமைச்சரவையை அறிஞர் அண்ணா அமைத்தபோது, அதில் ஐந்துபேர் இதழாசிரியர்களாக இருந்தவர்கள் என்பது, திராவிட இதழியல் வரலாற்றில் மட்டும் அல்லாமல், இந்திய இதழியல் வரலாற்றிலேயே தனித்து இடம் பெறத்தக்க ஒரு சிறப்புச் செய்தி.

4. தூய தமிழ்ப் பெயர்கள்: திராவிட இயக்க இதழ்களில் இரண்டொன்றைத் தவிர ஏனைய இதழ்கள் யாவும் தூய தமிழ்ப் பெயர்களையே கொண்டுள்ளன என்பது, தமிழ் நெஞ்சங்களில் தேனாக இனிக்கும் நற்செய்தி. தலைவர்களால் நடத்தப்பட்ட இதழ்களாக முன்னர் குறிப்பிடப்பட்ட பெயர்கள் யாவும் தூய தமிழில் அமைந்திருக்கின்றன அல்லவா? அவற்றைத் தவிர, எடுத்துக் காட்டுகளாகத் தூய தமிழில் அமைந்த திராவிட இதழ்களில் சிலவற்றின் பெயர்கள் வருமாறு: அழகு, அறிவு, அறிவியக்கம், அறிவுக்கொடி, இனமணி, இன முழக்கம், கிளர்ச்சி, சீர்திருத்தம், ஞாயிறு, தமிழ் உலகம், திருவிளக்கு, தென்னரசு, நம்நாடு, நிலவு, பொன்னி, மறவன் மடல், முருகு, முகில், முல்லை, விடிவெள்ளி.

5. இயக்க ஆர்வமே முதலீடு: திராவிட இதழ்களைத் தொடங்கியவர்களில் பெரும்பாலோர், பொருள் வசதி அற்றவர்கள். எப்பாடுபட்டாவது இயக்கக் கருத்துகளைப் பரப்ப வேண்டும் என்னும் ஆர்வமே அவர்கள் பெற்றிருந்த முதலீடு.

சில எடுத்துக்காட்டுகள்:

நவயுகம்: 1937இல் அறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு, என் தந்தையார் காஞ்சி மணிமொழியாரால் தொடங்கப்பட்ட இந்த இதழுக்குத் தனி அலுவலகம் கிடையாது. என் தந்தையாரின் நண்பராகிய வி.எம். கடிகாச்சலம் என்னும் மணமாகாத இளைஞர் ஒருவருடைய இருப்பிடமே, இந்த இதழுக்குக் கிடைத்த இலவச அலுவலகம். அந்த இளைஞரின் இல்லத்தில்தான் என் தந்தையாரும் அண்ணா அவர்களும் இயக்கத் தோழர்களும் இந்த இதழ் பற்றி அடிக்கடி கலந்துரையாடுவது வழக்கம்.

திராவிட நாடு: 1942இல் அண்ணா அவர்களால் இந்த இதழ் தொடங்கப்பட்டபோது அவருக்குச் சொந்த அச்சகம் இல்லை; அத்தகைய அச்சகத்தைத் தொடங்குவதற்குரிய பண வசதியும் இல்லை. சொந்த அச்சகம் இருந்தால்தான் வாரந்தோறும் இதழை உரிய நேரத்தில் கொண்டு வரமுடியும் என்பதை நன்குணர்ந்த இயக்கத்

தலைவர் பெரியார், அச்சகம் தொடங்குவதற்கு நன்கொடைகள் வழங்குமாறு இயக்கத் தோழர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார். அந்த வேண்டுகோளின் அடிப்படையில் கிடைத்த சிறு தொகையைக் கொண்டுதான் அண்ணா அவர்களால் சிறியதோர் அச்சகம் சொந்தமாகத் தொடங்கப்பட்டு, இதழ் தவறாமல் வருவதற்கு வழி அமைக்கப்பட்டது.

முரசொலி: கலைஞர் அவர்களின் இந்த இதழுக்கும் நெடுங்காலம் சொந்த அச்சகம் இல்லை. நண்பர்களிடமிருந்து கடன் வாங்கியோ, குடும்பத்திலிருந்த இரண்டொரு நகைகளை விற்றோதான் தொடக்க காலத்தில் கலைஞர் அவர்கள் இந்த இதழை நடத்தவேண்டி இருந்தது.

போர்வாள்: 1947இல் இந்த இதழ் தொடங்கப்பட்டபோது, இந்த இதழின் ஆசிரியராக இருந்த எனக்கு, தலையங்கங்கள் முதலிய கட்டுரைகளை எழுதுவதற்குத் தனி அறை இல்லை. தனி மேசை கூட இல்லை. குடியிருந்த வீட்டின் மாடிக் கைப்பிடிச்சுவரின்மீது எழுதுவதற்குரிய தாள்களை வைத்து, வாரந்தோறும் நான் எழுதிக் கொண்டிருந்தேன்.

திராவிட இதழ்களின் சாதனைகள்

1. பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாகத் தமிழகத்திலும், சமுதாயத்தைப் பல்வேறு சாதிகளாகப் பிரித்து, அவற்றிற்கு இடையே ஏற்றத்தாழ்வைக் கற்பிக்கும் வர்ணாசிரம முறை நெடுங்காலமாக இருந்துவருகிறது. பல்வேறு அடுக்குகளாக அமைந்த இந்தச் சாதி முறையின்மீது கடும்போர் தொடுத்த திராவிட இதழ்கள், அப்போரில் முழுவெற்றி பெறமுடியவில்லை என்றாலும், சாதி முறையின் ஆணிவேரை அசைத்து, அதன்அடிப்படையே ஆட்டங்காண வைத்திருக்கின்றன; தீண்டாமைக் கொடுமையைப் பெருமளவுக்குக் குறைத்திருக்கின்றன; மேல் சாதியினர் எனப்படுவோர் ஆணவத்துடனும், கீழ் சாதியினர் எனப்படுவோர் அச்சத்துடனும் வாழ்ந்த நிலையை மாற்றி, பெருமளவுக்குச் சரிநிகர்சமானமாக வாழும் நிலையை உருவாக்கி இருக்கின்றன.

2. சமுதாயத்தில் ஆழமாக வேரூன்றி இருக்கிற எண்ணற்ற மூட நம்பிக்கைகளை அடியோடு ஒழிக்க முடியாவிட்டாலும், மக்களின் வாழ்க்கையில் மூடநம்பிக்கைகளுக்கு இருந்த பலமான

இரும்புப்பிடியைத் திராவிட இதழ்கள், குறிப்பிடத்தக்க அளவு தளர்த்தியிருக்கின்றன.

3. தமிழ்நாட்டில் மக்களுடைய பெயர்கள், இதழ்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள், தொழில் நிறுவனங்களின் பெயர்கள், திருமணம் முதலிய குடும்ப நிகழ்ச்சிகள் - இவற்றிலும் இன்ன பிறவற்றிலும் பல நூற்றாண்டுகளாக இருந்துவந்த வடமொழி ஆதிக்கத்தை எதிர்த்து அழிப்பதில் திராவிட இதழ்கள் பெரியதொரு வெற்றியைப் பெற்றிருக்கின்றன. தமிழ் நாட்டு இதழ்களின் பெயர்களில் மட்டுமல்ல; அவற்றில் கையாளப்பட்ட தமிழ் நடையிலும், திராவிட இதழ்கள் தோன்றுவதற்கு முன்பு, அளவுக்கு மீறிய வடமொழி ஆதிக்கம் காணப்பட்டது. ஆனால் திராவிட இதழ்களின் தோற்றத்திற்குப் பிறகு, மாற்றுக்கட்சிகளின் இதழ்களில் கூட, வடசொல் கலப்பு கிட்டத்தட்ட இல்லை என்று கூறத்தக்க நிலை ஏற்பட்டு, அழகிய இனிய தமிழ் நடை எழில் நடம் புரிவதைக் காணலாம்.

4. திராவிட இதழ்களின் தோற்றத்துக்கு முன்பு, பல்வேறு புராண நூல்களும், இராமாயணம், பாரதம் முதலிய வடமொழித் தழுவல் தமிழ் இலக்கியங்களுமே தமிழ் நாட்டுச் சமுதாயத்தில் சிறப்பிடம் பெற்றிருந்தன. திராவிட இதழ்கள் வளர்ந்த பிறகோ, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, குறுந்தொகை முதலிய எட்டுத்தொகை நூல்களும், பத்துப்பாட்டு நூல்களும், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய காப்பியங்களும், திருக்குறளும் தமிழ் மக்களால் பேரார்வத்துடன் படிக்கப்பட்டு, பெருமதிப்புடன் பாராட்டப்படும் நிலை பிறந்தது. எங்குப் பார்த்தாலும் இராமாயண, பாரத கதாகாலட்சேபங்கள் நடந்து வந்த நிலை அகன்று, திருக்குறள் வகுப்புகளும் விரிவுரைகளும் மாநாடுகளும் நடைபெறும் சூழ்நிலை உருவாயிற்று.

5. அரசியல், பொருளியல் முதலிய துறைகளில் கோலோச்சி இருந்த வடநாட்டு ஆதிக்கத்தைக் குறைப்பதில் திராவிட இதழ்கள் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளன. அந்த இதழ்களை விரும்பாதவர்கள் கூட இந்த உண்மையை ஏற்றுக்கொள்வார்கள் என்பது உறுதி.

6. தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட் இயக்கம் பணிபுரியத் தொடங்குவதற்கு முன்னாலேயே சமதர்ம உணர்வையும் பொது

உடைமைக் கருத்துகளையும் முதன்முதலில் பரப்பியவை திராவிட இதழ்களே. 'உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்' என்னும் முழக்கத்தை அடிப்படையாகக் கொண்ட மே தினத்தின் சிறப்புகளை முதன்முதலில் விளக்கிக் காட்டி, தமிழ் நாடெங்கும் அந்த நாளைக் கொண்டாட வைத்தது, திராவிட இதழ்களின் சாதனைகளில் ஒன்று. முதலாளிகள், தொழிலாளிகள், தலைவர்கள், தொண்டர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் முதலிய எத்தகைய நிலையில் இருப்பவர்களையும் தோழர் என்னும் ஒரே அடைமொழியால் அழைத்து, அனைவரும் இந்நாட்டு மன்னரே என்பதை நிலைநாட்டுவது ஒரு முக்கியமான சமதர்ம மரபு. இந்த மரபைத் தமிழகத்தில் முதன்முதலில் நடைமுறைக்குக் கொண்டுவந்தவை சுயமரியாதை இயக்க இதழ்களே.

7. பெரும்பாலான திராவிட இதழ்கள், ஒவ்வொன்றும் ஒரு நடமாடும் கல்லூரியாக இருந்து, உலகத்தின் பல்வேறு துறைகள் பற்றிய விரிவான அறிவைப் பொதுமக்களுக்கு ஊட்டி வந்தன. ரூசோ, இங்கர்சால், வால்டேர், எமிலிஜோலா முதலிய மேல்நாட்டு எழுத்து வேந்தர்கள், சாக்ரடீஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் முதலிய தத்துவ ஞானிகள், மாஜினி, கரிபால்டி, லெனின், மார்ட்டின் லூதர் முதலிய அறப்போர் அண்ணல்கள் பெர்னாட்ஷா, எச்.ஜி.வெல்ஸ், பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் முதலிய சிந்தனைச் செல்வர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளையும் அரும்பணிகளையும் எழுத்தோவியங் களையும், தொடக்கப்பள்ளி அல்லது உயர்நிலைப் பள்ளியில் மட்டுமே படித்த பொது மக்களுக்குக் கூட எளிதில் விளங்கும் வகையில் எடுத்து விளக்கிய கருத்துக் கருவூலங்களாக இந்த இதழ்கள் விளங்கின. இன்று தொடக்க உரை நடத்தும் நானேகூட, ஏழாவது வகுப்பில் படிக்கும்போதே, திராவிட இதழ்களின் வாயிலாகத்தான் இந்த அறிஞர் பெருமக்களைப் பற்றியெல்லாம் முதன்முதலில் தெரிந்துகொண்டேன்.

8. புத்துலகப் பாதையின் முன்னோடிகளாகத் திராவிட இதழ்கள் திகழ்ந்திருக்கின்றன என்பதற்கு, 1933 முதலிய ஆண்டுகளிலேயே, கருத்தடை புரிய வேண்டியதன் இன்றியமையாமையையும் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தையும் அழுத்தந்திருத்தமான முறையில் அவற்றை வற்புறுத்திக் கூறியுள்ளன என்பது, ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. முதன் முதலில் திராவிட இதழ்கள் இக்கருத்தை எடுத்துக் கூறியபோது, மெத்தப் படித்த

மேதாவிகள்கூட, 'தாய்மார்களின் வயிற்றை அறுப்பதா - ஈதென்ன கொடுமை!' என்று கண்டனக் கணைகளை வீசினர். ஆனால், இன்றோ - தெருவுக்குத் தெரு, சுவருக்குச் சுவர், குடும்பக் கட்டுப்பாட்டுச் சுவரொட்டிகள் அனைவரின் ஆதரவோடு இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

9. திராவிட இதழ்கள் பல்வேறு துறைகளில் முன்னோடிகளாக இருந்திருக்கின்றன என்பதற்குக் குடியரசு இதழின் வாயிலாகப் பெரியார் 1933இல் கொண்டுவந்த தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் மற்றோர் எடுத்துக்காட்டு ஆகும். அக்காலத்தில் அந்த எழுத்துச் சீர்திருத்தத்தைக் கேலியும் கிண்டலும் செய்து ஒதுக்கித் தள்ளியவர்கள் கூட, இன்று மனமார ஏற்றுக்கொண்டு, தங்கள் இதழ்களில் பின்பற்றியும் வருகிறார்கள். தமிழக அரசாங்கத்தால் இந்த எழுத்துத் திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பாட நூல்கள் யாவற்றிலும் இடம்பெற்றிருக்கிறது. 'தினமணி' முதலிய மாற்றுக்கட்சி நாளிதழ்கள் கூட, இந்த எழுத்து முறையை மனமார வரவேற்று, மகிழ்ச்சியோடு கையாண்டு வருவதை இன்று நாம் காணமுடிகிறது. திராவிட இயக்க இதழ்கள் எழுத்துச்சீர்திருத்தம் முதலிய தொழில் நுணுக்கத் துறைகளில்கூட எவ்வளவு தீர்க்க தரிசனத்துடன் பணியாற்றியுள்ளன என்பதை நடுநிலை நின்று எண்ணிப் பார்க்கும் எவரும் அவற்றைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இவ்வாறு எண்ணற்ற தொண்டுகள் வாயிலாகத் தமிழ் மக்களின் அரசியல், பொருளியல், சமுதாயயியல், மொழியியல், சமயயியல் முதலியவற்றில் சிறந்ததொரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ள திராவிட இதழ்களைப் பற்றி விரிவான ஒரு கருத்தரங்கம் இன்று இங்கு நடைபெற இருக்கிறது. இக் கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்துள்ள நிறுவனங்களின் நற்பணியை மனமார்ந்த நன்றியுடன் மகிழ்ந்து போற்றி, என்னுடைய இந்த உரையின் வாயிலாகக் கருத்தரங்கத்தைத் தொடங்கி வைக்கிறேன். அனைவருக்கும் வணக்கம்.

திராவிடன்

பெ.சு. மணி

திராவிட இயக்க இதழ்கள் வரலாற்றில் தோன்றிய முதல் தமிழ் நாளேடு, 'திராவிடன்' ஆகும். இதற்கு முன்பாகத் தமிழில் மூன்று நாளேடுகள் தோன்றியுள்ளன. 1882இல் வாரப்பதிப்பாக வெளிவந்த சுதேசமித்திரன், 1888இல் வாரம் இருமுறையாகவும், 1897இல் வாரம் மும்முறையாகவும், 1899இல் நாளேடாகவும் வந்தது. இதுதான் முதல் தமிழ் நாளேடாகும். இதையடுத்து சென்னை திருவல்லிக்கேணியில் இருந்து 1909 தொடக்கத்தில் விஜயா எனும் இரண்டாவது தமிழ் நாளேடு வெளிவந்தது. 1916 பிப்ரவரியில் பாரதி எனும் நாளேடு சில மாதங்கள் வெளிவந்தது.

திராவிடன் இதழ் வரலாறு நீண்ட காலமாகவே எழுதப்படாமல் இருந்தது. முதல் நாளிதழ்கள் மூன்று (1982) எனும் நூலின் ஆசிரியர், "திராவிடனின் தொடக்க காலத்து இதழ்கள் காணக் கிடைக்கவில்லை. 1923, 1927, 1928, 1929 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த திராவிடன் இதழ்கள் சிலவற்றைக் காணமுடிந்தது" என்று குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக இந்நூலாசிரியர் அமரர் மா.ரா. இளங்கோவன் அவர்கள் திராவிடன், 1916இல் தோன்றியது என்றும் அதன் ஆசிரியர் திரு. சனக சங்கர கண்ணப்பர் என்றும் தவறுதலாகக் குறிப்பிட்டுள்ளார்.[1] 1917 ஜூன் மாதம் 1இல் தோன்றிய திராவிடன் நாளேட்டின் முதல் ஆசிரியர் தி. பக்தவத்ஸலம் பி.ஏ. என்பவராவார். மா. ரா. இளங்கோவன் தமது நூலில் திராவிடன் இதழ்களின் நான்கு முகப்புத்தோற்றங்களை இணைத்துள்ளார்.

'தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி' (1987) என்னும் நூலின் ஆசிரியர் திரு. அ.மா. சாமி, திராவிடன் முதல் இதழின் முதல் பக்கப் படத்தை வெளியிட்டு, முதல் இதழின் தலையங்கத்தின் ஒரு பகுதியை மட்டும் வழங்கியுள்ளார். முதல் இதழின் பக்கங்கள் அனைத்திலும் உள்ள செய்திகளை வழங்கவில்லை. திராவிடன் ஆசிரியர் பெயரை 'என். பக்தவத்சலம்' என்று குறிப்பிட்டுள்ளார். 1928ஆம் ஆண்டில் திராவிடன் ஆசிரியராகச் சனக சங்கர கண்ணப்பர் இருந்தார் என்ற செய்தியையும் கூறியுள்ளார், திரு. அ.மா. சாமி.

இந்தப் பின்னணியில் முதன் முறையாக, சற்று விரிவாக திராவிடன் இதழ் வரலாறு இப்பொழுது ஆய்வுக் கட்டுரையாக இங்கு வழங்கப்படுகிறது.

எமது பார்வைக்குத் திராவிடனின் முதல் இதழான 1-6-1917 முதல், 7-12-1917 வரையிலான இதழ்களும், 1922, 1928, 1929ஆம் ஆண்டுகளின் ஐந்து இதழ்களும் கிடைத்தன.

பிராமணரல்லாதார் இயக்கத்தின் போர்முரசாகத் திராவிடன் ஒலித்தது. பிராமணர் எதிர்ப்பு இயக்க உணர்வுகளையும் திராவிடன் பிரசாரம்செய்தது. இந்திய வரலாற்றில் பிராமண சாதிக்கு எதிரான புரட்சிக்குரல்கள் பௌத்த, சமண சமய இயக்கங்களின் காலத்தில் இருந்தே ஒலித்துள்ளன. தமிழில் சித்தர் இலக்கியங்களிலும், கபிலர் அகவலிலும், கால்டுவெல், மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை காலம் முதற்கொண்டும் பிராமண எதிர்ப்புக் குரல்கள் முழங்கியுள்ளன.

சென்னை மாநிலத்தின் முக்கிய அரசியல் அமைப்பான, ‘சென்னை மகாஜன சபை’யில் பிராமணர், பிராமணர் அல்லாதார் ‘மோதல்’ நிகழ்ந்துள்ளதைச் சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் வெளியிட்டுள்ள பின்வரும் செய்தியில் இருந்து அறிகின்றோம்.

> ....இச் சென்னையில் சில காலமாய் அந்நியோன்னியம் குறைவாய் வருகின்றது. முன்போலக் கட்டுப்பாடு இல்லை. பார்ப்பார், சூத்திரர் என்று ஒருவரை மற்றொருவர் பழித்து, கக்ஷி, பிரதிகக்ஷி உண்டாகிப் பலப்பட்டு ஒருவர் செய்யும் வேலையை மற்றொருவர் உட்பலப்படுத்துவதில்லை.[2]

பிராமணர்களை ‘எதிரிகள்’ என்ற உணர்விலே நோக்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ‘தமிழன்’ இதழை நடத்துவதாகப் பண்டிதர் க. அயோத்திதாஸ் (1845 -1914) பின்வருமாறு கூறியுள்ளார்.

> பார்ப்பார்களென்று சொல்லிக் கொள்வோர்களுக்கும், பறையர்களென்றழைக்கப்படுவோர்க்கும் உள்ள பழைய விரோதத்தை மறக்கப்பாருங்கள்... நாமிப் பத்திரிகையின் வாயிலாய்ப் பார்ப்பார்களென்போருக்கும், பறையர்களென் போர்க்கும் பௌத்த மார்க்கத்தை யழிக்கவேண்டி நேரிட்ட பூர்வ விரோதமே நாளது வரையில் வைத்துக் கொண்டு திராவிட பௌத்தர்களைத் தலையெடுக்க

விடாமல் தாழ்த்திப் பறையர் பறையரென்று பதி குலையச் செய்து வருகிறார்களென்று விளக்கி வருகின்றோம்.[3]

இவ்வாறு பிராமண சாதியைக் குறிவைத்து எதிர்த்து வந்த வரலாற்றில் திராவிடனுக்குச் சற்று வித்தியாசமான பங்களிப்பு உண்டு. அரசியல் தளத்தில் பிராமணரல்லாதார் நலன்களைக் காத்திடத் திராவிடன் பாடுபட்டதுதான், இந்த வித்தியாசமான பங்களிப்பு.

1835இல் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பெற்ற மெக்காலே பிரபுவின் 'கல்விக் குறிப்புகள்' காரணமாகத் தோன்றிய ஆங்கிலக் கல்விமுறையும், அது பெற்றெடுத்த மத்யதர வருக்கமும், ஆட்சி நிருவாக சபைகளில், இந்தியர்களுக்கான வேலைவாய்ப்புகள் அனுமதிக்கப்பட்டுப் பெருகிவந்த காலத்தில் ஆங்கிலம் படித்த வருக்கமும் செல்வாக்கு பெற்றது. முதல் கட்டத்தில் சென்னை மாநிலத்தில் ஆங்கிலம் படித்த பிராமண சாதியினர் ஆதிக்கம் அரசியல், அரசு துறைகளில் ஓங்கியது. அடுத்த கட்டத்தில் ஆங்கிலம் படித்த பிராமணரல்லாதார் வருக்கமும் அரசியல், அரசு துறைகளில் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பங்கிற்காகப் போராட முனைந்தது.

தென்னிந்தியாவில் மலையாளிகள், தமிழர்கள், ஆந்திரர்கள் - பிராமணரல்லாதார், ஒன்றிணைந்து போராடத் திட்டமிட்டனர். பிராமணர் எதிர்ப்பு இயக்கத்தில் மலையாளிகளின் தொடக்க மூலமுயற்சிகள் குறிப்பிடத்தக்கன. திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆங்கிலம் படித்த தமிழ்நாட்டுப் பிராமணர்கள், சம்ஸ்தானத்தில் திவான்களாக ஆதிக்கம் செலுத்தினர். படித்த மலையாளிகளுக்கு உத்தியோக வாய்ப்புகள் மிக அருகியே இருந்தன. இந்த நிலையில் திருவாங்கூர் சமஸ்தான மன்னரிடம் 1891இல் ஒரு விண்ணப்பம் கொடுத்துத் தமிழ்ப் பிராமணர்களின் அதிகார வரம்புகளை ஒடுக்கி, மலையாளிகளுக்கு அரசு ஊழியத்தில் தகுந்த பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்று கோரினர்.[4]

அந்தக் காலத்தில் சென்னை நகரத்தில் 1500 மலையாளிகள் இருந்தனர். இவர்களுள் பெரும்பான்மையினர் நாயர்கள். படித்த இளைய தலைமுறை நாயர்களாக, சி. சங்கரன் நாயர் (1857 - 1934), எம். கிருஷ்ணன் நாயர் (1870 - 1938), கே.பி. ராமன் மேனன் (1866 - 1942), டி.எம். நாயர் (1869 - 1919), ஜி. பரமேஸ்வரன் பிள்ளை (1864 - 1903)

முதலான பலர் இருந்தனர். இவர்களுள் டிஎம். நாயர் 1916இல், பிட்டி தியாகராச செட்டியாருடன் இணைந்து வெளியிட்ட பிராமணரல்லாப் பிரகடனத்தின் விளைவாகத் தோன்றிய பிராமணரல்லாதார் இயக்கத்தின் முன்னணித் தலைவர்களுள் ஒருவராவார். 1915இல் வெளிவந்த 'Non - Brahman Letters' பிராமணரல்லாதார் கடிதங்கள் - எனும் வெளியீடு சென்னை வாழ் பிராமணரல்லாத படித்தவரைக் கவர்ந்தது.[5]

1916 நவம்பர் 20இல் சென்னையில் கூடிய பிராமணரல்லாதார் கூட்டத்தில் பிராமணரல்லாதார் நலன்கள் பேணப் பத்திரிகைகளுக்கான ஓர் அமைப்பும், அரசியல் செயற்பாடுகளுக்கான ஓர் அமைப்பும் நிறுவப்பட்டன. SOUTH INDIAN PEOPLE'S ASSOCIATION - தென்னிந்திய மகாஜனசபை - எனும் அமைப்பின் சார்பில் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு மொழிகளில் நாளேடுகளை வெளியிடல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. மற்றொரு அமைப்பான THE SOUTH INDIAN LIBERAL FEDREATION - தென்னிந்திய மஹாஜன நல உரிமைக் கூட்டுறவுச் சங்கம் - என்பது அரசியல் அமைப்பாகச் செயல்படும் என்றும் முடிவுசெய்யப்பட்டது.[6]

ஆங்கிலப் பத்திரிகைக்கு 'ஜஸ்டிஸ்' (Justice) என்று பெயரிடப்பட்டது. 'லாஜஸ்டிஸ்' (La Justice) எனும் பிரெஞ்சுமொழிப் பத்திரிகை முற்போக்கான பத்திரிகையாக வெளிவந்து கொண்டிருந்ததால் அந்தப் பத்திரிகையில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்த டிஎம். நாயர் அதன் பெயரையே தேர்ந்தெடுத்து ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' என்று பெயரிட்டார். அது 12 பக்கங்களுடன் மாலை இதழாக வெளிவந்தது. அவரே இதழாசிரியராகவும் பொறுப்பேற்றார். இந்த நாளேடு 1917 பிப்ரவரி 26 முதல் வெளிவரத் தொடங்கியது. பிஎன். ராமன் பிள்ளை, எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை துணையாசிரியர்கள்.

1885 முதல் வெளிவந்துகொண்டிருந்த 'ஆந்திர பிரகாசிகா' எனும் முதல் தெலுங்கு வார இதழை விலைக்கு வாங்கி உரிமையாக்கப்பட்டு ஜஸ்டிஸ் கட்சியின் தெலுங்கு தினசரியாக இந்திய தேசிய காங்கிரசை ஆதரித்து வெளிவந்தது. இதன் ஆசிரியராகத் தொடர்ந்து ஏ.ஸி. பார்த்தசாரதி நாயுடுவே இருந்தார். திருவாளர்கள் பண்டித கானவா ராகவைய நாயுடு, நரசிம்மராவ் நாயுடு துணையாசிரியர்களாகப் பணியாற்றினர்.[7]

திராவிடன் முதல் இதழ் 1-6-1917 வெள்ளிக்கிழமை முதல் வெளிவந்தது. இதன் ஆசிரியராக, தி. பக்தவத்ஸலம் பிள்ளை பி.ஏ.யும், துணை ஆசிரியர்களாக, சுவாமி ருத்ரகோடீச்வரரும், பண்டித வில்வபதி செட்டியாரும் துணையாசிரியர்களாகப் பணியாற்றினர்.[8]

'ஜஸ்டிஸ்' என்ற இதழின் பெயர், அதனை நடத்திய இயக்கத்தின் பெயராகவும் அமைந்தது. இதன் தமிழாக்கமாக 'நீதி கட்சி' எனும் தமிழ்ப் பெயரும் வழக்கத்திற்கு வந்தது.

திராவிடன் முதல் இதழின் உருவம், உள்ளடக்கம் பற்றிய ஆய்வு, பின்வருமாறு :

உருவம்

அளவு 50 x 34 செமீ.; பக்கங்கள் எட்டு; ஒவ்வொரு பக்கமும் நான்கு பத்திகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

தனி இலச்சினை ஏதும் இல்லாமல் திராவிடன் எனும் பெயர் அச்சிடப்பட்டுள்ளது. தலையங்கப் பக்கத்திலும் தலையங்கத்தின் மேலே இலச்சினை ஏதும் இல்லை.

முதல் இதழின் முகப்பு பின்வருமாறு அமைந்துள்ளது.

திராவிடன்

தினசரி

(சவுத் இந்தியன் பீபில்ஸ் அஸோஸியேஷன் லிமிடெட்) பதிப்பது

Vol-1] சென்னை-பிங்கள வைகாசி மீ 19_2-1917 ஜூன் மீ 1_2 (இ-1)

இந்த இதழின் அச்சிடுபவராகவும் வெளியிடுபவராகவும் ராவ்பகதூர் பி. தியாகராச செட்டி, பி.ஏ. என்று குறிப்பிடப் பட்டுள்ளது. ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படவில்லை. சென்னை மவுண்ட் ரோடு, 16-ஏ எண்ணில் உள்ள 'ஜஸ்டிஸ் பிரிண்டிங் வொர்க்ஸ்' அச்சகத்தில் இந்த இதழ் அச்சிடப்பட்டு வந்தது.

உள்ளடக்கம்

முதல் பக்கம் மட்டும் மூன்று பத்திகளைக் கொண்டுள்ளது. இப்பக்கம் முழுவதிலும் பன்னிரண்டு விளம்பரங்கள் உள்ளன.

இவற்றுள் திராவிடன் பற்றிய விளம்பரம் முதல் பத்தியில் பெரிய அளவில் வந்துள்ளது. இதன் விவரம் வருமாறு:

திராவிடன்

தமிழ்த் தினசரிப் பத்திரிகை

நமது தேசாபிவிருத்தியைக் கோரி உழைக்கவும், பிராமணரல்லாத இதர இந்துக்களும் உள்ள குறைகளை அவ்வப்போது எடுத்துக்காட்டி வரவும், 'சவுத் இந்தியன் பீப்பில்ஸ் அஸோசியேஷன் லிமிடெட்' என்னும் கம்பெனியாரால் ஜஸ்டிஸ் என்னும் ஆங்கில தினசரிப் பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறதென்பது அனைவரும் அறிந்தவிஷயமே. மேற்கூறிய நோக்கங்களோடே நிகழும் 1917 ஜூன் 1ஆம் தியதிலிருந்து தமிழ்த் தினசரிப்பத்திரிகையொன்றும் மேற்படி கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டு வரும். இந்தக் கம்பெனியின் அரிய பெரிய நோக்கங்கள் யாவும் அதனால் பிரசுரிக்கப்பட்ட விஞ்ஞாபனத்தால் நன்கு விளங்கும்.

இத்தமிழ்த் தினசரிப் பத்திரிகையில் ராஜாங்க விஷயங்கள், விவசாய சமாசாரங்கள், வியாபார சங்கதிகள், கைத்தொழில் விஷயங்கள், வித்யா சம்பந்தமான சங்கதிகள், யுத்த சம்பந்தமானவை, இதர விஷயங்கள் சம்பந்தமான தந்தி சமாசாரங்கள், ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய பொது சங்கதிகள், மனதைக் களிப்பிக்கும் மாண்புள்ள கதைகள், சம்பாஷணைகள் முதலிய பல விஷயங்களும் தக்க வித்வான்களால் எழுதப்பட்டு வரும். நமது நோக்கங்களை முன்னுக்குக் கொண்டுவர முயலுவார்கள் என்று நம்புகிறோம்.

மேற்படி விளம்பரத்தில் சந்தா விவரம் பற்றிய அறிவிப்பு பின்வருமாறு.

	உள்ளூருக்கு	வெளியூருக்கு
ஒரு வருஷத்திற்கு	12 - 0 - 0	15 - 0 -0
ஆறு மாதத்திற்கு	6 - 0 - 0	8 - 0 - 0

மூன்று மாதத்திற்கு	3 - 0 - 0	4 - 0 - 0
ஒரு மாதத்திற்கு	1 - 0 - 0	1 - 8 - 0

மோரீஸ், நெட்டால் முதலிய வெளி நாட்டுக்கு

வருஷம் ஒன்றுக்கு	24 - 0 - 0

தனிப்பிரதி விலை குறிப்பிடப்படவில்லை. ஆயினும் 1917-அக்டோபர் மாத இதழில் தனிப்பத்திரிகை பிரதி ஒன்றுக்கு விலை 0 - 0 - 9 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே விளம்பரத்தில், "திராவிடனுக்கு வருகிற செப்டம்பர் மாதத்திற்குள் கையொப்பக்காரர்களாகச் சேருவோருக்குப் பின்வரும் புத்தகங்கள் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைக்குக் கொடுக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சலுகைவிலையில் அறிவிக்கப்பட்ட புத்தகங்களின் பெயர்களும் விலையும் வருமாறு:

1. ஐரோப்பிய யுத்தம் (படங்களுடன்), விலை அணா 8, குறைந்த விலை அணா 6

2. காமாட்சி - ஒரு நவ நகை நாடகம்;. விலை அணா 4, குறைந்த விலை அணா 3

3. கதையும் கற்பனையும் - சிறுவர் சிறுமியர்களுக்காக வரையப்பட்டது; விலை அணா 2; குறைந்த விலை 1½.

இரண்டாம் பக்கம்

கடிதம், கட்டுரைகள், பாடல் வெளிவந்துள்ளன. 'சில சந்தேகங்கள்' எனும் தலைப்பில் 'வறுமையினீங்குவோன்' எனும் பெயரில் ஒரு கடிதம் வெளியாகியுள்ளது. எஸ்.எஸ். அருணகிரிநாதன் எழுதியுள்ள 'தமிழர்கள்' எனும் கட்டுரையும் நாகை சொ. தண்டபாணிப்பிள்ளை எழுதிய 'புனருத்தாரம்' (Renaissance) எனும் இரு நீண்ட கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

'தமிழர்கள்' எனும் கட்டுரையில் பின்வரும் கருத்து கூறப்பட்டுள்ளது.

> உலகத்துப் பழைய காலந் தொடங்கிச் சீர்சிறப்பு முதலிய பெருமைகளினால் மேம்பாடுற்றும் பல்கியும்

மிகுந்திருந்த மனிதர்கள் ஆரியரல்லாத தமிழர்களேயாம். . . வடமொழிப் பித்தேறியவர்கள் தாங்கள் ஆரியரென்றும் . . தமிழர்களினும் வேறாகத் தங்கள் உடைநடைகளைக் காட்டிக் கொண்டும் வந்தாலும் அவர்கள் தமிழர்களே.

'புனருத்தாரம்' எனும் இரண்டாவது கட்டுரையில் கட்டுரையாளர் ஆங்கிலேயர் ஆட்சியாலும், தொல்காப்பியம், சங்க நூல்கள், திருக்குறள் முதலான நூல்களாலும் "புது உணர்ச்சியால் ஏற்படும் புரட்சியே புனருத்தாரம் எனப்படும்" எனும் கருத்தை விளக்கியுள்ளார். "மேனாட்டுப் புனருத்தாரங்களைப் பற்றிச் சிறிது தெரிந்துகொள்வது பயன்படுமாதலால் அவைகள் ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாகக் கூறிப் பின்னர் திராவிட புனருத்தார காரணம் அதன் தற்கால நிலை முதலியன விரிவாகக் கூறப்படும்" என்றும் கட்டுரையாளர் எழுதியுள்ளார். "ஆங்கில அரசாட்சியின் அடிப்படையை அழிக்க முயலுவோர் திராவிடத் துரோகிகளேயன்றித் திராவிடரும் ஆகார்" என்றும் சாற்றியுள்ளார்.

'ஓர் சம்பாஷணை' எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையில், "பழைய வழக்கத்தாரொருவரும், புதுக் கொள்கையாரொருவரும்" சேர்ந்து நாதநாமக்கிரியை ராகத்தில், ஆதிதாளத்தில் பின்வரும் பாடலைப் பாடியதாகக் கூறப்பட்டுள்ளது.

பல்லவி

காலத்தைப் பாரீர் - நண்பர்களே தாங்கள்
களிமிகக் கூரீர்.

அனு பல்லவி

காலத்தைப் பாருங்கள்
கடைத்தேற வழியுண்டு
ஞாலத்தி லுண்மையை நனிமிக
நீர் கொண்டு (காலத்)

சரணம்

இத்தனை நாள் தூங்கி
இழந்தோமே பதவிகள்

எத்தனை நாளானாலும்
எவர்செய்வா ருதவிகள்
வழிகாட்டு வாரென்று
மறையோரை யெண்ணாமல்
வண்மை யடைதற்குப்
பிறரையே நண்ணாமல் (காலத்)

மூன்றாவது பக்கம்

நீதி வாக்கியங்கள், பொதுவர்த்தமானம், விஷயத்திரட்டு எனும் தலைப்புகளில் செய்திகளும், 'கொலை மறுத்தல்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் ஆர்.எஸ். சுப்பிரமணிய தேசிகரவர்களால் சிறுவர்களுக்கு உபயோகப்படுமாறு இயற்றப்பட்ட பாடல் ஒரு பத்தி முழுவதும் வெளிவந்துள்ளது. 'வருணம்' எனும் தலைப்பில் ஆன்வெற்பரசு எழுதிய கட்டுரையின் தொடர்ச்சியும், அறந்தாங்கியான் 'திராவிட பத்திராதிபருக்கு!' எழுதிய கடிதமும், காஞ்சிபுரத்திற்கு வருகைதந்த திவான் பகதூர் சாமிக்கண்ணு பிள்ளை அவர்களுக்கு வாசித்தளிக்கப்பெற்ற நேரிசை ஆசிரியப்பாவும் மூன்றாம் பக்கத்தில் இடம் பெற்றுள்ளன.

நான்காவது பக்கம்

இப்பக்கம் தலையங்கப் பக்கமாகும். OUR SELVES - நமது பத்திரிகையின் நோக்கங்கள் எனும் தலையங்கம் மூன்று பத்திகளில் வெளியிடப்பட்டது. அதன் பெரும் பகுதி வருமாறு:

> இந்துக்களிற் பெரும்பாலோர் பிராமணரல்லாதவர்களாயிருக்கிறார்கள். தென்னிந்தியாவின் ஜனத்தொகை சுமார் நான்கு கோடியில், பிராமணரல்லாத இந்துக்களின் தொகை மூன்றரை கோடிக்கு அதிகமாகிறது. இவ்வளவு பெருந்தொகையினராகிய நம்மவர்களுடைய குறைபாடுகளையும் முறைபாடுகளையும் ராஜாங்கத்தாருக்குத் தக்கபடி தெரிவித்து இவர்களுடைய செல்வாக்கை அபிவிருத்தி செய்துகொள்வதற்கு, இதுவரைக்கும் இயலாமற் போயிற்று. பொதுவாக இந்துக்களென்கிற மொத்தப் பெயரை வைத்துக் கொண்டே இந்துக்களில் மிக மிகச் சிறிய பிரிவினராகிய சிலரே எல்லா நலன்களையும் எல்லாப் பலன்களையும் இதுவரைக்கும் அனுபவித்து

வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் அனுபவித்து வருகிறார்கள். முக்கியமாய் இதற்குக் காரணம் பத்திரிகை பலமுள்ள ஆயுதங்கள் அவர்களிடமிருப்பது தான். . . .

தேசிய திராவிடர்களாகிய நம்மனோர் முன்னுக்கு வருவதற்குத் தடையாயுள்ள தப்பபிப்பிராயங்களையும் விபரீதக் கொள்கைகளையும் பேதித்தெறிந்து உண்மையைச் சாதித்து நிலை நிறுத்துவதே திராவிடனாகிய இப்பத்திரிகையின் திருத்தமுள்ள தொரு நோக்கமாகும். . . .

நமக்கு எவ்வளவோ நன்மை தந்துதவிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தின்மீது இடையறாத அன்பையும் தளர்வுறாத விஸ்வாசத்தையும் என்றென்றும் காட்டிச்செல்வதே இணையில்லாத நமது நோக்கமாயிருக்கும். . . .

இந்தியாவில் ஜாதி மதப் பிரிவுகள் அனேகமிருக்கின்றன. ஜாதிபேதங்கள் முற்றிலும் ஒழிந்து தேசம் சீர்படுகிற வரைக்கும் சகல வகுப்பார்க்கும் நியாயம் கிடைப்பதற்கு ஒவ்வொரு ஜாதியாரும் இனத்தாரும் சமயத்தாரும் தங்களுடைய பிரதிநிதிகள் மூலமாகவும் தேசத்தில் தங்கள் தங்களுக்குரிய மேன்மையையும் அந்தஸ்தையும் ஜனத்தொகையையும் அனுசரித்தும் விஷயங்கள் செம்மைப்படுத்தப்பட வேண்டும். துரைத்தனத்தார் ஒவ்வொரு பிரிவையும் சேர்த்துப் பொறுப்பு வாய்ந்த பிரதிநிதிகளுடனும் விவேகமுள்ளவர்களுடனும் கலந்து யோசித்து ஒரு ஏற்பாடு தயார் செய்வதே உசிதமானது. . .

ராஜ்ய பரிபாலன சம்பந்தமான விஷயங்களைப் பற்றி மாத்திரமே எழுதுவது நம்முடைய நோக்கமன்று. முன் சொன்னபடி பிராமணரல்லாத இந்துக்கள் பெரிய ஜன சமூகத்தாராயிருக்கின்றவர்கள். இவர்களும் நம்முடைய தேசப்பான்மைக்குரிய கிறிஸ்தவர்களும் மகமதியர்களும் இந்தியாவில் செல்வ நியாயம் பெரிதும் வளர்த்தவர் களாயிருக்கிறார்கள். ஜனத்தொகையாலும் நில உரிமையாலும் வியாபார ரீதியாலும் மிக்க மேம்பாடடைந்த நமது திராவிடர்கள் துரைத்தனத்தாருடைய ஆதரவினால்,

தாங்கள் நியாயமாய்ப் பெறக்கூடிய ராஜ்ய அதிகாரங்களைத் தங்களுக்குக் கொடுக்கும்படிக் கேட்பதற்கு உரித்தானவர்கள். . .

ஸையன்ஸ்களாகிற நவீன சாஸ்திரங்களின் ஆராய்ச்சி களினாலும், அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தவர்கள் மேற்படி விஷயங்களில் அபிவிருத்தியடையப் பிரயத்தனப்படவேண்டும். . .

இந்த தேசத்திலுள்ள ஒவ்வொரு ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் அவர்களுக்கு மாத்திரமேயல்லாமல் பொது ஜனங்களுக்கும் தேசத்துக்கும் ஒரே மாதிரி உபயோகப்படக்கூடிய ஒரு தொழில் அல்லது வியாபாரத்தில் பழக்கவேண்டும். இவைகளைப் பற்றி ஏற்றபடி வற்புறுத்திப் பேசுவதும் இப்பத்திரிகையினுடைய இயைந்ததொரு நோக்கமாகும்.

பக்கம் ஐந்து

பக்கம் நான்கில் தொடங்கிய 'இந்திய பஞ்சத்தீர்வை' எனும் கட்டுரை இந்தப் பக்கத்தில் இரண்டு பத்திகளில் வெளிவந்துள்ளது. தந்திச் செய்திகள் இரண்டு பத்திகளில் தரப்பட்டுள்ளன.

பக்கம் ஆறு

இந்தப் பக்கத்தில் பொது வர்த்தமானங்கள், வர்த்தமானக் குறிப்புகள், போர்ட் செயிண்ட் ஜார்ஜ் கெஸட் முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பக்கம் ஏழு

'கடிதங்கள், விளம்பரங்கள் இந்தப் பக்கத்தில் உள்ளன. உருத்திர கோடீசுவரர் எழுதிய கடிதத்தில் பின்வரும் கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

1. திராவிடம் என்னுஞ் சொல்லில் 'திரா' என்னும் அடிச்சொல்லுக்கு ஓடி 'வளைத்தது' என்று பொருள். (பிற இடங்களிலிருந்து ஓடி வளைத்துக் குடியேறியவர்கள்)

2. திராவிடர் ஆரியர் என்று வாதஞ் செய்து கொண்டிருப்பது நேரியதன்று.

3. பிராமணரல்லாதார் மேம்பாட்டிற்காக விரிந்த நோக்கங் களுடைய பிராமண நன்மக்களும் பல்லாற்றானும் உழைத்துதவி புரிந்திடுவாராக.

பக்கம் எட்டு

இறுதிப்பக்கமான இப்பக்கம் முழுவதிலும் விளம்பரங்கள்.

திராவிடன் வளர்ச்சி – சில குறிப்புகள்

திராவிடன் தொடர்ந்து எவ்வளவு ஆண்டுகள் வெளிவந்தன? நாளேடாகவே தொடர்ந்து வந்ததா? சனக சங்கர கண்ணப்பர் எப்பொழுது திராவிடன் ஆசிரியரானார்? எவ்வளவு காலம் பணியாற்றினார்? இதழின் வடிவம், உள்ளடக்கங்களில் மாறுதல் ஏற்பட்டதா? - இவையொத்த பல கேள்விகளுக்கு, திராவிடன் இதழ்கள் ஒன்றுவிடாமல் அனைத்தும் கிடைத்தால்தான் விடைகள் காணமுடியும்.

7.12.1917க்குப் பிறகு 1923, 1928, 1929ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சில இதழ்களின் முகப்புப் பக்கங்களை இதழியல் ஆய்வாளர் மா.ரா. இளங்கோவன், 'முதல் நாளிதழ்கள் மூன்று' என்னும் தமது நூலில் இணைத்துள்ளார். எமது பார்வைக்கும் 1927, 1928, 1929ஆம் ஆண்டுகளில் வெளிவந்த சில இதழ்களின், முகப்புப் பக்கங்கள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு திராவிடன் வளர்ச்சியில் வடிவம், சந்தா வேறுபாடு, ஆசிரியர் பெயர், உள்ளடக்கம் முதலானவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை ஓரளவு அறிய முடிகின்றது.

1923 நவம்பர் 1இல் வெளிவந்த இதழில் வடிவமைப்பில் நிகழ்ந்த மாற்றத்தைக் காணமுடிகின்றது. திராவிடன் - தினப்பத்திரிகை என்று அச்சிடப்பெற்றுள்ளது. குறட்பாக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இடப்புறத்தில், "அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லான்" எனும் குறட்பாவும் வலப்புறத்தில் "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமை யான்" எனும் குறட்பாவும் பொறிக்கப்பட்டுள்ளன. இஃது ஒரு மாற்றம். 1917இல் இவையில்லை.

சந்தாவும் உயர்த்தப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். ஓராண்டுக் காலக் கையொப்பம் ரூ.12இல் இருந்து ரூ.18 ஆகவும், தனிப்பிரதி 0-0-9இல் இருந்து 0-1-0 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் முதல் பக்கத்திலேயே விளம்பரங்கள் அச்சிடப்பெற்றன. ஆனால் 1923இல் இந்த இதழில் செய்திகள் அச்சிடப் பெற்றுள்ளன.

எமக்குக் கிடைத்த 1927 ஏப்ரல் 4ஆம் தேதி இதழில் முற்கூறிய குறட்பாக்கள் முகப்பில் பொறிக்கப்படவில்லை. 'திராவிடன் - தினப்பத்திரிகை' என்பதற்குப் பதிலாக 'திராவிடன் - நாடோறும் வெளிவருவது' என்று அச்சாகியுள்ளது. வலம் - இடம் இருபுறங்களிலும் பெட்டிச் செய்திகளாக 'ஆசிரியர் ராதாகிருஷ்ணனின் பேருரை', 'சத்யேந்திரநாத் சென்னுக்கு 6மாதம் தண்டனை' என்பவை அச்சாகியுள்ளன. முதல் பக்கத்தில் விளம்பரங்களுக்குப் பதிலாகச் செய்திகள் உள்ளன. ஆசிரியர் : - திரு. சனக சங்கர கண்ணப்பர் என்று முகப்பிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

திராவிடன் தொடர்பாக இந்த இதழின் முதல் பக்கத்தில் பெட்டிச் செய்தியாக வெளிவந்துள்ள பின்வரும் அறிவிப்பு கவனிக்கத்தக்கது.

1926ஆம் ஆண்டின் முக்கிய சம்பவம் யாது?

திராவிடன் புத்துயிர் பெற்றுத் தீவிர ஆதரவுடன் உழைக்க முன் வந்திருப்பதே

இந்த அறிவிப்பில் திராவிடன் 1926இல் புத்துயிர் பெற்றதென்றால், இதற்கு முந்திய ஆண்டில் அதற்கு ஏற்பட்ட தளர்ச்சி என்ன என்பது வினாக்குறியாக உள்ளது.

சந்தாவும் 1927 பிப்ரவரி மாதம் முதல் தேதி முதல் குறைந்துவிட்டது எனும் செய்தியும் காணப்படுகின்றது. சென்னையிலும், ஏஜண்டு உள்ளவிடங்களிலும் சந்தா மாதமொன்றுக்கு ரூபாய் 1-0-0 ஆகவும், தனிப்பிரதியின் விலை 0-0-6 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

முதல் பக்கத்தில் பின்வரும் பெட்டிச் செய்திகள் வெளியிடப் பட்டுள்ளன.

தர்ப்பை புல்லுக்குத் தரகு கொடுத்தால்
இறந்தவர்கள்
மோட்சலோகம் போய்ச் சேருவார்கள்
என்ற மூட நம்பிக்கையை ஒழியுங்கள்

சாதி வித்தியாசத்தை
ஒழியுங்கள்
நாம் எல்லோரும்
சகோதரர்கள்

பார்ப்பனர்களுக்கு இடம் வேறு உங்களுக்கு இடம் வேறு என்ற வித்தியாசம் இருக்கிற காபி, சாப்பாடு ஓட்டல்களுக்குப் போகாதீர்கள்.

பார்ப்பனரல்லாத இந்து மகமதிய கிருஸ்தவ சகோதரர்கள் ஓட்டல்களில் ஒன்றாயிருந்து ஒற்றுமையுடன் சாப்பிட, பார்ப்பனர்களுக்கு மட்டும் தனி இடம் ஏன்?

சுத்தக் கதரையே வாங்கி
உடுத்துங்கள்
போலிக் கதர் வாங்கி
ஏமாறாதீர்கள்

மேலே காணப்படும் செய்திகளில் காந்தியடிகளின் கதர் இயக்கத்திற்கு ஆதரவான செய்தி விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. திராவிடனின் கதர் இயக்க ஆதரவைக் காட்டுகின்றது. பிராமணரல்லாதார் மாநாட்டுப் பந்தலில் கதர்க் கண்காட்சியும், நூல் நூற்போரின் போட்டி பரீக்ஷையும் நடைபெற்றதைத் 'தஞ்சை ஜில்லா மகாநாடு' எனும் செய்தியில் அறிகின்றோம்.

1928 பிப்ரவரி 21, ஆகஸ்டு 24ஆம் இதழ்களில் 'DRAVIDAN' என்று ஆங்கிலத்தில் தமிழ்ப் பெயருக்கு மேலே அச்சிடப்பட்டுள்ளதும் ஒரு மாற்றமாகும். ஆகஸ்டு 24ஆம் இதழில் கதர் விற்பனை, புத்தக விற்பனை, விளம்பரங்கள் முகப்பில் இடம் பெற்றுள்ளன. திராவிடன் எனும் பெயர் அலங்கார எழுத்துகளுடன் வரையப்பட்டுள்ளது.

"தலையங்கம் நான்காவது பக்கத்திலேயே வெளியிடப்படும் பத்திரிகை மரபு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததை 1919ஆம் ஆண்டில் பார்க்கின்றோம். ஆனால் 1923ஆம் ஆண்டில் இரண்டாவது பக்கத்திலும் 1928ஆம் ஆண்டில் ஆறாம் பக்கத்திலும் இடம் பெற்றுள்ளது" என்று ஆய்வாளர் மா.ரா. இளங்கோவன் குறிப்பிட்டுள்ளார்.[9] தலையங்கத்தின் மேற்பகுதியில் பொருளடக்கத்தையும் வெளியிட்டு வந்தது திராவிடன். சான்றாக 1917 ஆகஸ்டு 9இல் வெளிவந்த பொருளடக்கம், பின்வருவது.

பத்திரிகையாசிரியர்களின் வியாசங்கள்	பக்கம்
சர்க்காரும் திராவிடரும்	4
குறிப்புகளும் அபிப்பிராயங்களும்	4

தந்திகள்.

பென்னம்பெளம்பேர்	5
ராய்ட்டர்	5
இந்திய	5
கோர்ட் வர்த்தமானம்	5
திராவிடர் எழுச்சி	6
சென்னை வர்த்தமானம்	6
கெஜட்	6
வர்த்தமானக் குறிப்புகள்	6
பொது விஷயங்கள்	7
சுய ஆட்சி பிராமணர் ஆட்சியாம்	3
கடிதங்கள்	2
ஜில்லா வர்த்தமானம்	2

திராவிடன் எட்டு பக்கங்களுடன் வெளியிடப்பட்டதில் எவ்வித மாற்றமும் இல்லை. பக்கங்கள் எவ்வாறு ஒதுக்கப்பட்டன என்பதை 1917 ஆகஸ்டு புதன்கிழமையன்று பக்கம் மூன்றில் வெளிவந்த அறிக்கையில் பின்வருமாறு அறிகின்றோம்.

> நாம் இப்போது வெளியிடும் திராவிடன் என்னும் தமிழ்ப் பத்திரிகை எட்டுப் பக்கங்கள் கொண்டிருக்கின்றது. அவற்றுள் நான்கு பக்கங்களே பல்வேறு விஷயங்களுக்கென்று விடப்பட்டிருக்கின்றன. மற்றை நான்கு பக்கங்களும் விளம்பரங்களுக்காகும். இப்பொழுது 5ஆவது பக்கத்திலும் 7ஆவது பக்கத்திலும் உபந்நியாசங்களும் கதைகளும் வருவது கண்டு நம் திராவிட நன்மக்களும் பிறரும் கதைகள் அச்சிடப்படுகின்றனவென்று கூறுவதை நாம் அறிகின்றோம். நம்மிடத்தும் நேரே சிலர் இவ்வாறே கூறுவாராயினர். இவ்விஷயங்ளிலும் விளம்பரங்கள் பதிப்பிக்கப்படும் வரையில் இது போலவே ஜனங்களுக்கு அறிஞர் பலருடைய உபந்நியாசங்களும் வியாசங்களும் நாடகங்களும் நாவல்களும் தெரிந்தெடுத்து வெளிப்படுத்தப்படும். இவ்வண்ணம் நாம் செய்வது ஜனங்களுக்குப் பயன் தரற்பாலதேயாகும்.

தலையங்கப் பக்கத்தில் OLLA PODRIDA எனும் தலைப்பிட்டு, தமிழில் 'பல விஷய மஞ்சரி' என்றும் தலைப்பிட்டு நாட்டு

நடப்புகளைப் பற்றிய ஆசிரியர் கருத்துகள் வெளியிடப்பட்டன. 1917 அக்டோபர் 1இல் வெளிவந்த விஷய மஞ்சரியில் வெளியான சில செய்திகளின் தலைப்புகள் பின்வருவன.

1. Behold ! Here is the eliwar Deification of House Rule - இதோ ! உச்சியைப் பாருங்கள்; 'சுயாட்சி கடவுளாய் விட்டார்.
2. Lo! A Dancing God Becouces a House Rule - இதோ! ஒரு தேவடியாள் சுய ஆட்சியைக் கோருகிறாள்
3. The Myopic Vision ! The Varnashrama Dharma - குறுகிய பார்வை! வர்ணாஸ்ரம தர்மம்

தலையங்கங்களிலும் ஆங்கிலத் தலைப்புகளும் தமிழ்த் தலைப்புகளும் வழங்கப்பெற்றுள்ளன. பின்வருவன சில சான்றுகள்.

1. Some suggestion regarding, the Non- Brahmin.
   பிராமணரல்லாதார் இயக்கத்தைப் பற்றிய சில சூசகங்கள்
   (1917 அக்டோபர் 2 – ப. 4)
2. Our Goal nearing - நமது எண்ணம் ஈடேறிவிட்டது
   Lo! another Non-Brahman Anti House Rule meeting
   இதோ பாருங்கள் மற்றொரு சுய ஆட்சி வேண்டாமென்ற கூட்டம் (1917 அக்டோபர் 9)

ஆய்வாளர் மாரா. இளங்கோவன், சனக சங்கர கண்ணப்பருக்கு முன்பு திராவிடன் ஆசிரியராக 1923இல் திரு ஏ. சண்முகம் பிள்ளை இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

"1927 செப்டம்பர் முதல் திராவிடன் தினசரியின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுச் சிறிது காலம் பணியாற்றினார், பெரியார்" என்று திரு. வே. ஆனைமுத்து கூறியுள்ளார்.[10]

திராவிடன் இதழுடன் பெரியாருக்கு இருந்த தொடர்பை ஆய்வாளர் அ.மா. சாமி பின்வருமாறு சான்று காட்டி விளக்கியுள்ளார்.

> அப்பொழுது (1928 இல்) திராவிடன் ஆசிரியராக, சனக சங்கர கண்ணப்பர் இருந்தார். பெரியார் ஈ.வெ.ரா.வின் நிர்வாகத்தின்கீழ் திராவிடன் வந்தது.

இதுபற்றிய அறிவிப்பு 1928 ஏப்ரல் 14 இதழில் காணப்படுகிறது. திராவிடன் நிர்வாக மாற்றம் என்ற தலைப்பில் ஏப்ரல் 16 இதழில், "குடிஅரசு, திராவிடன் பத்திரிகைகளின் ஆசிரியரும், வைக்கம் வீரருமாகிய திருவாளர் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுக்கு இராசிபுரம் மகாஜனங்கள் வாசித்துக் கொடுத்த வரவேற்புப் பத்திரம்" என்பதில்,

"உலையா உழைப்பினால்
ஓங்கும் திராவிடற்கு
ஆசிரிய னாகவும்
அமர்ந்தநின் மாண்பினை
என்னென்று உரைப்போம்

என்று இருக்கிறது."

திராவிடன் நாள் இதழையும் 'ஆந்திரப் பிரகாசிகா' இதழையும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக வார இதழ்களாக மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும், ஜமீன்தார்கள், நிலப் பிரபுக்கள் உதவியினால்தான் இந்த இதழ்கள் மறையாமல் இருந்தன என்றும் ஒரு செய்தி கூறுகின்றது.[12] இது எப்பொழுது எனும் கேள்வி எழுகின்றது. 1926இல் திராவிடன் புத்துயிர் பெற்றது எனும் முன் குறிப்பிட்ட செய்தியை இங்கு இணைத்துப் பார்க்கும்பொழுது, பொருளாதார நெருக்கடிகளின் விளைவாகத் திராவிடன் வார இதழாக 1925இல் வெளிவந்திருக்கக்கூடுமோ? எனும் ஐயம் தோன்றுகிறது. மேற்கொண்டு முடிவு செய்ய சான்றுகள் கிடைக்க வேண்டும்.

திராவிடன் இதழ் எப்பொழுது வெளிவராமல் நின்றிருக்கக்கூடும்? என்பதற்கும் திட்டவட்டமான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், ஆய்வாளர் மாரா. இளங்கோவன் உய்த்துணர்தல் அடிப்படையில் 1930 அல்லது 1931இல் திராவிடன் வெளியீடு நின்றிருக்கும் என்று பின்வருமாறு கருதியுள்ளார்.

> 1916இல் தொடங்கப்பட்ட திராவிடன் 1930 அல்லது 1931 வரை நடைபெற்றிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. திராவிடன் ஆசிரியராக நெடுங்காலம் பதவி வகித்துவந்த திரு. சனக சங்கர கண்ணப்பர் 1931ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 'இந்தியா' என்னும் வாரப் பத்திரிகையைத் தொடங்கியுள்ளார். முப்பத்திரண்டு

பக்கங்களைக் கொண்ட 'இந்தியா' சென்னை ஜெனரல் பாட்ர்ஸ் சாலையில் இருந்த நேரு அச்சகத்தில் திரு. எம். பக்தவத்சலம் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தன்மான இயக்கத்தில் ஈடுபட்டு, திராவிடன் இதழை நடத்தி வந்த திரு. சனக சங்கர கண்ணப்பர் தம் கொள்கையை மாற்றிக் கொண்டு இந்தியா இதழாசிரியரான பின்பு, திராவிடன் இதழ் வெளிவரவில்லை என்பது தெரிகிறது.

இக்கருத்து மேற்கொண்டு ஆய்வு செய்வதற்குரியது.

தேசபக்தனும் திராவிடனும்

திராவிடன் இதழின் பிரசார வேகம், தமிழக தேசிய அரசியல் பிரசாரத்திற்கு ஓர் அறைகூவலாக அமைந்தது. மொழியுணர்வும், சமூக சீர்திருத்தவுணர்வும் மேவி நிற்கும் தேசபக்தவுணர்வும் பொங்கித்ததும்பும் தமிழ் இதழின் தேவை தேசியவாதிகளால் உணரப்பட்டது. 'ஜஸ்டிஸ்' இதழின் பிரசாரத்திற்கு எதிர் பிரசாரத்தை ஆங்கிலத்தில் அன்னி பெசன்ட் அம்மையாரின் 'நியூ இந்தியா' எனும் நாளேடு நிகழ்த்தி வந்தது. இந்த நாளேட்டைச் சார்ந்தவர்கள், ஜஸ்டிஸ் கட்சியின் பிரசாரத்தை முறியடிக்கத் தமிழில் நாளேட்டைக் கொணரத் திட்டமிட்டனர். நியூ இந்தியாவில் துணையாசிரியராக இருந்த சுப்பராய காமத் என்பவர் முயற்சியின் காரணமாக, திரு.வி.க. அவர்களை ஆசிரியராகக் கொண்டு 'தேசபக்தன்' 7-12-1917 முதல் வெளிவரத் தொடங்கியது.

திராவிடன் இதழிற்கும் தேசபக்தன் இதழிற்கும் இடைய நிகழ்ந்த அரசியல் சொற்போர், தமிழ் இதழியல் வரலாற்றிற்குரிய அரிய கருத்துக் களஞ்சியமாகும். துரதிர்ஷ்டவசமாக இவ்விரண்டு இதழ்களின் பிரதிகள் அனைத்தும் கிடைக்காமற் போய்விட்டன.

வரலாற்றுணர்வுமிக்க திரு.வி.க. அவர்கள் தமது வாழ்க்கைக் குறிப்புகள் என்னும் நூலின் முதற் தொகுதியில் 'வாதப்போர்' எனும் தலைப்பிட்டு திராவிடன் - தேசபக்தன் கருத்துப் போரைப் பின்வருமாறு கூறியுள்ளார்:

> தேசபக்தன் வகுப்புவாதக் கொள்கையைத் தேய்த்தல் வேண்டுமென்ற நோக்குடன் தோன்றியவன்; திராவிடன் அவ்வாதத்தை வளர்த்தல் வேண்டுமென்ற நோக்குடன் தோன்றினவன். இரண்டுக்கும் வாதப்போர் நிகழ்தல் இயல்பன்றோ? பெரும்போர் நிகழும் வகுப்பு வாதத்தால் விளையுந் தீமைகளைத் தேசபக்தன் எடுத்துக்காட்டுவன். நலங்களைத் திராவிடன் எடுத்துக் காட்டுவன். வகுப்புவாதப் புன்மை நாட்டுக்கு நன்கு விளங்கியது. தேசபக்தன் தோன்றியிராவிட்டால் வகுப்புவாதம் கிளைத்து ஓங்கியிருக்கும். வகுப்புவாதக் கட்சியின் நச்சுப்பல் தேசபக்தனால் பிடுங்கப்பட்டது. அக்கட்சியின் வேகம் ஒடுங்கியது. அது வறுத்த நெல்லாயிற்று; பல்லிழந்த பாம்பாயிற்று.

தேசபக்தன் தோற்றத்திற்கான வரலாற்றுச் சூழலையும் திரு.வி.க. அவர்களே விளக்கியுள்ளார். அதன் சில பகுதிகள் பின்வருமாறு:

> காங்கிரஸ் மனப்பான்மையுடைய பிராமணரல்லாதார் ஆங்காங்கே கூட்டங்கூட்டி 'ஜஸ்டிஸ்' கட்சி தமக்குரியதன்றென்று உலகுக்கும் புலப்படுத்த விரைதல் வேண்டுமென்று வலியுறுத்தினேன் . . . சங்கத்துக்கு 'சென்னை மாகாணச் சங்கம்' என்ற பெயர் சூட்டப் பட்டது. கொள்கை காங்கிரஸ் நோக்கத்துக்கு முரண்படாத வகையில் தென்னாட்டுப் பிராமணரல்லாதவர் நலனை நாடுவதென்று உறுதி செய்யப்பட்டது. . . . சென்னை மாகாணச் சங்கத் தோற்றம் 'ஜஸ்டிஸ்' கட்சிக்கு இடியாயிற்று. அக்கட்சி கொதித்தது; எரிந்தது. அக்கட்சிப் பத்திரிகைகள் சென்னை மாகாணச் சங்கத்தைக் கண்டபடி தூற்றத் தொடங்கின. 'ஜஸ்டிஸ்' கட்சியார், சென்னை மாகாணச் சங்கம், பிராமணர் ஏவுதலால் - அவர்தம் அடிமைகளால் காணப்பட்டதென்று முழங்கினர். அதை மறுக்கத்தக்க தினப்பதிப்பு அப்பொழுதில்லை. அது தேச பக்தன் உருக்கொள்ளாத காலம் . . .
>
> . . . பத்திரிகை அவசியம் தேவை என்ற எண்ணம் என் உள்ளத்தை உறுத்திக்கொண்டே வந்தது.

பத்திரிகையைப் பற்றிச் சுப்பராய காமத்தும் யானும் பன்முறை சிந்திப்போம்... தொடர்ந்து பத்திரிகைக்குரிய முயற்சி துவங்கப்பட்டது... யான் (7.12.1917) தேசபக்தன் ஆசிரியப் பதவி ஏற்றேன்.

சென்னை மாகாணச் சங்கம், பிராமணர்களின் கைப்பாவை என்று விமர்சித்து, திராவிடன் 1917 அக்டோபர் 1இல், "O ! Dravidians! Awake! Arize! - ஓ! திராவிடர்களே! கண்விழியுங்கள், சீக்கிரம் எழுந்திருங்கள்" எனும் தலையங்கத்தின் தொடக்க வரிகளில் பின்வருமாறு திராவிடன் எழுதியது.

> புது பிராமணரல்லாதார் கூட்டமொன்று சேர்ந்து வருவதற்குத் தகுமான காரணம் புலனாகவில்லை. இப்புதிய பிராமணரல்லாதார் கூட்டமாகிற பொம்மை யாட்டத்திற்குக் கம்பி கட்டியிழுப்பவர்கள் பிராமணரேயாவர்.

1918 பிப்ரவரி 28ஆம் இதழில் ஜஸ்டிஸ் முதல் ஆண்டு விழா எனும் தலையங்கத்தில் டாக்டர் டி.எம். நாயரின் திலகர் எதிர்ப்புப் பிரசாரத்தைக் கண்டித்து, திரு.வி.க. எழுதியதின் ஒரு பகுதி வருமாறு:

> திலகர் என்பது தேகமல்ல; அஃது ஆத்ம சொரூபம்; ஒரு பெருஞ் சக்தி; தெய்வ அம்சம். இத்தகைய ஒரு பொருளை - இந்தியாவின் மணியை - பாரத தேவியின் உயிரை டாக்டர் நாயர் இழித்துக் கூறியதை உணர்ந்த உள்ளம் உருகுகின்றது. திராவிடன் பத்திரிகை, முருகனையும் அரங்கநாதனையும் கண்டபடி வைது ஒரு காலத்தில் எழுதியது

என்று குறிப்பிட்டு, பண்டித கோ. வடிவேலு செட்டியாருடன் சேர்ந்து மறுப்புக் கூட்டங்களில் பேசியதையும் திரு.வி.க. குறிப்பிட்டுள்ளார்.

"திராவிடன் என்னை வசையால் வாழ்த்தினான்" என்று ஓரிடத்தில் கூறியுள்ளார் திரு.வி.க.[13]

1919 ஆகஸ்டு 6ஆம் தேதி இதழில் 'பிராமணரல்லாதார் இயக்கம்' எனும் தலையங்கம் எழுதி அந்த இயக்கத்தை விமர்சித்துள்ளார்.

1919 ஆகஸ்டு 15இல் 'பிராமணரல்லாதவர்களின் கிளர்ச்சி சென்னையில் போலித்தோற்றம்' எனும் தலைப்பில் சர். நாராயண

சந்த் வார்க்கர் எனும் பம்பாய் சமூக சீர்திருத்த இயக்கத்தவர் பேசியதை, 'தேசபக்தன்' 19-9-1917இல் சென்னை கோகலே மண்டபத்தில் திரு.வி.க, 'திராவிடரும் காங்கிரஸும்' எனும் தலைப்பில் பேசினார். இவ்வுரையில், ''ஜஸ்டிஸ் கட்சி தென்னாட்டுப் பிராமணரல்லாதார் எல்லார்க்கும் உரியதாகாதென்று" குறிப்பிட்டார் திரு.வி.க. இதை எதிர்த்து ஒரு கடிதம் திராவிடனில் 1917 செப்டம்பர் 22இல் வெளியிடப்பட்டது. "திராவிடரில் எல்லோரும் காங்கிரஸ் சபையை மறுக்கவில்லை யென்று பொய்மை கூறுவது வஞ்சகம் ஆகுமேயன்றி ஆண்மைத்தனமாகாது'' என்று கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

திராவிடன் இதழில் வெளியான தலையங்கம் ஒன்றில் திரு.வி.க. பின்வருமாறு தாக்கப்பட்டுள்ளார்.

> இந்தியாவில் பார்ப்பனர்களும் அவர்கள் வால்பிடிப் போர்களும் சாதிமத வேற்றுமைகளும் பிறப்பால் உயர்வு தாழ்வும் இருக்கின்ற மட்டும் நவசக்தி முதலியாரைப் போன்று கோடி முதலியார்கள் தோன்றினாலும் நம் கட்சியை ஒன்றும் செய்ய முடியாது என்று அறிவுறுத்துகின்றோம்.[14]

மேலே 'நவசக்தி முதலியார்' எனும் குறிப்பு 'நவசக்தி' எனும் வார இதழின் ஆசிரியராக இருந்த திரு.வி.க.வைச் சுட்டுவதால், தேசபக்தனுக்குப் பிறகு 22-10-1920இல் திரு.வி.க. நவசக்தியைத் தொடங்கினார் என்பது தெரிகிறது. இந்த இதழிலும் திராவிடன் பிரசாரத்திற்குத் திரு.வி.க. மறுப்பு தெரிவித்து எழுதியுள்ளார்.

சகோதரப் பத்திரிகைகளுடன் மோதல்களை வைத்துக் கொண்டே பத்திரிகையை நடத்தும் போக்கு திரு.வி.க.விடம் இருந்ததில்லை. தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை எப்பொழுதும் பகையுணர்வுடன் நோக்கியவர் அல்லர் திரு.வி.க. 1920இல் சென்னை மாகாணச் சங்கமும் தென்னிந்திய நலவுரிமைச் சங்கமும் ஒன்றுபட்டு நடத்திய கூட்டத்தில் திரு.வி.க. உரையாற்றியுள்ளார்.

> ஜஸ்டிஸ் கட்சி சமூகச் சீர்திருத்தத்துறையில் இறங்கி உழைத்திருந்தால் நாட்டுக்கு நலனே விளைந்திருக்கும். அக்கட்சி அரசியலில் தலைப்பட்டுச் சுய ஆட்சிக்கு

> இடர் விளைத்தது; வகுப்புவாத நஞ்சை உமிழ்ந்தது. வகுப்புவாதக் கட்சியால் தீமையே பெருகும் என்று யான் உண்மையாக நம்பினேன்

என்று திரு.வி.க. தமது கொள்கையைத் தெளிவுபடுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

எம் பார்வைக்குக் கிடைத்துள்ள திராவிடன் இதழ்களைக் கொண்டு அதன் பங்களிப்பு அரசியல் துறை, சமூகத் துறை, சமயத் துறை, தமிழ்வளர்ச்சித் துறை, நவீன படைப்பிலக்கியத் துறை, நூல் மதிப்புரை மற்றும் சில துறைகளில் எவ்வாறு அமைந்துள்ள தென்பதைச் சுருக்கமாகக் கூற விரும்புகின்றேன்.

அரசியல் துறை

இந்திய தேசிய காங்கிரஸ், 'ஹோம் ரூல் இயக்கம்' முதலான விடுதலைப் போராட்டங்களைத் திராவிடன் தொடர்ந்து வன்மையாக எதிர்த்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சிக்கு முழு ஒத்துழைப்பை அளித்தது. காங்கிரஸ் இயக்கம், ஹோம் ரூல் இயக்கம் இரண்டும் ராஜவிசுவாசக் கட்சிகளாக ஒரு காலகட்டம் வரை செயற்பட்டாலும், ஆட்சியை எதிர்த்துப் பல்வேறு இயக்கங்களை நடத்தி வந்தன. ஆனால், திராவிடன் இவ்வித எதிர்ப்பு இயக்கங்களை ஆதரிக்கவில்லை.

1. "Home Rule is Brahman Rule ! Let the Dravidian beware - சுய ஆட்சி பிராமணர் ஆட்சியாம், திராவிடர்களே, ஏமாறாதீர்கள்" - 1917 ஆகஸ்டு 3 - ப. 3

2. "The British Rule is the most beneficiate Rule - பிரிட்டிஷ் ஆட்சியே மிக்க நலந்தரும் ஆட்சியாம்" - 1917 செப்டம்பர் 9 - ப. 3

'தேசியத் திராவிடர்கள்' எனும் சொற்றொடரை ஆண்டுள்ள திராவிடன் மொழிவழி மாநிலப் பிரிவினையை ஆதரிக்கவில்லை. 1917 ஜூன் 8இல் 'The Andhra agitation for a separate provice - தனி மாகாணத்திற்கென்று ஆந்திரர்கள் செய்யும் தடபுடலான ஆர்ப்பாட்டங்கள்' எனும் தலைப்பில் எழுதப்பட்ட தலையங்கத்தின் பின்வரும் பகுதி மொழிவழி மாநில அமைப்பை மறுக்கின்றது.

> நந்தம் தென்னிந்திய இந்துக்களில் இருபெரும் பிரிவினரே தற்காலத்திற்கு ஏற்ற பெரும் பிரிவினராயிருக்கின்றனர். அவராவார்: பிராமணர்,

பிராமணரல்லாதார் என்பவரே. இப்பிரிவும் சிறு பிரிவுகளை யெல்லாம் ஒருசேர ஒழித்து, இந்துக்களென்கிற ஒரு பெரும் ஜன சமூகத்தையுண்டாக்குவதேயன்றி வேறன்று. இந்த சந்தர்ப்பத்தில் தெலுங்கர், கலிங்கர், தமிழர், கன்னடர் என்கிறபடி பற்பல வித்தியாசங்களை உற்பவஞ்செய்து கொள்ளுதல் ஒரு வழியானாலுஞ் சரி வழிப்பட்டதன்று.

சமூகத்துறை

சமூகத்துறையில் சாதிபேதங்களை, வர்ணாச்ரம தர்மத்தைக் கடுமையாகச் சாடியதில் திராவிடன் பங்களிப்பு மகத்தானது. சமூகச் சீர்திருத்த வரலாற்றில் அழுத்தமான சுவடுகளைப் பதித்துள்ளது. மூடப் பழக்கவழக்கங்களை, மூட நம்பிக்கைகளை எதிர்த்து வன்மையுறப் பிரசாரம் செய்தது, திராவிடன். சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு அதற்கு ஆதரவளித்தது, திராவிடன்.

'தமிழர் சூத்திரரா?' எனும் தலைப்பில் 1917 ஜூன் 20இல் வெளி வந்த கட்டுரையில் வெ.ப. சுப்பிரமணிய முதலியார், மனோன்மணீயம் பி. சுந்தரம் பிள்ளை, 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' ஆசிரியர் கே. நடராஜன், மராட்டிய அறிஞர் பண்டர்கர் கருத்துகளைத் தொகுத்துத் 'தமிழர் சூத்திரர் அல்லர்' என்று விளக்கப் பட்டுள்ளது.

சமூகச் சீர்திருத்தம் தொடர்பான கட்டுரைகளின் விவரம் வருமாறு.

1. பின்னடைந்தவர்களுக்காக ஒரு விண்ணப்பம் - தலையங்கம் - 1917 ஜூலை, ப. 3

2. நமது தேசத்து விதவைகளின் நிலைமையும், ஆசாரத் திருத்தங்களும் - கட்டுரையாளர் - 'K.S.' - 1917 ஜூலை, ப. 3

3. ஒழுக்கம் உயர்குலம் - இக்கட்டுரை 1917 ஜூலையில் வெளிவந்துள்ளது. கட்டுரையாளர் ரா.பி. சேதுப்பிள்ளை B.A. இக்கட்டுரையில் பிராமணர்கள் கடுமையாகக் கண்டிக்கப் பட்டுள்ளனர். "இக் காலத்திலே நம் கைப்பொருளை யெல்லாம் நம் மக்கள் கல்வியிற் செலவிடாது, நம்மை அடியோடு ஒழிக்க எண்ணங்கொண்டுள்ள வேதியரென்னும் பார்ப்பார்க்குக் கொடுப்பது அறியாமையே யல்லவா? ஜாதி, குலம், பிறப்பு என்னும் பிரிவுகளும்

பாகுபாடுகளும் பிற்காலத்தில் பிராமணரால் நம் நாட்டிற்குண்டாகிய பெருங்கேடென்பதை நாம் நன்றாக உணரவேண்டும்". இது போன்ற கருத்துகளை வெளியிட்டுள்ளார் ரா.பி. சேதுப்பிள்ளை, பி.ஏ. பிராமணர் எதிர்ப்புக் கண்ணோட்டத்தில் ரா.பி. சேதுப்பிள்ளையின் கட்டுரைகள் திராவிடனில் மேலும் வெளிவந்துள்ளன.

1917 செப்டம்பர் 6இல், 'சமய வேற்றுமையும் சாதி வேற்றுமையும்' எனும் கட்டுரை வெளிவந்துள்ளது. கட்டுரையாளர் பெயர் 'ஒரு தமிழன்'!

1917 செப்டம்பர் 12இல் 'சமரச சன்மார்க்க நிலைய குருவும் ஞான சாகரம் பத்திராசிரியருமாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் எழுதிய சிறுதேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா?' எனும் கட்டுரை வெளிவந்துள்ளது.

"சர்க்காரின் சகல சபைகளிலும் உத்தியோகசாலைகளிலும் சகல சாதியாரின் பிரதிநிதிகள் சரியானபடி அமரவேண்டு மென்பதே நம் நோக்கம்" என்னும் இலட்சிய வாசகங்கள், ஆங்கிலத்திலும், பெட்டிச் செய்தியாகத் தொடர்ந்து திராவிடனில் வெளியிடப்பட்டு வந்தது.

1917 செப்டம்பர் 26இல் 3ஆம் பக்கம் 'திராவிடர் – நன்மை நாடி' எனும் கட்டுரையில் பின்வரும் புரட்சிகரமான கருத்து கூறப்பட்டுள்ளது:

> புரோகித பாடசாலைகளை ஏற்படுத்தித் திராவிடர்களை அவ்வேலைக்கு உரியவர்களாகச் செய்யவேண்டும். கோயில்களிலேயும் திராவிடர்களைக் குருக்களாக ஏற்பாடு செய்து அதற்குரிய மந்திரங்களையும் சாஸ்திரங்களையும் படிக்கச் செய்யவேண்டும். திராவிடர் கொடுக்கப் பிராமணர் பிரசாதங்கள் வாங்க வேண்டும்.

1917 நவம்பர் 15இல், 'Social Reform and how the Government can help it - ஜனாசார சீர்திருத்தமும் அதற்குச் சர்க்கார் எங்ஙனம் உதவி செய்யக்கூடுமென்பதும்' எனும் தலைப்பில் வெளிவந்த தலையங்கம் குறிப்பிடத்தக்கது.

17.2.1929, 18.2.1929 தேதிகளில் செங்கற்பட்டில் நடந்த 'சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாடு' பற்றிய தலையங்கம்,

திராவிடன் இதழில் 1929 பிப்ரவரி 22இல் வெளிவந்தது. தலையங்கத்தில் மாநாட்டின் தீர்மானங்கள் குறிப்பிடப்பட்டன. தீர்மானங்களைப் பாராட்டித் தலையங்கத்தின் தொடக்க வரிகள் பின்வருமாறு எழுதப்பட்டன.

> நமது முதலாவது சுயமரியாதை மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைக் குறித்து இன்று எழுதுவோம். மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு தீர்மானமும், நம் சுயமரியாதை உணர்ச்சியை எழுப்பி, நம் நாட்டில் மதத்தின் பெயரால் சாதியின் பெயரால், வேதம் புராணங்களின் பெயரால், பழக்க வழக்கங்களின் பெயரால் ஏற்பட்டுள்ள அநியாய கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து நம் நாட்டுக்கு விடுதலையைக் கொடுப்பதற்குத் தீர்மானங்கள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

1917 அக்டோபர் 12இல், 'ஓ! திராவிடர்களே! கண்விழியுங்கள், சீக்கிரம் புறப்படுங்கள்' எனும் தலையங்கத்தில் ஜாதி வித்தியாசம் பாராட்டாமல் தேசிய - சமூகப்பணி செய்து வந்த ஸ்ரீநிவாசய்யங்காரைப் பாராட்டிப் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

> ஜாதி பேதங்களை அகற்ற வேண்டுமென்று அட்வகேட் ஜெனரல் மிஸ்டர் ஸ்ரீநிவாச ஐயங்கார் முதலிய சில பிராமண கனவான்கள் நினைப்பது போலவே எல்லாப் பிராமணர்களும் எண்ணியும் பேசியும் நடந்தும் வருகிற வரைக்கும் பிராமணரல்லாத இயக்கம் பேரவசியமாகின்றது.

பிராமணர் எதிர்ப்பு இயக்கம், சாதி எதிர்ப்பு இயக்கமாகவும் தன்னைப் பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று புகழ்பூத்த சமூகச் சீர்திருத்த இயக்க ஏடான 'இந்தியன் சோஷல் ரிபார்மர்' எனும் ஆங்கில வார இதழ், 1917 செப்டம்பர் 16இல் 'Non-Brahmins and Cases' எனும் தலையங்கத்தில் எழுதியுள்ளது.

1918 டிசம்பர் 22இல் 'இந்தியன் சோஷல் ரிபார்மர், 'The Madras Hindu Social Reform Association' எனும் தலைப்பில் எழுதிய தலையங்கத்தில், "பிராமணரல்லாதார் சமூகங்களுடன் தாங்கள் இணைந்து வாழாவிட்டால் ஒன்றும் செய்யமுடியாது என்பதை

உணர்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது பிராமணரல்லாதர் இயக்கத்தின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'பஞ்சமர்' முன்னேற்றத்திற்கான பல கட்டுரைகளையும் தலையங்கங்களையும் செய்திகளையும் திராவிடன் வெளியிட்டு வலியுறுத்தியது சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டிய பங்களிப்பாகும்.

1917 செப்டம்பர் 10இல் கென் என்பவர் எழுதிய கட்டுரையில், "பஞ்சமர்களை விட்டுவிட்டு ஏனைய பிராமணரல்லாதார் மாத்திரம் முன்னேறிவிடவேண்டும் என்று தென்னிந்திய மகாஜன சங்கமும் திராவிடன் அபிமானிகளும் கருதுபவர்களல்லர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சமர் முன்னேற்றம் அவாவி திராவிடனில் வெளிவந்த கட்டுரைகளில் சில, பின்வருமாறு:

1. பஞ்சமர் - 1917 செப்டம்பர் 6 - என்.சி. கண்ணபிரான்
2. பஞ்சமர் - 1917 செப்டம்பர் 17 - தமிழன்
3. பஞ்சமர் வேண்டுகோள் - 1917 செப்டம்பர் 28 - கடிதம் - ஆனை கெவுனி பஞ்சமர்
4. அந்தோ! பஞ்சமர்மீது பரிதாபம் போலும் - 1917 அக்டோபர் 8 - ஜி. அப்பாதுரையார்
5. பஞ்சம மகாஜன சங்கம் முன்னேறும் வழி - 1917 அக்டோபர் 18 - முன்னேற்றத்தை நாடுவோன்
6. ஒரு பஞ்சம மாநாடு - 1917 நவம்பர் 5 - துணைத்தலையங்கம்
7. பஞ்சம சகோதரர்களும் அவர்களுக்கு நம் கடமையும் - 1917 நவம்பர் 7 - டிஎஸ். நடேசன், இராயப்பேட்டை
8. சென்னை ஆதிதிராவிட மஹாஜன சங்கம் 1917 - நவம்பர் 3இல் நடைபெற்ற கூட்டம் பற்றிய செய்தி - 1917 நவம்பர் 9 - நிருபர்
9. ஆதிதிராவிடர் முன்னேற்றம் பற்றி மேலைச் சிவற்பட்டி சனக சங்கர கண்ணப்பர் - ஆகஸ்டு 15, செப்டம்பர் 15 - 1919

10. விக்டோரியா பப்ளிக் ஹாலில் கோலார் ஆதிதிராவிடர்களும், சென்னை ஆதிதிராவிடர்களும் சேர்ந்து நடத்திய மாநாட்டைப் பற்றிய செய்திகள் - 1917 டிசம்பர் 3

'பறையர் - காரணப் பெயரா? இடுகுறிப்பெயரா?' எனும் ஐயவினா திராவிடனில் கனம் எஸ். ஆர். முத்தையாவால் கேட்கப்பட்டது. இதற்கு, சனக சங்கர கண்ணப்பர் பின்வருமாறு விளக்கமளித்துள்ளார்:

> பறையர் என்ற சொல் காரணப் பெயரன்று; காரண இடுகுறிப்பெயராம்; ஏனெனில் காரணங் கருதியபொழுது பறையடிக்கும் தொழிலாளரைக் குறிக்கின்றது; காரணங் கருதாப் பொழுது, வேளாண்மை, நெசவு முதலிய தொழிலைச் செய்த பறைக்குடி என்ற ஒரு பழங்குடியைக் குறிக்கின்றது. இப்பறைக்குடி யென்பது நந்தம் தமிழ்நாட்டின்கண் துலங்கிய முதற்குடிகளிலொன்றாம். இது,
>
> துடியன் பாணன் பறையன் கடம்பனென்
> றிந்நான் கல்லது குடியுமில்லை (புறநானூறு)
>
> என்ற மாங்குடி கிழார் செய்யுளால் அறியக்கிடக்கின்றது. இவர்களுக்கு 'முதுகுடி'ப் பிறந்தோர் என்ற பெயரும் உண்டு... ஆகையால் அன்பீர்! பறையடிக்கின்ற காரணம் ஒன்றைக் கொண்டு பறையர் என்று அழைக்கப்படு மென்று கூறுதல் பொருந்தாது. பொருந்துமெனின், 'வள்ளுவர்', 'கிணைவர்' முதலியோரும் அங்ஙனம் அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆதலான் காரணம் நோக்காக்கால் இடுகுறியளவாய்ப் பறைக்குடி என்ற பழங்குடியை இச்சொல் உணர்த்துவதாம்.[15]

சமயத்துறை

சைவ சமயம், சைவ சமய ஞானிகள் பற்றிய கட்டுரைகள் பல திராவிடனில் வெளிவந்துள்ளன.

1917 ஜூன் 10இல் 'திருவருட்பா பெருமையும், திருவருட் பிரகாச வள்ளலார் மஹிமையும்' எனும் தலைப்பில் திராவிடன் ஆசிரியர் டி. பக்தவத்ஸலம் பேசியது வெளிவந்துள்ளது.

1917 செப்டம்பர் 28இல், பல்லாவரம் சமரச சன்மார்க்க நிலைய குருவும் ஞானசாகரப் பத்திராசிரியருமான ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் எழுதிய 'கடவுளுக்கு அருவுருவம் உண்டு' எனும் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

1917 ஆகஸ்டு 3இல் 'ஆறுமுக நாவலர் பெரிய புராணத்தின் ஒரு பாகத்துக்கு எழுதிய சூசனம்' எனும் தலைப்பில் பி.ஆர். மீனாக்ஷி சுந்தர முதலியார் எழுதிய விமர்சனக் கட்டுரை வெளிவந்துள்ளது. நாவலர் எழுதிய பெரிய புராண உரையில் திருநாளைப்போவார், கண்ணப்ப நாயனார், திருநாவுக்கரசு நாயனார் முதலானோர் பற்றிய வரலாறுகளில் கூறப்பெற்ற செய்திகள் சிலவற்றைக் கட்டுரையாளர் கண்டனம் செய்துள்ளார்.

திருநாளைப் போவார் குறித்த ஆறுமுக நாவலரின் விளக்கவுரை பெரியபுராணத்தைத் தழுவாமல், கோபால கிருஷ்ணபாரதியின் நந்தனார் கீர்த்தனைகளைத் தழுவியுள்ளது என்று குற்றம் சாட்டியுள்ளார் கட்டுரையாளர். "திருநாளைப் போவார் நாயனார் சரித்திரத்தின்கீழ் நாவலர் அவர்கள் எழுதியிருக்கிற சூசனத்தை உற்று நோக்குவோம். ஒவ்வொரு வர்ணம் அல்லது சாதிக்கும் வடமொழி ஸ்மிருதிகள் ஏற்படுத்தியிருக்கின்ற தொழில்களை, அவ்அவ்வர்ணத்தார் பின்பற்றியே ஒழுகல் வேண்டும் என்னும் உபதேசத்தைத் திருநாளைப்போவார் நாயனார் புராணம் உட்கொண்டிருக்கிறது என்னும் கருத்துப்பட நாவலர் அவர்கள் எழுதியுள்ளார். . . மேற்குறித்த ஆறுமுக நாவலர் சூசனம் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைக்கு எழுதிய சூசனமேயன்றிப் பெரியபுராணக் கதைக்கேயொரு சூசனம் அன்று எனலாம்" என்பது கட்டுரையாளர் கணிப்பு.

1917 ஆகஸ்டு 9இல் 'சைவாபிமானி' எழுதிய 'சிவாலயங்களும் சைவ மடங்களின் அபாயகரமான நிலைமையும்' எனும் கட்டுரை வெளிவந்துள்ளது.

1917 ஜூலை 10இல் 'சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரத் தத்துவார்த்தம்' எனும் கடிதம் முருகேசன் என்பவரால் எழுதப்பட்டது.

1917 அக்டோபர் 5இல் 'முக்கியமான குறிப்பு' எனும் தலைப்பில் இதழாசிரியர் பக்தவத்ஸலம் வெளியிட்டுள்ள பின்வரும் அறிவிப்பு குறிப்பிடத்தக்கது:

> ஜன சமூக வகையிலும் தேச ஆட்சி வகையிலும், செல்வ வகையிலும் நம்மவர் முற்போக்கை நாடித்தோன்றிய இவ்வரிய பத்திரிகையில் சமய விவாதங்களுக்கு இடந்தரல் கூடாதென்பது நமது துணிந்த கருத்தாகும். இதை, இப்பத்திரிகையைப் பொறுப்புடன் நடத்தும் நாமும் நமது உதவிப் பத்திராசிரியர்களும் உறுதியாகக் கடைப்பிடித்திருப்பினும் இடையிடையே சிற்சில காரணங்களால் நம் அன்பர்களுள் சமய சம்பந்தமான கலக்கத்திற்கு இது காரணமாயிற்று. இனி ஒருக்காலும் நம் பத்திரிகை இத்தகைய விவாதங்களுக்கு இடங்கொடாதென்பது திண்ணம்.

1929 ஜூலை 2இல் 'ஆஸ்திக அன்பர்களுக்கு ஒருவார்த்தை' எனும் தலைப்பில் பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதிய கட்டுரையில் 'ஆஸ்திக அழிவிற்கு அறிவு உதயமே காரணம்' என்பதை விளக்கியுள்ளார்.

இந்த விளக்கத்தில் 'ராமசாமியார் புத்தரா?' என்ற கேள்வியைச் சில அற்பபுத்தி படைத்தோர்கள் எழுப்புகிறார்கள் என்பதைக் குறிப்பிட்டு "ஏன் புத்தர் ஆகார்? என நான் கேட்கின்றேன்" என்று கூறி, பதிலளித்துள்ளார். இதில் ஒரு பகுதி, வருமாறு:

> தொல்காப்பியமும் சங்க நூற்களும், கற்றவர்கள்தான் பத்திரிகை நடத்த வேண்டுமென்றாவது, பொதுஜன ஊழியம் செய்ய வேண்டுமென்றாவது எக்காலத்திலாவது எந்நாட்டிலாவது ஒரு சட்டம் இருந்ததுண்டா? 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் முதுமொழியின் உட்பொருளை நீங்கள் செவ்வனே உணர்ந்திருந்தால், ராமசாமியார் ஆராய்ச்சியில்லாதவர், படிப்பில்லாதவர் என்று குறை கூற மாட்டீர்கள். ஏட்டுப் படிப்புக்கும் இயற்கை ஞானத்துக்கும் வெகுதூரம் உண்டென்பதை நீங்கள் நன்றாய் உணர்வீர்கள். மூளைத் தெளிவில்லாதவர்களுக்கே புத்தகப் படிப்பு தேவை. . . எங்கள் ராமசாமியாரின் இயற்கையறிவு தென்னாட்டுப் பண்டிதர்களின் ஏட்டறிவையெல்லாம் சூரியனைக் கண்ட பனித்திவலை போல் அழித்தொழியுமென்று உணர்வீர்களாக.

சுய சிந்தனையாளர் என்று புகழ் பூத்த பெரியாரின் 'மண்டைச் சுரப்பை உலகம் தொழும்' என்று பாவேந்தர் சாற்றியது, இங்கு நினைவுகூரத்தக்கது.

1917 ஜூலையில் திராவிடனில் வெளிவந்த 'வித்யதார புராணம்' எனும் கட்டுரை பலத்த விவாதங்களை எழுப்பியது. விக்கிரக ஆராதனைக் கண்டனமும், முருகக் கடவுளைப் பற்றிய இழிவான பிரசாரமும் இக்கட்டுரையில் உள்ளன என்று பரபரப்பாகப் பேசப்பட்டது. திரு.வி.க.வும் திராவிடன், முருகனையும் அரங்கநாதனையும் இழிவாகப் பேசியுள்ளது என்று கண்டனக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

மறைமலையடிகள்மீது தாக்கு

22.7.1928இல் சென்னை இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜனசபையின் 28ஆம் ஆண்டு விழாவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம், தமது தலைமையுரையில் சுயமரியாதை இயக்கத்தார் கருத்துக்களிலே தமக்கு மாறுபாடான வொன்றையெடுத்து மறுத்துப் பேசினார். "எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றி இன்று வரையில் அருட்பெரியோர்களால், தழுவப்பட்டு வந்ததுவே சமய உணர்ச்சியாகும்."

சுவாமி வேதாசலம் தமது தலைமையுரையில் "சுயமரியாதை இயக்கத்தார் சைவ சமயத்தையும், சைவ சமய ஆசிரியர்மார்களையும், சைவ சமய அருள் நூல்களையும் இகழ்ந்து பழிப்பதற்கு இடமில்லை" என்றும் குறிப்பிட்டார்.

மேற்படி உரையை விமர்சனம் செய்த திராவிடன், "சுவாமிகள் பார்ப்பன மயக்கில் வீழ்ந்தார்கள்" என்று குறிப்பிட்டது. இதற்குப் பதிலளித்து சுவாமி வேதாசலம் அவர்களின் மாணவர் இளவழகனார் 'இராயப்பேட்டை விரிவுரையுண்மை' எனும் தலைப்பில் 'செந்தமிழ்ச் செல்வி' - 1928 ஜூலை - ஆகஸ்டு இதழிலே எழுதினார். இதில் ஒரு பகுதி பின்வருவது:

> சைவ சமயம் சுயமரியாதை இயக்கத்தின் முதல் நோக்கத்திற்குத் தினையளவும் மாறுபட்டதன்று. சுயமரியாதை இயக்கம் தமிழ் மக்களைப் பார்ப்பன மயக்கத்தினின்றும் விலக்கித் தன் மதிப்பைப் பெறும்படி செய்ய எழுந்ததாகும்! சைவ சமயமும்

> அதுவேயாகும். . . இராயப்பேட்டையில் பேசிய சுவாமிகள் விரிவுரையை முதலிலிருந்து நடுநிலையாய் உற்று நோக்குவார்க்குச் சமயத் தொடர்பாகச் சுயமரியாதை இயக்கத்தார் பழித்துப் பேசும் சமயப் பழிப்புரைகளை மட்டும் சுவாமிகள் மறுத்துப் பேசினார்கள் என்பது விளங்காநிற்கும். சுவாமிகள் கருத்தும், இராயப்பேட்டை விரிவுரையில் நடந்த உண்மையும் இவ்வளவேயாக, அவ்விரிவுரையை எடுத்துக்கூறவந்த திராவிடனில் சுவாமிகள் பார்ப்பன மயக்கில் வீழ்ந்தார்கள் என்பது முதலான உண்மையல்லாத பழிப்புரைகளெல்லாம் காணப்படு கின்றன . . . இதுகொண்டு சுயமரியாதை இயக்கத்தார் பார்ப்பன மயக்கத்திலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கும் செய்கையில் சுவாமிகளுக்கு உடன்பாடுதாம் என்பதும் கூறாமலே விளங்கும்.

குறிப்பிட்ட திராவிடன் இதழ் கிடைக்கவில்லை. இதனால் இரு தரப்பு வாதங்களையும் சீர்தூக்கிப் பார்த்துக் கருத்துக்கூற வாய்ப்பில்லை.

கோயில்கள், மடங்கள், திருவிழாக்கள் முதலியனவற்றை யெல்லாம் எதிர்த்து முதலாவது மாகாண சுயமரியாதை மாநாட்டிலேயே தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்பது நினைவிற்குரியது. திராவிடன் சுயமரியாதை இயக்க உணர்வில் தோய்ந்து எச்சமயத்தினரேயாயினும், யாவரேயாயினும் கண்டனக் கணைகள் தொடுக்க உரிமைபெற்றது என்பதும் கவனத்திற்குரியது.

திராவிடனில் உலகப்புகழ் பெற்ற நாத்திகவாதியான ராபர்ட் இங்கர்சாலின் பொன்மொழிகள் திரு. ரா. சௌரிராஜன் அவர்களால் மொழிபெயர்க்கப்பெற்று வெளியிடப்பட்டுள்ளன.

திராவிடன், நாத்திகம் பரவுதற்கே மிகவும் உழைத்தது எனும் குற்றச்சாட்டும் கூறப்பட்டுள்ளது. "நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்கவரிசை"யின் ஆசிரியர் சைவ அறிஞர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர், திராவிடன் இதழ் பற்றிய விளக்கவுரையில் கூறிய பின்வரும் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

> இவ்விதழ் ஆதிதிராவிடர்களுடைய முன்னேற்றத்திற்கு உழைப்பதாகச் சொல்லிக்கொண்டு வெளியாகியது.

ஆயினும் அத்துறையில் அதிகம் உழைக்காமல் நாட்டில் நாத்திகம் பரவுதற்கே மிகுதியும் உழைத்துப் பிறகு நலிந்து மறைந்து போயது.

தமிழ் வளர்ச்சித் துறை

தமிழ் வளர்ச்சித் துறையில் திராவிடன் பங்களிப்பு கணிசமானது. பழந்தமிழ் இலக்கியங்களைப் போற்றும் தமிழ் உணர்வும், தமிழ் மொழிக்கு ஊறு தேடுவோரைக் கண்டிக்கும் உணர்வும், திராவிடன் இதழ்களிலே வெளிப்பட்டுள்ளன. இவற்றுள் பிராமணரல்லாத இயக்கவுணர்வும் ஆரியர் எதிர்ப்புணர்வும் இழைந்தோடியுள்ளன.

முதல் இதழிலேயே - 1917 ஜூன், 1இல் - எம்.எஸ். அருணகிரிநாதன் எழுதிய 'தமிழர்கள்' எனும் கட்டுரை வெளிவந்தது. இதில், "உலகத்துப் பழைய காலந்தொடங்கிச் சீர் சிறப்பு முதலிய பெருமைகளினால் மேம்பாடுற்றும் பல்கியும் மிகுந்திருந்த மனிதர்கள் ஆரியரல்லாத தமிழர்களேயாம்'' என்று தமிழர் தொன்மைச்சிறப்பு போற்றப்பட்டுள்ளது.

1917 ஜூன் 4இல் எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையின் 'தமிழகம்' கட்டுரை வெளிவந்தது. திராவிடன் ஆசிரியரின் 'செந்தமிழ் இலக்கியம் செம்மையடைவதெப்படி?' எனும் கட்டுரை 1917 ஜூன் 5இல் வெளிவந்தது. இக்கட்டுரையில் 'சுயபாஷாபிமான மென்பது, சுயதேசாபிமானத்தில் ஒருவாறாய் அடங்கிவிடுவதாகும்' என்று குறிப்பிடப்பட்டு, ஆங்கிலப் பேரறிஞர் ஸர் வால்டர் ஸ்காட் எழுதிய Lay of the Last Minstral என்னும் அரிய பெரிய நூலின் ஆறாவது காண்டத்தில் 'தேசாபிமானம்' பற்றி ஆவேசமாகக் கூறப்பெற்றுள்ள கருத்துகள் தமிழில் வழங்கப்பட்டுள்ளன.

1917 ஜூன் 13இல் வெளிவந்த ம. சண்முகசுந்தரம் பி.ஏ.வின், 'தமிழர்களின் இலக்கிய நிலைமை' எனும் கட்டுரை வெளிவந்தது. இக்கட்டுரை பச்சைப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தில் 1917இல் பரிசுபெற்றதாகும். இந்தக் கட்டுரையில் 1914இல் வெளிவந்த பாரதியாரின் 'மாதா மணிவாசகம்' என்னும் நூலில் இருந்த பாடலின் சில வரிகள் அப்படியே எடுத்தாளப்பட்டும் தழுவியும் கருத்துகள் அமைந்துள்ளன. பாரதியாரின் 'பாரதமாதா திருப்பள்ளி எழுச்சிப் பாட'லைத் தழுவிக் கவிதையொன்றையும் கட்டுரையாளர் படைத்துள்ளார். செந்தமிழ்த்தாய் பள்ளியெழுச்சிக்கான பாடல், இது.

பொழுது புலர்ந்தது யாம்செய்த தவத்தால்;
புன்மை இருட்கணம் போயின முன்பே,
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் குன்றன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்
தொழுவதும் எமை யுடையாய்! உயர்நடையாய்!
முகமலர்ந் தருண்மொழி புகல்வர மறந்தே,
விழிதுயில் கின்றதோ? இன்தமிழ்த் தாயே
வியப்பிதுகாண், பள்ளி யெழுந்தரு ளாயே

என்று தொடங்கும் பாடலில்,

வளங்கெழும் ஆங்கிலம் ஆரியம் என்னும்
மங்கையர் நின்பணி கொண்டிதோ நின்றார்

எனும் கருத்தும் வெளிப்பட்டுள்ளது.

திருமணம் செல்வக்கேசவராய முதலியார் அவர்களின் 'தமிழ் மக்களின் நாகரிகம்' எனும் கட்டுரை 1917 ஜூன் 15, 16களிலும், எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளையின் 'தெரிந்து செயல்வகை' எனும் இலக்கியக் கட்டுரை 1917 ஜூன் 18லும் வெளியாகியுள்ளன.

1917 ஜூலை 10இல் வெளிவந்த 'கம்பரும் சைவமும்' எனும் கட்டுரையில், கட்டுரையாளர் 'கமலாசினி' இதழாசிரியர் டி.எஸ். தியாகராஜ முதலியார், கம்பன், சைவன் என்று முடிவு கட்டியுள்ளார்.

1917 ஜூலை 16இல் 'இலக்கியக் கல்வியும் தொழிற் கல்வியும்' எனும் துணைத் தலையங்கத்தில் இரு கல்வியும் ஒருங்கே கற்பிக்கப்படும் பாடசாலைகளே இந்நாட்டில் இக்காலத்துப் பெரிதும் பயன்படுவனவாம் எனும் காலத்திற்கேற்ற கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பிராமண வகுப்பாரின் ஆதிக்கம் நிலவியதைக் கண்டனம் செய்து 1917 ஆகஸ்டு 1இல் கட்டுரை வந்துள்ளது.

1917 ஆகஸ்டு 24இல் 'இந்தியாவுக்குப் பொது பாஷை' எனும் கட்டுரையில் விருதைச் சிவஞான யோகி அவர்கள் அன்றே 'இருமொழித் திட்டம்' பற்றிக் கூறியுள்ளார். அவர் கூறியதாவது.

ஆங்கிலமே பொதுபாஷையாகக் கவர்ன்மெண்டார்
செய்வதோடு நாமும் ஒற்றுமையெய்திச் சிற்றூர்கள்

தோறும் தாய்மொழியும் ஆங்கிலமும் கற்பிக்கும் பாடசாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று எழுதியுள்ளார்.

1917 ஆகஸ்டு 3இல் வெளிவந்த திராவிடனில் நாகை சி. கோபாலகிருஷ்ண பிள்ளை பண்டைத் தமிழ் இலக்கியங்களில் உள்ள உட்கருத்துகளை எல்லோரும் அறியும்படி விவேக சிந்தாமணியில், 'வைசிய மித்திரன்' பத்திரிகைகளில் எடுத்துக்காட்டியது கூறப்பட்டுள்ளது.

1917 நவம்பர் 21இல் 'பண்டைத் தமிழ்ப் புலவர்கள்' எனும் துணைத்தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

திராவிடன் இதழ்களில் மூன்றாம் பக்கங்களில் திருக்குறள், திருமந்திரம், பழமொழி நானூறு, வளையாபதி முதலான இலக்கியங்களில் இருந்து மேற்கோள்கள், பெட்டிச் செய்திகளாக வெளியிடப்பட்டு வந்தன.

1917 அக்டோபர் 26இல் வெளிவந்த திராவிடனில் ரா.பி. சேதுப்பிள்ளையின் பேருரையில் இருந்து பின்வரும் கருத்து வெளியிடப்பட்டுள்ளது:

> ஒரு முறை சங்க நூல்களை ஓதுவோமாயின் பண்டைக் காலத்தில் இருந்த நம்முடைய ஏற்றமும் அப்போது ஆரியர்களிருந்த நிலையும் நன்கு விளங்கும்.

1917 ஆகஸ்டு 8இல் பின்வரும் கருத்து, பெட்டிச் செய்தியாக அமைக்கப் பெற்று அச்சிடப்பட்டுள்ளது.

> திராவிட மக்கள் சமத்துவமுடையார், சுயாதீனர், சகோதரர் என்ற இவ்வுண்மைகளை விளக்கும் தமிழ்நூல்கள் பழைய சங்க நூல்களேயாகும்.

'ஹிந்தி பாஷை, பொது பாஷைக்கு ஏற்றதன்று' எனும் கருத்து 1917 ஜூன் 22இல் எழுதப்பெற்ற 'சுயபாஷை விஷயம்' எனும் தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1917 ஆகஸ்டு 5இல் 'மிஸ்டர் காந்தியும் ஹிந்தி பாஷையும்' எனும் துணைத் தலையங்கத்தில் ஹிந்தி பாஷையைக் கற்க வேண்டும் எனும் அவர் கருத்து "கனவிற் கண்ட காட்சி போன்று புறக்கணிக்கத் தக்கதே" என்று கூறப்பட்டுள்ளது.

நவீன படைப்பிலக்கியத் துறை

அரசியல் செய்தி இதழ்களில் நவீன படைப்பிலக்கியத்திற்கு இடமளித்து ஆதரவளித்து ஊக்கம் தந்த முதல் இதழ் சுதேசமித்திரன். 'புதினம்' எனும் நவீன படைப்பிலக்கிய வகைக்குத் துணைத்தலையங்கம் எழுதி அதில் கதைச் சுருக்கத்தையும் வெளியிட்டது சுதேசமித்திரன்.

1985 பிப்ரவரி 15இல் நாவலாசிரியர் எஸ்.வி. குருஸ்வாமி சர்மாவின் 'பிரேமகலாவத்யம்' எனும் புதினத்தின் கதைச் சுருக்கம் வழங்கப்பட்டுள்ளது. தலையங்கத்தின் தொடக்க வரிகள் பின்வருவன:

> இப்பெயர்கொண்ட வாசிப்பிற்கினிமையான விநோத கதையொன்று மகாஸ்ரீ குருஸ்வாமி சர்மா அவர்களால் எழுதிப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது, பிரேமன், கலாவதி என்னும் இருவரைப் பற்றிச் சொல்லும் கற்பனாகாவியம். இதைப் பார்வையிட்டு ஜனவரி மாதத்து விவேக சிந்தாமணியில் ஒரு ஆர்டிகள் எழுதப்பட்டிருக்கிறது. அதிலிருந்து இப்புத்தகத்தின் கதைச்சுருக்கத்தை அனுமதியோடு கீழே எடுத்துப் பிரசுரிக்கிறோம். (ப.59)

மகாகவி பாரதியார் 'இந்தியா' எனும் தமது அரசியல் வார இதழில் திருமணம் செல்வக்கேசவராய முதலியாரின் 'கற்பலங்காரம்' (ஜூன் 23, 1906), 'Anwel with a Hero - by Dreames' (ஜூலை 14, 1906); ஜி. வேணுகோபால நாயுடுவின் 'எனது நெடுங்கதை', (பிப். 2, 1906) எனும் நவீனப் படைப்பிலக்கியங்களையும், தமது 'ஸ்வர்ணகுமாரி' (பிப். 2, 1906) எனும் கதையையும் வெளியிட்டுள்ளார்.

பாரதியார், இந்தியாவில் 'பரிமளா' எனும் தமிழ்ப் புதினத்திற்குத் தலையங்கத்தில் ஆறு பத்திகள் வரை மதிப்புரை வரைந்துள்ளது வியப்பிற்குரிய பாராட்டத்தக்க புதுமைச் செய்தியாகும்.[16]

1895 தொடங்கி 1907 வரையில் மேற்காணும் சில சான்றுகள், நவீனப் படைப்பிலக்கியத்திற்கு ஆதரவளித்த சில அரசியல் இதழ்களை இனங்காண உதவுகின்றன.

திராவிடனும் தன்னால் இயன்றளவு நவீனப் படைப்பிலக்கியத்திற்கு இடமளித்து ஆதரவளித்துள்ளது. நாவலாசிரியர் எஸ்.எஸ். அருணகிரிநாதன், 'தமிழ் மக்களுக்கோர்

விண்ணப்பம்' எனும் தலைப்பில் வெளியிட்ட பின்வரும் வேண்டுகோள் 1917 ஜூன் 12இல் வெளிவந்துள்ளது.

> இக்காலத்தில் எழுதப்படும் கதைகளைப் போலன்றித் தற்கால நவநாகரிகத்திற்கு ஏற்றவாறு மிக அழகாகத் தினம் ஒவ்வொரு அத்தியாயமாக வெளிவரும். . . இவ்வளவு அரிய கதையைக் கொண்டுள்ள அருமையான இப்பத்திரிகையில் இரண்டொரு பத்தியை நிரப்புவதற்காக, நிரப்பியதற்காக என் சகோதர சகோதரிகளாகிய நீங்கள் என்னைக் குறை கூறமாட்டீர்களென்பது எனது நம்பிக்கை.

கதையை வெளியிடுவதில் அவர் காட்டிய எச்சரிக்கையுணர்வு கவனிக்கத்தக்கது. ஏன் எனில் ஆசிரியரின் 'கமலாவின் கதை' அவருடைய முற்கூறிய வேண்டுகோளிற்கு ஒருவாரத்திற்கு முன்பு திராவிடனில் வெளிவரத் தொடங்கியது.

1917 ஜூலை 17இல் 'ஒரு சிறு கதை' எனும் தலைப்பில் மா. துரைசாமி என்பவர் எழுதிய கதை வெளிவந்தது. நண்பர் நால்வர் சத்திரத்தில் உறங்க, ஒருவன் மட்டும் விழித்து உணவு உண்ண முயற்சி செய்ய, பிற மூவர் வாளாவிருந்தனர் என்பது கதையின் கருத்தோட்டம். இக்கதைமூலம் வாசகர்கள் அறிய வேண்டியதென்ன? என்பதைக் குறித்துப் பின்வரும் குறிப்பு தரப்பட்டுள்ளது.

> திராவிட மேன்மக்களே! எனதரிய சகோதரர்களே! மேற்சொன்ன கதையை யோசித்தறியுங்கள். அது நம்மைக் குறித்ததே. எல்லோரும் விழிப்புறப் பாடுபடவேண்டும்.

நந்தன் நாடகம் 1917 அக்டோபர் 4இல் இருந்து தொடராக வெளிவந்துள்ளது. எழுதியவர், ராஜாம்பாள். "சமுதாயத்தில் உள்ள குறைகளையெல்லாம் சுட்டிக்காட்டிச் சமயம் என்ற பெயரால் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் விளக்கி, அவற்றைக் களைந்திட வேண்டும் என்னும் நோக்கத்துடன் நீண்ட தொடர்கதை ஒன்று திராவிடனில் வெளிவந்துள்ளது. 'நவீனக் கதைப் பகுதி' என்பது இதன் தலைப்பாகும். இப்பகுதியின் இருபத்திரண்டாம் அத்தியாயத்தை 17-12-1923ஆம் தேதி இதழின் 6ஆம் பக்கத்தில் காணமுடிகின்றது" என்று மா.ரா. இளங்கோவன் கூறியுள்ளார்.[17]

நூல் மதிப்புரை

திராவிடனில் நூல் மதிப்புரைகள் அவ்வப்பொழுது வெளிவந்துள்ளன. இவற்றுள் இரண்டு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. ஒன்று, வ.உ.சி.யின் 'மணக்குடவர் உரை - திருக்குறள் அறத்துப்பால்' பதிப்பு நூலிற்கானது; மற்றொன்று பாரதியாரின் 'கண்ணன் பாட்'டிற்கானது.

வ.உ.சி.யின் பதிப்பு நூலிற்கான மதிப்புரை 1917 ஜூலை 14இல் வெளிவந்தது. அதில் ஒரு பகுதி, பின்வருமாறு:

> ஸ்ரீமான் பிள்ளையவர்களின் இப்பதிப்பு மேல்நாட்டுப் புலவர்கள் ஸேக்ஸ்பியர் நூல்களின் பாடபேத ஆராய்ச்சி தனி செய்து நன்மை தருவது போல் தமிழகத்திலும் திருக்குறளைக் குறித்துப் பாடபேத ஆராய்ச்சியும் அதனின்றும் தொடரக்கூடும் மற்றைய ஆராய்ச்சிகளும் தழைக்கச் செய்யும். இதுவே, தருமர், தாமத்தர் முதலியோரது உரைகளையும் பலரும் தேடி ஆராய்ந்து அச்சேற்றுவிப்பதற்கு ஒரு தூண்டுகோலாகவும் இருக்கும். மற்றும் இப்பதிப்பில் ஆண்பாலரும் பெண்பாலருமான வித்யார்த்திகள் மூலத்தையும் உரையையும் எளிதில் உணருமாறு ஸ்ரீமான் பிள்ளையவர்கள் அவைகளைச் சந்தி பிரித்து நிறுத்தக்குறிகளுடன் அழகாக அச்சிட்டிருக்கின்றார். பொருட்பால் உரையும் - காமத்துப் பால் உரையும் விரைவில் வெளியாகுமென்று எதிர்பார்க்கின்றோம். ஸ்ரீமான் பிள்ளையவர்கள் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்து முயன்று வருவது பற்றி அவர்களுக்குத் தமிழகம் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றது.

மதிப்புரை செய்தவர் பெயர் குறிப்பிடப்படவில்லை.

பாரதியாரின் 'கண்ணன் பாட்டு' முதல் பதிப்பு 1917இல் வெளிவந்தவுடனேயே திராவிடனில் அதன் நூல் மதிப்புரை 1917 செப்டம்பர் 1இல் வெளிவந்தது. பாரதியாரின் படைப்பாற்றலைப் பற்றி அவர்காலத்தில் வெளிவந்த திறனாய்வுகளில் திராவிடனில் வெளிவந்த திறனாய்வு முதன்மையானது. இக்காரணம் குறித்து அந்தத் திறனாய்வு முழுவதும் பின்வருமாறு வழங்கப்படுகின்றது.

இச்சிறு நூலின் ஆசிரியரைத் தமிழுலகம் நன்கறியும். தமிழ்நாட்டு ரவீந்திரநாதர் என்பதற்கு இவர் பாட்டுக்களே சான்று. இந்நூலின் ஆசிரியர் கண்ணனைப் பலவிதமாகத் தொழுதேத்துகிறார். கண்ணன் ஆசிரியருக்கு ஆத்மார்த்தமானவர். ஈசனைத் தாயாகவும் தந்தையாகவும் நாயகனாகவும் நாயகியாகவும் குழந்தையாகவும் தொழுதேத்துவது நம் நாட்டிற்குப் புதிதன்று. துளஸிதாஸரும் நாம தேவரும் ஈசனைத் தாயாகப் போற்றினார்கள். இப்பாடல்கள் பக்தி மார்க்கப் பாட்டுகளுக்கே ஒரு புத்துயிர் கொடுத்து அவற்றில் பக்தி ரஸம் பெருக்குகின்றன. ஜனக் கவிதையே ஒரு தேசத்தின் சம்பத்து, தேச வாழ்க்கையின் உயிர். ஆகவே ஜனக்கவிதா மெட்டுகளை உபயோகித்து, பக்திரஸம் ஏறக் கேட்டோரைப் பரவசநிலைப் படுத்தும் பாக்கள் புனைந்திருக்கிறார், இவ்வாசிரியர்.

வங்காளத்துக்கு ஸ்ரீ ஜயதேவ ஸ்வாமிகளின் கீதகோவிந்தம் எவ்வாறு புத்துயிர் கொடுத்ததோ, இங்கிலாந்துக்கு நியூமன் புலவரின் (Lead kindly lights) ‘நீயே யெனை யேலாய் நெறியுதவாய் அருட்சோதி’ என்னும் பாடல் எவ்வாறு இன்னும் மேலைத் தேசங்களில் தெய்வீக ஒளிபரப்பி நிற்கின்றதோ அவ்வாறே இந்நூலும் நம் தமிழருக்குப் புத்துயிரூட்டித் தலைமுறை தலைமுறையாக அவர்களுக்கு அருட்சோதியாய், தெய்வநெறி காட்டி நிற்கும் என்பது எமது கொள்கை.

இப்பாடல்களில் படிப்போரை இன்பக் களியெய்துமாறு செய்யும் பாடல்கள் இருவகையுள. இவை ஆசிரியர் கொள்கையைத் தெளிவுற விளக்குகின்றன. பக்திப் பாடல்களில் நாயக-நாயகி பாவமாக ஈசுவர பக்தியைக் கருதிப் பாடுவது ஒரு வழி. அந்த மனோபாவத்துக் குரியபடி ஆசிரியர் தலைவர் கூற்று, தலைவி கூற்று, யோகம் எனப் பல்வேறு துறைகளாக வகுத்துப் பாடியிருக்கிறார். மற்றொரு வகைப்பாட்டு, கண்ணன் என் ஆண்டான் என்பது. இப்பாடல் சரணா மார்க்கத்தைச் சிறப்பிக்கிறது. சரணாகதியே உய்யும் வழி.

> உடல் பொருள் ஆவி மூன்றும் ஈசனடியில் அர்ப்பிப்பதே விடுதலை வழி என்னும் உண்மையை இடித்தோதுகிறார். இப்பாடலில் இந்தக் கொள்கை வைஷ்ணவ 'பரபத்தி' மார்க்கத்தைப் பெரும்பாலும் சார்ந்துள்ளது.

திராவிடனின் மேற்காணும் மதிப்புரையும் கண்ணன் பாட்டு-இரண்டாம் பதிப்பிற்கு (1919) வ.வே.சு. ஐயர் எழுதியுள்ள முன்னுரையும் ஒப்பிடத்தக்கன.

> இப்பாடல்கள் பக்தி மார்க்கப் பாட்டுக்களுக்கே ஒரு புத்துயிர் கொடுத்து. . . நம் தமிழருக்குப் புத்துயிரூட்டித் தலைமுறை தலைமுறையாக அவர்களுக்கு அருட்சோதியாய்த் தெய்வ நெறிகாட்டி நிற்கும்

என்று 'திராவிடன்' மதிப்புரை குறிப்பிடுகின்றது. வ.வே.சு. ஐயர் தமது முன்னுரையில் பாரதியார் நாயக - நாயகி பாவத்தைப் பாடியுள்ள இடங்களில் "பரபக்தியை விடச் சரீரமான காதலையே அதிகமாக வர்ணித்திருக்கிறார்" என்றும், "இந்தக் கீர்த்தனங்களைப் பரபக்திக்குப் பேரிலக்கியமாய்க் கொள்ள வேண்டுவதில்லை - ஆசிரியர் இந்நூலில் கவி என்கிற ஹோதாவில்தான் நம்மிடம் வருகிறார்" என்றும் கூறியுள்ளார்.

முடிவுரை

அரசியல் தளத்தில் பிராமணர் ஆதிக்கத்தை எதிர்த்த நீதிக் கட்சியின் பிரசார ஏடாக வெளிவந்த திராவிடன் சமூக - பண்பாட்டுத்தளங்களில் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தால் தனது சமூக சீர்திருத்தப் பிரசாரக் களத்தை விரிவுபடுத்திக் கொள்ள முற்பட்டபொழுது, நின்றுபோய்விட்டது.

> சர்க்காரின் கோபத்துக்கு ஆளாகி சில காலம் நின்று மீண்டும் திராவிடன் வெளித்தோன்றி இப்பொழுது 7 மாதங்கள் ஆகின்றன. இந்த ஏழு மாதங்களுள் ஐந்து ஆசிரியர்கள் ஆசிரியர் பீடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். இப்பொழுது கௌரவ ஆசிரியராக இருக்கும் திரு. டிஎஸ். ஆறுமுகம் பிள்ளை ஐந்தாவது ஆசிரியராவார். இப்பொழுது திரு. டிவி. சுப்பிரமணியம் ஆசிரியரா இருப்பதையும் திராவிடனில் விளம்பரம் செய்யப்பட்டு

வருகிறது. திரு. சுப்ரமண்யம் போட்டோ படம் திராவிடனில் வெளியிடப்பட்டும் 'நாடெங்கிலும்' இருந்து கிடைத்த திராவிடன், ஏஜெண்டுகள், நிருபர்கள் முதலியோரின் வாழ்த்துச் செய்திகள் பிரசுரிக்கப்பட்டும் திரு. சுப்ரமணியம் பெயர் விளம்பரப்படுத்தப்பட்டும் வருகையில் நேற்றைய திராவிடன் மானேஜர் பெயரில் ஒரு திருத்தம் வெளி வந்திருக்கிறது. அது பின்வருமாறு:

> திராவிடன் நிரந்தர ஆசிரியரென வெளியிடப்பட்டிருந்த திரு. டி.வி. சுப்பிரமணியம் அவர்கள் திராவிடன் - பத்திரிகையில் கௌரவ ஆசிரியருக்குத் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளாரென்பதை மேற்படி வாசகர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறேன்

இவ்வாறு 'சண்டமாருதம்' எனும் திராவிட இயக்க இதழில் 13.11.31இல் 'ஒரு தமிழன்' என்பவர் கடிதம் வெளிவந்தது.

மேற்படி கடிதத்தில் 'சர்க்காரின் கோபத்துக்கு ஆளாகி சில காலம் நின்று' மீண்டும் திராவிடன் வெளிவந்தது என்பது கூறப்பட்டுள்ளது. சர்க்காரின் கோபத்துக்குத் திராவிடன் ஆளானது ஏன்? எவ்வளவு காலம் நின்றுபோனது? எனும் கேள்விகளுக்கு விடைகாண வழியில்லை. 1931 இறுதியில் திர்ாவிடன் நின்று போயிருக்கலாம் என்னும் மா.ரா. இளங்கோவன் கருத்துக்கு மாற்றுக் கருத்தில்லை என்றே முடிவு செய்ய வேண்டியுள்ளது.

திராவிடனில் தென்னிந்தியாவில் முதல் கம்யூனிஸ்டான தோழர் சிங்காரவேலு செட்டியாரின் பின்வரும் இரு கட்டுரைகள் வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

'தொழிற்சாலைகளும் தொழிலாளரும்' எனும் கட்டுரை 'நவீன ருஷ்யா' எனும் தலைப்பில் 1928 மே 2இல் வெளிவந்தது. மற்றொரு கட்டுரையான, 'ருஷ்யத் தொழிலாளர் நிலைமை - என்ன செய்து வருகின்றனர்'? எனும் கட்டுரை 1928, இதழ் 19இல் வெளிவந்தது. தொழிலாளர் துறை பற்றிய இத்தகைய கட்டுரைகள் மிக அரிதாகவே வெளிவந்தன.

திராவிடன் வெளியிட்ட மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் சிலவற்றில் குறிப்பிடத்தக்கது: 'சூத்திர தர்மம்' எனும் கட்டுரை. இது

வங்கக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் எழுதிய கட்டுரையொன்றின் தமிழாக்கம். இக்கட்டுரை 1927 ஏப்ரல் 4இல் வெளிவந்தது. ஸ்வதருமத்தில் மரணமடையினும் நன்றே எனும் பொருளற்ற போலித்தத்துவத்தை, இக்கட்டுரை கண்டிக்கிறது.

> 'இச் சூத்திர தர்மம்' என்னும் பெருஞ்சுமையின்கீழ் வளைந்து நிற்கும் ஹிந்துவானவன் பாரம் தாங்காது திணறுகின்றான். அறிவு, புலமை, ஒழுக்க பலம் இவை தேவையாயிருக்கும் எந்த நல்ல காரியமும் மேலிருந்து அழுத்தும் இந்தப் பெருஞ் சுமையைத் தாங்கிக் கொண்டேதான் செய்தாக வேண்டும். அப்படியிருந்தும் பெறும் சிறு லாபங்களையும் இந்துக்குருட்டுப் பெட்டியிலேதான் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். இத்தகைய நிலைமையே இந்நாட்டில் நீடித்திருக்க வேண்டுமா? என்பதே இப்போது நாம் சிந்திக்க வேண்டிய விடயம்

இவ்வரிகள் தாகூரின் கட்டுரையின் ஒரு பகுதியாகக் கட்டுரை முழுப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

திராவிடன் இதழ், தான் தொடங்கி வைத்த அரசியல் - சமூகப் பணியை முடித்துக்கொண்டு நின்று போனதும், அப்பணிக்குப் புதிய பரிணாமத்தையும், வீறார்ந்த வீச்சையும் கொடுத்து 'விடுதலை' நாளிதழ் 1935 இல் தோன்றியது. திராவிடன் இதழைத் தோற்றுவித்த தென்னிந்திய நலவுரிமைச் சங்கமும், 1944இல் சேலத்தில் நடைபெற்ற மாநில மாநாட்டில் 'திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றப்பட்டது. பெரியாரின் தலைமையின்கீழ் விடுதலை நாளிதழ் திராவிட இயக்க இதழியல் வரலாற்றில் புதிய சகாப்தத்தைப் படைத்தது.

குறிப்புகள்

1. முதல் நாளிதழ்கள் மூன்று, 1982, மாரா. இளங்கோவன், எம்.ஏ., சேகர் பதிப்பகம், சென்னை, ப57
2. சுதேசமித்திரன், 1895, ஜூன் 21, ப.4
3. தமிழன், வாரஇதழ், சென்னை, ஆசிரியர் பண்டிதர் க. அயோத்திதாஸ், 27, சனவரி, 1909, ப3

4. "A Note on the Malayali Origins of Anti - Brahminism the South India" - Robin Jeffrey, The Indian Economic and Social History Review April - June 1977
5. Ibid, p.265
6. The Justice Movement, 1917, Compiled by DiwanBahadur T. Varadarajulu Naidu, Madras, 1938, p.1
7. 'நீதிக்கட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்', கே. பரமசிவம், Justice Party Golden Jubilee Souvenir, 1968, p.154
8. மேற்படி மலர், ப.154
9. மா.ரா. இளங்கோவன், முற்கூறிய நூல், ப.63
10. 'பதிப்பாசிரியர் முன்னுரை', பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் தொகுதி-1, 1974, வே. ஆனைமுத்து, ப.XI
11. தமிழ் இதழ்கள் தோற்றம் வளர்ச்சி, 1987, அ.மா. சாமி, நவமணி பதிப்பகம், சென்னை, ப.248
12. The Justice Party, A Historical Perspective, 1916-37, 1985, Dr. P. Rajaraman, p.83
13. முற்கூறிய திரு.வி.க.வின் நூல், ப.257
14. மா.ரா. இளங்கோவனின், முற்கூறிய நூலில் உள்ள மேற்கோள், ப.153
15. திராவிடன் இதழிலிருந்து மறுவெளியீடு, ஆதி திராவிடன், மாத இதழ், கொழும்பு, 1919, ஆகஸ்டு 15, பக்.137-138
16. பத்திரிகையாளர் பாரதியார், 1989, பெ.சு.மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை, ப.115
17. மா.ரா. இளங்கோவன், முற்கூறிய நூல், ப.92

புதுவை முரசு

மலையமான்

அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னைமொண்டு
செறிதரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப்பெண் ணே,உன்
நலம்காணார் ஞாலம் காணார்

என்று புரட்சிக் கவிஞர் பருவ இதழைப் (பத்திரிகை) பற்றிப் பாடியுள்ளார்.[1] இது இதழ்களின் நற்பலன் பற்றிய கருத்து; பட்டறிவின் வெளிப்பாடு. பாவேந்தர், 415 பருவ இதழ்களில் தன் படைப்புகளை வழங்கியுள்ளார்.[2]

"எதிர்ப்புணர்வு கொண்ட நான்கு செய்தித் தாள்கள், ஆயிரம் குத்துவாள்களைவிட அஞ்சத்தக்கவை" என்று மாவீரன் நெப்போலியன் கூறியிருக்கிறான். இது இதழினுடைய ஆற்றலின் அறிவிப்பு.

இதழின் அமைப்பு

இம்மாவீரன் குறிப்பிட்டதுபோல, ஆற்றல் மிக்க பருவ இதழ்களில் 'புதுவை முரசு' ஒன்று. தன் பெயருக்கு ஏற்றாற்போல், கொள்கைகளை முரசறைந்து முழங்கிய ஏடு இது. இம்முரசு, 10.11.1930இல் தொடங்கப்பெற்றது. ஆய்வாளர்கள் தட்டச்சில் வழங்கும் ஆய்வேட்டின் தாள் அளவில் ('ஏ4' அளவில்) இது அமைந்திருந்தது. வாரப்பதிப்பான இது, திங்கட்கிழமைதோறும் வெளிவந்தது. 'முழக்கம்' என்ற சொல்லால் இதழின் ஆண்டையும் 'ஓச்சு' என்ற சொல்லால் வாரத்தையும் இது குறித்தது. முதலில் இது 20 பக்க அளவில் வெளிவந்தது. பிறகு அதன் பக்கங்கள் அதிகப்படுத்தப்பட்டன. முதற்பக்கத்தில் புதுவை முரசு எனத் தமிழில் பெரிய எழுத்துகளிலும் ஆங்கிலத்தில் சிறிய எழுத்துகளிலும் பொறிக்கப்பட்டிருந்தது. இதன் ஆசிரியர் பெயரும் முதல் பக்கத்திலேயே அச்சிடப்பட்டிருந்தது. முதல்

பக்கத்தின் அடிப்பாகத்தில் புதுவை முரசு வெளியிட்ட நூல் / நூல்கள் பற்றிய (அ) அவ்விதழின் சிறப்பு மலர் பற்றிய விளம்பரம் வழக்கமாக இருந்தது. இதை ம. நோயல் என்பவர் புதுவையிலிருந்து வெளியிட்டார். இதன் அலுவலகம், 4, லல்லி தொலாந்தால் வீதி, புதுச்சேரி. இது புதுவையிலுள்ள கலாநிதி அச்சகத்தில் அச்சிடப்பெற்றது.[3]

நோக்கங்கள்

புதுவை முரசின் நோக்கங்கள் மூன்று. அவை 1) தன்மானக் கொள்கைகளைப் பிரெஞ்சிந்தியரிடம் பரப்புதல் 2) பிரெஞ்சுக் குடியரசை வாழ்த்துதல் 3) இந்திய மக்களும், அயலக இந்தியர்களும் தன்மானக் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு இனிதாக வாழ விரும்புதல்.

> சுயமரியாதைக் கொள்கைகளைப் பிரெஞ்சிந்திய மக்களின்பால் பரவச்செய்து அவர்கட்குக் கிடைத்துள்ள 'சுதந்திரம் - சமத்துவம் - சகோதரத்துவம்' என்னும் மூன்றின் உண்மை - நலன்களை அவர்கள் அனுபவிக்கும் வகையில் 'பிரெஞ்சுக்குடியரசு வாழ்க' என முழங்குவது, நம் புதுவை முரசின் கடனாம். இதுவன்றிப் பொதுவில் இமயம் முதல் குமரி யீறாக உள்ள பாரதப் பெருமக்களும் பிரஸ்தாபக் கொள்கையில் ஈடுபட்டு இன்பம் அநுபவிக்குமாறு புதுவை முரசு உழைக்கும்.

என்று இவ்விதழின் முதல் தலையங்கம் அறிவிக்கிறது.[4]

தொடக்க நிலையில் இதன் மூன்றாம் பக்கத்தில் பாவேந்தரின் படைப்பும், பத்தாம் பக்கத்தில் தலையங்கமும் முறையாக இடம்பெற்றன. பிறகு இதில் மாற்றம் ஏற்பட்டது. இதன் தனி இதழ் ஓர் அணா; ஆண்டு உறுப்பினர் தொகை 3 ரூபாய்; அயல் நாடுகளுக்கு ஆண்டுத் தொகை 5 ரூபாய்; ஆயுள் உறுப்பினர்த் தொகை 30 ரூபாய்.[5] இதில் கட்டுரை, கவிதை, நகைச்சுவைத் துணுக்கு, தலையங்கம், துணைத் தலையங்கம் - மதிப்புரை, செய்தி அறிவிப்பு, கூட்டம், மாநாடுகள் பற்றிய செய்திகள், விளம்பரம் முதலிய பகுதிகள் இடம் பெற்றன. துணைத் தலையங்கம், 'உடன் முழக்கு' என்ற பெயரில் இருந்தது. செய்திச் சுருக்கங்கள் 'திரள் ஒலி' எனப்பட்டது. பிறருடைய கருத்துகள் (அ) பொன்மொழிகள் இதழின் முதற்கட்டத்தில்

'அபிப்பிராயங்கள்' என்று பெயரில் அச்சிடப்பட்டன. இதில், அத்திபூத்தாற்போல, எப்போதோ ஒருமுறை படம் இடம் பெற்றது. தமிழ் நாட்டின் பல ஊர்களில் இது முகவர் மூலம் விற்பனையாயிற்று. கொழும்பு, சிங்கப்பூர் போன்ற பிறநாடுகளிலும் முகவர் மூலம் இது மக்களை அடைந்தது. சைகோன், கம்போஜ், ஐயோன், அன்னோய் என்று அக்காலத்தில் பெயர் கொண்டிருந்த நாடுகளுக்கும் இது அனுப்பப்பட்டது.

சிறப்பு மலரும் நூல்களும்

இது சிறப்பு மலரையும் வெளியிட்டது. இது 'விசேஷ அநுபந்தம்' என்று கூறப்பட்டது. "கட்டுரை வன்மை, கவிவன்மையுடைய சுயமரியாதைப் பெரியார் எனப்படும் அனைவராலும் எழுதப்பட்ட கவிகள், உரைநடைகள், கதைகள், ஹாஸ்ய விநோதங்கள், கிண்டல், விசேஷங்கள், தலைவரின் படங்கள் முதலியவை இதில் அடங்கியிருக்கின்றன. 130, பக்கங்கள் கொண்ட இதன் விலை 6 அணா" என்று இம்மலரைப்பற்றிய விளம்பரம்[6] பலமுறை புதுவை முரசில் வெளிவந்துள்ளது.

இந்த இதழ் சில நூல்களையும் அவ்வப்போது வெளியிட்டது. சில நூல்களைத் தக்கவரிடமிருந்து பெற்றும் விற்பனை செய்தது. தொடக்க நிலையில் பாவேந்தர் எழுதிய 'தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு', 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற இரண்டு நூல்களை வெளியிட்டது. பிறகு படிப்படியாகக் 'காந்திபுரக் கொலை', 'சிதம்பர ரகசியம்', 'சுதந்திரப் போர்', 'ஆதிதிராவிடரின் முற்காலத் தற்கால நிலமை,' 'ஓர் பாரத மைந்தனின் மரண சாசனம்', 'கைராட்டினமும் காந்தியும்', 'மாதர் சுதந்திரம்', 'ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்', 'பஞ்சமாபாதகம்' ஆகியவற்றை விற்பனை செய்தது.[7] இவற்றுள் மாதர் சுதந்திரம் சாமி சிதம்பரத்தாலும் சுய மரியாதைச் சுடர் பாவேந்தராலும் பஞ்சமாபாதகம் அய்யா.முத்து என்பவராலும் எழுதப்பட்டன. இப்புத்தகங்கள் புதுவை முரசு அலுவலகத்தில் கிடைக்கும் என்று விளம்பரச்செய்தி அறிவித்தது. எனவே, இவற்றில் பலவற்றை மற்ற பதிப்பகங்களிலிருந்து பெற்று, புதுவை முரசு விற்பனை செய்தது என்பதும், சீர்திருத்தக் கருத்துகளை மக்களிடையே பரப்பிடவே இப்படிச் செய்தது என்பதையும் உணர்ந்து கொள்ளலாம். இச்சீர்திருத்த ஏடு சில சமயம் தாக்குதலுக்கு உள்ளாகியது. மான இழப்பு வழக்கையும் சந்தித்தது (இதுபற்றி இக்கட்டுரையின் பிற்பகுதியில் விளக்கமாய் எழுதப்படும்).

கட்டுரைகளும் தலையங்கமும்

புதுவை முரசில், சீர்திருத்தம், முற்போக்கு, தன்மானம் முதலியவை பற்றியே கட்டுரைகள் மிகுதியாக வெளிவந்தன. தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றம், வைதிகக்கொள்கைகளுக்கு எதிர்ப்பு, சமயக் கருத்துகளுக்கு மறுப்பு, பெண்மையை உயர்த்துதல், பேராயக் கட்சிகள் கொள்கைகளுக்குக் கண்டனம் முதலிய பொருள் பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றிருந்தன. அவ்வப்போது நடைபெற்ற சுயமரியாதை மாநாடுகள் பற்றிய அறிவிப்பு, அங்குத் தலைவன் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் முதலியவையும் வெளிவந்தன.

நடுநாயகமான தலையங்கப்பகுதியும் 'உடன் முழக்கு'ப் பகுதியும் படிப்பவரின் சிந்தனையைத் தூண்டின. 'ஸ்வராஜ்யம்', 'நமது விண்ணப்பம்', 'நம்பூதிரிகளின் விழிப்பு', 'அரசியலில் பார்ப்பனீயக் குறும்பு', 'சர்வ வியாபிக்குப் பதில்', 'காந்தியார் கக்கும் விஷம்', 'சென்னையிலும் கூட முட்டாள்கள் உண்டு', 'அகில மலாயா தமிழர் மாநாடு', 'திருவிழாக்களும் தேரோட்டமும்' போன்றவை தலையங்கப் பகுதியில் வந்த சில தலைப்புகளாகும்.

'உடன் முழக்கு' என்ற துணைத்தலையங்கப் பகுதியிலும் முக்கியமான செய்திகள் இடம் பெற்றன. புதுவை முரசின் முதல் இதழில் வந்த உடன் முழக்குப் பகுதியில், ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாம் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானங்கள் சுருக்கமாகத் தரப்பட்டது. இப்பகுதியின் சிறப்புக்கு ஒரு சான்றாகும்.[8]

புதுவை முரசில் எழுதியவர்கள்

புதுவை முரசில் எழுதியவர்கள், பாரதிதாசன், (குத்தூசி) குருசாமி, எஸ் சிவப்பிரகாசம், சாமி சிதம்பரனார், ஏ.பி. ஆதித்தர், மா. சிங்காரவேலர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாவேந்தர் 'புதுவை முரசில்' கவிதைகளைக் குறைவாகவே எழுதியுள்ளார். கட்டுரைகளை அதிகமாக வழங்கியுள்ளார். நகைச்சுவைத் துணுக்குள், சிறுகதைகள் ஆகியவற்றை அளித்திருக்கிறார். இவற்றின் மூலம் அவருடைய பன்முக ஆற்றல் வெளிப்பட்டுள்ளது.

பாவேந்தரின் புனைபெயர்கள்

புனைபெயர் மூன்று காரணங்களுக்காக வைத்துக் கொள்ளப்படும். 1) படைப்பை எழுதியது யார் என்பது பிறருக்குத்

தெரியாமல் இருத்தல் வேண்டும் என்ற ஆவல். 2) ஒரே இதழில் ஒருவரின் படைப்புகள் இடம்பெறும் நிலையில், அவற்றைப் பலர் எழுதியுள்ளனர் என்று படிப்பவர் நினைக்க வேண்டும் என்ற விழைவு. 3) தன் இயற்பெயர் பிடிக்காத நிலையில், கொள்கைக்காகவோ, வேறு ஒரு காரணத்திற்காகவோ, விருப்பமான பெயரை வைத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கம் என்பவை அவை.

பாவேந்தர் முதல் இரண்டு காரணங்களுக்குக்காகவே, புதுவை முரசில் கட்டுரைகளைப் புனைபெயர்களில் எழுதினார். அவர் மேற்கொண்ட புனைபெயர்கள் 32 என்பர். இவற்றில் 1) பாரதிதாஸன் 2) K.S. 3) I.J. 4) நாடோடி 5) படைவீரன் 6) கத்தோலிக்கச் சிறுவன் 7) அடுத்த வீட்டுக்காரன் 8) பழைய ஆஸ்திகன் 9) பார்த்துப் பகர்வோன் 10) பழைய காங்கிரஸ் பக்தன் 11) நேரில் சந்தித்தோன் 12) நேரில் காண்போன் 13) திராவிடன் 14) முன்னேற்றம் விரும்பி 15) கிண்டற்காரன் 16) கிறுக்கன் 17) சண்ட மாருதம் 18) சு.ம.வீரன் 19) தமிழ் மகன் ஆகிய புனைபெயர்கள் புதுவை முரசு இதழில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள், கிண்டற்காரன் முதலாகத் தமிழ்மகன் ஈறாக உள்ள புனைபெயர்கள் (குத்தூசி) குருசாமிக்கு உரியவை எனக் குருவிக்கரம்பை வேலு கருதுகிறார். இது ஆய்வுக்கு உரியது.

பாரதிதாஸன் என்ற அவருடைய புனைபெயரில் கிரந்த எழுத்து 'ஸ' கரம் வருகிறது. எனவே, அக்காலக்கட்டத்தில், பாவேந்தர் தனித்தமிழில் நாட்டம் இல்லாமல் இருந்தார் என்று கூறலாம். பழைய ஆத்திகன் என்று எழுதாமல் பழைய ஆஸ்திகன் என்று வைத்துக்கொண்ட மற்றொரு புனைபெயர் இக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

அவர் புனைபெயரை வைத்துக் கொண்டபோது ஓர் அடிப்படை முறையை மேற்கொண்டார். எழுதப்படும் செய்திக்கு ஏற்ப, அவர் புனைபெயரை வைத்துக்கொண்டார். கிறித்துவ மதத்தைத் தாக்கி எழுத வேண்டியிருந்தபோது, அம்மதச் சார்பான, 'கத்தோலிக்கச் சிறுவன்' என்ற புனைபெயரைச் சூடிக்கொண்டார்.[9] பேராயக் கட்சியினரைக் கடிந்த போது, 'பழைய காங்கிரஸ் பக்தன்' என்று வேறுபெயர் வைத்துக் கொண்டார்.[10] புதுவையிலிருந்த தமிழ்நாடு இதழின் நிருபருக்கு நேர்ந்த முறைகேட்டைப் பற்றி எழுதியபோது, அதை நேரில் அறிந்த அவர் 'நேரில் அறிந்தோன்' என்ற புனைபெயரில் எழுதினார்.[11]

மேற்சொன்ன முறையைப் பார்க்கும்போது 'க்ஷத்திரிய மித்திர'னில், 'ஆத்திகக்குப்பை' என்ற கட்டுரையை எழுதிய 'தோட்டி' என்ற புனைபெயருக்கு உரியவர் பாவேந்தராக இருக்கலாம் என்று தோன்றுகிறது.[12]

'சொல்லுவார் சொன்னாலும் கேட்பாருக்கு மதியில்லையா?' என்ற கட்டுரையில் பெண்களின் சமஉரிமை பற்றி எழுதி,

"ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையுங் கற்பழிந்திடாதோ"

என்ற பாரதியாரின் பாட்டையும் சான்றாய்க் காட்டி, 'ஜெ. . . ன்' என்ற புனைபெயரில் எழுதியவரும் பாவேந்தராக இருக்கலாம்.[13] 'அறிவு வளர்ச்சியும் அதன் ஆணவமும் எங்கே' என்ற கட்டுரையும்[14] நண்பர் நிலைக்குரிய - புதுவை முரசு நடத்திவந்த - ம.நோயலுக்குச் சார்பாக 'ஈப்போ, இந்திய மித்திரன் ஆசிரியருக்கு, எழுதிய 'ஓர் கடிதம்' என்ற கட்டுரையும்[15] அதே புனைபெயரில் எழுதப்பட்டிருப்பதும், மேற்சொன்ன கருத்தை அரண் செய்கிறது. இவ்வாறே, 'மறியல்காரன்', 'கண்டது விண்டோன்' என்ற புனைபெயர்களும் பாவேந்தருக்கு உரியதாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

பாரதிதாசனின் கவிதைகள்

பாவேந்தருடைய பாடல்கள் யாவும் 'பாரதிதாஸன்' என்ற புனைபெயரிலேயே இவ்விதழில் வெளிவந்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை, பெண்களைப் பற்றியே உள்ளன. 'மாந்தோப்பில் மணம்', 'புனர்விவாக விஷயம்' (11.11.30), 'மூடத்திருமணம்' 'மண்ணாய்ப் போக' (17.11.30), 'குழந்தை மணத்தின் கொடுமை' (24.11.30), 'கைம்மைக் கொடுமை' (12.10.31), 'கைம்மைப்பழி' (19.10.31, 2.11.31), 'கைம்மை நீக்கம்' (26.10.31), 'கைம்பெண் நிலைக்கு நற்றாய் இரங்கல்' (16.11.31) ஆகிய பாடல்களை இங்கே குறிப்பிடலாம்.

பாரதிதாசனின் கட்டுரைகள்

இவருடைய கட்டுரைகள் பல பொருள் பற்றியவை. 'பெண்கள் சமத்துவம்' (17. 11.30), 'கடவுள் முதலாளி, காரியக்காரன்' (15. 12.30), 'ஜாதி ஆபத்து - எம்டன் கப்பல் வரவு' (12.1.31), 'வெண்ணெய் வாழைதான், ஆனால் குலைதள்ள வேண்டும்' (16.2.31) ஆகிய தலைப்புள்ள கட்டுரைகளைச் சான்றாகக் குறிக்கலாம் (கடைசியாகச்

சொன்ன கட்டுரையில், புது இலக்கணங்கள், புது இலக்கியங்கள், புது நிகண்டுகள் ஆகியவற்றை எழுத வேண்டும் என்ற கருத்தை மறைமுகமாகக் கூறுகிறார் அவர்).

பாரதிதாசனின் கதைகள்

பாவேந்தர் சில சிறுகதைகளையும் புதுவை முரசில் எழுதியுள்ளார். 'குழந்தை இந்தியா' (19.1.31), 'பகுத்தறிவுக்குத் தடை' (2.2.31), 'கண்ணுக்குத் தெரியாத சுமை' (5.1.31) ஆகியவை அவர் எழுதிய கதைகள். இவற்றுள் கண்ணுக்குத் தெரியாத சுமை என்பது அறிவியல் சார்ந்த கதை. இது செவ்வாய் உலகப் பயணம் பற்றிய கதை. செவ்வாய் உலகத்திற்குத் தமிழர்கள் சென்றனர். அங்கே வாழ்ந்தவர்கள் ஒவ்வொருவரும் தம் தலைமேல் எப்போதும் ஒரு கல்லைச் சுமந்து கொண்டிருந்தனர். ஆனால் தமிழர்கள் சாதி வேற்றுமை என்ற கல்லைக் கண்ணுக்குத் தெரியாமல் சுமந்து கொண்டிருப்பதாக அவருடைய இக்கதை கூறுகிறது.[16]

பாவேந்தரின் நகைச்சுவை

பாவேந்தர் 'கிண்டற்காரன்' என்ற புனைபெயரில் நகைச் சுவைத் துணுக்குகளை வழங்கியிருக்கிறார். சான்றுக்கு ஒன்று:-

ஐயர் : உங்களூர் நடராஜ விக்கிரகம் திருட்டுப்போய்விட்டதென்று கேள்வி. அதன் விலை என்ன மதிப்பிருக்கும்?

செட்டியார் : திருடப்படும் சாமிக்கு மதிப்பென்ன? (பு.மு. 5-1-31)

புரட்சிக் கவிஞரின் பொது வாழ்வு நிகழ்ச்சிக்குறிப்புகளும் இவ்விதழில் இடம்பெற்றுள்ளன. அகில பிராந்திய ஆரம்ப ஆசிரியர் (சிண்டிகேட்) ஐக்கியத் தேசீயக் கூட்டத்தில் அவர் பேசிய பேச்சு, 'கனக சுப்புரத்தினத்தின் ஆவேச மொழிகள்' என்ற துணைத் தலைப்புடன் இதழில் வெளிவந்துள்ளது (28.3.32).

மேலும் பாரதிதாசனே புதுவை முரசின் தலையங்கப் பகுதியிலும் ஆசிரியர் குறிப்பு என்ற பகுதியிலும் எழுதிவந்தார் (பாரதிதாசன் - சிவ இளங்கோ ப.84) என்றும் கூறப்படுகிறது.

குருசாமியின் கட்டுரைகள்

"மனித வாழ்விலும் அரசியலிலும், செய்தித்தாள் மிக இன்றியமையாதது" என்றார் அறிஞர் இப்சென். (குத்தூசி) குருசாமியின்

எழுத்துப்பணியில் இக்கருத்து தெளிவாக விளங்குகிறது. இவர் 29.12.1930இல் புதுவை முரசின் ஆசிரியப் பொறுப்பேற்றார். அவர் அரசியல், சமுதாயக் கட்டுரைகள் இதழில் எழுதினார். அவையாவும் புனைபெயரிலேயே வெளிவந்தன. குமி, தங்கப் பாம்பு, மதமற்றவன், நிருபர், விடாக்கண்டன், மதுரை வீரன், சு.ம. வீரன், ஒற்றன், ஒண்டி நின்றுகேட்டோன், எழுதுவது, பபூன் ஆகிய பல பெயர்களில் அவர் எழுதினார். பரசு என்ற பெயரில் தொடர்ந்து அவர் பல கட்டுரைகளை எழுதிவந்தார். 'விழலுக்கிறைத்த வீணனே கம்பன்', 'கம்பநாட்டாழ்வானானது எப்படி?' (20.3.32) 'கடவுளின் திருவிளையாடல்கள்' (21.3.30), 'ஐந்து பேர்கள்தான் கற்புக்கரசிகளா? (28.3.32), 'மநு தர்ம ஆராய்ச்சி' (4.1.32), 'மதியிலார் மடமைப்பிரசாரம்' (18.1.32, 25.1.32, 1.2.32, 8.2.32), 'புராண ஆபாசம்' (18.4.32) என்பன போன்ற தலைப்புகளில், சமயம், சமுதாயம், இலக்கியம் முதலியவற்றைப் பற்றிக் கட்டுரைகளை எழுதினார். அவருடைய பல கட்டுரைகளில் எள்ளல் சுவை இலங்கியது.

அவர் ஆசிரியராக இருந்த காலத்தில் தலையங்கக் கட்டுரைகளிலும் பல பொருள் பற்றிய கருத்துகள் வழங்கப்பட்டன. 'மாரியம்மன் சக்தியே சக்தி', 'நம் புத்தியே புத்தி' (23-3-31), 'மதம் கொண்டவனே' (11,8.31), 'விகடமும் விஷயமும்' (31.8.31), 'கடவுள் உண்டா இல்லையா?' (8.2.32) என்று அவர் பல பொருள் பற்றியும் தலையங்கம் தீட்டினார்.

இவருக்குப் பிறகு ஆசிரியர் பொறுப்பை, அ. பொன்னம்பலனார் ஏற்றார்.

சாமி சிதம்பரனாரின் கட்டுரைகள்

சாமி சிதம்பரனார் 30.3.31 முதல் புதுவை முரசில் அவ்வப்போது கட்டுரைகள் எழுதினார். அவர் பல்வேறு பொருள்கள் பற்றி எழுதினார். அவருடைய பல கட்டுரைகள் தமிழருக்கு விழிப்புணர்ச்சி தரும் முறையில் இருந்தவை. 'யோசித்துப் பாருங்கள்' (24.8.31), 'வீரர்கள் தயாராக வேண்டும்' (30.3.31), 'நீங்கள் சுகம்பெற விரும்பினால்' (6.4.31), 'தூங்கியது போதும்' (27.4.31), 'யோசித்துப் பாருங்கள், இல்லாவிட்டால் போங்கள்' (24.8.31), 'அறிவிருந்தால் கேளுங்கள்' (28.9.31) முதலிய தலைப்புகளில் அவர் கட்டுரைகளை எழுதி மக்களைத் தூண்டியுள்ளார்.

சிவப்பிரகாசர் கட்டுரைகள்

"ஒரு நல்ல செய்தித்தாள் ஒரு நாட்டின் இனம், தனக்குத் தானே பேசிக்கொள்வதைப் போன்றது" என்று கூறினார் நாடக ஆசிரியர் ஆர்தர் மில்லர். எஸ். சிவப்பிரகாசம், இவ்விதழில் எழுதியுள்ள கட்டுரைகளில் சில, இக்கருத்தை நினைவுபடுத்துவதாக உள்ளன. 'ஆ! பாரதத் தாயே, நினது மக்கள் இன்னுமா உறங்கிக் கொண்டிருக்க வேண்டும்' (10.11.30), 'பகவத் கீதா மான்மிய ஆராய்ச்சி', 'பகவத் கீதைப் படித்தாலும் கேட்டாலும் மோட்சமாம்' (1.12.30), 'பெண்களின் முற்கால நிலையும் தற்காலச் சீர்திருத்தமும்' (15.2.30), 'கடவுள் நம்மைப் படைத்துக் காத்து ரக்ஷிக்கின்றாராம்' நாம் கடவுளைப் படைத்துக் காத்து ரக்ஷிக்கின்றோமா? (25.5.31), 'மறியல் தொண்டர்களிள் மதி கெட்டதனம்' (31.8.31), 'இறந்தவன் ஆவி எங்கே செல்கிறது?' (12.10.31) ஆகிய கட்டுரைகள் அவரால் எழுதப்பெற்றன. இவர் 'S.S' என்ற புனை பெயரிலும் கட்டுரை எழுதியுள்ளார். இவர், புதுவை முரசை நடத்தும் பொறுப்பிலும் தொண்டாற்றினார்.

ஆதித்தர் கட்டுரைகள்

ஏ.பி. ஆதித்தர் என்ற சிந்தனையாளரும் புதுவை முரசில் பல கட்டுரைகளை எழுதி மக்களைச் சிந்திக்க வைத்துள்ளார். 'பார்ப்பனப் புரட்டு' (12.3.31), 'ஜாதிக்கொடுமை' (6.4.31), 'மதக் கொடுமை' (11.5.31), 'சாரதா சட்டம் அமுல் நடத்த வேண்டிய அவசியம்' (28.9.31), 'சீர்திருத்தமா, சுயராஜ்யமா முதலில் வேண்டுவது?' (10.8.31) முதலிய தலைப்புகளில் அவர் கட்டுரைகளை வரைந்துள்ளார்.

தொடர் கட்டுரைகள்

புதுவை முரசில் அவ்வப்போது தொடர் கட்டுரைகள் வெளிவந்தன. இதழின் தொடக்க நிலையில், புதுவைக்கு வந்த 5000 வருடத்திற்குரிய மனிதனைப் பற்றித் தொடர் கட்டுரை வெளிவந்தது. இக்கட்டுரையில், 'வள்ளி என்பது சூரியன், கந்தழி என்பது நெருப்பு, கொடிநிலை என்பது நிலவு' என்ற கருத்தும் (24.11.30), 'இறந்தவர் இடத்தைக் குறிக்க நட்ட குறியே சிவலிங்கம் ஆயிற்று' என்ற (8.12.30) கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பு. முனிசாமி (Head Examiner, Justice Office) என்பவர் வேதங்களைப் பற்றியும் சூரியனைப் பற்றியும் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியுள்ளார்.

பிற கட்டுரைகள்

எம். சிங்காரவேலு என்பவரும் 'கடவுள் என்ற பதமும் அதன் பயனும்' (4.4.32), 'சுயமரியாதை இயக்கமும் இஸ்லாமும்' (29.2.32) முதலிய கட்டுரைகளை எழுதியுள்ளார். (இவர் தமிழகத்தில் பொது உடைமையை விதைத்த அந்தச் சிங்காரவேலராக இருக்கலாம்)

இவர்களைத் தவிர மேலும் பலர் தனிக்கட்டுரைகளை எழுதியுள்ளனர். எஸ். நீலாவதி என்பவர் 'வெட்கமில்லையா?' என்ற தலைப்பில் பெண்களுக்கு எழுதியுள்ளார் (31.8.31). திருமதி ருக்மணி அம்மாள், 'ஸ்ரீவரதராஜலு வீட்டில் தாலியுண்டா?' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். இவர்களில் இருவர் மட்டும் பெண் எழுத்தாளர்கள்.

புதுவை முரசில் தம் இயற்பெயரில் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தவிர, புனைபெயரில் அமைந்த கட்டுரைகளும் காணப்படுகின்றன. காஞ்சிநாடன் (7.9.31), தூத்துக்குடியோன் (7.9.31), விருதுநகரோன் (2.9.31) என்பன போன்று ஊர்ப்பெயர்களை ஒட்டி அமைந்த புனைபெயர்களிலும் கட்டுரைகள் உள்ளன.

'அங்குஸன்' (7.12.31), 'நெருப்புக்குச்சி' (18.1.32), 'கோடரி' (9.11.31), 'நாடார் குல நண்பன்' (16.10.31), 'அபேதவாதி (16.11.31), 'பெருச்சாளி' (19.10.31), 'யானைவெடி' (18.4.32) போன்ற புனைபெயர்களிலும் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றில் சில குத்தூசி குருசாமிக்கு உரியதாக இருக்கலாம்.

மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்

புதுவை முரசில் மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் அருகியே உள்ளன. இவற்றுள், 'மதம் என்றால் என்ன?' என்ற இங்கர்சாலின் மொழிபெயர்ப்புக் கட்டுரை குறிப்பிடத்தக்கது. (24.8.31, 31.8.31, 2.9.31). இவற்றை எஸ். பூதலிங்கம் என்பவர் தமிழில் பெயர்த்திருக்கிறார்.

தாக்குதல் கட்டுரைகள்

"செய்தித் தாள் என்பது ஆவலைத் தூண்டுவதாக இருக்கும்" என்றார் சார்லஸ் லாம்ப் என்ற ஆங்கில எழுத்தாளர்.

ஆவலைத் தூண்டி விறுவிறுப்பு ஊட்டுவதற்குரிய வழிகளில் ஒன்று தாக்குதல் கட்டுரைகள். ஒரு கொள்கையையோ அதைக் கொண்டவரையோ, தாக்கி எழுதப்படும் கட்டுரைகளை மக்கள்

ஆவலுடன் படிப்பார்கள். புதுவை முரசில் இப்படிப்பட்ட கட்டுரைகள் பரவலாக உள்ளன.

இதழில் இந்து சமயக் கொள்கைகள் தாக்கப்பட்டன. பேராயக் கட்சியின் கொள்கைகள் கண்டிக்கப்பட்டன. காந்தியடிகள், இராசகோபாலாசாரி போன்றவர்களும் புதுவை முரசின் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளாயினர். காந்தியைத் தாக்கி இதழின் தலையங்கக் கட்டுரைகளும் எழுதப்பட்டன.

இந்து சமயம் மட்டுமன்றிக் கிறித்துவ சமயத்தினரும் இவ்விதழினால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். குறிப்பாகப் பாதிரிமார்களின் செயல்முறையைத் தனிக்கட்டுரைகளும் தலையங்கமும் தாக்கின. லூத்தர் போன்ற கிறித்தவர்களும் எழுத்துத் தாக்குதல் நடத்தினர் (13.4.31). இதன் விளைவாக இந்த இதழின்மேல் ஒசிந்து கோலாஸ் முதலிய 18 பாதிரிமார்கள் இந்த இதழின்மீது மான இழப்பு வழக்கு தொடர்ந்தனர். வழக்கு சிலமுறை தள்ளிப் போடப்பட்டது. பாதிரிமாருக்குத் தலைக்கு 10 ரூபாயும் புதுவை முரசுக்கு 250 பிராங்கும் தண்டமாகத் தரப்படும் நிலை ஏற்பட்டது (19.10.31). இருப்பினும் கிறித்துவ மதத்தின் ஒழுக்கக் கேடர்களைப் புதுவை முரசு தொடர்ந்து தாக்கிக் கொண்டேயிருந்தது.

இரண்டாம் முறையும் இதழின்மீது மான இழப்பு வழக்கு தொடுக்கப்பட்டது. ழோர்ழ் பெர்னாக் தேஜ் இதைத் தொடர்ந்தார். இதன் விளைவாக, 3 பாதிரிமார்களுக்குத் தலைக்கு 100 ரூபாயும் அரசுக்கு 200 பிராங்கும் இதழின் மேலாளராக இருந்து அதை நடத்திவந்த எஸ். சிவப்பிரகாசத்திற்கு (புதுவை சிவத்திற்கு) ஒருமாதத் தண்டனையும் 4.5.32இல் விதிக்கப்பட்டது. சிவப்பிரகாசம் சிறைப்பட்டார். புதுவை முரசும் நின்றது. பிறகு பிரான்சில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பெற்றது. சிவப்பிரகாசம் விடுதலை பெற்றார். ஆனால் புதுவை முரசு மீண்டும் வெளிவரவில்லை.[7]

நிறைவுரை

புதுவை முரசில் அ.வெ. முத்தையா என்பவர் பெரியார் என்ற சிறப்புப் பெயரால் சுட்டப்பட்டிருக்கிறார் (14.3.32). கல்யாண விடுதலை (அ) விவாகரத்து என்ற கட்டுரையை எழுதிய ஈ.வே. இராமசாமி 'தோழர்' என்று முன் ஒட்டு தரப்பட்டிருக்கிறார்.

இந்த இதழில், கட்டுரையாளரின் பெயர்களுக்கு முன்புள்ள தலைப்பெழுத்து, ஆங்கிலத்திலேயே உள்ளது. கிறித்துவர், கிறீஸ்தியர் என்றும், உலகச் செய்திகள் உலக வர்த்தமானங்கள் என்றும் கடலுக்கு அப்பால் வாழும் மக்கள் ஜலப்பிரதேசங்களில், வாழும் மக்கள் என்றும், உரையில் அமைந்த கையறு நிலை, சரமபத்திரதம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த இதழுக்குப் பாவேந்தரும், சிவப்பிரகாசமும் ஆணிவேர் போல இருந்தனர். (முன்னவர் எழுத்துப் பகுதியையும் பின்னவர் நிர்வாகப் பகுதியையும் கவனித்துக் கொண்டனர்.[18] இரண்டு ஆண்டுகள் மட்டுமே நடைபெற்ற இந்த இதழ், மிகச் சிறந்த திராவிடர் இயக்க ஏடுகளில் ஒன்றாகும். இது சமுதாய முன்னேற்றத்திற்கு ஆற்றிய பங்கும் சீரியதொன்றாகும்.

ஆய்வு முடிவுகள்

1. புதுவை முரசு, தன்மானக் கொள்கையை முனைப்பாகப் பரப்பிய ஏடுகளில் ஒன்று
2. இதில் பாவேந்தர் கவிதைகளைவிடக் கட்டுரைகளையே அதிகமாக எழுதினார்
3. அவர் 19 புனைபெயர்களில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்
4. அவர் விண்வெளி (அறிவியல்) சார்பான கதையையும் இதில் வழங்கியிருக்கிறார்
5. (குத்தூசி) குருசாமியும் பல புனைபெயர்களில் இவ்விதழில் எழுதியுள்ளார்
6. இந்த இதழில் பெண் எழுத்தாளர்களின் கட்டுரைகள் மிகவும் குறைவு
7. இவ்வேடு இந்து சமயத்துடன் கிறித்துவத்தையும் தாக்கியுள்ளது.

குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள், முதல் தொகுதி, பத்திரிகை, ப.186
2. பாரதிதாசன் எழுத்துகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ச் சமுதாய நிலையும் கருத்துகளும், ஆய்வேடு (தட்டச்சில் உள்ளது) செல்வராசு, இணைப்பு, பக்.43-44

3. புதுவை முரசு, முழக்கம் 1 - ஓச்சு 1, 10-11-30, ப. 11
4. மேலது, மு 1 - ஓ. 1, 10-11-30, ப.19
5. மேலது, மு 1 - ஓ. 36, 17-8-31, முதல் பக்கம்
6. மேலது, மு 1 - ஓ 38, 31.8.31, ப.28
7. மேலது, மு 1 - ஓ 1, 10.11.30, ப.12
8. முத்தமிழ் வளர்த்த மூவர் - சரளா இராசகோபாலன், பக். 153-154
9. பாரதிதாசன் எழுத்துகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ச் சமுதாய நிலையும் கருத்துகளும் - இணைப்பு, ப.28
10. மோட்சம், புதுவை முரசு, மு 1 - ஓ 13, 2.2.31, ப.17
11. கடவுளைப்பற்றிக் கவலை ஏன்? புதுவை முரசு, மு 1 - ஓ 16, 23.2.31, ப.8
12. புதுவை முரசு, மு. 1 - ஓ37, 24.8.31, ப.19
13. மேலது, ஓ. 37, 24.8.31, ப. 21
14. மேலது, ஓ. 39, 7.9.31, ப.5
15. மேலது, ஓ.43, 5.10.31, ப.3
16. மேலது, ஓ. 30, 1.6.31, ப.4
17. பாரதிதாசன் கனக சுப்புரத்தினம் - சிவ இளங்கோ, ப.86
18. மேலது, ப.84

விடுதலை

இறையன்

தமிழ்கூறு நல்லுலகின் நகரங்களிலும் பேரூர்களிலும் அன்று அது நடந்தது. எங்கெல்லாம் நீண்ட பெரிய சுவர்கள் அமைந்திருந்தனவோ அங்கெல்லாம் அப்படியொரு காட்சி நிலவியது. சுவர்களின்கண் அறையப்பட்ட ஆணிகளிடையே கட்டப்பட்ட கயிறுகளின்மீது திராவிட இயக்க ஏடுகள் தொங்கவிடப்பட்டிருக்கும். அவற்றை அக்கால இளைஞர்கள் எடுத்து ஆர்வம் பொங்கப் படித்து முடித்து மீண்டும் கயிற்றிலே மாட்டி வைத்து விடுவர். அந்தக் குறிப்பிட்ட இடங்கள்தாம் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழக இளைஞர்கட்குப் புத்தெழுச்சி ஊட்டிய பெருமைக்குரிய எளிய படிப்பகங்கள்.

அத்தகைய வாசகசாலைகள் என்றழைக்கப்பட்ட படிப்பகங்களில் இடம் பெற்ற ஏடுகளில் முதன்மை படைத்ததாய் விடுதலை விளங்கியது. திராவிட இயக்கத் தாளிகைகளிலேயே இரண்டாவதாகத் தோன்றிய நாளேடு தந்தை பெரியார் அவர்களால் - இந்நாளில் கையாளப்பட்டு வரும் தமிழெழுத்துச் சீரமைப்பு முறையில் அச்சிடப்பட்டு, புதிய வடிவம் எய்திய 'லை' என்னும் மொக்கை எழுத்தை முகப்பிலே தாங்கி, முகங்களிலே வியப்புக் குறிப்பைத் தோற்றுவித்த நாளேடு என்பதாகிப் பல சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டது விடுதலை இதழ்.

விடுதலை ஏடு நீதிக்கட்சி என்று பொதுமக்களால் அழைக்கப்பட்ட தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தினரால் 1.6.1935 ஆம் நாளன்று தொடங்கப்பட்டபோது, அதற்குத் தமிழரிடையே எத்துணை வரவேற்பு இருந்தது என்பதைக் 'குடிஅரசு' ஏட்டில் பெரியாரவர்களே குறிப்பிட்டுள்ளார்.

"2, 3 வருடங்களாகவே பரிசுத்த வீர ரத்த ஓட்டமுள்ள ஒவ்வொரு பார்ப்பனரல்லாதாரும் இரவும் பகலுமாய், 'தமிழ்ப்பத்திரிகை, தமிழ்ப் பத்திரிகை, தமிழ்ப் பத்திரிகை என்கின்ற தாகத்துடன் அலைந்து கொண்டிருந்ததும், அதை எந்தத் தலைப்புகளும் கவனிக்காமல் அலட்சியமாய் இருந்ததும், யாரும்

அறியாததல்ல. அப்படிப்பட்ட நிலையில் விடுதலை எனும் பெயரால் பத்திரிகை வெளியாகி இருப்பதைப் பார்த்து எந்தப் பார்ப்பனரல்லாதாரும் தங்களுக்கு ஏதோ 'ஒரு பாக்கியம்' கிடைத்ததாக மகிழ்ச்சி யடைவார்களே ஒழிய இதற்கு மதிப்புரை வருகின்றதா, அது எப்படி வருகின்றது என்று கவனிக்க மாட்டார்கள். எப்படியோ ஒரு விதத்தில் தமிழ் மக்கள் எதிர்பார்த்தபடி தமிழ்ப் பத்திரிகை வந்துவிட்டது. அதைத் துய்த்து, தினசரியாக்கி - அப்போது அது கிழமை இருமுறை இதழாகத்தான் வெளி வந்து - நிலை நிறுத்த வேண்டியது தமிழ்மக்கள் கடமை.

இவ்வாறு அய்யா அவர்களால் பாராட்டப்பட்டு ஊக்குவிக்கப்பட்ட விடுதலை தெ.இ.ந.உ. சங்கத்தின் சார்பில் 14, மவுண்ட் ரோட், மதராஸ் என்ற முகவரியிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்தது. தந்தை பெரியாரவர்கள் நீதிக்கட்சியினருக்குத் தந்த ஒத்துழைப்பின் விளைவாக, 1937ஆம் ஆண்டிலிருந்து விடுதலையை அய்யா அவர்களே ஏற்றுக் கொண்டு நடத்தும் சூழ்நிலை உருவாயிற்று. 1.1.37ஆம் நாளிலிருந்து நாளேடாக மாறிய விடுதலை கழிந்த 60 ஆண்டுகளாக வீரநடை போட்டுக் கொண்டிருப்பது நம் நாட்டுச் சூழலில் விந்தையென்றே கூற வேண்டும்.

இன்று இரண்டு உருபாவிற்கு விற்கப்படும் விடுதலையின் அடிநாள் விலை காலணா. அன்றிலிருந்து இன்றுவரையிலான காலக் கட்டத்தில் அதன் அதிகார முறை ஆசிரியர்களாகப் பண்டித முத்துசாமி (பிள்ளை), அ. பொன்னம்பலனார், சாமி, மணியம்மை, கி. வீரமணி ஆகியோரும் பொறுப்பாசிரியர்களாக அறிஞர் அண்ணா என்றழைக்கப்படும் அண்ணாதுரை, சா. குருசாமி, சாமி. சிதம்பரனார், கி. வீரமணி ஆகியோரும் கடமையாற்றியுள்ளனர்.

சுயமரியாதை இயக்கம் என்னும் தன்மதிப்பு - தன்மானக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட அமைப்பின் நிறுவனர் என்ற முறையிலும் திராவிடர் கழகத்தை உருவாக்கியவர் என்ற நிலையிலும் தந்தை பெரியாரவர்கள் வெளியிட்ட கோட்பாடுகளையே விடுதலை அச்சு உருவத்தில் பரப்பியது.

மக்களாய (சமுதாய) ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கிய ஆரிய வர்ண சாதி முறையைத் தகர்த்தல் இக் குமுகாய வேறுபாடுகளின் காரணிகளான கடவுள், மதம், ஆத்மா, மோட்சம், நரகம், முற்பிறவி, தலை எழுத்து, முதலிய கற்பனைப் புரட்டுகளை மக்கட்குப்

புலப்படுத்துதல், இவற்றை நிலைநாட்டுகின்ற தீயநோக்குடன் கட்டப்பட்ட வேத-சாத்திர-புராண-இதிகாச நூல்களை மறுத்தல், பெண்ணடிமை நீக்கத்திற்காக உழைத்தல், தீண்டாமை, தீட்டு ஆகிய கொடுமைகளை எதிர்த்தழித்தல், சமனிய - பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்புதல், தாய்த் தமிழை அறிவியல் மொழியாக வளர்த்தல், அயல் மொழி வல்லாட்சியினை ஒழிக்கப் போராடுதல், கல்வியும் அரசுப் பணிகளும் மக்கள் அனைவர்க்கும் கிட்டச் செய்யும் 'சமூகநீதி' எனப்படும் வகுப்புரிமை பெற உழைத்தல் ஆகிய நோக்குகளை அடிப்படையாய்க் கொண்டே விடுதலை கருத்துக்கள் வெளியிட்டது.

எனவே நாளேடாக வெளியிடப்பட்டாலும் வெறும் செய்தி இதழாக (News paper) விடுதலை அமையாமல், கருத்து இதழாகவே (Views paper) இலங்குவது இயல்பான ஒன்றே.

"திராவிடனே! உன் சமுதாயம் சேறும் பாசியும் நிரம்பிய குட்டை போல் ஆகிவிட்டது. அதிலுள்ள நீரை எவரே விரும்புவர்? நீர் குடிப்பதற்கோ குளிப்பதற்கோ முடியாதபடி ஆக்கப்பட்டுவிட்டது. எனவே அதை உபயோகித்து உன் உடலை நோய்க்கு ஆளாகும்படி செய்து உடைந்து போகாதே, சேற்றை அகற்றப் பாசியை நீக்கித் துப்புரவு செய்து பயன்படுத்திக் கொள்" என்று விடுதலை கூறுகிறது.

"இந்நாட்டு ஆட்சி உன்னுடைதாய் இருந்தது. இன்று நீ ஆண்டியாகிக் கிடக்கிறாய். வீரனாய் இருந்த நீ கோழையாய் - பூனையைக் கண்டு அஞ்சம் பேதைய்ாய்க் கிடக்கிறாய். இப்படி நீ ஆனதன் அடிப்படையை உணரவில்லையே", என்று கூறி விளக்கமும் விழிப்பும், உண்டாக்கி வருகிறது விடுதலை.

> கீழ்த்தர ஜாதியும், நான்காம்-அய்ந்தாம் ஜாதியுமாய் ஆக்கப்பட்டு விட்டாய், உழைத்தாலும் உழைப்பின் பயனை அடையமுடியாதபடி செய்யப்பட்டுவிட்டாய். பொருளாதாரத்தில் நசுக்கப்பட்டுவிட்டாய், கல்வியில் 100-க்கு 90 பேர் தற்குறிகளாய் இருக்கும் கொடுமையைப் பெற்றுவிட்டாய்! அரசியலிலோ பிற துறைகளிலோ, கேவலம், கீழ்த்தரச் சிப்பந்தியாய்ச் சீர்குலைக்கப்பட்டு விட்டாய்! என்று கூறும் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு அறிவுத் துறையில் புத்துணர்ச்சியையும்

வாழ்க்கைத் துறையில் வளத்தையும் பெறும்படி விடுதலை பணியாற்றி வருகின்றது! (திராவிட நாடு: 27.6.48).

அரை நூற்றாண்டுக்கு முன் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் வரைந்த இப்பாராட்டுரை விடுதலை ஏட்டின் தொண்டுகளைப் பற்றிய பிழிவு என்றே கொள்ள வேண்டும்.

"விடுதலை பத்திரிகையை ஒவ்வொருவரும் அவசியம் வாங்கிப் படிக்க வேண்டும். பார்ப்பன ஏடுகள் நமக்குத் துரோகம் இழைப்பவை ஆகும். தமிழர்களுக்காக, தமிழர்களின் கல்வி உத்தியோக நியமனத்துக் காகப் பாடுபடும் ஏடு விடுதலை ஒன்றுதான்" (விடுதலை : 18.5.58).

புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் வழங்கிய சான்று இது. இவ்விருபெரும் சான்றோர்களின் கருத்துகள் விடுதலையின் தொண்டு பற்றியும் அதன் பயன் பற்றியும் தெளிவுறுத்த வல்லன.

தீமையைக் கொதிப்புடன் எதிர்க்கும் முறையில் விடுதலை முனைப்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றைக் குறிப்பிட வேண்டும்.

பிராமணாள் முடித்திருத்தகம், பிராமணாள் சலவை லாண்ட்ரி, பிராமணாள் மிதியடி ரிப்பேர் ஷாப், பிராமணாள் சிலை வடிக்குமிடம், பிரமாணாள் கொல்லுப்பட்டறை, பிராமணாள் தச்சுப் பட்டறை, பிராமணாள் விறகுக் கடை, பிரமாணாள் கைத்தறி நெசவுச் சாலை, பிராமணாள் கொழன்-வெள்ளிப்பட்டறை, கொத்துவேலை - தோத்தாத்திரி அய்யங்கார், மண்பாண்டம் வனையும் மகாதேவ சர்மா, செத்தமாடு தூக்கும் சிவநேயப் பட்டர், மரமேறி மகாலிங்க அய்யர், கூலிவேலை குப்புசாமி தீட்சதர், மாடுமேய்க்கும் மாதவராவ், பால்கறக்கும் பஞ்சாபிகேச அய்யர், பிணம்சுடும் பார்த்தசாரதி அய்யங்கார், ஏர் உழும் ஏகாம்பர அய்யர், நடவு நடும் நாகலட்சுமி-மணி அய்யர், விறகு பிளக்கும் சடரோச அய்யங்கார், கல்தச்சர் கல்யாணராம் அய்யர், அச்சுக் கோர்க்கும் அனந்த கிருஷ்ணராவ், மோர் விற்கும் மோகனாங்கி - ரங்கராவ், ரிக்ஷா இழுக்கும் ராகவபிச்சுரி, தோட்டித் தொழில் துரைசாமி அய்யர், கல்லுடைக்கும் கணபதி சர்மா, நாதசுரம் வாசிக்கும் நாராயண அய்யங்கார் - இந்த நிலை எங்கு வந்துவிடுமோ என்றுதான் பார்ப்பனக் கும்பல் பதறுகிறது. இறங்கு ஈரோட்டுப் பாதையில் துணிந்து விடுதலை : 24.12.57.

கொடுமை குறித்துக் குமுறுகின்ற இத்தகைய உணர்வுகளைக் கொப்பளித்தது அன்றாடம் விடுதலை.

கடவுள் அறியாமையிலிருந்து தோன்றியதாகும். மதமும் சாத்திரங்களும் அயோக்கியத்தனத்திலிருந்து - அதாவது மக்களை மடையர்களாக்கவும், பயப்படுத்தி அடிமைகளாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் மீதும் உண்டாக்கப்பட்டமையாகும். கடவுளைக் கற்பித்தவன் உலக உற்பத்திக்கு - நடப்புக்கு - ஒரு கர்த்தா இருக்க வேண்டும் என்ற உத்தேசத்தின் பேரில் உறுதிப்படுத்திச் சொல்லுகிறான். அதாவது சந்தேகத்தின் பயனைக் கடவுளுக்குக் கொடுக்கிறான். ஆனால் மதமும் சாத்திரமும் அப்படியில்லை. முழுப் பொய்யையே கற்பனை செய்து, மக்களை ஏய்ப்பதற்கென்றே, பயப்படுத்துவதற் கென்றே மதத்தையும் சாத்திரத்தையும் அமைக்கிறான்.

நம் தமிழ் மக்களுக்குக் கடவுள் உண்டா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் மதம் என்பதே கிடையாது. இந்து மதம் நம் மதம் என்று கருதிக் கொண்டிருக்கிறோம், இதுவே ஒரு மாபெரும் இமயமலை அளவு முட்டாள்தனமாகும். இந்து மதத்தைப் பார்ப்பனர் வேத மதம் என்கிறார்கள். பார்ப்பனர் தங்களை ஆரியர் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதனால் அதை ஆரியமதம் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

இந்து மதத்திற்கு ஆதாரம் வேதம்-சாத்திரம்-புராண இதிகாசங்களே. இந்து மதத்தின்படி நம் கீழான பிறவி - 4ஆம் 5ஆம் சாதியராவோம்! அதனால் மேற்கண்ட மத ஆதாரங்களைப் படிக்கத் தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம். வேத-சாத்திர-புராண-இதிகாச ஆதாரங்கள் பெரிதும் நம் மக்களை இழிகுலமாக்கி அயோக்கியராக்கிப் பல வழிகளிலும் அவமானப்படுத்தியுள்ளன. ஆகவேதான் கடவுள் நம்பிக்கை, மதம், வேதம், சாத்திரம், புராணம் இதிகாசம் ஒழிக்கப்பட்டே ஆகவேண்டுமென்று கூறுகிறோம் (விடுதலை ஆசிரியவுரை : 17.12.69).

ஆசிரியவுரையாக விடுதலையில் வெளியாகிய வழிகள் இவை. இனி புராணப் பண்டிதங்களுக்கு, விடுதலை பேசுவதைக் கேளுங்கள். "பகுத்தறிவுப் பிரசாரத்தைப்பற்றிப் பார்ப்பனர்கள் நெருப்பில் நிற்பவர்கள்போல் துடிக்கிறார்கள்; பதறுகிறார்கள். 'கடவுளை- மதத்தை நிந்தனை செய்கிறார்கள் என்றால், இந்தக் கடவுள்களையும் இந்தக் கதைகளைக் கொண்ட மதத்தையும் நிந்தனை

செய்வது தப்பிதமா? நிந்தனைசெய்து அழித்து ஒழிக்காமல் இருப்பது தப்பிதமா? தகம் என்றும் மகள் என்றும் வேதத்தை உணர்ந்தோரே! பத்து நாட்களுக்குமுன் - அப்பனும் மகளும் கணவன் - மனைவியாக வாழும் கடவுள்களின் கதையைச் சரஸ்வதி பூசைப் பண்டிகையாகக் கொண்டாடினார்கள். அதே முட்டாள்கள் பூமியைப் படியாகச் சுருட்டிய கதையையும், பூமிதேவி என்னும் கடவுள் பன்றி உருவத்தில் விஷ்ணு என்ற கடவுளைக் கலவி செய்து ஒரு பிள்ளையைப் பெற்று, அப்பிள்ளையையே கடவுளும் அதன் பெண்டாட்டியும் (அதாவது அப்பிள்ளையின் தாயாரும் சேர்ந்து கொன்றார்கள்; அப்படிக் கொன்ற நாளை மகிழ்ச்சி நாளாக - பண்டிகை கொண்டாடப் போகிறோம் என்றால் இந்தக் கொண்டாட்டக்காரர்கள் மனிதப் பிறவிகளா?"

மேலும் பிரார்த்தனை, கோவில் வழிபாடு, நாமம்-விபூதி, புண்ணிய ஸ்தலங்கள், நிதி, சோதிடம், பூர்வஜென்ம பலன், குறி-நல்ல நேரம், வாழ்த்து, ஆசீர்வாதம், இன்னும் பல அடிப்படையற்ற நம்பிக்கைகள் முதலியவற்றை விடுதலை சாடு சாடென்று சாடியது. ஓர் எடுத்துக்காட்டு: "நமது நாட்டிலே அனேகம் பேர் விபூதி போடுவதும் நாமம் போடுவதும் வழக்கமாக இருக்கிறது. இது பார்ப்பனர்கள் இங்கே வருவதற்கு முன் இங்கே இருந்ததில்லை என்பது தெரிந்ததே. அப்படி இருந்தும் சுவரில் வெள்ளையடிப்பது போல் நாமம், விபூதி போட்டுக் கொள்ளுகிறார்கள். தன் தாயாருக்கு - தன்னைப் பெற்ற அன்னைக்குப் பிள்ளை கொடுத்தாலுங்கூட, இந்தச் சாம்பல் பூச்சால் அவனுக்கு மோட்சம் கிடைக்கும் என்று கூறிவிட்டனர்; நாமம் போட்டால் இதற்காக நரகம் கிடைக்காதே என்று கூறிவிட்டனர். ஆகையால் இந்த மடச் சாம்பிராணிகளும் தங்கள் நெற்றியில் விபூதி என்றும் நாமம் என்றும் போட்டுக் கொள்ளுகிறார்கள்" (விடுதலை 12.9.51).

"சாதி ஒழிப்புக்கான வழி பற்றி விடுதலை இப்படி அறைகூவியது. சாதியை ஒழிக்க விரும்புவோர் மேடைப் பிரசங்கம் மட்டும் செய்தால் போதாது, கலப்பு மணத்தைத் தவிர, வேறு சுயசாதி மணம் செய்யவேகூடாது. புத்தரும் குருநானக்கும் கூறியதுபோல் வேதமும் சாஸ்திரங்களும் முழுப்பொய் என்று பச்சையாகவே கூறவேண்டும், சாதிகளை ஒழிப்பது என்பதைக் கொள்கையாகக் கொண்டு இடைவிடாத தொண்டாற்றக் கூடிய ஒரு பார்ப்பனராவது இன்று இந்த நாட்டில் இருப்பதாக யாராவது எடுத்துக் கூறமுடியுமா? என்று அறைகூவிக் கேட்கிறோம்" (விடுதலை : 10.1.47).

> நாம் பெண்களை முட்டாள்களாக்கி விட்டோம், பெற்றோர்களை மீறியும் சமூகக் கட்டுப்பாடுகளை மீறியும் ஆண்கள் காரியமாற்ற முன்வருவதுபோல் பெண்கள் முன் வருவதில்லை. . . நம் பெண்களை உலகத்தினின்றும் மறைத்து வைப்பதும் மிகமிகக் கேடானதாகும். பெண்கள் வெறும் மிருக இனம்போல் நடத்தப்படும் நிலை ஒழிந்தேயாக வேண்டும் (விடுதலை: 11.10.48)

இவ்வண்ணம் பெண் விடுதலைக்காக ஓயாமல் குரல் கொடுத்த விடுதலையைப் போல வேறெந்த நாளேடும் முனைந்ததில்லை என்பது மறுக்க வொண்ணா மெய்மை.

கல்வித் துறையில் ஞாயம் கேட்டு வன்மையாக வழக்காடிய விடுதலையின் ஆசிரியவுரையின் பகுதிகள் இதோ:

> கல்வித்துறையில் அரசாங்கம் 'பெரிய' பார்ப்பனீயம் செய்துவருகிறது. அடுத்த ஆண்டு முதல் உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேருவதற்கு நுழைவுத் தேர்வுகளை நடத்துவதற்குத் தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளதாம். எதற்காக? பாஸ் செய்த சர்ட்டிபிகேட்டில் காலேஜில் சேரத் தகுதியுள்ளவன் (Eligible for College Course) என்று எழுதிக் கையெழுத்துச் செய்து கொடுத்துவிட்டு, காரியத்தில் மார்க் பார்த்து-திறமை பார்த்துப் புகுமுகப் பரீட்சை வைத்துச் சேர்க்க வேண்டும் என்று உத்தரவு போடுவதும், தராதரம் பார்க்காமல் சேர்க்கக் கூடாது என்பதும் பார்ப்பனீயமா? அல்லவா? பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களைக் கல்வி விஷயத்தில் குழியில் தள்ளி மூடுவதுதானே இந்த யோசனையின் பலன்? நான் மனித சமுதாயத்தின் தகுதி, திறமை, மதம் என்பவைகளைப் பார்த்து வந்த அனுபவமுடையவன், அவைபற்றி நான் எழுதிவந்த கருத்துகள் இன்னமும் இருக்கின்றன. பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட வகுப்புகட்காக உழைத்து வந்தவன் - வருகிறவன். . . அதிகாரம் - உத்தியோகங்களிலும் வகுப்பு, உள் வகுப்பு, உட்பிரிவு, சாதி, வகுப்புரிமை வேண்டும். கண்டிப்பாய்

அரசாங்க அகராதியில் தகுதி, திறமை, மதம் என்ற சொற்களை எடுத்துவிடவேண்டும்" (விடுதலை : 18.7.72)

வகுப்புரிமை என்னும் சமூகநீதிக் கோட்பாடு பற்றி விடுதலையில் அச்சேறிய கருத்தை அரசாங்கத்தின் முன் பணிந்து வைக்கிறேன்.

நமக்கு அழிவையும் கீழ்த்தன்மையையும் வசதியின்மையையும் கொடுக்கின்ற இந்தச் சாதிகள் ஒழிந்து, மக்களுக்குள் சமமான தன்மை வரும்வரை, கல்வி உத்தியோகம் முதலியவற்றில் அவரவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றபடி விகிதாசாரம் அளிக்கப்படவேண்டும். தகுதி - திறமை பெயரைச் சொல்லிப் பல துறைகளிலும் எல்லாவற்றையும் நானே எடுத்துக் கொள்வேன். உனக்கு ஒன்றுமில்லை எனப் பார்ப்பனர் கூறினால் அதை நாம் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்? ஒரு கூட்டு வியாபாரத்தில் கடைசியில் வருகிற இலாபத்தில் அவரவர் போட்ட முதலுக்கு ஏற்றவாறுதானே பங்கு பிரிக்க வேண்டும்? நாம் வழி கொடுக்கின்றோம். நமக்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டும் என்று கேட்பது வகுப்புவாதமா? (விடுதலை : 9.4.50)

நாம் நம்முடைய உரிமைகளைப் பெறுவது என்றாலே என்ன அர்த்தம் என்றால் நம்முடைய உரிமைகளைப் பறித்து அனுபவித்து வருகிற எதிரிகளின் ஆதிக்கம் அழிவு என்றுதான் அர்த்தம். அவர்களுடைய அழிவின்போதுதான் நாம் நம்முடைய உரிமைகளைப் பெறமுடியும். ஆனால் இந்தக் காரியம் சுலபமானதல்ல. சாதாரணமாகச் சாதித்துவிடலாம் என்கிறதான தன்மையில் இல்லை. இது மிகப் பெரிய காரியம் என்பதோடல்லாமல் மிகமிகப் பயங்கரமான - பலர் பலியாக வேண்டிய காரியமாகும். எதிர்த்துப் போராடுகிற நம் எதிரிகளுக்குள் ஒற்றுமை அதிகம்; நமக்கு எவ்வித பலமும் கிடையாது; நமக்குள் ஒற்றுமையும் கிடையாது; துரோகிகளும் அதிகம். ஆனாலும் நாம், பலமிக்க - வலுவுற்றிருக்கும் நம்முடைய எதிரிகளை எதிர்த்துப் பேராடியாக

> *வேண்டும். இதற்கு மனத்துணிவு வேண்டும்.' (விடுதலை: 30.5.51)*

> *உத்தியோக இலாகாவில் பெரிதும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைப் புகுத்த வேண்டும். போலிசிலும் கிராமக் கணக்கு மானியம் பதவிகளிலும் தாழ்த்தப் பட்டவர்களை அதிகமாகப் புகுத்த வேண்டும்*

என்பது 7.10.72ஆம் நாள் விடுதலை ஆசிரியவுரை கூறிய வழிகாட்டலாகும்.

இந்தி மொழித் திணிப்பை எதிர்த்து விடுதலை ஒலித்த வீரமுழக்கம் இதோ:

> *அன்னிய மொழியாகிய இந்தி மொழியை எங்கள் நாட்டிற்குள் அரசியலின் பேரால் பலாத்காரமாய்ப் புகுத்தி, மொழி, கலாச்சாரம், கல்வி முதலிய துறைகளிலும், அரசியலில் ஆட்சிமொழி என்கின்ற தன்மையிலும் புகுத்தி இருப்பதோடு, இந்தி படித்துப் 'பாஸ்' செய்தவனுக்குத்தான் உத்தியோகம் என்கின்ற அளவிற்கு வடவராட்சி துணிந்துவிட்டதால், இந்திய ஆட்சி தமிழ் நாட்டில் கூடாதென்கின்ற எண்ணம் எங்களுக்கு வலுப்பட்டுவிட்டது. இந்த வலுப்பட்ட எண்ணம் பெற்ற பின்னர்தான் நாங்கள் திருச்சியில் செய்த வடவராட்சிச் சின்னமாகிய தேசியக் கொடி என்பதைக் கொளுத்த வேண்டும் என்ற தீர்மானமாகும். அந்தத் தேசியக் கொடி என்பது எங்களுக்கு, எங்கள் தேசத் தேசியக் கொடியல்ல. ஆகவே 'இந்திய தேசியக் கொடியைக் கொளுத்துவது, இந்தியக் கூட்டாட்சி என்பதில் தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாங்கள் பிரஜைகளாக இருக்கச் சம்மதப்படவில்லை' என்கின்ற எங்களுடைய விருப்பமின்மையைக் காட்டுவதே யாகும்*

20.7.55ஆம் நாளைய விடுதலை ஏட்டின் ஆசிரியவுரை பலவகைத் திறனாய்வுக்கு உரியதல்லவா?

பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றுக் கொண்ட விடுதலை அதற்காக எப்போதும் குரல் கொடுத்துக் கொண்டே வந்திருக்கிறது. இதை,

கம்யூனிஸ்ட் கொள்கைகளுக்கும் திராவிடர் கழகக் கொள்கைகளுக்கும் அதிகமான பேதம் கிடையாது. கம்யூனிஸ்ட் கட்சி பணக்காரர்களை ஒழிப்பதில் முதற்படியில் நிற்கிறது. திராவிடர் கழகம் பார்ப்பனியத்தை ஒழிப்பதில் முதற்படியில் நிற்கிறது. என்றாலும் பணக்காரர்களை ஒழிப்பதில் திராவிடர் கழகத்திற்குக் கவலை இல்லை என்று சொல்ல முடியாது. பணக்காரர்களை ஒழிக்க வேண்டியது அவசியந்தான். ஆனால் பார்ப்பனியத்தை - மூட நம்பிக்கையை ஒழிக்கவேண்டியது மிகமிக அவசியம் என்று திராவிடர் கழகம் கருதுகின்றது. பணக்காரத்தன்மைக்குப் பார்ப்பனீயமும் மேல்சாதி - கீழ்சாதித் தன்மையும், கடவுள் தன்மையும்தான் காரணம். இவற்றை ஒழிக்காமல் பணக்காரர்களை ஒழித்தால் மறுபடியும் பணக்காரர்கள் முளைத்துக் கொண்டே இருப்பார்கள். சாக்கடையையும் கொசுக்களையும் ஒழிக்க முடியும். ஆகையால்தான், திராவிடர் கழகம் பணக்காரத் தன்மையை ஒழிக்க அஸ்திவார வேலை என்று கருதி இதைச் செய்கின்றது.

பணக்காரத்தன்மைக்கு எளிதில் எதிர்ப்புக் கிடைக்கும்; பார்ப்பனியத்திற்கு எதிர்ப்புக் கிடையாது. இந்த நாட்டில் இது ஒரு பெரிய கஷ்டம். ஆதலால் முதலில் சுலபமானதைச் செய்து கொண்டு பிறகு கஷ்டமானதைச் செய்து கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். ஆகையால் நாம் கம்யூனிசத்தை ஏற்பதில் தவறு இல்லை. இதுதான் மக்கள் நல்வாழ்விற்கு வழி. என்றைக்காவது உலகம் அங்கு சென்றுதான் நிற்கும் (விடுதலை : 4.10.51)

என்ற பகுதி உணர்த்துகிறது.

இதன் தொடர்பாகச் சுட்டிக்காட்ட வேண்டிய செய்தி ஒன்று உண்டு. அதாவது தந்தை பெரியாரவர்கள் திருக்குறளில் அடங்கிய "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்" எனும் ஒன்றே முக்காலடிப் பாவினை விடுதலையின் முதல் பக்கத்து மேல் முகப்பில் அச்சிட்டு வந்தார்.

இவ்வண்ணமாகப் பல துறைகளில் நம் கற்பனைக்குள் அடங்கா - பிறரால் கருதிப்பார்க்கப் பெறாப் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பிய பெருமிதத்திற்குரியது விடுதலை ஏடு.

இப்படிப்பட்ட கருத்து வெளிப்பாட்டுடன் நிறுத்திக் கொள்ளவில்லை விடுதலை. ஆனந்த சுதந்திரம் கைக்குக் கிட்டியவுடன் அன்றைய ஆட்சியாளரைப் பொதுவுடைமை இயக்கத்தின் முன்னோடிகளைக் கொடுமைப்படுத்தி, சிறையிலடைத்துச் சுட்டுத் தள்ளியபோது வேறெந்த இதழும் காட்டாத துணிவை விடுதலை மேற்கொண்டு, "பொதுவுடைமைக் கொள்கை பரவக் கூடாது, பரவினால் தங்கள் கட்சியின் மறைமுகப் பாங்கர்களான பிர்லா - டாட்டா - டால்மியா - முத்தையா - வடபாதி மங்கலம் - கோயங்கா - சீனுவாசன் கும்பல்களின் ஆதிக்கம் ஒழிந்துவிடும் என்ற அச்சம் காங்கிரஸ்காரர்களுக்கு இருப்பது இயற்கைதான். ஆனால் அதற்காக முதலாளித்துவத்தை ஆதரித்தும் பொதுவுடைமையை எதிர்த்தும் தங்களிடமுள்ள பிரச்சார பீரங்கிகளைப் பிரயோகப் படுத்துவதுதான் நேர்மை" - என்பதாக இடித்துக் காட்டியமை பதிவு செய்யப்பெறவேண்டிய தமிழக அரசியல் வரலாற்றுக் குறிப்பாகும்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கொள்கையின் அடிப்படையில், 'கல்வி ஓடையில் முதலைகள்', 'கல்விச் சோலையில் கருநாகங்கள்', 'நெஞ்சு பொறுக்குதில்லையே!', 'பார்ப்பனப் பண்ணையம் கேட்பாரில்லையா?' என்னும் தலைப்புகளிலே, மேல்சாதி மக்களின் வல்லாட்சி நிலவிய அரசுத்துறை நிறுவனங்களைக் கடந்த 60 ஆண்டுக்காலமாய் வெளிக்காட்டி வந்துள்ளது.

சர்வம் பிராமண மயம் - சென்னையில் யூதர்களின் கொள்ளை, R.M.S. இலாகாவும் ஆரிய மயம், சென்னை போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் ஆஃபிசில் அக்ரகார மயம், காந்தி கிராமம் அல்ல - ஆரிய கிராமம், அக்கிரகாரத்திற்குச் சுரங்க தானம், வானொலியில் அக்கிரகாரக் கொள்ளை, (தஞ்சை) கலெக்டர் அலுவலகமா? ஆரியமுதலைகளின் ஆதிக்கக் கூடமா?, அக்கவுண்டண்ட் ஜெனரல் ஆஃபீஸ் முழுதும் அக்கிரகார ஆதிக்கமா?, மருத்துவ ஓடையில் பார்ப்பன முதலைகள் ஆதிக்கம், தமிழக அரசின் முக்கிய இலாகாக்கள் பார்ப்பன முதலைகள் வசம், அஞ்சல் இலாக்காவிலும் அக்ரகார மேய்ச்சல், மின்சார இலாகாவா? பூணூல்கள் சத்திரமா?, செக்ரட்டரியேட்டில் இன்னும் அக்கிரகாரக் கொள்ளையா?,

திருவெறும்பூர் பாய்லர் தொழிற்சாலை: பார்ப்பனர் - மலையாளி ஆதிக்கக் கொள்ளை, நெய்வேலியா? பூணூல் வேலியா?, தமிழக மின்விசை போர்டில் பார்ப்பன ஆதிக்கம், தஞ்சை செட்டில்மெண்ட் அலுவலகத்தில் பார்ப்பன வேட்டை, மணலி பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையில் பற்றிப் படர்கிறது பார்ப்பனத் தீ!; தட்சிண ரயில்வே திருச்சி டிவிஷன் பார்ப்பனருக்குத் தாரை வார்க்கப்பட்டதா?, ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் அக்கிரகாரக் கூடமாவாதேன்?, ஸ்டேட்பேங்கா? தமிழ்நாட்டுப் பூணூல்களின் வேட்டைக்காடா?, இந்துஸ்தான் டெலிபிரிண்டர்சா? ஆரியால்தான் டெலிபிரிண்டர்சா?, வானொலி நிலையமா? பூணூல் நிலையமா?, கரூர் தாசில்தார் அலுவலகம் பூணூல் மயமானது போன்ற விவரப் பட்டியல்களை விடுதலை ஏடு ஒன்றினால் மட்டுமே வெளியிட முடிந்தது.

விடுதலையின் வரலாறு ஒரு வீர வரலாறு. "முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் (1938-40) விடுதலை ஆற்றிய அரும்பெரும் பணியை, அம்மொழிப் போராட்டத்திற்குத் 'தமிழன் தொடுத்த போர்' எனப் பெயரிட்டு நூல் எழுதிய அறிஞர் மா. இளஞ்செழியன் அவர்கள், "இத்துணை பெரிய இயக்கத்திற்கு இருந்த தினசரி எல்லாம் ஒன்றே ஒன்றுதான். விடுதலை அதன் பெயர். சாதிக் கட்டினின்றும் சமயக் கட்டினின்றும் வேதபுராண - இதிகாசக் கட்டுகளினின்றும் விடுதலை பெறத் தமிழர்க்குக் கிடைத்த ஒரே ஒரு விடுதலை. ஆனால் அந்த ஒரு விடுதலை எத்துணை பெரிய இயக்கத்தை எத்துணை விரைவில் எத்துணை எளிதாக வெற்றிபுரிக்குச் சேர்த்துவிட்டது - அதுவும் எத்தனை எத்தனை ஆரிய ஏடுகளின் மறைத்தல் - திரித்தல் பிரசாரத்திற்கிடையே" எனப் பாராட்டியிருப்ப திலிருந்து விடுதலை ஏட்டின் வலிமை எத்தகையது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அப்போராட்டத்தின்போது தந்தை பெரியாரை "1½ ஆண்டுக் கடுங்காவல் சிறை" என்னும் ஒறுப்புக்கு இலக்காகி, அவரைப் பெல்லாரி சிறைக்கூடம் செல்லுமாறு அனுப்பிவைத்த திரு இராசகோபாலச்சாரியை, முதல்வர் பொறுப்பைத் துறப்புக்கு இலக்காக்கித் தமிழ்மக்கள் அவரை இல்லம் ஏகுமாறு அனுப்பி வைத்தபின், ஆட்சி நடத்திய ஆங்கிலேய ஆளுநரை விடுதலை, "கவர்னர் ஆட்சியினர் தமிழரின் மனப்புண்ணை ஆற்ற முன் வருகிறார்களா? அல்லது மறுமுறை தமிழரைப் போருக்கு அழைக்கிறார்களா?" என்று வினவியது (விடுதலை : 211.40). "தமிழ்நாடு

தமிழருக்கே!" "திராவிட நாடு திராவிடருக்கே!" என்னும் வீரம் பொங்கும் ஒலி முழக்கத்தை நாடெங்கிலும் பரப்பியதில் பெரும் பங்கு விடுதலைக்கு உண்டு.

இந்திய விடுதலை நாளையும் குடியரசு நாளினையும் 'துக்க நாள்கள்' என்பதாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் விடுதலை வெளியிட்ட தெளிவுரைகள் சூடும் சுவையும் நிறைந்தவை. அதைப் போலவே 'டில்லி ஆதிக்கக் கண்டன நாள்', 'சுப்ரீம் கோர்ட் கண்டன நாள்' என்பதை பற்றியும் விடுதலை விளக்கவுரை வழங்கியது.

இந்திய விடுதலைக்குப் பின்னர், அரசோச்சியவர்கள் மக்கட்குப் போதிய அளவு உணவுப்பண்டங்கள் வழங்கவியலாததால் திண்டாடி, வொவ்வோர் ஆளுக்கும் மிகக்குறைந்த அளவு அரிசி வழங்கியபோது, விடுதலை ஆட்சிக் கட்சியினரை 'ஆறவுன்ஸ்' என்று அழைக்குமாறு மக்களுக்கு வழிகாட்ட, அரசுக் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் தயங்கித் தயங்கி, ஒதுங்கி ஒதுங்கி நடமாட வேண்டிய நிலை தோன்றியது.

பாட்டாளிகளின் எழுச்சியை முறியடிக்க நாடு கண்டறியாத வகையில் அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்ட ஆட்சியினரை நோக்கி, "இன்றைய முதலாளி ஆட்சி - இந்திய சியாங்கேஷேக் ஆட்சி; இதை நடத்துகின்ற (கட்சி - தொழிலாளர்) வேட்கைகளுக்குக் கழுத்துச் சுருக்குப் போட்டிருக்கும் கட்சி - உடனே ஒழிய வேண்டும்!" எனக் கூவியது விடுதலை, அன்றைய சென்னை மாநிலத்தில் ஆளுங்கட்சிக்கு மாற்றாக ஓர் அரசியல் அணி உருவாக்கப்பட வேண்டும் என்னும் அய்யாவின் விருப்பத்திற்கேற்ப எதிர்க்கட்சிகளில் பெரும்பாலானவை ஒன்றிணைந்து 'அய்க்கிய முன்னணி' என்ற அமைப்பினை உருவாக்கிக் கொள்ளுவதற்கு நல்ல வழிகாட்டியாகவும் உற்ற துணையாகவும் விடுதலை விளங்கியது. தொடர்ந்து அரசியல் விடுதலைக்குப் பின் 1952ஆம் ஆண்டில் இந்தியா முழுமைக்குமாக நடந்த முதலாம் பொதுத்தேர்தலின்போது, விடுதலை ஏடு தனது புள்ளி விளக்கங்களடங்கிய தெளிவுரைகள், வினா-விடைகள், குத்தூசிக் குத்தல்கள் ஆகிய உத்திகளால், ஒளிந்துகொண்டிருந்த உண்மைகளை வெளிக்கொணர்ந்து, ஒளி பாய்ச்சியதால், ஆட்சிக் கட்சி தோல்வியைச் சுவைக்க நேர்ந்தது!

சூழ்ச்சிகளின் வழி திரு. இராசகோபாலாச்சாரி மீண்டும் அரியணையில் அமர்த்தப்பட்டு, அவர் புதிய கல்வித்திட்டம் என்ற பெயரால் குலக் கல்விமுறையைப் புகுத்தியதுடன், "எல்லாரும் அரசுப் பணிக்கு வந்து விட்டால் பிறகு குலத்தொழிலை எவர் செய்வது?" என ஆணவச் சொல் உதிர்த்தபோது, அக்கல்வித் திட்டத்தை முற்றாக ஒழித்துக் கட்டும் முயற்சியில் இறங்கிய விடுதலை ஏடு, வெற்றி காணும் வரை ஓயவில்லை.

'நீதிக்கட்சி' "வகுப்புரிமை அரசாணை இந்திய அரசியலைமப்புச் சட்டப்படி செல்லாது" என்று சென்னை உயர் தீர்ப்பு மன்றம் இந்திய சீவுயிர் முறைமன்றமும் தீர்ப்பு அளித்த நாள்தொட்டு, பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கல்வி நிலையங்களிலும் அலுவலகங்களிலும் இடவொதுக்கீடு செய்து கொள்ளுதற்கு வழி செய்யும் வகையில் அரசியலமைப்புச் சட்ட முதலாம் திருத்தம் நிறைவேற்றப்பட்ட நாள் வரை விடுதலை ஏடு ஆற்றிய பணிகள் எவரையும் மலைக்க வைப்பவை!

சாதியொழிப்புக் குறிக்கோளுடன் இந்திய அரசமைப்புச் சட்ட எரிப்புக் கிளர்ச்சி அய்யாவால் அறிவிக்கப்பட்டபோது, பத்தாயிரம் பேர் அதில் கலந்துகொள்ளவும், மூவாயிரம் பேர் வீரத்துடன் சிறை வாழ்வு மேற்கொள்ளவும் தூண்டியது விடுதலை ஏடுதான்.

இன்னும் வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு மறியல், உணவுக் கடைப் பெயர்ப் பலகைகளின் 'பிராமணாள்' எனும் சொல்லை அழித்தல், இராமாயண எதிர்ப்பு, பிள்ளையார் உருவ உடைப்பு, இராமன் பட எரிப்பு, தொடர் வண்டி நிலையங்களின் இந்திப் பெயர்களை அழித்தல் போன்ற கிளர்ச்சியில் பல்லாயிரக்கணக்கானோர் ஈடுபடும் நிலையை உருவாக்கியது விடுதலையே!.

இந் நிலத்திற்குத் தமிழ்நாடு என்ற பெயர் சூட்ட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் விடுதலைக்கு நல்ல பங்கு உண்டு.

மேற்சுட்டிய விடுதலையின் வீரப் பெருமைகளுக்குப் பெருங்காரணராக விளங்கிய பொறுப்பாசிரியர் அறிஞர் தோழர் ச. குருசாமி அவர்கள், கணக்கற்ற ஆசிரியவுரைகள், வரைந்ததோடன்றிக் குத்தூசி எனும் பெயரில் இன்னொன்றையும் எழுதி வந்தார். அதுதான் 'பலசரக்கு மூட்டை' என்னும் கிண்டல் ஓவியம், கிழமையின்

பெரும்பாலான நாள்களில் விடுதலையில் இடம் பெற்ற குத்தூசியின் கிண்டல் கட்டுரைகள் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றன.

"நீ திருப்பதிக்குப் போனாலும் சரி! திருவிழாவுக்குப் போனாலும் சரி! நீ பூணூல் அணிந்திருந்தாலும் சரி! பண்டிகை கொண்டாடினாலும் சரி! நீ சாதிவெறி பிடித்தவனாயினும் சரி! மதக் கிறுக்கனானாலும் சரி! நீ குடி வெறியனாயினுஞ் சரி! சூதாடியானாலுஞ் சரி! நீ சினிமாக் கிறுக்கனாயினுஞ் சரி! விபசார வெறியனாயினும் சரி! உன் கொள்கை எதுவாயினுஞ் சரி. கொள்கையே இல்லாதவனாயினுஞ் சரி! என் கட்சியில் உறுப்பினர் ஆனால் போதும்!" குத்தூசியின் எழுத்தாற்றலுக்குச் சான்று பேசும் வரிகள் இவை.

எனவேதான் அய்யா அவர்கள், "குத்தூசி காணப்படாத விடுதலையைக் கண்டு மக்கள் ஏமாற்றமடைந்ததையும் பார்த்து வருகிறேன். குத்தூசியைப் பற்றிய என் உண்மையான கருத்தைச் சொல்லவேண்டுமானால் - ஒரு வாக்கியத்தில் முடிக்க வேண்டுமானால் - எந்தக் காரணம் கொண்டாவது குத்தூசி விடுதலையில் வெளிவருவது நின்று விடுமானால் விடுதலை மக்களிடம் அலட்சியப்படுத்தப்பட்டு விடுமே என்று பயப்படுகிறேன் என்பதைத் தெரிவிப்பதன் மூலமே அதன் பெருமையைப் பற்றிய என் கருத்தை உணர்ந்து கொள்ளலாம்" எனப் பாராட்டினார்.

"தோழர் குருசாமியவர்களின் புயல்வீசும் எழுத்தும் பேச்சும் புதிய சமுதாயம் காணும் விடிவெள்ளிகள்! நமது சமுதாயத்தின் மூட நம்பிக்கைகளை - ஏற்றத்தாழ்வுக் கொடுமைகளை அழிக்கும் வெடிமருந்து! சுயமரியாதை வீரர்களுக்கு அரிய டானிக்! என்பது மறுக்க இயலாத உண்மையாகும்" என்பது விடுதலையின் இந்நாளைய ஆசிரியர், விடுதலையின் முன்னாளைய ஆசிரியர் பற்றிக்கூறும் புகழுரை.

தந்தை பெரியாரின் மறைவுக்குப் பின் அவரின் துணைவியார் மதிப்புமிகு மணியம்மையார் காலத்திலும் விடுதலை வீறு நடை போட்டது. அய்யாவுக்குப் பின்பும் திராவிடர் கழகம் ஒரு குமுகாய இயக்கமாகவே தனித்தியங்கவேண்டிய இன்றியமையாமைபற்றியும், தமிழரின் 'மானமீட்பர்' பெரியாரவர்களின் வேணவாவின்படி அனைத்துக் கோயில்களிலும் அனைத்துப் பிரிவு மக்களும் ஓதுவார்களாக - சாற்றிகளாக - அதாவது அர்ச்சகர்களாகப் பணியாற்ற வகை செய்யும் சட்டத்தை நடப்பாக்குவது குறித்தும்,

திராவிடர் கழகத்தின் சார்பில் இராவண விழா நடைபெற வேண்டிய தேவைபற்றியும், தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா நடவடிக்கைகள் குறித்தும் விடுதலையில் அச்சேறிய எழுத்துக்கள் தனி ஆய்வுக்குரிய சிறப்பு வாய்ந்தவை.

1978இல் மணியம்மையார் இயற்கை எய்திய பின்னர், ஏற்கனவே திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் விடுதலை ஏட்டின் பொறுப்பாசிரியராகவுமிருந்த மதிப்பிற்குரிய தோழர் கி. வீரமணியவர்கள் கழகம் விடுதலை நாளேடு இரண்டிற்குமே முழு அதிகாரியாகப் பொறுப்பேற்று, இன்றுவரையிலான இருபது ஆண்டுகளில் விடுதலை தொடர்பாக முன்னேற்றமான மாற்றங்களை நிகழ்த்தியிருக்கிறார்.

புதிதாகப் பெரியதொரு கல்லச்சுப் பொறி (Offset Press) விலைக்கு வாங்கப்பட்டது. அதன் விளைவாகக் கையினால் எழுத்துக் கோர்த்து அச்சிடும் முறை விடைபெற, கணினியும் நிழற்படக்கருவியும் அச்சகத்தை ஆளும் நிலை வந்துற்றது. மேலும் Internet என்னும் இணையத் திட்டத்தில் விடுதலை இடம் பெற்றதால், இந்நாட்டுத் தமிழர்களின் பார்வைக்கு விடுதலை கிட்டுவதற்கு முன்பே தொலைவில் வாழும் அயலகத் தமிழர்கள் விடுதலைச் செய்திகளைப் படித்து முடித்துவிடும் விந்தை உருவாக்கப்பட்டுவிட்டது. இப்போது கிழக்கு நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் விடுதலையை அன்றாடத் தமிழர்கள் படித்து வருகிறார்கள். இணையம் என்னும் ஏந்து வாய்க்கப் பெறா வெளிநாட்டுத் தமிழர்கள் படிப்பதற்காகக் கிழமைதோறும் முழுமையான விடுதலைச் செய்திகளைத் திரட்டி, கிழமைத் தொகுப்பிதழ் உருவாக்கி அனுப்பப்பட்டு வருகிறது.

இவ்வண்ணம் அச்சியற்றும் முறையில் புரட்சி என்று குறிப்பிடத்தக்க புதுமைகள் நிகழ்த்தப்பட்டிருப்பதோடு, தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்புவதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் விடுதலை முனைப்புடன் தொண்டாற்றிக் கொண்டிருப்பது நினைக்குந்தோறும் இனிக்கின்ற செய்தி!

விரிவஞ்சி - அ.இ.அ.தி.மு.க. தலைவர் ம.கோ. இராமச்சந்திரன் அவர்கள் தமிழக முதல்வரான நிலையில் கொண்டு வந்த பிற்படுத்தப் பட்டோர்க்கான வருவாய் வரம்பு ஆணையினை இடைவிடாது எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், இந்தியத்

தலைமையமைச்சர் இராசீவ் காந்தி அவர்கள் அறிவித்த 'நவோதயர் கல்விக் கூடங்களை'த் தமிழகத்தில் நிறுவ விடாமற் செய்வதிலும், பிற்படுத்தப்பட்டோர்க்கான மண்டல் குழுவின் பரிந்துரைகளை மெய்யாக்கப் பல்லாண்டுகளாகப் பல்வகை உத்திகளுடன் போராட்டம் நடத்திய கட்டத்திலும் ஆர்.எஸ்.எஸ். பாரதிய ஜனதா, ஹிந்து முன்னணி போன்ற மதவெறி அமைப்புக்களை எதிர்த்து அறிவுப் போர் இயற்றுவதிலும், தமிழகத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் 69 விழுக்காட்டு இடவொதுக்கீட்டுத் திட்டத்தைக் காப்பாற்றும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 31ஆம் உறுப்பு 'இ'பிரிவின்படி சட்டம் நிறைவேற்றத் தமிழக அரசைத் தூண்டித் துலக்குவதிலும் ஈழத்தமிழரின் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் எழுப்புவதிலும் தமிழகத்திற்குரிய காவிரி நீரைப் பெறும் உரிமையை நிலைநாட்டுவதிலும், தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றுத் தொடர்கதையினைப் படங்களுடன் வெளியிடுவதிலும் வழக்கம்போல மூடநம்பிக்கைகளைக் கண்ணோட்டமின்றிச் சாடுவதிலும் விடுதலை - பெரியாருக்குப்பின் வந்து கொண்டிருக்கும் விடுதலை ஏடு கடமை உணர்வு மேலோங்கச் செய்திருக்கும் தொண்டு ஆய்வு நூலாக வெளிவர வேண்டிய தகுதி படைத்தது.

இப்படியாக, விடுதலை ஏடு இமயமலை நனைகிறதே யெனக் குடைப்பிடிக்கும் குறிக்கோளுடன் பேரார்வத்துடன் - வெறியுடன் இன நலத்தொண்டும் பகுத்தறிவுப் பணியும் புரிந்து வரும்போது, கடுமையானவை எனப் பொதுவாய்க் கருதப்படக்கூடிய சொற்களைப் பயன்படுத்தி வழக்காடியிருக்கிறதே தவிர, மட்டமானவை - தரக்குறைவானவை - கொச்சையானவை என்று மதிப்பிடத்தகும் மொழிகளை ஒச்சியதே கிடையாது என்று உறுதி கூறமுடியும்.

தொடக்க நாள்களில் விடுதலை கைக்கொண்ட மொழிநடை கலப்புத் தமிழில்தான் அமைந்திருந்தது. அக்காலத்துப் பொது மக்கட்குக் குமுகாயச் செய்திகளைச் சொல்லி அவர்களை மறுமலர்ச்சிக்கு - புரட்சிக்கு அணியப்படுத்துவதில் தூய தமிழைப் பயன்படுத்தினால் ஏற்படும் காலத்தாழ்ச்சியையும் இடர்ப்பாடு களையும் கருதியே அன்றைய மக்களிடையே புழங்கிவந்த மொழியையே கையாண்டார்கள்.

படிப்படியாக முன்னேற்றம் விளைந்து, தற்போது மிகமிகக் குறைந்த விழுக்காட்டிலேயே பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தப்

பெறும் நன்னிலை உருவாகியுள்ளது. இன்னும் அயன்மொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களும் வெளியிடப் படுகின்றன.

ஆனால் ஆரியமும் மதவெறியாளரும் அலறிப்புடைத்து விடுதலை பற்றிப் பழி தூற்றினர். "அது (விடுதலை) நேர்மை யுள்ளவர்களுக்கு நீலோற்பவ மாலையாகவும், விஷமக்காரர்களுக்கு விரியன் பாம்புக் குட்டியாகவும் காட்சியளிக்கும் என்று கூறலாம். அது விடுதலையின் குற்றமல்ல; அதை விரித்துப் படிப்போரின் மனக்குற்றம்", என முத்தமிழ்க் காவலர் மதிப்புமிகு கி.ஆ.பெ. விசுவநாதம் குறிப்பிட்டதைப்போல, மனக்குற்றமுடையோர் விடுதலை ஒழிந்துபட வேண்டுமெனப் பேரார்வம் காட்டினார்கள்.

விளைவாக - விடுதலை ஏட்டைப் படிப்பவர்களை வேலை நீக்கம் செய்தல், சிறைச்சாலையில் இருப்போர்க்கு விடுதலையைத் தொடக்கூடாது என்று தடைபோடல், விடுதலைமீது மானமிழப்பு வழக்குப் போடவைத்தல், விடுதலைமீது வகுப்பு வெறுப்புக் குற்றம் சுமத்தி வழக்குத் தொடருதல், அரச வெறுப்புக் குற்றம் சாட்டி வழக்குத் தொடருதல், பிணையத் தொகை கட்டுமாறு ஆணையிடல், ஒரு தோழர் விடுதலையில் எழுதிய கட்டுரை வடநாட்டார்மீது வெறுப்பைத் தூண்டியதாகக் குற்றஞ் சுமத்தி, ஏட்டின் ஆசிரியரான மணியம்மையாரைச் சிறையில் அடைத்தல் போன்ற தொல்லைகளை ஆட்சியாளரும் பிறரும் ஏவினர் என்றாலும் விடுதலை தன் வீரத்தை விட்டுவிடவில்லை.

இந்திரா காந்தியாரின் நெருக்கடிநிலை காலத்தில் நடத்தப்பட்ட தணிக்கை என்னும் அடக்கு முறையையும் விடுதலை எதிர்கொள்ள நேர்ந்தது. தணிக்கைப் பொறுப்பில் இருந்த அத்தனை பேரும் பார்ப்பனர். ஒரு பார்ப்பனர் "விடுதலை ஏட்டைத் தொட்டு விடுவதால், ஒவ்வொரு நாளும் வீட்டிற்குச் சென்றவுடன் குளித்து விட்டுத்தான் மறுவேலையைச் செய்கிறேன்" என வெளிப்படையாகச் சொல்லி வெறுப்பை உமிழ்ந்தார் என்றால், தணிக்கை எப்படி இருந்திருக்கும் என்பது கற்பனைக்குட்பட்டதுதான். 'தந்தை பெரியார்' என்று போடக்கூடாது, வெறும் பெரியார் என்று மட்டுமே அச்சிடவேண்டும் என வற்புறுத்திய தணிக்கைப் பார்ப்பனர், வெறும் சங்கராச்சாரி என்று போடக்கூடாது, சங்கரச்சாரியார் என்றுதான் அச்சிட வேண்டும் எனக் கட்டாயப்படுத்தினர். ஆனால் விடுதலை

ஏடு தந்தை பெரியார் எனும் பெயரைத் தாங்கியே வெளிவந்து வீரத்தை நிலைநிறுத்தியது.

இவ்வாறு வரலாறு படைத்த விடுதலை இன்று தமிழ்நாட்டின் நூலகங்கள் அனைத்திலும் படிக்கப்படுகின்றது. சிறைகளில் வாழ்வோர் - அதிலும் வாழ்நாள் சிறை என்னும் தீர்ப்புப் பெற்றோர் பலர் விடுதலையைக் கேட்டு வரவழைத்துப் படிக்கும் நிலை நிலவுகிறது. கிழமைதோறும் வெளியாகும் விடுதலை - ஞாயிறு மலர், ஒவ்வோராண்டும் அய்யா பிறந்த நாளையொட்டி வெளியாகும் விடுதலை சிறப்பு மலர் என்னும் இருவகை விடுதலை மலர்கட்கும் புவிப்பந்தின் அத்தனை பகுதிகளிலும் வாழும் தமிழரிடையே நல்ல வரவேற்பு, விடுதலையில் வரும் கட்டுரைகள் பற்றித் தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையில் மட்டுமன்றி இந்திய நாடாளுமன்றத்திலும் பேசப்படுகின்ற சூழ்நிலை தோன்றிவிட்டது! தற்போது - அறிஞர் பலரும் விடுதலையில் தங்கள் கருத்துக்கள் வெளியிடப்படுவதைப் பெருமையாக இன்று கருதுகின்றனர். அரிய மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் விடுதலையில் இடம் பெறுகின்றன. ஒற்றைக்கலம், கருத்துக்களம், செய்தியும் பின்னணியும் போன்ற பகுதிகளில் அச்சேறும் எழுத்துக்கள் விரும்பிப் படிக்கப்படுகின்றன. விடுதலையில் வெளியாகும் ஆசிரியவுரைகள் பெருந்தாக்கத்தை விளக்க வல்லவை. ஞாயிறு மலர் ஒவ்வொன்றிலும் இடம் பெறும் 'ஆசிரியர் விடையளிக்கிறார்' எனும் பகுதியினைப் பேரார்வத்துடன் படித்துச் சுவைத்துப் பயன்பெறுவோர் பல்லாயிரக்கணக்கானோர். மொத்தத்தில் அறிவுக் கருவூலமாக ஒளிரும் விடுதலை ஏட்டுக்கு எண்ணற்ற பற்றாளர் இருக்கின்றனர்.

திராவிட இயக்க ஏடுகளில் மூத்தது - முதன்மையானது விடுதலை என்பது மட்டுமல்ல அதன் பெருமை; அதனுடைய அகவை 63 ஆண்டுகள்; இந்த அகவையில் ஏனோதானோ என்று பெயரளவுக்கு இல்லாமல் 23 ஆண்டு இளைஞனைப் போல, உணர்வு குன்றாமல் - ஊக்கம் குறையாமல் உழைத்துக் கொண்டிருக்கிறது என்பதுவே விடுதலையின் தனிப்பெருமை!

சான்றுகள் இல்லாக் கற்பனைச் செய்திகளை வெளியிட ஒப்பாத, மூடநம்பிக்கைகளைப் பரப்பும் செய்திகளையும் விளம்பரங்களையும் வெளியிடாத, திரைப்பட உலகத்தின் கவர்ச்சிச் செய்திகளையும் படங்களையும் வெளியிடாத விடுதலை எனும் கொள்கை ஏடுதான் 63 ஆண்டுகள் வாழ்ந்து காட்டியிருக்கிறது.

முதலாம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலிருந்து தமிழக மீனவர் நலக்காப்பு நடவடிக்கைகள் வரை இயக்கத்தால் நடத்தப் பெற்ற போராட்டங்கள் - கிளர்ச்சிகள் பற்றிய அத்தனை செய்திகளையும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், விடுதலை - ஏட்டைத்தான் படித்தாக வேண்டும்.

மயிலாடுதுறையில் அய்யா இரவு 7 மணியிலிருந்து 11.30 மணி வரை பேசிய பொதுக்கூட்டம்பற்றி -

1938ஆம் ஆண்டிலேயே இந்தி எதிர்ப்புச் சர்வாதிகாரியாகவும், மறியல் தொண்டராகவும் மகளிர் பலர் பங்கேற்றமை பற்றி -

சென்னை மூலக் கொத்தளத்தில் அரிசி ஆலையொன்றனுள் 'தமிழர் படை' வீரர்கட்கு உணவு பரிமாறியமை பற்றி -

வெள்ளையனை வெளியேறுமாறு வற்புறுத்தும் தீர்மானத்தை டி28ஆம் ஆண்டிலேயே அய்யா நிறைவேற்றியது பற்றி-

அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் முகவரான வில்லியம் ஃபிலிப்ஸ் தந்தை பெரியாரைச் சந்தித்தமை பற்றி -

இந்தியாவுக்குத் தன்னாட்சி வழங்கும் திட்டத்தை வரைய இங்கு வந்த ஸ்டாஃபோட் க்ரிப்ஸ் அவர்களைப் பெரியார் சந்தித்தமை பற்றி -

வடபுலம் சென்ற அய்யா அறிஞர் அம்பேத்கார், எம்.ஆர். ஜெயகர், ஜின்னா ஆகியோரைச் சந்தித்தமை பற்றி -

'ரேடிகல் டெமாக்ரடிக்' மாநாட்டிற்கு வருமாறு அய்யாவை தோழர் எம்.என். ராய் அழைத்தமை பற்றி -

குடியரசுக் கட்சியின் அனைத்திந்தியத் தலைமையை ஏற்க வேண்டுமென்று அய்யாவுக்குக் கோரிக்கை வந்தமை பற்றி -

தந்தை பெரியாரும் கலைவாணர் கிருட்டினனும் சந்தித்து இருவரும் கண்ணீர் விட்டமை பற்றி -

தாளமுத்து - நடராசன் உயிர் துறந்தமை பற்றி -

மணியம்மையாரை அய்யா மணம் செய்து கொள்ள நேர்ந்த நெருக்கடி பற்றி -

அஞ்சலட்டையில் முகவரிப் பகுதியிலுள்ள இந்தி எழுத்துக்களை அடித்து எழுதும் உரிமை நிலைநாட்டப்பட்டமை பற்றி -

அண்ணாவும் ஈ.வெ.கி. சம்பத்தும் அய்யாமீது தொடுத்த சுவையான வழக்கு பற்றி -

இந்தியத் தேசியக் கொடி எரிப்புப் போராட்டத்தை அய்யா அறிவித்தபோது நேரு, காமராஜ் - இருவர் சார்பில் வெளியிடப்பட்ட உறுதி மொழி பற்றி -

"என் அருமைப் பார்ப்பனத் தோழர்களே! நம் இருவருக்குள்ளும் போரோ, பிணக்கோ, பூசலோ, பகையோ நேரும் விதத்தில் நடந்துகொள்ளாதீர்கள். அப்படி நடந்து கொண்டால் கஷ்டம் உங்களுக்குத்தான். வாழை இலையும் முட்செடியும் மோதிக் கொள்ளும் நிலை நேரிட்டால் காயம் இலைக்குத்தான், முட்செடிக்கல்ல" என்று அறிவுறுத்தியது பற்றி -

மம்சாபுரத்திலும் வடசென்னையிலும் பொதுச் செயலாளர் வீரமணியவர்களைக் கொலை செய்ய முயற்சிகள் நடந்தமைபற்றி -

மீனாட்சிபுரத்தில் மதம் மாறியோர் பற்றி -

பொதுவுடைமை இயக்கத் தலைவர் இராமமூர்த்தியின் நூலான 'விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்' என்ற நூலுக்கு ஆசிரியர் வீரமணி அளித்த மறுப்புரை பற்றி -

'சங்கராச்சாரியார்' என்னும் விழிப்புணர்ச்சியூட்டும் பரபரப்பான தொடர்சொற்பொழிவைத் தோழர் வீரமணியவர்கள் நிகழ்த்தியமை பற்றி -

பிற்படுத்தப்பட்டோர் - சிறுபான்மையினர் ஒன்றியம் எனும் அனைத்திந்திய அமைப்பின் பெயரினைப் பிற்படுத்தப்பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் - சிறுபான்மையினர் ஒன்றியம் என்பதாக மாற்ற வேண்டும் என வற்புறுத்திய தோழர் வீரமணி தன் முயற்சியில் வெற்றி பெற்றமை பற்றி -

அமெரிக்காவிலும் பிற நாடுகளிலும் உள்ள பெரியார்ப் பற்றாளர்கள் பற்றி -

இசை போன்ற கலைத் துறைகளில் பகுத்தறிவுக் கருத்துகளும் இனநலக் கருத்துகளும் வாழ்வியல் கருத்துகளும் இடம் பெறச்செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தந்தை பெரியார் முத்தமிழ் மன்றம் என்னும் அமைப்பு நிறுவப்பட்டிருப்பது பற்றி -

திராவிடர் கழகமும் விடுதலையும், ஆட்சிக்கு வருவோர் எவராயிருப்பினும், 'வகுப்புரிமை - இடவொதுக்கீட்டுக் கொள்கையை ஆச்சாரியார் ஆட்சியின் கொடுமைகள் பற்றி -

காமராசர் ஆட்சியின் நன்மைகள் பற்றி -

திருச்சி மாவட்ட ஆட்சியராய்ப் பணியாற்றும் பார்ப்பனரல்லாத மலையப்பன் என்பவரின் ஆணை ஒன்றைப் பற்றித் தீர்ப்புக்கூறிய பார்ப்பன நீதிபதிகள் இருவர் மாவட்ட ஆட்சியரின் மீது பொழிந்த கடும் கண்டனச் சொற்கள் குறித்துப் பெரியாரவர்கள் வெளியிட்ட துணிச்சலான கருத்துகட்காக, அவர்மேல் 'முறைமன்ற மதிப்புக் குலைப்புக் குற்றம்' சுமத்தப்பட்டுத் தண்டனை வழங்கப் பட்டமை பற்றி -

குதிரை வண்டிக்காரர்களிடமெல்லாம் சிறு தொகைகளைக் கையூட்டாகப் பெற்ற மாவட்டத் துணையாட்சியர் டி.எஸ். சுவாமிநாதன் என்ற அய்.சி.எஸ். பார்ப்பன அதிகாரி பற்றி -

துணிமணி, சாராயம் - மது வகைகளைக் கையூட்டாய் வாங்கிக் கொண்டு பல ஊழல்களைப் புரிந்த எஸ்.ஏ. வெங்கட்ராமன் எனும் அய்.சி.எஸ். பார்ப்பன அதிகாரி பற்றி -

பெங்களூர் எல்.எஸ். ராஜூ என்ற அய்யங்கார் வழக்குறைஞர் மீது தொடரப்பட்ட வழக்கில் அவரைத் தப்புவிப்பதற்காக, அன்றைய இந்திய உள்துறை அமைச்சராகவிருந்த சி. இராசகோபாலாச்சாரி யாரும் மக்களவைத் தலைவராகப் பொறுப்பாற்றிய அனந்தசயன அய்யங்காரும் மேற்கொண்ட பெருமுயற்சிகள் பற்றி -

பொய்யான பிறந்த நாளைக் காட்டிச் சென்னை உயர்முறை மன்ற நீதிபதியாய் நீடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட இராமச்சந்திரன் அய்யர் பற்றி -

அனைத்துச் சாதியினரும் இந்துக் கோயில்களில் அர்ச்சகர்களாகப் பணியாற்றும் உரிமைக்காகப் பெரியார் ஏற்பாடு செய்த 'கருவறை நுழைவு'க் கிளர்ச்சிபற்றி -

தம் வாழ்நாளில் தந்தை பெரியார் மக்களுக்காகத் தொண்டாற்றும் பொருட்டு 8200 நாள்கள் செலவிட்டு, 8,20,000 கல் தொலைவு சுற்றுப்பயணம் செய்தமை பற்றி -

பிற்படுத்தப்பட்டோர்க்கான இந்திய அரசின் மண்டல் ஆணையம் அளித்த பரிந்துரைகள் பற்றி -

வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்படுத்தப்பட்டோர் இன்னாரென வரையறை செய்யும் தமிழக அரசின் ஆணையை எதிர்த்துத் திராவிடர் கழகம் நடத்திய அறப் போராட்டத்திற்குக் கிட்டிய பெரும் வெற்றி பற்றி -

ஏற்றுக்கொண்டு ஒழுகுவாராயின் அவர்களுக்கு நல்ல ஒத்துழைப்பு நல்குவதையும், அதை மறுப்பவராயின் அவர்களை மிகக் கடுமையாகக் கண்டித்து எதிர்ப்பதையும் பற்றி -

என்ற இவை போன்றவற்றைப் பற்றியெல்லாம் நாம் அறிந்து புரிந்து கொள்ள விடுதலை நமக்குத் துணை செய்கிறது.

இப்பேர்ப்பட்ட விடுதலை ஏடு ஈட்டிக் குவித்த வெற்றிகள் எண்ணிறந்தவை. அவற்றுள் நிரம்பப் பெருமிதங் கொள்ளுவதற்குரிய மாபெரும் வெற்றியொன்றை ஈண்டுக் குறிப்பிடுதல் ஆகும். அதுதான் எழுத்துச் சீரமைப்பின் வெற்றி. விடுதலை ஏடு ஏற்றுக்கொண்டு பயன்படுத்திவரும் தமிழ் எழுத்துக்களின் வரி வடிவங்கள்தாம் இன்று பள்ளிகளில் பயில்விக்கப்படுகின்றன. உலகம் முழுவதும் கற்பிக்கப்படும் தமிழெழுத்துக்களின் வரிவடிவங்கள் அன்று விடுதலை நாளேட்டினால் அறிமுகம் பெற்றவையே. 'விடுதலை எழுத்துக்கள்' என்றே அவை பெயரிடப்பட்டன அல்லவா?

"தமிழர்களின் இல்லங்கள் என்பதற்கு அறிவிப்புப் பலகைபோல், விடுதலை ஒவ்வொரு தமிழரது வீட்டிலும் இருக்க வேண்டும்" என்ற பெருமதிப்பிற்குரிய குன்றக்குடி அடிகளாரின் ஆர்வ மொழியைத் தமிழ்க் குடும்பங்கள் இனிவரும் நாள்களில் நிறைவேற்றுவது உறுதி என்று நம் ;வோமாக!

திராவிட நாடு

கு. விவேகானந்தன்

திராவிடம்

திராவிடம் என்பது தென்னிந்தியப் புவிப்பரப்பைக் கொண்டது. இன்றைய தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் அடங்கிய நிலப் பகுதி திராவிட நாடு ஆகும்.

திராவிடத்தின் சிறப்பு

'மனித இனத்தின் தொட்டில், தென்னிந்தியா' என சர். ஜான் எவான்ஸ் என்பவரும் திராவிடத்தின் தெற்கில் கடலடியில் மூழ்கிய இலெமுரியாதான் முதல் மனிதன் பிறந்த நிலம் என ஆராய்ச்சியாளர் பலரும் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த மனிதன் உணவுக்கு அலைந்தான் - வேட்டையாடினான் - உடுக்கப் பழகினான் - குடியிருப்புக் கண்டான்; கூடி வாழவும், உழவுத் தொழில் செய்யவும் முற்பட்டான்; சமையல் பழகினான் - கருவிகள் செய்தான். தமிழ் பிறந்தது - வரி வடிவம் பெற்றது. சமுதாய வாழ்வை அமைத்தான். அரசு கண்டான்; நாகரிகம் பிறந்தது; வாணிகம் வளர்ந்தது; வளம் கொழித்தது; முத்தமிழ் முழங்கிற்று. அவன் உலகோருக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினான். இவ்வாறாகத் திராவிடத்தின் சிறப்புகளைப் பேராசிரியர் க. அன்பழகன் 'உலக அரங்கில் நாம்' என்ற கட்டுரையில் (திராவிட நாடு 6.8.1961) விளக்கியது குறிப்பிடத்தக்கது. அவர் கட்டுரையில் மேலும் குறிப்பிடுவது வருமாறு:

தென்னக மொழிகளிலேயே பிறமொழிகளின் துணையின்றியே தனித்து வளரும் ஆற்றல் பெற்றுள்ள தமிழ்தான் உலகிலேயே மிகப்பழைய மொழி என்பதும், திராவிட மொழிகட்கே மூலமாய் அமைந்தது என்பதும் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரனார் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடற்பகுதிகளால் உணரலாம் என்பதாகும்.

மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே சிறப்புற்றிருந்த ஹரப்பா, மொகன்-சதாரோ நகர சிந்து சமவெளி நாகரிகம் திராவிட நாகரிகமேயாகும், என சர். ஜான் மார்ஷல் உலகறியச் செய்தார்.

தவத்திரு ஹீராஸ் பாதிரியார், தமிழ், சிந்து சமவெளிப் பகுதியில் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது என்ற உண்மையைக் கண்டுபிடித்துக் கூறினார்.

திராவிட உணர்வு

வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் இனம், அரசு இழந்து சாதிசமயப் பிரிவுகளால் பிளவு பட்டுத் தாழ்வுற்றது ஏன்? சீரழிக்கப் பெற்றது எவ்வாறு? மீண்டும் தலையெடுக்க முடியாதபடி ஆனதற்குக் காரணங்கள் யாவை? இக்கேள்விகளுக்கெல்லாம் மொத்த விடையாக உருவானதுதான் திராவிட உணர்வு.

திராவிட இயக்கம்

திராவிட உணர்வு கொண்டவர்கள் ஒன்று கூடிக்கண்டதுதான் திராவிட இயக்கம். கீழ்க்காணும் வகையில் தொகுத்துச் சொல்வது இவண் தேவையானது ஆகும்.

பின்னணி : திராவிடர்களின் அடிமை வாழ்வு; பிறப்பால் ஏற்றத் தாழ்வு, அதாவது சாதிப் பிரிவுகள்; சமூகப் பொருளாதார மற்றும் பண்பாட்டுச் சிதைவு; வேற்றுமொழி ஆதிக்கம்; மூட நம்பிக்கைப் பழக்க வழக்கங்கள்; பெண்ணடிமை; எல்லா இழிவுகளுக்கும் மூல காரணமாக விளங்கும் கடவுள் பெயரால் உண்டாக்கிய அநீதிகள்.

எதிரணி : சனாதன - ஆரிய - பனியா - வடவர் பார்ப்பனீய ஆதிக்கம்

நோக்கம் : இழந்த வாழ்க்கை மீட்பு.

திட்டம் : பகுத்தறிவு; சுயமரியாதை; வகுப்புரிமை; அரசியல் விடுதலை அதாவது திராவிட நாடு பிரிவினை

செயல் : அறிவுப் புரட்சி; இன உணர்வு, எழுச்சி, அதாவது திராவிடர் - ஆரியரல்லாதவர் ஒற்றுமை; அறிவியல் சார்ந்த சமூகப் பொருளாதார சமத்துவம்.

திராவிட இயக்க வரலாறு

1912இல் 'சென்னை ஒன்றிய சங்கம்' (மதராஸ் யுனைடட் லீக்) என்ற அமைப்பை, தஞ்சையில் துணை மாவட்ட ஆட்சியாளராக

இருந்த சரவணன், பொறியியல் துறையில் பணியாற்றிய ஜி. வீராசாமி ஆகியோர் தோற்றுவித்தார்கள்.

1913 சென்னை ஒன்றிய சங்கம் மருத்துவர் சி. நடேசனார் ஆதரவுடன் திராவிடர் சங்கம் எனப்பெயர் மாற்றம் கொண்டது.

1913 மாணவர்கள் தங்கிப் படிக்க 'திராவிடர் மாணவர் இல்லம்' ஒன்று சென்னையில் அமைக்கப்பட்டது.

1916 தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோன்றியது. இதுவே, 'நீதிக்கட்சி' ஆயிற்று. அன்றைய சென்னை மாகாணத்தை (சுதேச மன்னர்கள் ஆட்சி செய்து வந்த சமஸ்தானங்கள் நீங்கலாக நிலவிய திராவிட நாட்டுப் பரப்புக் கொண்டது) 1920 முதல் 1937 வரை ஆட்சி செய்த கட்சி என்னும் பெருமையைப் பெற்றது நீதிக்கட்சி.

1924 காங்கிரசு இயக்கத்தில் இருந்து வந்த பெரியார், 'குடியரசு' இதழ் தொடங்கினார். 1925 பல தரப்பினரும் வழங்கிய பொதுப் பணத்தைக் கொண்டு சேரன் மாதேவியில் காங்கிரசு இயக்கத்தைச் சேர்ந்த வ.வே.சு. ஐயர் நடத்தி வந்த குருகுலத்தில் பிராமணச் சிறுவர்களுக்குத் தனிப் பந்தி முறையை ஏற்படுத்தினார். காங்கிரசு இயக்கத்தில் தீவிரமாக இருந்து வந்த பெரியார் அதிர்ச்சியடைந்து காங்கிரசை விட்டு வெளியேறி நீதிக் கட்சியில் சேர்ந்தார்.

1928 நீதிக்கட்சியின் 'திராவிடன்' இதழ் நிருவாகம் பெரியாரிடம் வந்தது.

1934 திருப்பூரில் நடைபெற்ற இளைஞர் இரண்டாவது மாநாட்டின்போது பேரறிஞர் அண்ணா, பெரியார் சந்திப்பு நிகழ்ந்தது.

1935 பெரியார் 'விடுதலை' இதழைத் தொடங்கினார். (இன்றுவரை நடந்து வரும் இதழ் என்னும் பெருமை இதற்கு உண்டு)

1940 திருவாரூர் நீதிக்கட்சி மாநாட்டில் 'திராவிட நாடு திராவிடருக்கே' என்னும் விடுதலை எழுச்சிக் குரல் ஒலிக்கத் தொடங்கியது.

1942 குடியரசு, விடுதலை இதழ்களில் துணை ஆசிரியராக இருந்து எழுதிவந்த அண்ணா 'திராவிட நாடு' இதழ் தொடங்கித் தாமே ஆசிரியர் பொறுப்பும் மேற்கொண்டார். திராவிடர் நலன்

பேணும் இயக்கத்திற்கு 'நீதிக்கட்சி' எனும் பெயர் ஏற்றதாகாது எனக் கருதிக் காஞ்சியில் பேரறிஞர் அண்ணா 'திராவிடர் கழகம்' எனும் அமைப்பை நிறுவினார்.

1943 நீதிக்கட்சியைத் 'தென்னிந்திய திராவிடர் கழகம்' என்று பெயர் மாற்றம் செய்யத் தீர்மானம் நிறைவேறியது.

1943 'திராவிட நாடு' இதழில் (05.12.43) தென்னிந்திய என்னும் சொல்லை நீக்கித் 'திராவிடர் கழகம்' எனப்பெயர் சூட்டவேண்டும் என அண்ணா இதழுரை தீட்டினார்.

1944 சேலம் மாநாட்டில் அண்ணாதுரை தீர்மானம் என்ற பெயரால் நீதிக்கட்சி, திராவிடர் கழகம் ஆயிற்று. 1947 ஆகஸ்டு 15 இந்திய விடுதலை நாளைத் துக்க நாளாகக் கருதவேண்டும் எனப் பெரியார் 'விடுதலை'யில் பணித்தார். திருநாளாகக் கொண்டாடுவதுதான் சிறப்பு என அண்ணா திராவிட நாடு இதழில் அறிக்கை விடுத்தார்.

1949 திராவிடர் கழகத்திலிருந்து அண்ணா தம் தம்பியர்களின் பேராதரவுடன் பிரிந்து தனியே 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற கட்சியை உருவாக்கினார்.

ஆக, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அமைப்புகளின் வரலாறு திராவிட இயக்க வரலாறாக அழைக்கப் பெறலாயிற்று.

திராவிட இயக்க இதழ்கள்

ஏராளமான இதழ்கள் தோன்றின. ஏறத்தாழ அறுபது இதழ்கள் திராவிட இயக்கத் தோழர்களால் நடத்தப்பெற்றிருக்கின்றன என்று 'கதிர்' இதழ் ஆசிரியராக விளங்கிய ப. புகழேந்தி பட்டியலிட்டுள்ளார். 'அண்ணா' - இதழாசிரியர் ஓர் ஆய்வு' என்னும் டாக்டர் பட்டத்திற்கு ஆய்வு நிகழ்த்திய மு. கோவிந்தராசுலு திராவிட இயக்க இதழ்களின் எண்ணிக்கை 93 என வரையறுத்துள்ளார். தமிழகத்தில் தோன்றியவை அல்லாமல் கடல்கடந்த நாடுகளிலும் திராவிட இயக்க இதழ்கள் வெளியாகியிருக்கின்றன.

இத்தகைய எழுச்சி காரணமாகத் தமிழகத்தில் பகுத்தறிவுச் சிந்தனைகளுடன் கூடிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாகப் பத்திரிகை படிப்போரின் தொகை முன்பு எப்போதையும் விட மிக வேகமாக அதிகரித்தது.

விடுதலை, திராவிட நாடு, தீப்பொறி, போர்வாள், திராவிடன், மன்றம், முரசொலி, தனியரசு, நம்நாடு, மாலைமணி, தென்றல், அறப்போர், தென்னகம், திராவிடமணி முதலானவை குறிப்பிடத்தக்க திராவிட இயக்க இதழ்களாகும்.

இவ்விதழ்கள், அவற்றை நடத்திய ஆசிரியர்கள் முதலான தகவல்கள் அவ்வப்போது திராவிட நாடு இதழ்களில் வெளியாகியுள்ளன.

இருட்டடிப்புக்கு ஆளாகி இருந்த திராவிட இயக்கம் இன்று ஓரளவுக்குப் பொதுமக்களின் செல்வாக்குப் பெற்றிருப்பதற்குக் காரணம் மற்ற இதழ்களின் துணையைப் பெறாத நிலையை அறிந்து, நாமே இயக்க ஏடுகள் சிலவற்றையேனும் நடத்திவருவதுதான் (திராவிட நாடு 4.11.56) என்ற அண்ணாவின் வாசகம் இத்தகைய இதழ்களின் பணியை மதிப்பிடுகின்றது.

மக்கள் தொடர்புச் சாதனங்கள், மனிதனின் உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். அவர்களின் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிய வேண்டும். மனித சமூகத்தின் பண்பாட்டைச் சிதைத்துச் சீரழிக்காமல் இருக்கவேண்டும். நாட்டின் மாண்பை உயர்த்தக்கூடிய விதத்தில் கலை இலக்கியங்களை வளமுறுத்தவேண்டும். மொழி மலர்ச்சியும் இலக்கிய வளர்ச்சியும், சமூக மறுமலர்ச்சியும் அரசியல் விடுதலை எழுச்சியும் காலவேகத்தில் நாட்டில் தலையெடுத்தபோது ஆற்றலும் ஆர்வமும் அக்கறையும் பெற்றிருந்த திராவிட இயக்கத்தினர் வழிகாட்ட முற்பட்டதும் வளம்படுத்த தங்களால் இயன்றதைச் செய்து சாதனை புரிந்ததும் தாங்கள் நடத்திய சிறு சிறு பத்திரிகைகள் வாயிலாகத்தான் என்பது உறுதியாகிறது. 'திராவிட இயக்கப் பத்திரிகையாளர் சங்கம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு இருந்தது என்கிறார் 'கதிர்' ஆசிரியர் ப. புகழேந்தி. விடுதலை ஆசிரியர் குத்தூசி குருசாமி தலைவர்; புலவர் கு. செல்வராசு செயலர்; பெரியார், அண்ணா, பாரதிதாசன் ஆகியோர் ஆலோசகர்கள். கலைஞர், பேராசிரியர், டார்பிடோ ஜனார்த்தனம் முதலானோர் செயற்குழு உறுப்பினர்கள் என்ற நிலைகளில் பல முன்னணித் தலைவர்கள் பங்குகொண்டு பணியாற்றியிருக்கிறார்கள். இச்செய்தி, திராவிட இயக்க வளர்ச்சிக்கு யார் யார் எப்படியெப்படிக் காரணமாக இருந்துள்ளார்கள் என்பதைத் தெளிவு செய்கிறது.

திராவிட நாடு இதழ்

வடிவமைப்பு : அட்டை, படம், கவிதை, தலையங்கம், கருத்து விளக்கம், கட்டுரை, செய்தி, கழக நடவடிக்கைகள், மடல், கதை,

துணுக்கு, பயணக்குறிப்புகள், கேட்டீரா செய்தி?, அந்திக் கலம்பகம், ஊரார் உரையாடல், நாடகம், பெட்டிச் செய்திகள், அறிவிப்பு, துணுக்கு, மறுப்புரை முதலானவை குறிப்பிடத்தக்கவை.

முதல் இதழ்

தனிப்பிரதி ஓர் அணா; ஆண்டுச் சந்தா ரூ.5/- ஞாயிறு வெளியீடு திராவிட நாடு; ஆசிரியர் : சி.என். அண்ணாதுரை.

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு
- பாரதிதாசன்

மலர் 1 இதழ் 1 8.3.1942

பாரதிதாசனுடைய கவிதை வரிகளுடன் முதல் இதழ் தொடங்குவது மிகவும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. பாரதிதாசனைப் பற்றி அண்ணா 'திராவிட நாடு' இதழ் ஒன்றில் (4.3.1956),

''இதய நாதத்தையும் இயற்கை எழிலையும், தமிழ்ப் பண்பையும் கலைச்செறிவினையும் கண்டறிந்து கவிதை வடிவாக்கித் தரும் பாரதிதாசனுக்கு. . .'' என்று எழுதிய சொற்கள் மதிப்பு வாய்ந்தவை; பொருள் பொதிந்தவை. எவ்வளவு நாள்கள் உரையாடியிருப்பார்? தமிழின் மாண்பினை எவ்வளவு உணர்ந்திருப்பார்? அத்தகைய புரட்சிக் கவிஞர் மறைந்தபோது அண்ணா, இந்தி எதிர்ப்புப்போர் காரணமாகச் சிறையில் இருந்தார். அங்கு அவர் அடைக்கப்பெற்றிருந்த அறையில் யாரோ ஒருவர் எழுதிவைத்த 'சுவர் இலக்கியம்' ஒன்றினைக் குறிப்பிடுகிறார். அக்குறிப்பு யாதெனின்,

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை
எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

என்பதாகும்.

திராவிட நாடு இதழ் எப்படிப்பட்ட இதழ்? அதன் ஆசிரியர் பேரறிஞர் அண்ணா எத்தகைய எழுத்தாளர்? இவ்வினாக்களுக்கு விடை காண, திராவிட இதழ் ஒன்றில் அதன் ஆசிரியர் வழங்கிய கருத்துரை துணை செய்யக்கூடியதாக அமைந்துள்ளது. அக்கருத்துரை வருமாறு:

'மனத்திலே தோன்றுவதெல்லாம் எழுதும் 'அலை' எழுத்தாளர்கள் உண்டு. சீதையின் முகத்திலே பூரண சந்திரனையும் அனுமன் வாலிலே அண்டத்தின் சக்தியையும் கண்டு எழுதும் 'கலை' எழுத்தாளர் உள்ளனர். இன்னின்ன ரேட்டுக்கு இப்படி இப்படி எழுதித்தருவது என்ற 'விலை' எழுத்தாளர்கள் இருக்கின்றனர். இன்று ஏதாவது எழுதாவிட்டால் ஊதியம் இல்லையே என்று வருத்தத்துடன் எழுதும் 'உலை' எழுத்தாளர்கள் உயிருடன் ஊசலாடுகின்றனர். சித்திர நடையாலும் சித்திரங்களாலும் கட்சிக்கு ஆள்பிடிக்கும் 'வலை' எழுத்தாளர்கள் வாழ்கின்றனர். ஆனால், உண்மையை உரைப்போம், இல்லாததை உரைத்து இடர் விளைவித்த எழுத்தாளரின் பிடியிலிருந்து மக்களை விடுவிப்போம் என்ற கருத்துடன் உள்ள 'நிலை' எழுத்தாளர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு" (திராவிட நாடு 26.11.44).

மேற்காணும் வரிகள், அண்ணாவை எத்தகைய எழுத்தாளர் எனவும் அடையாளம் காட்டுகிறது. அத்தகைய எழுத்தாளர்கள் எண்ணிக்கையில் மிகமிகக் குறைவாக இருப்பதைக் கண்டு அவர் நெஞ்சம் வருந்துகிறது என்பதையும் அறிய முடிகிறது. எழுத்தாளர்களின் எண்ணிக்கை பெருகினால் போதாது, அவர்களுடைய கருத்துக்கள் மக்களிடையே மனமாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்ற ஆவல் அவருடைய இதழ் நோக்கத்தைப் பறைசாற்றுகிறது.

திராவிட நாடு இதழின் எல்லாப் பக்கங்களையும் வாரந்தோறும் அண்ணாவே எழுதி நிரப்பினார். ஓர் இதழில் பல்வேறு ஆசிரியர்கள் செய்யவேண்டிய வேலைகளை அவர் ஒருவரே செய்தார். அரசியல் விமர்சனங்கள் எழுதினார். கேலிச்சித்திரங்கள் தீட்டினார். ஓரங்க நாடகங்களை உருவாக்கினார். சிறுகதைகள் எழுதினார். தொடர்கதைகள் தீட்டினார். கவிதைகளைக் கூட அவர் விட்டுவைக்க வில்லை. திராவிடர் கழகத்தை விட்டு விலகி 1949இல் அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்த வரை பத்திரிகை முழுவதும் அவரே எழுதி நிரப்பினார் என, ப. புகழேந்தி குறிப்பிடுவது முற்றிலும் உண்மையாகும்.

இதழ் நடத்துவது குறித்து மாற்றார் பேசிய குற்றங்களை எடுத்துக்காட்டி, அண்ணா, திராவிட நாடு இதழில் (21.7.57) எழுதுவதாவது:

> அலைந்து திரிந்து வரும் இவன் ஒரு இதழ் நடத்த வல்லனா, என்ற ஏளனக்குரல் எழுப்பியோர் எத்துணை பேர்? இவன் எம்.ஏ. படித்தால் போதுமா? தமிழ் இலக்கண இலக்கியம் அறிவானோ! என்று எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசியோர் எவ்வளவு பேர்? ஈராறு திங்கள் நடமாடி, பிறகு ஈளை கட்டி இருமி, இருக்குமிடம் தெரியாது போகும் என்று சாபமளித்தோரும் உண்டே! எதுகை மோனை போதுமா? எண்ணத்திலே ஒரு புதுமை, எழுதுவதிலே ஒரு தெளிவு இருத்தல் வேண்டாமா? - அஃது இவன் பெறுதல் ஆகுமோ? என்று தலை அசைத்துப் பேசினோரின் தொகை மட்டும் சிறிதா?

இக்குறிப்பு எவ்வளவோ வினாக்களுக்கு விடையாகி நிற்கிறது. இக்குறிப்பு ஒன்றே போதும். அவர் இதழ் நடத்திய ஆற்றலைத் தெளிவு படுத்துவதற்கு.

அண்ணா ஆற்றிய பிற பணிகளைவிட இதழ்ப்பணி சிறந்து விளங்குவதற்குக் காரணம், அவருக்கு எல்லாத் திறங்களும் இதழ்களில் ஒரு சேர நின்று நிலவியதேயாகும். திராவிட நாடு இதழ்களில் அவர் வடிவமைத்தெழுதிய இலக்கிய வடிவங்களுள் சிறந்த வடிவமாக விளங்குவது எது?

ஒவ்வொரு வடிவமும் சிறந்து விளங்குகின்றது என்றே கூற வேண்டும். அந்திக் கலம்பகம், ஊரார் உரையாடல், கேட்டீரா செய்தி? முதலானவை இன்றைக்கும் சில பெரிய வார இதழ்களில் வெவ்வேறு பெயர்களில் எழுதப்பெற்று வருகின்றன.

ஆனந்த விகடன் '. . . அனு. . . அக்கா. . . ஆன்ட்டி' என்ற தலைப்பிலும் குமுதம், 'செல்ஃபோன்' என்ற தலைப்பிலும் எழுதி வருவதும் அவற்றை வாசகர்கள் விரும்பிப் படிப்பதும் கருத்தில் கொள்ளத்தக்கவை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அண்ணா வடிவமைத்துக் கொடுத்த உத்தி இன்றைய இதழாளர்களுக்குக் காசு சேர்க்கவும் உதவுகின்றது. அண்ணா விரும்பியது போல மறுமலர்ச்சிக்காக எழுதக்கூடிய நிலை எழுத்தாளர்கள் தமிழகத்தில் இல்லையே என்ற ஏக்கத்தை ஏற்படுத்துகின்றது.

பெரும்பாலும் மக்களிடையே நிலவி வந்த மூடநம்பிக்கைகளை எடுத்துக்காட்டி மக்கள் அவற்றைக் களைந்து, பகுத்தறிவு வழி நிற்கவேண்டும் என்ற முயற்சியில் எழுதப்பட்டவைகளே மிகுதியாக உள்ளன. கடவுள் பெயரால் நிகழும் அநீதிகள், புராணங்களின் வழி அறிவை அடகுவைத்து வாழும் அவல நிலைகள், அவற்றுக்குக் காரணமாக விளங்கும் சமய நூல்கள் ஆகியவற்றைக் கண்டித்து எழுதிய பகுதிகள் ஏராளம். அறிவியல் கண்ணோட்டம் மக்களிடையே பரவ வேண்டும் என்றும், உழைத்துப் பிழைக்க வேண்டும் என்றும், கூடி வாழ்தல் வேண்டும் என்றும் எழுதுவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டு கட்டுரைகள், விமர்சனங்கள் முதலானவை எழுதப்பெற்றன. 'தீ பரவட்டும்' என்ற தலைப்பில் எழுதியவை தனி நூலாக வெளிவந்துள்ளது. 'ஆரிய மாயை' எழுதியதற்காக அரசாங்கம் அண்ணாவுக்குச் சிறைத்தண்டனை வழங்கியது.

திராவிடநாடு இதழில் அண்ணா தீட்டிய நாடகங்கள் புகழ் வாய்ந்தவை. 'சந்திரோதயம்' என்னும் புகழ் பெற்ற நாடகத்தை எழுதி தாமே பங்கேற்று நடத்திய அனுபவம் அவருக்குண்டு. இன்னும் சொல்லப்போனால் அவருக்கிருந்த நாடகப்பித்து வேறு எந்தத் தலைவருக்கும் இந்த அளவிற்கு இருந்திருக்குமா என்பது ஐயத்திற்குரியதாகும். உரையாடல், கதைகளின் இடையே, உள்நாடகங்கள், இராச்சிய சபை பேச்சுக்கள் முதலானவை நாடகவடிவில் இடம் பெற்றிருக்கின்றன. குறும் புதினங்களும், புதினங்களும், சிறுகதைகளும், ஏராளமாக எழுதி திராவிட நாடு இதழில் அண்ணா வெளியிட்டுள்ளார். இவை தவிர பயணக்குறிப்புகள், துணுக்குகள், கருத்தளிக்கும் கதைகள், கவிதைகள் முதலானவை, அவருடைய படைப்பாற்றலைப் புலப்படுத்துவனவாக உள்ளன. இவ்வாறான வடிவங்களில் எல்லாம் அவர் எழுதிய போதிலும் அவருக்கு மிக விருப்பமான வடிவம் மடல் வடிவமேயாகும். அவர் தனி நிலையில் மடல் எழுதி அஞ்சல் செய்யும் வழக்கம் மிகுதியாக இல்லாதவர். கிழமைதோறும் அவருடைய மடல் தாங்கிய திராவிடநாடு இதழ்கள் அவருடைய தம்பியர்களை நோக்கி அஞ்சலில் சென்று சேர்ந்தன. எதிர்பார்த்துக் காத்துக் கிடந்து வந்ததும் வாங்கிப் படித்தவர் ஆயிரக்கணக்கானோர். அவர்தம் இயக்கம் அரசியல் கட்சியாக மாறிப் பொதுத்தேர்தலில் ஈடுபட்ட சூழலில் கடிதங்கள் வெளியாயின. ஆதலால் அவற்றின் முக்கியத்துவம் மிகுதியாயிற்று.

எந்தப் பிரச்சினை பற்றி எழுத நினைத்தாலும், அவருக்குக் கை கொடுத்து உதவியது மடல் வடிவமாகும். ஒவ்வொரு தம்பிக்கும் கட்சித் தொண்டருக்கும் தனித்தனியே எழுதிக்கொண்டிருக்க முடியாது. ஆகையால் நேர் நின்று உரைக்கும் கடித முறையைத் தேர்ந்தெடுத்து திராவிட நாடு இதழில் எழுதுவராயினார். மடல்களின் நோக்கம் அன்றாட அரசியலை விவாதிப்பதாகும். கடிதங்களில் இடம் பெறும் அரசியல் அவர் கை வண்ணம் பட்டு இலக்கிய மெருகு பெறுவதைக்காண முடிகின்றது. கடிதத் தலைப்புகள் ஒவ்வொன்றும் அவருடைய மொழி ஆளுமையை வெளிப்படுத்துகின்றன. கடிதங்களில் கட்டுரை, மொழிப்பெயர்ப்பு, நாட்குறிப்பு, நெடுங்கதை, சிறுகதை, நாடகம், துணுக்கு, ஓரோவழி கவிதை, ஆகிய வடிவங்களிலும் எழுதுவது அவருக்கேயுரிய தனித்தன்மையைக் காட்டுகின்றது. 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற தலைப்பில் எழுதிய தொடர் மலர்கள் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தி.மு.க.வில் இருந்து சம்பத் பிரிந்து செல்கின்ற காலக்கட்டத்தில் எழுதப்பெற்றதால் மிகவும் சூடும் சுவையும் கொண்டதும், திருப்பு முனையை ஏற்படுத்தியதும் ஆகும். தம்பியரை உண்மையுணரச் செய்தன. அண்ணாவுக்கு இருந்துவந்த ஆதரவு குறையவில்லை. மாறாகப் பெருகியது.

அண்ணாவின் அரசியல் வெற்றிக்கு இன்றியமையாத காரணம் அவருடைய மடல்களேயாகும். 'பல மாநாடுகளைவிட, செல்வாக்குள்ள வார இதழ் ஒன்று வல்லமையான வேலை செய்கின்றது என்று கூறவேண்டும். பல கட்டை வண்டிகளைவிட லாரி ஒன்று மிகுதியான வேலை செய்ய முடியும் அல்லவா? - என டாக்டர் மு.வ. கூறியது அண்ணாவிற்கு முற்றிலும் ஏற்புடையது. அண்ணா காட்டிய திசையில் தமிழகம் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வெற்றி அண்ணாவின் கடித இலக்கிய வெற்றியேயாகும்.

ஆகஸ்டு பதினைந்து; அக்கரகாரத்தில் அதிசய மனிதர், வரா.; வாழ்க வசவாளர்கள்; கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது - முதலான தலைப்புகளில் எழுதிய கட்டுரைகள் வரலாற்றுச் சிறப்புமிக்கவை. பிற்காலங்களில் இக்கட்டுரைகளை நினைவுகூறும் வகையில் மாற்றம் செய்து எழுதியவை சுவைமிக்க பகுதிகள். வாசகர்களைக் குழப்பங்களிலிருந்து விடுவித்து, தெளிவு உண்டாக்கி அண்ணாவின் அரசியல் தலைமைத் திறத்தை அவை மேம்படுத்தின.

திராவிட நாடு இதழில் இதர தம்பியரை எழுதவைத்துப் பயிற்சி கொடுத்த அண்ணாவின் பாங்கு பெருமைப்படத்தக்க ஒன்றாகும். கலைஞர், பேராசிரியர், நெடுஞ்செழியன், மதியழகன், சி.பி. சிற்றரசு, என்.வி.என். நடராசன், அரங்கண்ணல், ப.உ. சண்முகம், ராதாமணாளன், தில்லை வில்லாளன், ம.கி. தசரதன் முதலானவர்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் அரங்கண்ணலும் தில்லை வில்லாளனும் திராவிட நாடு துணையாசிரியர்களாகவும் இருந்துள்ளனர். ஈழத்து அடிகள் திராவிட நாடு இதழ் நடத்துவதற்கு முழுவதுமாக ஆசிரியர்க்கு உடனிருந்து ஒத்துழைத்ததோடு பல அரிய விமர்சனங்களையும் கட்டுரைகளையும் அளித்துப் பணிபுரிந்துள்ளார்.

ஆச்சாரியார் அனுமாரைக் கண்டார். சாஸ்திரியார் வால்மீகியை அறிந்தார். (திராவிட நாடு 12.4.53) முதலான சீர்திருத்தக் கருத்துகளடங்கிய கட்டுரைகள் படைத்த பெருமை ஈழத்து அடிகளுக்கு உண்டு.

பகுத்தறிவு

1926இல் தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். இஃது ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கம். இதனுடைய நோக்கம் தன்மான உணர்ச்சியூட்டுவது. இதனுடைய அடிப்படையான பணி பகுத்தறிவு கொள்ளச்செய்வது. இன்றுவரை இப்பணிபுரிந்து வரும் தலைவர்களும், தொண்டர்களும் இருந்து வருவது பெரியாருக்குக் கிடைத்த வெற்றிகளுள் மிகவும் குறிப்பிடத்தக்க வெற்றியாகும். அண்ணா இவ்வியக்கத்தின்பால் ஈர்க்கப்பெற்றுதான் தம் பொதுவாழ்வைத் தொடங்கினார். நீதிக்கட்சி, திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய மூன்று கட்சிகளிலும் இருந்து இவ்வியக்கத்தைப் பெரிதும் வளர்த்துள்ளார். 'தன்மானம்' என்பது அவருடைய மூச்சு.

தமிழின் தொன்மை, உயர்வு, தனித்தன்மை ஆகியன தன்மான இயக்கத்தை அரண்செய்தன. 'எந்தச் செயலானாலும் காரணகாரியம் அறிந்து செய்; சரியா? தவறா? என்பதை அந்தக் காரண காரிய அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் விட்டுவிடு; எந்த ஒரு நெருக்கடியிலும் அவ்வாராய்ச்சிக்கு உட்படு; அதன் முடிவுக்கு மரியாதை கொடு, என்பதுதான் தன்மான இயக்கத்தின் தத்துவம். ஆதலால் இவ்வியக்கம் தமிழுக்கு முரணாக இல்லாததோடு தமிழியக்கத்தோடு பிணைந்ததாக ஆகிவிட்டது.

தன்மான இயக்கம், மனித சமுதாயத்தைப் பகுத்தறிவுப் பாதையில் அழைத்துச் சென்று ஒழுக்க நெறிக்கு இட்டுச் செல்லும் பணியை மேற்கொண்டது. பெண்ணுரிமை, சாதியொழிப்பு, ஆலயங்களில் தாழ்த்தப்பட்டோர் நுழைவு பெறல் முதலான பல முன்னேற்றங்கள் ஏற்படலாயின.

'ஊழ்வினையே பேசி ஆள்வினை யற்றிருக்கும் அளவும் நாம் உய்யுமாறில்லை' என்பதையுணர்ந்த அண்ணா இவ்வியக்கத்தோடு தம்மைப் பிணைத்துக்கொண்டார். சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்துக்குத் தலைவராக விளங்கியதுண்டு. 'ஆரிய மாயை' நூல் எழுதியது இவ்வியக்கத்தை நாடறியச் செய்தது.

பெரியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார், கி.ஆ.பெ. விசுவநாதம் முதலானோர் தொடக்க காலங்களில் இவ்வியக்க வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் ஆவர். திராவிடர் கழகம் இவ்வியக்கத்தைப் பெரிதும் வளர்த்தது. அண்ணா திராவிடர் கழகத் தளபதியாகப் பத்தாண்டுக்காலம் பணியாற்றியவர். ஆதலால் அண்ணாவின் தன்மான இயக்கப்பணி அளவிடற்கரியது.

நாடகங்கள் வாயிலாக அண்ணா பிரச்சாரம் செய்தார். இவ்வியக்கம் விரைவாக வளரத் தொடங்கியது. அண்ணாவின் புகழ் நாடெங்கும் பரவியது; 'சந்திரோதயம்', 'நீதிதேவன் மயக்கம்', 'சந்திரமோகன்' ஆகிய நாடகங்கள் பகுத்தறிவுப் பணியை வளர்க்க உதவின. அவற்றைத் தீட்டியதோடு அமையாமல், தாமே பாத்திரமேற்று நடித்தார். ஆதலால்தான் 'கூத்தாடிகள்' - என மாற்றார் தூற்ற முயன்றார்கள்; வசவுகளை எதிர்கொண்டு, வாழ்க வசவாளர்கள் என்ற புகழ்மிக்க கட்டுரையை வரைந்து அவற்றை எதிர்கொண்டார்.

> கரி தன் குட்டிக்கு வீரமும் தீரமும் வளர்வதற்காக, துதிக்கையால் குட்டியை இழுத்தும் தள்ளியும், தட்டியும் கொட்டியும் பயிற்சி தரும் என்கிறார்கள். தி.மு.கழகத்துக்கு அத்தகைய பயிற்சியைத் தந்திருக்கிறது திராவிடர் கழகம். பயிற்சி போதவில்லையோ என்று ஒருவேளை எண்ணிக்கொண்டு மறுபடியும் பயிற்சி தர முன்வரக்கூடும். அதைத் தவறாகக் கருதவேண்டாம்

(திராவிட நாடு 2.12.51) - என்று அக்கட்டுரையில் உவமை நயத்தோடு எழுதியது அவருடைய பேராற்றலையும் பெருந்தன்மையையும் விளக்க வல்லது.

இந்தி எதிர்ப்பு

தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு என்பது நீறுபூத்த நெருப்பாக இருந்து வருகிறது. தமிழர்களைப் பொருத்தவரையில், இந்தி எந்த உருவத்தில் நுழைக்கப்பெற்றாலும் எதிர்ப்பு இருந்துகொண்டே வருகிறது. காரணம் அவ்வப்போது ஏதாவது ஒரு பெயரில் இந்தி புகுத்தப்படுவதுதான்.

1938இல் ராஜாஜி முதலமைச்சராக இருக்கும்போது பள்ளிகளில் இந்தி கட்டாயபாடமாகியது; எதிர்ப்பு உருவாகியது. மறைமலை அடிகளார் உள்ளிட்ட சான்றோர் பலரும் இந்தியை எதிர்த்தார்கள். தாளமுத்து, நடராசன் - இருவர் உயிர்த்தியாகம் செய்தார்கள். 1940இல் கட்டாய இந்தி கல்லறை சென்றது.

1948இல் மீண்டும் பள்ளிகளில் இந்தி தலைகாட்டியது. விடுதலை இந்தியாவில் இந்தி தேசியமொழி என ஆகியதன் விளைவுதான் இதன் காரணம். முன்பு இருந்ததைவிட எதிர்ப்பு கடுமையாகியது. அரசு பின்வாங்கி, கட்டாய பாடமாக இருந்த இந்தியை விருப்பப் பாடமாக மாற்றியது.

அரசியல் சட்டப்படி 1965 முதல் இந்தி, இந்தியாவில் ஆட்சிமொழி என்னும் நிலை உருவாகியது. தென்னகத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் இந்தி ஆட்சிமொழி நிலைக்குக் கண்டனம் எழுந்தது. ஆதலால், பாராளுமன்றத்தில் பண்டிதநேரு ஓர் உறுதிமொழி அளித்தார். "ஆங்கிலத்தை அகற்றமாட்டேன்; இந்தி பேசாத மக்களுடைய சம்மதம் பெறாமல், இந்தியை ஆட்சிமொழி ஆக்கிடமாட்டேன். இந்தி ஆட்சிமொழி ஆகவேண்டுமா?, வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை இந்தி பேசாத மக்களுக்கே அளிப்பேன்" - இதுதான் நேரு அளித்த வாக்குறுதி.

1963 வரையிலும் இந்த உறுதிமொழிக்குச் சட்ட வடிவம் கோரி வந்த தென்னக மக்களுக்கு, குறிப்பாகத் தமிழக மக்களுக்கு ஏமாற்றம் ஏற்படும் நிலை. இது அண்ணாவுக்கும் அவரைச் சார்ந்த கழகத்தவர்க்கும் என்றில்லாமல் பல தலைவர்களுக்கும் கவலையைத் தந்தது. இந்தச் சூழலில் அண்ணா இந்தி எதிர்ப்பு அறப்போர் அறிவித்தார். அரசியல் சட்டமொழிப் பிரிவைக் கொளுத்துவது - என்பது போராட்டத் திட்டம். வழக்கம்போல் அண்ணா தாமே நேரடியாகப் போராட்டத்தில் இறங்குவதாக அறிவித்தார். போராட்ட

நாள் 17.11.1963 மாலை; இடம் திருவல்லிக்கேணி கடற்கரை. ஆனால் அண்ணாவும் மற்ற தலைவர்களும் அன்று காலையே கைது செய்யப்பெற்றனர். வழக்கு நடந்தது. ஆறுமாதம் தண்டனை பெற்றார். அக்காலத்தில் அவர் மத்திய இராச்சியசபை உறுப்பினர். இருந்தும் எல்லோருக்கும் போன்ற சிறைவாசம், சிறை உடுப்பு, வாரம் ஒருமுறை அவ்வுடுப்புடன் வரிசையில் நிற்றல், நாளும் நூல் நூற்றல், சமையல் செய்தல் முதலான சிறைக்கொடுமைகள், படிப்பதற்குப் புத்தகங்கள் சரியாகத் தருவதில்லை. 'ஆர்த்தரைட்டிஸ்' என்னும் தோள்வலியால் உடல் துன்பம்; ஆயிரக்கணக்கான தம்பியர்க்குச் சிறைவாசம் என்ற மனத்துன்பம் - இவை அவரைச் சோதனைக்கு உள்ளாக்கின. உண்மையில் இம்முறை அவருடைய சிறைவாழ்வு அவருக்கு மிகப்பெரும் செல்வாக்கை ஏற்படுத்தித்தந்தது என்றே கூற வேண்டும்.

திராவிட நாடு

திராவிட நாடு வெறும் இதழ்ப்பெயரா? இல்லை. திராவிட உணர்வுகளில் வெளிப்பாட்டையும் அவற்றால் உண்டான சுயமரியாதை, இந்தி எதிர்ப்பு ஆகியவற்றோடு திராவிட நாடு பிரிவினைக் கொள்கையையும் கொண்ட இயக்கப் பெயராகவும் திகழ்ந்தது.

திராவிட நாடு திராவிடர்க்கே

இந்தியா ஒரு துணைக்கண்டம். பல இனத்தவர், மொழியினர், பண்பாட்டினர், வாழ்கின்ற பெரும்பரப்புடையது. தென்னிந்தியாவில் நிலைத்து வாழ்ந்து வருபவர்கள் திராவிட இனத்தவர்கள்; தனியான பண்பாடு, கலை, இலக்கியம், உணவுமுறை, பழக்க வழக்கங்கள் கொண்டவர்கள்.

தனித்தனி நாடுகளாக இருந்து வந்த இந்தியத் துணைக் கண்டத்தை ஆங்கிலேயர்கள் ஒரு நாடாக்கி வைத்தனர். எனினும் தனித்தனி முடியரசு சமஸ்தானங்களும் பிரெஞ்சு முதலிய காலனி அரசுகளும் இருந்துவந்தன. அந்த வகையில் திராவிட நாடு தனியரசாக விளங்கவேண்டும் என்ற கோரிக்கை 1940இல் எழுந்தது.

1947இல் விடுதலை வழங்கிய வெள்ளையர்கள், ஜின்னா கேட்ட பாகிஸ்தானைப் பிரித்துக்கொடுத்தார்கள். ஆனால் பெரியாரும் அண்ணாவும் கேட்ட திராவிட நாடு தரவில்லை. அந்நாள்களில் திராவிட இனத்தவர் மத்திய சட்டசபையில்

இரண்டொருவரே உறுப்பினர்களாக இருந்தனர். பெரும்பாலான தென்னக உறுப்பினர்கள் பார்ப்பன இனத்தவரேயாவர்.

1949இல் திராவிடர் கழகத்திலிருந்து வெளியேறி அண்ணா தம் ஆதரவாளர்களுடன் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனி அமைப்பு கண்டார். ஆனால், நோக்கம் வேறாக இல்லை. அதாவது அதே திராவிட நாடு பிரிவினைக் கோரிக்கைதான் தி.மு.க.வின் நோக்கமாக இருந்துவந்தது.

1953இல் மொழிவழி மாநிலங்கள் ஏற்பட்டுவிட்ட பிறகு, திராவிடப் பிரிவினை பேசிப் பயனில்லை எனப் பெரியார் எண்ணினார். ஆதனால் தமிழ்நாடு தமிழருக்கே எனும் உரிமை வேட்கையைத் தூண்டும் முயற்சியில் இறங்கினார். ஆனால், அண்ணா திராவிட நாடு திராவிடர்க்கே என்ற நிலையிலிருந்து மாறவில்லை.

1963இல் இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்திப் பிரிவினை கேட்பதைத் தடை செய்தார்கள்.

> தேர்தலில் நாம் ஈடுபடுவதை எப்படியாவது தடுத்திட வேண்டும் என்பதே இவர்களின் நோக்கம் என்பது புரிந்தது. புரிந்திடவே நாம் நமது சட்டத்திட்டத்தை மாற்றிக் கொண்டு நாட்டுப்பிரிவினை மூலம் எதனைப் பெற முடியுமோ அதனைப் பெறத்தக்க விதமாக இந்திய அமைப்பிலே இருந்து கொண்டே பெறத்தக்க வழி காண்போம்

என்று அண்ணா அறிவித்தார்.

சமூகப் பொருளாதார சமத்துவம்

அண்ணா சமூக அமைப்பின் அடித்தளத்தைக் கண்டு ஆய்ந்து கருத்துக்களைத் தெளிவாகத் திராவிட நாடு இதழ்களில் வழங்கியுள்ளார். ஒரு சிறந்த சமூகம் என்பது, மிகச் சிறந்த இன்பத்தை மிக அதிகமான மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுதான். அவ்வாறு கிடைக்கவில்லை. கிடைக்கச்செய்ய முடியவில்லை என்றால் காரணம் என்ன? என மிக ஆழ்ந்து சிந்தித்து, அறியாமை மற்றும் ஏழ்மை எனும் இரண்டின் கூட்டாலும் சமூகம் பின்தங்கிக் கிடக்கிறது என்பதை உணர்ந்தார்.

இந்நாட்டில் என்ன இல்லை? இயற்கை வளம் இன்னும் பல தலைமுறைகளுக்கும் பயன்படுகிற அளவுக்கு உள்ளது. இயற்கைச் சூழல் நமக்குப் பெரிய பாதுகாப்பு. அப்படி இருக்கும்போது நாட்டில் ஏன் முன்னேற்றம் இல்லை? சமூக அமைப்பே முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றது. மனுதர்மம் என்ன செய்திருக்கிறதென்றால், ஒரு குறிப்பிட்ட கூட்டத்துக்கு மிகப்பெரிய ஆயுதமாக - மிகப்பெரிய அரணாக - மிகப்பெரிய பாதுகாப்புக் கோட்டையாக வருணாசிரமத் தர்மக் கோட்பாட்டை உருவாக்கிக் கட்டிக்காத்து வருகிறது. அந்தக் கோட்டையைத் தகர்க்காமல், வேறு எந்தக் கோட்டையைத் தகர்த்தும் பயனில்லை என்பார் டாக்டர் பொற்கோ. எந்த ஓர் இனமும் அதன் பிரதிநிதிகளின் பரிணாம வளர்ச்சியில் மற்ற இனங்களைவிட உயர்ந்ததோ தாழ்ந்ததோ அன்று என்பது மனித இன ஆராய்ச்சியின் முடிவு ஆகும்.

மனித வாழ்வையும் வாழ்வின் அமைப்பையும் உண்டு பண்ணுபவன் மனிதன்; மனிதனை அவை உண்டு பண்ணுபவை அல்ல.

இவ்வுலகத்தில் தெய்வச் செயல், அதிர்ஷ்டம், மந்திரம், அற்புதம் என்பன இல்லவே இல்லை. ஒவ்வொரு சம்பவத்துக்கும் சிந்தனைக்கும் இயல்பான காரணம் ஒன்று உண்டு. ஒழுக்கத்துக்குக் கடவுள் சித்தமே காரணமென்ற நம்பிக்கையினாலேயே உலகத்தில் கொடுமைகளும் துன்பங்களும் நிறைந்திருக்கின்றன. அந்த நம்பிக்கையினால் பகுத்தறிவு ஒளி மழுங்கி உலக முன்னேற்றத்திற்கும் தடை ஏற்பட்டுவிட்டது - என்பது இங்கர்சால் கருத்தாகும்.

ஆதலால், மூட நம்பிக்கைகள், தேவை இல்லை. அவை ஒழிந்தாலன்றிச் சமூக மேம்பாடு காண்பது இயலாது என்பதை ஓர்ந்தார் அண்ணா. வாழ்க்கை அரசியலோடு இரண்டறக் கலந்துவிட்டது. ஆகவே, சமநெறிச் சமுதாயம் காணவேண்டுமானால், சமநெறி அரசியல் வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசியல் உரிமை வேண்டும் என்பதை வி[illegible]க்கும் வகையில் அமைந்துள்ள குறிப்பு ஒன்று வருமாறு;

சமதர்மத் திட்டம், கிராமபோன் பிளேட்போல. கிராமபோன் தயாராகாமல், பிளேட் எப்படிப் பாடும்? நாம்தான் (தி.மு.க.தான்) சமுதாயக் கிராமபோனைத் தயாராக்கி வருகிறோம். நம்மிடம் சமதர்ம பிளேட்டும் சமுதாயக் கிராமபோனும் அரசியல் ஊசியும் இருக்கிறது

(திராவிட நாடு 23.12.51). இக்குறிப்பு அரசியல் ஊசி என்னும் திராவிட நாடு தனிநாடு என்ற பிரிவினைக் கொள்கையை வலியுறுத்துகின்றது.

ஆக, அண்ணா, அரசியல் விடுதலை வாங்கினாலன்றிச் சமநெறிப் பொருளாதார சமத்துவம் காண முடியாது என்ற அடிப்படையான குறிக்கோளை நிலைநிறுத்தித் தம்முடைய திராவிட நாடு இதழில் இருபத்தோராண்டுகள் எழுதி வந்துள்ளார்.

பண்பாட்டு இயக்கம்

சமுதாயச் சீர்திருத்த நோக்கில் உருவாகிய திராவிட இயக்கம் ஒரு பண்பாட்டு இயக்கம் போலவே வளர்ச்சியடைந்தது. காரணம், திராவிடப் பண்பாட்டு அடிப்படையில் அமைத்துக்கொண்ட 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்ற மூலாதாரக் கொள்கையேயாகும். மேலும் பேரறிஞர் அண்ணா திராவிட இயக்கத்திற்குத் தலைவர் என்று பதவிப்பெயர் வைத்துக்கொள்ளாமல் வழங்கிய தலைமையும் தம் தம்பியரை அரவணைத்துச் சென்ற பாங்கும் மக்களிடையே ஏற்படுத்திக்கொண்ட ஓர் அன்புப் பிணைப்பும் திராவிட இயக்கத்தை ஒரு பண்பாட்டு இயக்கமாக வளர்த்துவிட்டன என்றால் அது மிகையாகாது.

தமிழில் திராவிடநாடு இதழ் நடத்திக் கொண்டிருக்கும்போது ஆங்கிலத்தில் ஓர் இதழ் (ஹோம் லாண்டு) தொடங்கத் திட்டமிட்டார் அண்ணா. அந்தத் திட்டத்தை அறிவித்துத் திராவிட நாடு இதழில் (21.7.57) எழுதிய ஒரு குறிப்பு வருமாறு:

> ஆங்கில இதழின் உணர்ச்சியிலேயே என்னை நான் பின்னிக்கொண்டு உன்னுடன் உரையாடும் மகிழ்ச்சியை (திராவிட நாடு இதழில் வாரந்தோறும் தம்பிக்கு மடல் எழுதுவதில் உண்டாகும் மகிழ்ச்சி) இழந்துவிடுவேனோ என்று ஐயப்படாதே! தம்பி, அது (ஆங்கில இதழ்) முந்திரிப் பருப்பானால், இது (தமிழ் இதழ்) வெண்பொங்கல்! அது கருவி, இது என் உள்ளம்! அது பிறர் நெஞ்சைத் தொட, இது உன்னுடன் உறவாட! அது நம்மைப் பிறருக்கு விளக்க இது நம்மை உருவாக்க, எனவே இதனை இழந்துவிட ஒரு போதும் சம்மதியேன்.

இக்குறிப்பு உணர்த்துவது யாது? திராவிட நாடு இதழில் தம்பிக்குக் கடிதப் பகுதி வாயிலாகப் பேரறிஞர் அண்ணா தம் கழகத் தம்பியரிடையே ஓர் அன்புப் பிணைப்பை உருவாக்கினார். அந்த ஈர்ப்புச் சக்தி பெருகியது. அச்சக்தி தம்பியரல்லாத நடு நிலையாளரையும் சான்றோரையும் ஏனைய பல திறத்தாரையும் அவர்பால் ஈர்த்தது. அச்சக்தியை ஆங்கிலத்தில் 'சரிஸ்மா' எனக் குறிப்பிடுவர்.

திராவிட இயக்க வரலாற்றில் இதழ்களின் பணி மிகவும் இன்றியமையாத பணியாகும். இயக்கக் கருத்துகள் சமுதாயத்தின் மூலைமுடுக்குகளில் எல்லாம் ஒலிக்கத் தொடங்கின. உணர்ச்சி பெற்று விழிப்படைந்த இலட்சக்கணக்கானோர் அணி அணியாகத் திரண்டனர்.

"ஒருவரை நம்பி ஒருவர் வாழக் கற்றுக்கொண்டோம்; தனி மனிதர்களைவிட ஓர் அமைப்பே முக்கியம் என்ற தத்துவம் நடைமுறைக்கு வந்துவிட்டது. வளர்ச்சி சாதாரணமானதன்று" (திராவிட நாடு 8.5.55) என்று பேரறிஞர் அண்ணா எழுதிய ஒரு கடிதப் பகுதியே சரியான சான்றாகும்.

ஏனைய திராவிட இதழ்களின் பணியை விடப் பேரறிஞர் அண்ணாவின் திராவிட நாடு இதழ்ப்பணி தன்னிகரற்று விளங்குகிறது. அவர் தம் இதழின் வாயிலாக உண்டாக்கிய தமிழார்வம், தமிழுக்கு வழங்கிய மறுமலர்ச்சிப் படைப்புகள், உருவாக்கிய பண்பாடு அடிப்படையிலான அரசியல் முறை, எல்லாவற்றுக்கும் மேலாக பல இலட்சக்கணக்கான மக்களிடையே ஏற்படுத்திய இன எழுச்சி ஆகியவை ஒப்பற்றவை.

பயன்பட்ட நூல்கள்

அண்ணாதுரை, சி.என்., திராவிட நாடு வார இதழ், காஞ்சிபுரம், 8.3.1942 முதல் 03.02.1963 முடிய

துணை நூல்கள்

ஆறுமுகம், ப. டாக்டர் அறிஞர் அண்ணாவின் தமிழ்க்கொடை மலர் விழிப் பதிப்பகம் சென்னை, 1988

இங்கர்சால், ஜி. ராபர்ட். இரண்டு வழிகள், பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, திருச்சி, 1977

சாமி, அ.மா. 'தமிழ் இதழ்கள் தோற்றமும் வளர்ச்சியும்', நவமணி பதிப்பகம், சென்னை, 1987

புகழேந்தி, ப. அண்ணாவின் வழிச் சிறுகதைகள், பாரி நிலையம், சென்னை, 1987

பொற்கோ, டாக்டர்., தமிழ் வரலாற்றில் தந்தை பெரியார், பூம்பொழில் வெளியீடு, சென்னை-20, 1995

வல்லிக்கண்ணன், சிறு பத்திரிகைகள்

சந்திரசேகரன், ச., (ப.ஆ.) பண்பாட்டு உருவாக்கத்தில் பத்திரிகைகளின் பங்கு (கருத்தரங்கக் கட்டுரைகள்), சரவணபாலு பதிப்பகம், விழுப்புரம், 1989

முரசொலி

பி.எல். இராசேந்திரன்

1942இல் தமிழர் திருநாளான பொங்கல் நாளன்றுதான் 'முரசொலி' ஏடு முதன்முதலாகத் திருவாரூரில் இருந்து 'சிங்கிள் டெம்மி' அளவினதாக வெளியிடப்பட்டது.

உள்ளது உள்ளபடி எந்த ஒரு செய்தியையும் வெளியிட முடியாதிருந்த அந்தக் கெடுபிடியின் போதும் - பத்திரிகையை நிறுத்திவிட நினையாமல் . . .

'வெண்டைக்காய் உடலுக்கு நல்லது'!

'ரஷ்யாவிலிருந்து திரும்பிய ஆதிலட்சுமி ஆராய்ச்சி'!

'விளக்கெண்ணெய் சூட்டைத் தணிக்கும்! வைத்தியர் வேதாந்தையா அறிவிப்பு'!

என்றெல்லாம், 3.3.76இல், ஏறுக்குமாறாகச் செய்திகள் வெளியிட நேர்ந்த அந்த நாட்களை மறக்கமுடியாது.

முரசொலி என்ற பெயரோடு இன்று வெளியே தெரிகின்ற மாபெரும் ஆல விருட்சத்திற்கு எப்படி விதை ஊன்றப்பட்டது? எப்படியெல்லாம் அதன் வேர் படர்ந்தது? என்று மட்டும் அந்தத் தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதையான முரசொலி - வார ஏடு பற்றி மட்டுமே - இங்கே விளக்கப்படுகிறது.

தமிழ்நாடு மாணவர் மன்றம்

தந்தை பெரியார் அவர்களின் சுயமரியாதை இயக்கத்தில் புதிய தமிழகம் காணவந்தார் இளைஞர் கலைஞர்.

'சங்கங்களால் - நல்ல
சங்கங்களால் - நாம்
சாதித்தல் கூடும்
பெரும் பெரும் காரியம்'

என்று புரட்சிக்கவிஞர் பாடினாரே! அதை உணர்ந்து, உருவாக்கப் பட்ட சிறுவர் சீர்திருத்தச் சங்கத்தின் தலைவரானார் கலைஞர்.

அவரால் 'தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்' உருவாக்கப் பட்டது. இளமையிலேயே வாக்குச் சாதுர்யமும் மேடைகளில் சரளமாகப் பேசிடும் ஆற்றலும் பெற்றிருந்த கலைஞர், அந்தச் சின்னஞ்சிறு வயதிலேயே சக மாணவர்களிடமும் தணியாத தமிழ்ப் பற்றை உண்டாக்கினார்.

இந்த அமைப்புகளுக்குப் புலி, வில், கயல் சின்னங்களோடு - அக்கால மூவேந்தர் இலச்சினைகளோடு கொடிகளும் தயாரிக்கப்பட்டன. நேரம் கிடைக்கின்ற போதெல்லாம், கலைஞர் தலைமையில், திருவாரூர் வீதிகளிலெல்லாம் மாணவர் மன்றத் தலைவர் மு. கருணாநிதி தலைமையில், தமிழ் வாழ்த்து முழக்கங்களோடு - இந்தி எதிர்ப்பு எழுச்சி முழக்கங்களோடு ஓர் ஊர்வலம் நடத்தப் படலாயிற்று.

இவற்றோடு முதன் முதலில் 1941இல் 'மாணவர் நேசன்' என்றோர் கையெழுத்து ஏடு தொடங்கினார். இன்னும் அது பற்றித் தெளிவாகச் சொல்லவேண்டுமே யானால், 15ஆம் வயதிலேயே 'சிறுவர் சீர்திருத்தச் சங்கத்'தின் தலைவராக விளங்கிய கலைஞர் அவர்கள் - தாமே தொடங்கி, நடத்திவந்த அந்த மாணவர் நேசன் பற்றி இவ்வாறு எழுதியிருக்கிறார்.

> 'மாணவ நேசன்' என்பது நான் நடத்திய கையெழுத்து ஏடு; நான் பள்ளியில் நடத்திய கையெழுத்து ஏடுகளை... ஒரு சமயம் ஒருவர்தான் படிக்கமுடியும்.
>
> 'நான் நடத்திய ஏடு, மாதத்திற்கு இரண்டு வெளியீடு; ஒவ்வொரு வெளியீட்டிலும் - எட்டுப் பக்கங்கள்; பிரதிகளோ, ஐம்பதுக்குக் குறையாது; ஐம்பது பிரதிகளையும். . . நானும் சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து காப்பி எடுப்போம்; 'டெம்மி பேப்பர்' செலவை மட்டும் வசூல் செய்துகொள்வோம், உழைப்பும் கட்டுரையும் இனாம்!'

பாவேந்தர் கேலியும் பாராட்டும்

இந்த மாணவர் நேசன் ஏட்டினுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரிடம் வாழ்த்துரை வழங்கிடுமாறு கேட்கப்பட்டது. அதற்குப் பாவேந்தர் அப்போது 'கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக் காரத்தனம் இந்தக் கையெழுத்துப் பத்திரிகையும்' என்று எழுதினார்.

ஆனால், கலைஞர் அவர்கள் அதைக் கண்டு மனம் சோர்ந்து விடவில்லை. அந்தப் பதிலையும், பத்திரிகையில் வெளியிட்டு - 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பதை மாணவர்களாகிய நாங்கள் நிருபித்துக்காட்டுவோம் என்று அவருக்குப் பதில் எழுதினார்.

ஆனால், அதே ஏட்டினுக்கு, ஆறாம் உயர்வகுப்பிலிருந்த கலைஞர் எழுதிக் கேட்டுக் கொண்டதன்பேரில், 21.11.1942இல் அதே புரட்சிக் கவிஞர் அவர்கள் ஒரு வாழ்த்துப் பாவே அற்புதமாக எழுதியனுப்பியிருந்தார்:

தண்பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ்மாண வர்மன் றம்காண்;
வன்மையோடும் உண்மையொடும் வாழ்ந் திடும்காண்;
மக்களிடை எழுச்சிக்கு மருந்தா கும்காண்;
கண்மூடிக் குறிமறந்து தமிழர் தங்கள்
கலைமறைந்த நெஞ்சத்தில் ஒளிஎய் தும்காண்;
புண்வாய்ந்தோர் அல்லர்காண்; திருவாரூரின்
புலிஇளைஞர்காண்; தோள்கள் பூரித் தார்காண்!

எழில்மன்றச் சட்டத்தை உயிரைப் போலே
எண்ணிஅந்த வண்ணமே நடப்பார் கள்காண்,
ஒழித்தார்காண் அயர்வுதனை; அவர்கள் நாளும்
உயர்கவிதைச் சுவைதன்னில் தோய்ந்திட் டார்காண்
மொழியினிலே தமிழ்மொழியே உயர்ந்த தென்றும்
மூச்செல்லாம் தமிழுக்கே என்றும், நல்ல
வழியறிந்து விட்டார் காண்!முத் தமிழ்க்கு
மடைகோலி விட்டார்காண் உலகில் பாய்ச்ச!

கிளம்பிற்றுக் காண்தமிழ்ச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை!
வளம்பெரிய தமிழ்நாட்டில் தமிழ ரல்லார்
வால்நீட்டி னால்உதைதான் கிடைத்திடும் காண்!
தளும்புதுபார் பத்தியென்றும் யோக மென்றும்
சாமி என்றும் மூழமிஎன்றும் எழுதிப் பேசி,
புளுகிடுதல் இனிப்பலிக்க வழியில்லை காண்;
புதுவாழ்வு மலர்ந்ததுகாண் தமிழ்நாட்டின் கண்!

1943இல், முரசொலியின் முதலாம் ஆண்டு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றது; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அப்போது படித்துக்கொண்டிருந்தார்கள் பேராசிரியர் க. அன்பழகன், நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர்; அரும்பாடுபட்டு அவர்களை வரவழைத்தே அந்த இனிய விழாவை நடத்திப் பெருமை கொண்டார் கலைஞர்.

கதையும் கருவும்

விழாவுக்கு வந்திருந்த முக்கிய விருந்தினர்களைத் திரும்ப அனுப்பிவைக்க வழிச்செலவுக்குப் பணம் கொடுத்தனுப்ப வீட்டிலிருந்த வெள்ளிச் சந்தனக் கிண்ணமொன்றை எடுத்துப்போய் அடகு வைத்துப்பணம் வாங்கியே அவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறார் கலைஞர்.

பிற்காலத்தில் அந்த 'வெள்ளிச் சந்தனக் கிண்ணமே' அவரெழுதிய கதையொன்றின் கருப்பொருளாயிற்று.

நிதி நெருக்கடி முதலான பல காரணங்களாலே, பிறகு ஏழெட்டு மாதங்களிலேயே மாணவர் நேசனை நிறுத்தும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அறிஞர் அண்ணா அறிமுகம்

காஞ்சிபுரத்திலிருந்து அறிஞர் அண்ணா அவர்கள், 'திராவிட நாடு' ஏட்டைத் தொடங்கி நான்கைந்து வாரமே ஆகியிருக்கும். அந்த ஏட்டினுக்கு 'இளமைப் பலி' என்றோர் கட்டுரையை - பதினேழு வயது மாணவராக இருந்த கலைஞர் எழுதியனுப்பியிருந்தார். திராவிட நாடு ஏட்டிலும் அது அச்சாகிவிட்டது.

தம் எழுத்தை அச்சில் - அதுவும் அண்ணா நடத்தி வந்த ஏட்டில் பார்த்ததும் இளம் கலைஞரின் நெஞ்சில் ஆனந்த அலைகள் ஆர்ப்பரித்தெழுந்தன; தனது கட்டுரை வெளியாகியிருந்த திராவிட நாடு ஏடு யார் கையிலெல்லாம் இருக்கிறது? யாரெல்லாம் அதைப் படித்து இன்புறுகின்றனர்? என்று வீதிவீதியாகப் போய்ப் படித்தவர்கள் அளித்த பாராட்டால் அவரடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இதுபற்றிக் கலைஞரே, 3.8.69 'மறவன் மடலில்' கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்:

நானே எழுதி - நானே படித்து மகிழும் நிலை மாறி, பத்து - நூறுபேர் படித்துப் பாராட்டும் நிலைக்கு வளர்ந்தேன்; நாடெங்கும் நம் கட்டுரையைப் படித்து மகிழ்வார்கள் என்று எனக்கு நானே புகழ்ந்துகொண்டேன்.

எனக்கு உறுதுணையாக இருந்தவரும் - இயக்கத்தில் நீங்காப் பற்றுக் கொண்டவருமான இராஜகோபால் என்பவர், என் கட்டுரையைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தார்!. . .

இப்படி என் வாழ்வில் பெருமகிழ்ச்சி அளித்த அந்த நாளை நினைத்தால் இப்போதும் இன்பம் அலை மோதுகிறது!

'முரசொலி' துண்டுப் பிரசுரம் நான்கே பக்கங்கள் கொண்டதாகத் திருவாரூரில் இருந்து 1942இல் வெளிவரலாயிற்று. 'முரசொலி துண்டறிக்கை வெளியீட்டுக் கழகம்' என்கிற அமைப்பு அதை வெளியிடுவதாக வெளி உலகுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு மூல வித்து கலைஞரே எனினும், அவர் அப்போது மாணவர்.

முரசொலி என்கிற தலைப்பையொட்டி, அதில் தந்தை பெரியார் அவர்களின் மார்பளவுப் படம் வெளியிடப்பட்டிருக்கும்; அதன் கீழே, செயலாளர் - தென்னன், பொருளாளர் - டி.எஸ். இராசகோபால், எழுத்தாளர் சேரன் என்று போடப்பட்டிருந்தது. அது, உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலமாதலால், எல்லா வற்றுக்கும் மேலே மையத்தில் 'V' என்ற வெற்றியைக் குறிக்கும் ஆங்கில எழுத்து காணப்படும்.

அண்ணா போற்றிய சேரன்

ஆசிரியர் மு.க. என்றோ, மு. கருணாநிதி என்றோ கூட, அவர் அந்த முதல் பக்கத்தில் போட்டுக் கொள்ளவில்லை; 'சேரன்' என்கிற புனைபெயரிலேயே அதில் தன் புரட்சிக் கருத்துக்களைப் புதுமைத் தமிழ் நடை எழுத்தோவியங்களாக வெளியிட்டு, படிப்போர் மனதைப் பண்படுத்தி வந்தார்.

பள்ளி இறுதித் தேர்வை எதிர்நோக்கியிருந்த மாணவப் பருவத்தினர் என்பதால், சொந்தப் பெயரை வெளியிட்டுக் கொள்ள

இயலாத நிலை; அதனால்தான் 'சேரன்'. இத்தனை பத்திரிகைப் பிரதிகள் என்றில்லை; நிதி நிலைக்கேற்ற எண்ணிக்கையில் முரசொலி வார ஏடு அச்சிடப்பட்டது. பக்கங்களும் அவ்வாறுதான்; சில சமயம் 8 பக்கம்; ஓரணா. சில சமயம் 12 பக்கம்; விலை ஒன்றரையணா.

5.10.1942 இரண்டாம் ஆண்டாகும்; அப்போது அச்சடித்து வெளியிடப்பட்ட முரசொலி 7ஆவது துண்டறிக்கையின் முதல் பக்கத்தில், கலைஞர் அவர்கள் சேரன் என்ற பெயரிலே - சிதம்பரத்தில் நடைபெறவிருந்த வருணாச்சிரம மாநாட்டைக் கண்டித்து - 'வருணமா? மரணமா?' என்ற தலைப்பிலே எழுதியிருந்த கடுமையான புயல்வேகப் புரட்சிக் கட்டுரையானது பெரும்பான்மை மக்களால் பெரிதும் பாராட்டிப் பேசப்பட்டது; இன்றைய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி உட்பட, இளைஞர் பலரால் அப்போதே மனப்பாடம் செய்து பலர் நடுவே பேசிக்காட்டி எழுச்சி பெறச்செய்தது.

அப்போது - இருபது வயது இளைஞராக இருந்த கலைஞர் எழுதிய அந்த 'வருணமா? மரணமா?' ஒருபக்கக் கட்டுரை இதுதான்:

> தில்லையிலே! ஆம்! திக்ஷிதர் கோட்டையிலே, தீனதயாபரன் கான முழக்கத்துடன் காலைத் தூக்கிக் காளியிடம் காலித்தனம் செய்த கைலைப் பதியிலே பூசுரக் கூட்டம் பூணூல் ஆட்சி நடத்தும் பூலோக கைலாசத்திலே புனிதர் மாநாடாம்! பூரி தட்சணையாம்! புண்ணியர் கூட்டமாம்! புல்லர்கள் உள்ளவரை நல்லது எது? 'தீண்டாமை ஒழிக' என வேண்டா வெறுப்பாகக் காங்கிரஸ் கூறிடும் வேளையிலே சமதர்ம சங்கநாதம் சனாதனிகளின் காதைத் துளைக்குமளவு சுயமரியாதைக் காரர்களால் ஒலிக்கப்படும் நேரத்திலே 'உயர்வென்று கூறினால் அது உண்மைத் தமிழர்கள் வாழ்வு' எனப் பண்பாடி அகம் பிடித்த அக்ரகார வாழ்வை அழிக்க அரிமாக்கள் புறப்பட்ட காலையிலே வருணாசிரம மாநாடு கூட்டுகிற வக்கிரகங்கள் பல உள்ளன நாட்டிலே! வரப் போகும் கேட்டிலே கவனம் செலுத்த வேண்டும்; வீட்டிலே உண்டு உருண்டு கிடக்கும் இந்த உயரிய கருத்தினால், பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர் எனப் பிரித்து பிராணனைக் காப்பாற்ற பிழைக்கும் வழி வகுத்தனர் பின்வந்த ஆரியர்; நான்

கூறுவதல்ல! நாடறிந்த உண்மை! சரித்திரம் சாற்றும் சான்றுகளுடன்! ஆரியக் கோத்திரம் மதப் பாத்திரத்திலே ஊற்றிக் கொடுத்த சூத்திர சுரா பானம் மறத் தமிழர் வாழ்விலே மயக்கந்தரும் பொருளாயிற்று. போதை தலைக்கேறிய திராவிடத் தோழன் ஆரியக் கோதைகளின் அணைப்பிலே சிக்கி, அயர்ந்தான். விழித்தானின்று! வீரத்தை விற்ற படலத்தைக் கண்டு வெட்கினான். அதன் எதிரொலி சுய மரியாதை இயக்கம்! புது சகாப்தம் கண்ட தமிழன், பெரியாரின் சகாப்தம் கண்ட தமிழன்! இத்தகைய தமிழன் வாழ்வில் மறுபடியும் வலைவீச்சா?

இத்தகைய தமிழன் வாழ்வில் மீண்டும் கலைப்பேச்சா? என்று கேட்கத் துவங்கிவிட்டான். பிள்ளை, முதலியார், செட்டியார், தேசிகர் போன்ற வால்களை ஒட்ட வைத்துக் கொள்வதே ஒய்யார வாழ்வின் உச்சஸ்தானம் எனக் கருதிடும் ஒருசில திராவிட கழகத்தினர் உள்ள வரையில் நால்வகை வருணத்தைக் கண்டிக்க நமக்கும் சிறிது நாக்கூசுகிறது. முட்டாள் என்று சொல்வது எனக்குப் பொருந்தும். அதுவே எனக்கு 'சர்' பட்டம் எனக் கூறிடும் காட்டாளிடம் நமக்கு வேலையில்லைதான்! ஆனாலும் இரங்கும் தன்மை இயற்கையாகவே ஏற்பட்டு விடுகிறதல்லவா? இளித்தவாயர்களை உண்டு பண்ணினால்தான் களித்திருக்க வழியேற்படும் எனக் கண்ட தோழர்கள் மடிந்து போன வருணாசிரமப் பிணத்தை மயக்கமென்று கூறித் தண்ணீர் தெளித்துக் கண்ணீர் பெருக்குகிறார்கள். அந்தக் காட்சிதான் அக்டோபர் 8/9/10 தேதிகளிலே சிதம்பரத்தில் காட்டப்படப் போகிறது. பிணத்திற்கு மணக் கோலமிட்டு மக்களிடம் காசு பறிக்கும் இந்த முயற்சிக்குத் தில்லையிலே குழி வெட்டப்படும். அழுக்கைப் போக்கிக்கொள்ள அனைவரும் திரண்டு செல்வீர்! பகைவரைக் குறை கூறிப் பல்லவி பாடிட மட்டும் நேரமில்லை, இப்பொழுது! விடுதலை விருத்தமுடன் விரைந்து செல்வீர் தில்லைக்கு!

பரணி பல பாடிப் பாங்குடன் வாழ்ந்த பைந்தமிழ் நாட்டில், சொரணை சிறிதுமில்லாச் சுயநலத்துச் சோதாக்கள் சில கூடி, வருணத்தை நிலைநாட்ட வகையின்றிக் கரணங்கள் போட்டாலும், மரணத்தின் உச்சியிலே மானங்காக்க மறத்தமிழா! போராடு!

(வருணாசிரமம் வீழ்க)

இந்தக் கட்டுரை எழுதியதனாலேயே கலைஞரைச் சிதம்பரத்திற்கே வரக்கூடாதெனத் தடைவிதித்தது அந்நாள் அரசு; இதைவிட முக்கியம் - அப்போதிருந்த ஆங்கிலேயக் கலெக்டரும், அந்த வருணாசிரம மாநாடே நடத்தக் கூடாதெனத் தடைபோட்டு விட்டார்!

நன்கொடை கோரிக்கை

இவ்வளவுக்கும் காரணமான அந்த ஏட்டின் கடைசியில். . . .

'விரைவில் நன்கொடை அனுப்பி
வைத்தால், முரசொலி உங்களை
நாடி வரும்' - அடுத்த ஒலி அக்டோபர் 25இல்

என்றோர் அறிவிப்பு.

'திராவிடர் தலைவர் பெரியார்
அவர்களைத் தலைவராகக் கொண்ட
திராவிடர் கழகத்தில் நீங்கள்
உறுப்பினராகச் சேர்ந்து விட்டீர்களா?'

என்ற ஒரு விளம்பரம்.

அதற்கும் கீழே நாகையில் நமது 'பழனியப்பன்' நாடகம் இம்மாதம் நடைபெறும் - என்கிற வரி விளம்பரம்.

இவ்வளவுக்கும், கீழே, அது கடைசிப்பக்கம் என்பதால், 'இம்பிரிண்ட்', கிருஷ்ணா பிரஸ், திருவாரூர். இந்த கிருஷ்ணா பிரஸ் அச்சகத்தின் உரிமையாளரான திரு. டி.ஜி. நாராயணசாமிப் பிள்ளை கலைஞர்பால் மிகுந்த அன்பு கொண்டவர்; இன்னொரு விஷயம் - அவர் ஒரு பழுத்த காங்கிரஸ்காரர்.

அடுத்தடுத்து வந்த ஏடுகளில் 'முரசொலி இலவச வெளியீடு - நன்கொடை ரசீது' விளம்பரமும் இடம் பெற்றிருந்தது. இந்த

விண்ணப்பத்தை ஏற்று - ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் நன்கொடை அனுப்பிவைத்தோரின் பெயர்களெல்லாம் முரசொலியில் அப்போது முகவரியோடு வெளியிடப்பட்டது.

முரசொலி நின்றது

1942 முதல் 1944 வரைதான் அரசியல் புயலாக, இலக்கியத் தென்றலாக, கதைக் களஞ்சியமாக இந்த இதழ் வெளிவந்தது.

உலகப்போர்க் காலத்தில் சரியான தாள் கூட அச்சிடக் கிடைக்காது; அந்த நெருக்கடியிலும் வெளியான முரசொலி பற்றி அறிஞர் அண்ணா அவர்களே எழுதியது இது :

> முரசொலி வண்ணம் கொண்டு, உங்கள் இல்லம் வருகிறது. இதன் முன்னாள் வடிவம் அறிவீரா? படித்து மடித்தால் பொடியாகும். பிரித்துப் பார்த்தால் எழுத்து கலையும் என்றெண்ணத்தக்க விதத்தில், துண்டு வெளியீடாகத் திருவாரூர் மாணவரிடையே உலவிற்று அன்று!
>
> ஒவ்வொரு நாளும் முரசொலி பரணி பாடுகிறது. அதிலே காணப்படும் திருப்பள்ளி எழுச்சி, தமிழக மாந்தர்களைத் தட்டி எழுப்புகிறது. அது கேட்டிடும் வினாக்களுக்கு விடை கூற இயலாது ஆதிக்கக்காரர்கள் திணறுகிறார்கள்.
>
> அந்த முரசொலி சேரன் செங்குட்டுவன் தீட்டும் சிலப்பதிகாரம்.
>
> முரசு ஒலிக்கிறது! படை நடக்கிறது! பகைவர் பதைக்கின்றனர்! - அறிஞர் அண்ணா

கலைஞரின் நாடகத்துறை - திரைப்படத்துறை ஈடுபாட்டு ஆர்வம் காரணமாக, இடையிலேயே நிறுத்தப்பட்டது முரசொலி துண்டறிக்கை. பிறகு 14.1.1948 முதல்தான் அது மறு ஜென்மம் எடுத்தது.

> 'வாளை எடு! வாழ்வா? சாவா? என்பதைப் போரில் புரிந்து கொள்வோம்' என்பதற்கு மட்டுமல்ல. 'வாழ்விலோர் திருநாள்' பாடி, வளமார் நாட்டை வாழ்த்திடவும் முரசு முழங்குவதுண்டு.

அந்நாள் ஆண்ட மறத்தமிழன் கனகனையும் விசயனையும் களத்தினில் சந்திப்பான். போர் முரசு கொட்டிப் புலிப்பாய்ச்சல் நடத்துவான். அந்த ஆரிய மன்னர் சிரம் நொறுங்கக் கண்ணகி சிலைக்குக் கல்லேற்றிச் சிங்க நடை போட்டுவருவான். ரத்தம்படிந்த வெற்றி முரசின் ஒலியும், 'வாழ்க தமிழன்' என்ற கீதமும் இமயத்தில் எழுந்து, விந்தியத்தில் எதிரொலித்து, கன்னியாகுமரியின் கடலோசையில் கலக்கும்; வாடிக் கிடந்த காதலியை வெற்றி முரசம் துள்ளி யெழச் செய்ய - புதுத் துடிப்பால் பூரித்த இதயங்காட்டிப் பொன்னழகி வழிபார்த்து நிற்க 'தென்றலே, என்னைத் தேடித் துவண்டாயோ?' என்று வந்த காளை, வாய் திறப்பதற்குள்... மணவாளன் மார்பினிலே காயங்கண்டு பனிப்பார்வைவீசி, அவன் மலைத்தோளில் முகத்தை ஒட்டிக்கொள்ள - அந்த மகிழ்ச்சியை ஒரு கவிதையாக மாற்ற நினைத்து எல்லைக்குள் அதை அடக்க முடியாமல் தோல்வியால் தொங்கிய முகத்துடன் ஒரு புலவன் திரும்பிவிட . . இன்னணம் காதலும் வீரமும் கரைபுரண்டோடியது திராவிடத்தில் ஒரு நாள்! பழங்கதைதான்! ஆனால் பயனற்ற இன்றைய கதையல்ல! நம் பாட்டனும் பாட்டியும் வாழ்ந்த வரலாறு! பெற்றிருந்த பண்பு!

ஆரியர் உருட்டி விளையாடும் உருட்டுச்சட்டி பொம்மைகளாக ஆங்கில ஏகாதிபத்யத்தைவிடக் கொடிய வடவர் ஏகாதிபத்யத்தின் வால் பிடிப்பவர்களாம் - சீரிளமைத்தமிழ் ஒழித்து, செந்தமிழ் நாடழிக்க இந்தி மொழிக்கு 'பராக்கு' கூறும் சிப்பாய்களாய் இங்குள்ள தோழர் இருக்குங் காலத்திலேயே பொங்கல் விழா கண்டு நமக்குப் பூரிப்பு தாங்கவில்லையென்றால், காமராஜர்கள், சண்முகங்கள், ஜீவாக்கள் தோன்றியிராத அந்தக் காலத்தில் - மானத்துக்கும் தமிழனுக்கும் நீங்காத் தொடர்பு இருந்த அந்தக் காலத்தில் - களத்தில் ஈட்டியைச் சுவைத்துக் காதற் பரிசாக இதழ் சுவைத்துக் கிடந்த வீர பரம்பரை வாழ்ந்த அக்காலத்தில் -

பொங்கல், இப்படி சோற்றுப் பொங்கலாகவா இருந்திருக்கும்!

'அறுவடை முடிந்ததா அத்தான்?' என்று அவள் கேட்க 'எதிரிகளின் படையை நம் மன்னர் அறுத்துக் குவிக்கும்போது பகை மன்னன் மார்பிலிருந்து உருண்டோடிய மாணிக்கத்தைப் போல இதோ பார், நெல் மணிகளை!' என்று கணவன் பதில் கூறியிருப்பான். 'அதோ பார் கொல்லையில் ஆரியனின் வயிறு போல வைக்கோற்போர்!' என்று காட்டியிருப்பான், 'அத்தான்! பதரைத் தூற்ற வேண்டாமா?' எனக்கேட்டு முறம் எடுக்கச் செல்பவளைப் பார்த்து 'கண்ணே! தமிழினத்தில் வந்து கலக்கும் ஆரியக் கொள்கைகளை அகற்றுவதுபோல் இந்தப் பதர்களை யகற்று' எனச் சொல்லியிருப்பான்.

திராவிடனே! அந்நாளை நினைத்துப் பார்! பசி பசி என்று பச்சிளங்குழந்தை அழ. . . அதுகண்டு பெற்ற தாய் அழ. . . 'பொங்கலிலும் நாம் பட்டினிதானடா கண்ணே!' என்று தந்தை அழுகின்ற இந்நாளின் கோர நிலையையும் நினைத்துப் பார்!

கிரேக்க ரோமானிய நாடுகள் உன் நாட்டுப் பொருளுக்கு வாய்பிளந்து கிடந்தனவே! நீ ஒரு பிடி சோற்றுக்கும் ஒரு முழத் துணிக்கும் வாய்பிளந்து கிடக்கிறாயே!

இமயமும் இலங்கையும் உன் ஆணை கேட்டுத் தலை கவிழ்ந்தனவே! இன்று நீ அடிமையாக வாழ்கிறாயே! 'இனிமைத் தமிழ் மொழி எமது எமக் கின்பந்தரும்படி வாய்ந்த நல் அமுது' என்று இசைத்தனையே - இன்று இந்திக்குத் தண்டனிடுகிறாயே!

சரித்திரத்தில் திரையிடப்பட்டுள்ள உன் பெருமைகளைக் கேட்டுப்பார்! வேங்கையொத்த பகைவர் எத்தனையோ பேர் உன் வேல்பட்டு வீழ்ந்தனரே - வீரமகனே! உன் கண்களிலே கனல் என்றால் எதிரியின் பாசறை தீக்கு இரை என்றுதானே பொருள்! உன் வீர முழக்கம் வேற்று மன்னன்

கோட்டைக்கு வேட்டாயிற்றே! அவையெல்லாம் இன்னாள் எங்கே? கடல் கொள்ளாமல் - களம் புரண்ட ரத்த வெள்ளம் கொள்ளாமல் - பகைவரின் போர்த்திறங் கொள்ளாமல் - வீரத்தை விலை கேட்கும் ஆரியம் கொண்டது ஏன்?

அந்நிலை மீளாதா? புது வாழ்வு மலராதா? மலரும்! மலரவேண்டுமானால் திராவிடா! இந்தப் பொங்கலில் உள்ளம் பொங்கட்டும்! குன்றெடுக்கும் நெடுந்தோளான் குலத்தினனே! குள்ளநரிக் கூட்டத்தின் குணமறுக்க கூர்வாள் எடு! சாணிப் பிள்ளையாரும் சீனிப் பாயசமும் பொங்கலின் குறிக்கோளல்ல! கோணிக் கிடக்கும் சமுதாயத்தின் குறை தவிர்க்க முரசறைவாய்! போர் முரசறைவாய்! 'திடு திடும்!' எழுந்தது முரசொலி! எம் மினத்தவரே! முரசொலிக்கு உங்கள் ஆதரவு பொங்கட்டும்!

என்ற தலையங்கம் காணப்பட்டது.

பெரியார் ஆண்டு

'பெரியார் ஆண்டு' என்கிற காலக் கணக்கீட்டை முதன் முதல் அறிமுகம் செய்த பெருமைமிக்கது முரசொலிதான். இந்தப் புதிய வார ஏடு வெளியீட்டு விழா, பாவலர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் திருவாரூரில் நடைபெற்றது. கரந்தை என்.எஸ். சண்முக வடிவேலு அவர்கள் முதல் இதழைப் பெற்றுக் கொண்டார். புலவர் குழந்தை வாழ்த்திப் பேசினார். கருணை எம். ஜமால் என்பவருக்குச் சொந்தமான 'கருணாநிதி மின்னியக்க அச்சகத்தில்'தான் இந்த வார ஏடு திருவாரூரில் அச்சிடப்படலாயிற்று; அவரும் கலைஞரின் தோழரே. எனினும், ரூபா அணா பைசாவில் கறார் பேர்வழி!

அந்த ஏட்டின் முன்பக்கத்தில் இருந்தவை பற்றி மட்டும் இங்கே தருகிறேன்.

Reg.No.M. . .

விலை அணா 1

முரசு 1, திருவாரூர், பெரியார் ஆண்டு 69, தை 1 (14.1.48) புதன்கிழமை ஒலி - 1 இப்படித் தொடங்கும் முதல் பக்கத்தில்,

'முரசொலி' என்கிற சிவப்பு எழுத்துத் தலைப்பும் அதன் கீழே அந்த எழுத்தானது, பலமாக அடிக்கப்படும் முரசிலிருந்து கிளம்புவது போன்ற படமும் அமைந்திருந்தது. அந்த ஓவியம், கலைஞரின் நண்பரும், சிறந்த ஓவியராக இருந்தவருமான திரு. ஜீவன் வரைந்ததாகும்.

தலைப்பில் கால்வாசி இடத்தில் இதெல்லாம் 4½ அங்குலத்தில் முடிந்துவிட, அதையடுத்து, ஒரு விளம்பரம் 2 அங்குலத்தில் இருந்தது,

செல்வம் சிற்றுண்டி உணவு நிலையம், பஸ் ஸ்டாண்டு, விஜயபுரம், திருவாரூர் S.Rly. நண்பர்கட்குப் பொங்கல் நல்வாழ்த்து. தங்கள் அன்பும் ஆதரவும் என்றென்றும் அளிக்கக் கோரும் எ. முத்துகிருட்டிணன், உரித்தாளர் - என்பதே அந்த விளம்பரச் செய்தி ஆகும்.

அந்த முரசொலி பத்திரிகை 'கிரவுன்' சைசில் அமைந்திருந்தது. பக்க அளவு 6½ அங்குல அகலம்; உரயம் 9 அங்குலம், மொத்தம் 8 பக்கங்கள். எல்லாக் கட்டுரைகளுமே 3 காலம் அளவுதான்.

ஜீவாவுடன் உரசல்

முதல் பக்கம் ஒரு கட்டுரை 'எழுதவில்லை' என்ற தலைப்பு 'பேனாமுள்' என்கிற பெயரோடு தொடங்கி, 8ஆம் பக்கம் முடிவுறுகிறது. கட்டுரையின் கடைசியில், இப்படிக்குத் தோழன் ப. ஜீவானந்தம் - என்று கட்டுரையாசிரியர் பெயரும் காணப்படுகிறது. இதோ, அந்தக் கட்டுரை :

> 'வந்தே மாதரம்! ஜெய்ஹிந்த், வர்க்கப் புரட்சி ஓங்குக! ஈரோட்டுப் பாதை என்ற தலைப்பில் ஜனநாயகத்தில் விளாசியிருந்தேனே, படித்தீர்களா? அடடா, அதைமட்டும் இந்த திராவிடர் கழகத்து இளைஞர்கள் படித்திருந்தால், உடனே ஜோஷிப் பாதைக்குத் திரும்பிவிடுவார்கள். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை வலுப்படுத்த எத்தனையோ பாதைகளைப் போட்டுப் பார்த்தோம். மக்கள் யுத்தம் என்று ஒரு பாதை, அது 'வார் டயம்' பிசினஸ்! 'காங்கிரஸ் லீக் ஐக்கிய முன்னணி என்ற கோஷம், பாகிஸ்தான், இந்துஸ்தான் பிரிவினையில் முடிந்தது. 'மெஜாரிட்டி கட்சியோடு

சேர்ந்து வேலைசெய்தல் என்ற கொள்கையை அனுஷ்டித்து, காங்கிரஸின் பாதாரவிந்தங்களை அர்ச்சித்து, முடிவில் 'துரோகி' என்ற பட்டத்தைப் பெற்றோம்... அதைத் தேசிய மகாசபை எங்களுக்களித்த 'திவான் பகதூர்' பட்டம் என எண்ணித் திருப்தியடைய வேண்டியதாயிற்று.

கிஸான்கள் கிளர்ச்சி, ஆலைகளில் அதிர்ச்சி, இன்னோரன்ன தொழிலாளர் புரட்சிகளில் தலையிட்டு ஆதரவு கொடுத்தோம்; உதைத்த காலையே - அதாவது காங்கிரசையே முத்தமிட்டோம். அது இந்தக் கிளர்ச்சி நேரங்களில்! 144 தடையுத்தரவுகளால் எங்களை அணைத்து ஆட்கொண்டது. ஆனாலும் எங்கள் கையிலேயிருந்த மூவர்ணக்கொடியைக் கீழே போடவில்லை. இரு கொடி ஏந்திகள் என்று கூட நாட்டில் ஏளனம் பிறந்தது. அப்போதும் காதைப் பொத்திக் கொண்டோம். பொன்மலைத் தொழிலாளர் நால்வர் காங்கிரஸ் ஆட்சியின் சுட்டுவிரல்களின் மனைவிகள் விதவைகளாகி மஞ்சள்கூட அழியவில்லை. அதற்குள் நாங்கள் மூவர்ணக் கொடிக்கு 'சலாம்' போட்டு நின்றோம். எங்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களில், எங்கள் வாய் பூட்டப்பட்ட வேளைகளில், நாங்கள் மறைந்து வாழ்ந்த நாட்களில் பத்திரிகைகளில் எழுதிப் பாட்டாளி வர்க்கத்துக்குப் பணி பல புரிந்தவர்கள் அல்லலுற்ற ஆலைத் தொழிலாளருக்கு ஆறுதல் அளித்தவர்கள் தொழிலாளர் கூட்டங்களில் கலந்து அவர்கட்கு உணர்ச்சி யூட்டியவர்கள் - இன்றும் அவர்களுக்காக உண்மையாக உழைப்பவர்கள் திராவிடர் கழகத்தார் என்பதை என் மனமார மறுக்க முடியாது.

வேண்டுமானால் பேனா முனையால் கிறுக்கலாம். மேடையில் உளறலாம். அதுவும் மனச்சாட்சியை 'மார்க்கெட்'டில் வைத்துவிட்டு!

நன்றி தெரிவிக்க வேண்டிய நாங்கள் அதற்கு மாறாகக் கழகத்தை நசுக்க முற்பட்டிருக்கிறோம். 'நன்றல்ல தன்றே

மறப்பது நன்று' என்ற வள்ளுவர் வாய்மொழியைத் தேசியத் தோழர்களிடம் அனுஷ்டித்தோம். அந்தக் குறளின் முதலடியான 'நன்றி மறப்பது நன்றன்று' என்பதைக் கழகத்தாரிடம் காட்டத் தவறினோம். தவறுவதென்ன... அதுதான் எங்கள் கொள்கையுங்கூட!

'அசகாய சூரத்தனங்கள், ஜெகஜாலப் புரட்டுகள் செய்தும் எங்கள் பாதையில் வெற்றிக்குறி தென்படவில்லை. கம்யூனிசப் பாதைக்குப் பாட்டாளிகளை அழைத்துச் செல்வதாகக் கதையளந்த நாங்களே ஆற்றிலே ஒரு கால் சேற்றிலே ஒரு கால் வைத்து நடக்க வேண்டியிருக்கிறதே... நாங்கள் எங்கே வெற்றிப்பாதை போடுவது? இந்தக் குழப்பமான நிலையில்தான் இனத்தின் பெயரால் பாட்டாளிப் படை அணிவகுக்கப்பட்டு ஆயிரமாயிரம் வீரர்களின் இதயத்தில் புதுத்துடிப்பை உண்டுபண்ணிய ஈரோட்டுப் பாதை எனக்கு வயிற்றெரிச்சலை ஏற்படுத்தியது. நான் விட்டுப் பிரிந்த பாதை நாசமாகி விடும் என்று கனவு கண்டுகொண்டிருந்த பாதை அந்தப் பாதையிலே பாவலர், நாவலர், பாட்டாளித் தோழர்! என்ன ஆச்சரியம் 'திராவிட நாடு திராவிடருக்கே! பிறவி முதலாளி ஒழிக!' இந்தக் கோஷம் என் காதுகளில்கூட விழுந்தது என்றால் எனக்குப் பொறாமை பிறக்காமலிருக்குமோ? நாங்கள் சொல்வதைச் சற்று அதிகப்படியான - ஆனால் உண்மையான பொதுவுடைமைப் பிரச்சாரம் - அதுவும் மக்கள் உள்ளத்தைத் தொரட்டி போட்டு இழுக்குமளவுக்குத் திராவிடர் கழகத்தாரால் செய்யப்பட்டுத் தென்னாட்டில் ஜோஷியின் கம்யூனிஸ்ட் கட்சி தேவையில்லை என்கிற அளவுக்கு மக்கள் மனோநிலை மாறிவிட்டால் வேறு எங்களுக்கு வேலை ஏது? இந்தக் கேள்வியை யொட்டிக் கிளம்பியதுதான் என் பொச்செரிப்பில் பூத்த கட்டுரையாம் ஈரோட்டுப் பாதை. என்ன செய்வது? நன்றி மறக்கக் கூடாதுதான். பொறாமையுங் கொடிய விஷந்தான்! ஆனாலும் திராவிடக் கழகத்தைத் தாக்க வேண்டிய நிலையைச் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே... இல்லாவிட்டால் ஈ.வெ.ரா.வின்

உண்மையான - ஏற்றதான - தொழிலாளர் கொள்கை எங்கள் 'மார்க்ஸீய மதரசாவில் உள்ள மாணவர்களை ஸ்தம்பிக்கச் செய்து எங்கள் பாதையில் ஸ்தம்பனம் உண்டாக்கிவிடுமே'. நாங்கள் தயாரிக்கும் 'கிளிப் பிள்ளைகள்' ஈரோட்டுப் பாதைக்குப் பறந்துவிடுமே!

அப்பப்பா!... பொருந்தா வாதங்கள் நிறைந்து கிடக்கும் என் கட்டுரையில்! ஈ.வெ.ரா.வின்மேல் இல்லாத குற்றசாட்டுகளைக் குவித்திருக்கிறேன்! சப்பைக்கட்டுகள் செல்லரித்த விசயங்கள். சொத்தைக் காரணங்கள் இவ்வளவையும் கொண்டுவந்து நிறுத்தி ஈரோட்டுப் பாதையைத் தகர்த்தெறிய சம்மட்டி வேலை நடத்தியிருக்கிறேன்.

இடுக்கோடு இடுக்காக என்னைப் பற்றிய சுய விளக்கத்தையும் ஒரு மூலையில் திணித்துப் பெரிய எழுத்தில் அதைப் போடும்படி கம்பாசிட்டரிடம் சொல்லியும் அவர் போடத் தவறிவிட்டார். என்னைப் பற்றி நான் எழுதும் கட்டுரையில் நானே பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டிய துணிச்சலை எனக்களித்த கம்யூனிசத்திற்கு என் வந்தனம். என் வியாசத்தின் ஓட்டை உடைசல்களை அடுத்த கடிதத்தில் விளக்கமாய்த் தொடர்ந்து எழுதுகிறேன்.

இப்படிக்குத் தோழன்
ப. ஜீவானந்தம்

அரசியல் அர்த்தநாரி

அந்த முரசொலியின் 2ஆம் பக்கம் 'பத்தினியே உன்போல்' என்றொரு கதை - பத்தினித்தனம் என்றால் என்ன என்று தெரியாத ஒருத்தி, கருங்குழிக்குப் பார்சலான கதை யொன்று இடம் பெற்றிருந்தது. எழுதியவர் பெயர் இல்லை. இப்படிப் பெயரில்லாதவை அனைத்தும் கலைஞரின் கைவண்ணங்களே!

இதழில் வெட்டு ஒன்று - துண்டு இரண்டு எனக் காட்டும், கனல் தெறிக்கும் தலையங்கமும் உண்டு. கடைசிப்பக்க முடிவில் 'முரசொலிக்கு ஆண்டுச் சந்தா ரூ.4 தான்' என்ற அறிவிப்பு.

முடிவில் இம்பிரிண்ட் : ஆசிரியரும், வெளியிடுபவரும்: மு. கருணாநிதி, திருவாரூர். பதிப்பாளர் : கருணை எம். ஜமால், கருணாநிதி (மின்னியக்க) அச்சகம், விஜயபுரம் - என்றிருக்கிறது.

முரசொலியின் 2ஆம் இதழில், முதல் பக்கமே தந்தை பெரியார் படம் 'பாஸ்போர்ட்' அளவில், தலைப்பிலேயே இடம் பெற்றிருந்தது. அதைத் தொடர்ந்து வந்த இதழ்களில் - பெரியார் படம் இருந்த இடத்தில் சர். ஏ.டி. பன்னீர் செல்வம், டி.பி. வேதாசலம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன், என்.வி. நடராசன் போன்றோர் படங்களெல்லாம் தொடர்ந்து வாராவாரம் இடம் பெற்று வந்திருக்கின்றன.

13ஆவது வார இதழில் - அறிஞர் அண்ணா, குதிரையில் ஏறிக் கோட்டை அருகில் பெரும் படையோடு வருவதுபோல் அட்டைப்பட ஓவியம்; இந்த அட்டைப் படத்திற்கோர் அரசியல் முக்கியத்துவம் உண்டு; அச் செய்தி பிறகு தரப்படும்.

15ஆவது வார இதழில் - தந்தை பெரியார் புகைப்படம் முதல் பக்கமே சரிபாதி அளவும், 17ஆவது வார இதழ் அட்டையில் 'மகான் ரமணரும் மகாத்மா அரவிந்தருமே மக்கள் தம் வழிகாட்டிகள்' என்று கூறிய தோழர் ஜெயப்பிரகாஷ் படத்தை ஆணும் - பெண்ணும் என இப்படியும் அப்படியுமாகப் பாதிப் பாதி போட்டு 'அரசியல் அர்த்தநாரி' என்ற தலைப்போடு ஒரு கேலிச் சித்திரமும் - என இதழ் தொடர்ந்து மலர்கிறது. என்.எஸ். இளங்கோ, டி.கே. சீனிவாசன் போன்றோரெல்லாம் அந்த ஏட்டில் எழுதியிருக்கிறார்கள்.

இந்திப் படம் 'மீரா'

'குண்டுவீச்சு' என்றொரு புதிய பகுதி அதில் அணி செய்தது. இந்தியில் வெளிவந்த 'மீரா' திரைப்படம் பற்றிய ஓர் அலசல் அது.

'ஹிந்தி மீராவை மவுண்ட்பேட்டன் பிரபு பார்த்தார்' - கல்கி 4.1.48.

ஆமாம். . . எம்.எஸ். ஸுக்காகக் கல்கி பார்க்க., கல்கிக்காக ராஜாஜி பார்க்க., ராஜாஜிக்காக ஜவஹர்லால்ஜி பார்க்க., ஜவஹர்லால்ஜிக்காக மவுண்ட்பேட்டன் பார்க்க என்று அடுக்கிக் கொண்டே போகிறான் நமது ஆபீஸ் பையன்!' - என்பதாக அந்தக் கட்டுரை முடிவுற்றிருக்கிறது.

2ஆம் இதழில் 'ஜீவானந்தம் கடிதம்' என்கிற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த அந்தக் கடிதத்தில், பல்வேறு நெருக்கடிகளுக்கு இடையில் இப்போதும் நாம் கலைஞரிடம் காணும் வேடிக்கை குறும்பு மின்னுகிறது.

> முரசொலியில் 'எழுதவில்லை' என்ற தலைப்பில் வெளியாகும் ஜீவானந்தம் கடிதம், அவர் எழுதியதுதானா? எனப் பல நண்பர்கள் கேட்கிறார்கள் இல்லை. . . இல்லை. . . ஜீவானந்தம் எழுதவில்லை. 'ஜனநாயகம்' பத்திரிகையில் தோழர் ஜீவானந்தம் 'ஈரோட்டுப்பாதை' என்ற தலைப்பில் பெரியாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரைக்கு மறுப்பளிக்கும் முறையில், நமது பேனாமுள் எழுதும் கடிதம் அது! ஜீவா உண்மை உள்ளத்தோடு எழுதினால் இப்படித்தான் எழுதுவார் என்பது நம் கருத்தும்கூட!
>
> ஆனால் அவர் எழுதவில்லை!

இதுதான் அந்த 5 ஆம் பக்க அறிவிப்பாகும். இப்போது புரிகிறதா அந்தப் 'பேனாமுள்' யாருடையதென்று!

முதல் பிள்ளை

'தள்ளாடும் - தந்தி நடக்கும் - தணலை மிதக்கும் - விழும், எழும்! ஆனாலும் எந்த நிலையிலும் கொண்ட கொள்கையை மண்டியிட வைத்ததில்லை; முன்வைத்த காலைப் பின்வைக்க நினைத்ததுமில்லை!

'முரசொலி நான் பெற்ற முதல் குழந்தை! ஆம்; அந்த முதற் பிள்ளைதான் தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியனைப் போலக் கிண்கிணி அணிந்த கால்களுடன், பகைவர்களைப் பலரைக் களத்தில் சந்திக்கச் 'சென்று வா மகனே, செருமுனை நோக்கி!' என அனுப்பிவைக்கப்பட்ட அன்புப் பிள்ளை!'-

முரசொலி 11.3.1984 ஏட்டில், கலைஞர் அவர்களே தமது ஏடு பற்றி இவ்வாறு மிகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டிருக்கிறார்.

கவிதையும் கடிதங்களும்

முரசொலி வார ஏட்டின் 4ஆவது வாரம் (4.2.1948). அதன் முதல் பக்கம் - மேலே பாரதிதாசன் படம். அதன் கீழே, முரசு, ஒலி,

நாள், ஆண்டு போன்ற வழக்கமான குறிப்புகளுக்குக் கீழே, கும்பிட்டுக் கொண்டிருக்கும் காந்தியார் படம் - அதற்குக் கீழே - காந்தியடிகளைக் கொன்றவனைப் பற்றிய விளக்கம், திருக்குறளைப் போல.

'உத்தமர் காந்தியின்
உயிரைக் குடித்தவன்
ஒரு
ஊதாரி பார்ப்பான்'

என்கிற நான்கே வரிகள் மட்டுமே முழுப்பக்கமும் போடப் பட்டுள்ளன!

'மு. கருணாநிதி' என்ற பெயரை 'ஆசிரியர்' என்கிற சொல்லுக்குப்பின், முதல் பக்கத்திலும் - 'ஆசிரியரும் வெளியிடுபவரும்' என்ற கடைசிப் பக்க வரிகளின் பின்னும்தான் இவ்விதழில் காணமுடிகிறது. எனினும் - 'முரசொலி' வார ஏடுகளின் தலையங்கங்களை எல்லாம், தனக்கே உரிய தனி நடையில் எழுதியுள்ளார் கலைஞர் அவர்கள்.

இரத்தக்கறை படிந்த நாள்

உதாரணத்திற்கு இதோ அந்த 4.2.48ஆம் நாள் வெளியான முரசொலி வார ஏட்டின் தலையங்கத்தின் தலைப்பு '30.1.1948' என்பது மட்டுமே! இதோ, அதில் சில வரிகள்:

> இந்திய உபகண்டத்தின் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த நாள். மக்கள் உகுத்த இரத்தக் கண்ணீர் அருவியென ஓடி அரபிக்கடலிலே கலந்து. . . வங்களாக்குடாக் கடலில் வழிந்தோட.... 'காந்தி மாண்டாரரா?' என்ற கேள்விக்கு முன் கிளம்பிய பெருமூச்சு இமயத்தை அசைக்க - இப்படி ஒரு சோக பூகம்பம் 30.1.48இல்!

> 'திரு. காந்தியார் சுடப்பட்டார்! மும்முறை சுடப்பட்டார்! ஐயகோ! சுடப்பட்டார்! பிரார்த்தனைக்குத்தான் வந்தாராம். . . வேலும் வாளும் ஏந்தி 'வேற்றார் படை எங்கே?' என்றுஅவர் அதட்டலாகக் கேட்ட நேரத்திலே அல்ல; அன்பு தவழும் மொழிகளில் "பிரார்த்தனைக்கு மக்கள் வந்து

விட்டனரா?'' என்று வினவிய நேரத்தில். . . சுடப்பட்டார்! கனல் கக்கும் கண்களோடு, எதிரியின் மேல் மோதிய வேளையில் அல்ல; கருணை பொங்கும் கண்களால் தன் உபதேசம் கேட்க வந்திருந்த மக்களைக் கண்டானந்தித்த வேளையில் சுடப்பட்டார்! சுடப்பட்டார்! சுக்கு நூறாக்கப்பட்டார்!. . .

என்று தொடங்கி ஒன்றரைப்பக்க அளவில் '30.1.1948!. . . ஆமாம். . வரலாற்றை வீணாக்கிய நாள்!" என்று முடிகிறது அந்தத் தலையங்கம்.

பாவேந்தர் புகழுரை

இதற்கு முந்திய இதழில், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் எழுதியிருந்த வாழ்த்துக் கவிதை இது:

"திரைகடல் மீது பரிதி எழுந்தே
அரசுவீற் றிருந்தான் அழகொளி வீசி!
வாழிய பரிதி, வண்மைத் திருநாள்!
இந்நாள் பொங்கல் இட்டு மகிழும்
தென்னாட்டு மக்களின் திருவென ஓங்கி
'முரசொலி' நாளும் முன்னேற்றம் எய்திட
என்மன மார யான்வாழ்த்து கின்றேன்;
என்றும் முரசொலி இனிது வாழியவே!
வீழிய பகைவர்! நாளும்
வாழிய திராவிட மக்கள் நன்றே!" - பாரதிதாசன்

அந்த இதழில், 6ஆம் பக்கம் இடம் பெற்றுள்ளது வாசகர் பகுதி. அந்தப் பகுதி அவ்விதழில் 'வெற்றி எட்டுத் திக்குமெட்ட கொட்டு முரசே!' என்ற தலைப்பில் போடப்பட்டுள்ளது. அதில் மூவாலூர் ஆ. இராமாமிர்தத்தம்மாள், 'பொன்னி' ஆசிரியர் முருகுசுப்பிரமணியன், புதுவை சு. மன்னர் மன்னன், இராம. அரங்கண்ணல், 'அறம்', புலவர் மணியம், குளிக்கரை கே.எஸ். பிச்சையப்பா, புலவர் குழந்தையா ஆகியோர் எழுதிய கடிதங்கள் இடம் பெற்றுள்ளன.

கவி கா.மு. ஷெரீப்

'முரசொலி. . . முரசொலி. . . முரசொலி' என்ற தலைப்பில் கவி. கா.மு. ஷெரீப் எழுதிய கவிதையொன்று,

'அரசனென்றும் ஆண்டி யென்றும்
அவதியுறும் மக்களை
அல்லல் நீக்கி ஒன்றுசேர்க்க
ஆர்த்தெழுந்தே முரசொலி'

என்ற ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டாக எழுதப்பட்டிருக்கிறது. அப்போது 'விடுதலை' துணை ஆசிரியராக இருந்த இரா. அரங்கண்ணல் (ஆரூரன்), டி.கே. சீனிவாசன் முதல் என்.எஸ். இளங்கோ, தில்லைவில்லாளன், நா. பாண்டுரங்கன், நாரா. நாச்சியப்பன், வா.கோ. சண்முகம் (மாவெண்கோ), எம். சிங்காரவேலு, கரந்தை என்.எஸ். சண்முக வடிவேலு ஆகியவர்களும் மணியொலி, ரவி, மன்னன், தில்லை குழுக்கோ போன்றவர்களும் முரசொலி வார ஏட்டில் எழுதிவந்துள்ளனர்.

முரசொலியில் ஏற்பட்ட புதிய பொலிவு

13ஆம் வாரம் முரசொலியிலிருந்து ஒரு இதழின் விலை 1½ அணாவாகவும், ஆண்டுத்தொகை ரூ5 என்றும் ஆக்கப்பட்டிருக்கிறது. 2 பக்கம் கூட்டப்பட்டு 10 பக்கம் ஆகியிருக்கிறது. ஓவியங்கள், புகைப்படமெல்லாம் இடம்பெறத் தொடங்கியிருக்கிறது.

ஏம்பா, மழையில்லாதபோது முன்பு வர்ணஜபம் செய்தார்களே, அப்பொழுது மழை பெய்யாமல் பிறகு இரண்டு மாதம் கழித்து மழை கொட்டுச்சே? ஏன்?

அதுவா. . பூலோகத்திலிருந்து செய்த ஜெபம், வருணலோகத்துக்கு எட்ட அவ்வளவு நாட்களாயிற்றுப் போலும்! - எழில்.

என்பது போன்ற துணுக்குச் செய்திகளும் வார ஏட்டில் அவ்வப்போது இடம் பெற்றிருக்கின்றன.

'விற்பனையாளர் இல்லாத ஊருக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை', 'பட்டியல் கிடைத்த ஒரு வாரத்திற்குள் பணம் அனுப்பாவிடில் பத்திரிகை அனுப்புவது நிறுத்தப்படும்' என்பது போன்ற அறிவிப்புகள் இடம்பெற்றன.

'நேற்று வரையில்' என்கிற தலைப்பில், உலக நாடுகளின் நிகழ்வுகள் குறித்த செய்தித் துணுக்குகள் எல்லாம் ஒரு நாளேட்டுக்கு உரியதுபோல, அப்போதே அந்த வார ஏட்டில் இடம் பெற்றுள்ளன.

வைர வரிகள்

வாரந்தோறும் புதன்கிழமை வெளிவந்த முரசொலியின் 17.3.48ஆம் தேதி இதழில் ஒவ்வொரு பக்கத்தின் முடிவிலும், நறுக்குத் தெறித்தாற்போன்ற கீழ்க்காணும் வைர வரிகள் - 'எறும்புகளுக்குக் கூட இன உணர்ச்சி உண்டு! ஆனால். . .!, 'திரு இடமே திராவிடம்', 'திராவிடம் தமிழ்ச் சொல்லே!', 'ஏர் ஓட்டும் மக்கள் எல்லாம் ஏங்கித் தவிக்கையிலே, தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராசா!', 'கறுப்புச் சட்டையே நமது களங்கம் போக்கும்' காணப்படுகின்றன.

இந்த இதழில் சில விளம்பரங்களும் உள்ளன.

* பாரதிதாசன் 'குயில்' - கவிதை இதழ், மாத வெளியீடு,

கவிஞரின் தேனூறும் கவிதைகள் - இனிய உரை நடைகள்!

இளம் எழுத்தாளர்க்கு - இலக்கியப் போட்டிப் பரிசு.

இன்ன பிற சுவைமிகு பகுதிகள் உண்டு.

விலை 6 அணா.

குயில், பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி.

* சிதம்பரம் ஜெயராம் 1. நல்லதம்பி, 2. கிருஷ்ணவிஜயம், 3. விஜயகுமார், 4. அந்தமான் கைதி, 5. கிருஷ்ணபக்தி, 6. வேலைக்காரியில் (சில பகுதி), 7. முள்ளில் ரோஜா - ஆகிய படங்களின் இசையமைப்பில் (மியூஸிக் டைரக்ஷன்) வெகுமும்முரமாக ஈடுபட்டுள்ளார்.

* பகுத்தறிவுப் புயல் ஆண்டவனைப் பற்றிய வாதங்களுக்கு ஆராய்ச்சிபூர்வமாக, தர்க்கரீதியாகத் தணலன் எழுதிய நூல், 'கடவுள் முளைத்தார்!'. விலை அணா 14, வியாபாரிகட்கு 25% கழிவு உண்டு. எரிமலைப் பதிப்பகம், துறையூர், திருச்சி.

விதவா மணம்

* விதவைப் பெண் தேவை. ஆயிரம் ரூபாய் சொத்துடையவரும், மாதம் ரூ. 50 வருமானம் உடையவரும், 25 வயதும் உடைய மருத்துவ வகுப்புத் தோழருக்கு விதவைப்பெண் தேவை. விவரத்திற்கு:- ச. பரசுராமன், பார்பர் ஷாப், விஜயபுரம்.

* 1.3.48 திங்கட்கிழமை முதல் திருவாரூர் பிரபாத்தில், 'கன்னிகா'.

* 'பொன்னி' - மே 1 முதல் மாதம் இருமுறை - விலை அணா 5.

* சுவைமிகு சிற்றுண்டிகளுக்கு - விஜயபுரம் பீம விலாஸ்.

என்பன போன்ற விளம்பரங்களும் அவ்வப்போது முரசொலி வார ஏடுகளில் இடம் பெற்றிருக்கின்றன. முரசொலி பற்றிய விளம்பரம் புரட்சிக் கவிஞரின் குயில் ஏட்டில் 1.4.1948இல் இவ்வாறு இடம் பெற்றிருந்தது:

* முன்னேறும் திராவிடத்தின்
வெற்றி முழக்கம்
'முரசொலி'!

ஆசிரியர் : மு. கருணாநிதி
அச்சமற்ற கண்டனங்கள். . .
ஆணித்தரமான கட்டுரைகள். . .
அறிவு நல்கும் கற்பனைகள். . .

தனிப்பிரதி அணா ஒன்று
ஆண்டுக் கட்டணம் ரூ.3-4-0
விவரங்கட்கு :
நிர்வாகி - முரசொலி - திருவாரூர்.

இதே வகையில் நாவலர் நடத்திய 'மன்றம்' (1.3.1948), பேராசிரியர் க. அன்பழகன் நடத்திய 'புதுவாழ்வு' (15.2.1948) ஆகியவற்றில் மதிப்புரைகளும் முரசொலி பற்றி வெளிவந்தன.

வினா எழுப்பிச் சிந்திக்க வைத்தார்

'சுவைத்ததில்!. ' என்பது முரசொலி வார ஏட்டில் இடம்பெற்ற புத்தக விமர்சனப் பகுதியாகும். இதில், ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள் விருதுநகரிலிருந்து நடத்திய 'தனி அரசு', இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சென்னையிலிருந்து நடத்திய மன்றம், க. அன்பழகன் அவர்களின் புதுவாழ்வு, டி. நாராயணனின் 'வாழ்வு', டி.எஸ். இராசலட்சுமியின் 'வெண்மதி', கே.ஏ. புன்னைமுத்துவின் 'வழிகாட்டி', ஆ. இரத்தினத்தின் 'உரிமை', ஏ.கே. வேலனின் 'இராவணன்', நாக. முத்தையாவின் 'மீண்ட இன்பம்', கு.மா. பாலசுப்பிர மணியத்தின் 'இன்பத்துளி' போன்ற ஏடுகளும் நூல்களும் சில வரிகளில் இப்பகுதியில் சுவைபட விமர்சிக்கப்பட்டிருக்கின்றன.

மாதவி, கண்ணகி, இளங்கோவடிகள் போன்றோர், தமிழினப் பகைவர்களால் - தமிழர் என்பதற்காக மறைக்கப்படுவதின் காரணமென்ன? என்னும் வினாவின் மூலம், கலைஞர், தமிழர்களைச் சிந்திக்க வைத்தார்!

> காதலுக்கு உதாரணம், இந்திரனைக் கூடிய கௌதம ரிஷி மனைவி அகல்யாவும் - சந்திரனைக் காமுற்ற பிரகஸ்பதி முனிவர் பத்தினி தாரையும் என்று... அதைக் கூறுவார்கள்! காதலுக்காக வாழ்வையே தியாகம் செய்த என்னைச் சொல்ல மாட்டார்கள்; காரணம் என்ன? - மாதவி
>
> ஆனால், தமிழச்சியைக் கேளுங்கள் - 'கற்புக்குப் பேர்போனவள் யாரம்மா?' என்று. எங்களைச் சொல்ல மாட்டாள். ஐவரை மணந்து ஆறாவது புருடனை மாலையிட எண்ணிய திரௌபதியை 'அழியாத பத்தினி' என்பாள்; காரணம் என்ன? - கண்ணகி
>
> எனக்கு ஆட்சியா - இல்லை, இல்லை; ஜோஸ்யத்தைப் பொய்யாக்குகிறேன்" எனச் சபதம் எடுத்து உடனே துறவறம் பூண்டேன்; அண்ணனையே அரியணையில் அமர்த்தி அகமகிழ்ந்தேன்; இது நான் சகோதரனுக்குச் செய்த தியாகம்; ஆனால், தமிழனைக் கேளுங்கள் - 'சகோதர வாஞ்சையுள்ள ஒருவன் பெயரைச் சொல்ல முடியுமா? என்று; உடனே பதில் வரும் - 'இராமன் தம்பி பரதன்' என்று; என் பெயரும் - நான் தந்த சிலப்பதிகாரமும் தமிழனுக்குச் சரியாகத் தெரியாது; காரணம் என்ன? - இளங்கோவடிகள்

இவை அனைத்தும், 'சேரன்' என்னும் புனைபெயரில் 'இனமுழக்கம்' என்னும் தலைப்பில் கலைஞர் எழுதியவை. 'கருஞ்சட்டை', படம் போட்டு அதிலேயே, 'இன முழக்கம்' என்றெழுதி 'பிளாக்' செய்து இப்பகுதிக்குத் தலைப்பாக அச்சிட்டிருந்தார் அவர்!

இவ்வாறு திருவாரூரிலிருந்து 1948களில் வெளிவந்த முரசொலி வார இதழ்களிலே இடம்பெற்ற தலையங்கங்களிலே மட்டுமல்ல; இடநிரப்புச் செய்திகளிலே (Space Filler) கூட, கலைஞரின் வேகமான தமிழ் நடையினை நம்மால் காணமுடிகிறது.

இதற்கிடையில், முரசொலி 7ஆவது இதழில், 25.2.1948 காலை 11 மணிக்கு ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களுக்கு ஆண் மகவு பிறந்தது; தாயும் சேயும் நலம் என்ற நல்ல செய்தி வெளிவந்தது. அடுத்த நாட்களில் கலைஞரின் துணைவியார் திருமதி பத்மாவதி அவர்கள் 12.4.48இல் இறந்து போனார். இந்தத் துயரச் சம்பவம் பற்றி 14.4.48 'முரசொலி' 13வது ஏட்டின் கடைசிப் பக்கம் திருமதி பத்மாவதி அம்மையாரின் படத்துடன் வெளியிடப்பட்டிருந்த துயரச் செய்தி இது:

மறைவு

ஆசிரியர் திரு. மு. கருணாநிதி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார்

திருமதி பத்மாவதி

12.4.48 திங்கள் இரவு 8.30 மணிக்கு இயற்கை எய்தினார்கள்.

திருமணம் 13.9.44 மறைவு 12.4.48

தோழியர் பத்மா கருணாநிதி பிரிவு

12.4.48 திங்கள் இரவு 9.30 மணிக்குத் தோழர் மு. கருணாநிதியின் துணைவியார் தோழியர் பத்மாவதி அவர்கள் உயிர் நீத்தார்.

13.4.48 செவ்வாய் காலை 10 மணிக்கு இயக்கத் தோழர்கள் இருநூறு பேர் கருப்புடை அணிந்தும், மற்றும் உள்ளூர், வெளியூர் அன்பர்களும் திரளாகச் சூழ்ந்து வர, அன்னாரது சடலம் மௌன ஊர்வலமாக இடுகாட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

வழிநெடுகத் திராவிடர் கழகம், சுயமரியாதை சங்கம் ஆகிய பல சங்கங்களின் சார்பில் மலர்மாலை சூட்டப்பட்டது. கருப்புக் கொடி தாங்கிய தொண்டர்கள் முன் சென்றார்கள்.

தகன காரியங்கள் முடிந்த பின்னர் தோழர் ரங்கராசு தலைமையில் இரங்கற் கூட்டம் இடுகாட்டிலேயே கூட்டப்பட்டது. அதுபோது திருவாரூர் திராவிடர் கழகம், பாரதிதாசன் படிப்பகம், மருதம்பட்டணம் திராவிடர் கழகம், புலிவலம் திராவிடர் கழகம், வேலங்குடி ஆதி திராவிடர் கழகம், மேல விசயபுரம் ஆதி. கழகம்,

சாப்பாவூர் ஆ.தி. கழகம் இலவங் காருகுடி ஆ.தி. கழகம் செயலாளர்களும், பொதுமக்கள் சார்பாக திரு. இராஜசந்தானம் கருணை எம். ஜமால், தங்கவேல், தங்கராசு, முரசொலி நடிகர் கழகம் சார்பில் சதாசிவம் ஆர். சிங்கம், டிஎன். லெட்சப்பா, கிருஷ்ணசாமி, கரந்தை என்.எஸ். சண்முகவடிவேல், புலவர் குழந்தையா, என்.வி. சீனிவாசன் ஆகியோர் அன்னாரின் மறைவு குறித்துக் குமுறும் குரலில் கண்ணீர் வடிய கலங்கிய உள்ளத்தினராய்த் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை அறிவித்துக் கொண்டனர்.

இவ்வாறு அந்த அறிவிப்பு கண்ணீரால் எழுதப்பட்டிருந்தது. தனக்கு ஆறுதல் கடிதம் அனுப்பியோருக்கெல்லாம் 21.4.48 முரசொலியில் நன்றி தெரிவித்திருந்தார் கலைஞர்.

பதிவு எண்

இதற்கிடையே முரசொலி வார ஏட்டினுக்குப் பதிவெண் அளிக்கப்பட்டுவிட்டது. அந்த எண் 45095 என்பதாகும்.

காகிதம் வாங்க, அச்சிட, 'பார்சல்' அனுப்ப, அஞ்சல் தலை ஒட்ட என்று எல்லாவற்றுக்கும் பணம் அவ்வப்போது திரட்ட வேண்டிய நிலை. இந்தச் சிரமம் தொடர்ந்து இருந்துகொண்டே இருந்தது; இதன் காரணமாகக் கலைஞரின் வீட்டிலிருந்த நகை, பாத்திரமெல்லாம்கூட அடகுக்கும் விலைக்கும் போகவேண்டிய சிரமம்; இது 'படமுடியாதினித் துயரம் பட்டதெல்லாம் போதும்' என்கிற வடலூராரின் நிலைக்கே வரச் செய்தது கலைஞரை.

அச்சான முரசொலியை மடிப்பதில், கட்டிய பார்சலைத் தலையில் சுமந்துகொண்டு திருவாரூர் ஓடம்போக்கி ஆற்று மூங்கில் பாலத்தின் வழியே அஞ்சலகம் செல்லுவதில் எல்லாம் கலைஞர் அவர்கள் அயராது பாடுபட்டார்.

வெறுங்கையாலா முழம் போடமுடியும்? "அந்த முரசொலி வார இதழும், ஏறத்தாழ 25 இதழ்கள் வெளிவந்ததோடு திராவிட இயக்க இளைஞர்களிடையே எழுச்சியூட்டி வந்த தன் பயணத்தை நிறுத்திக் கொண்டது" என்கிறார், கலைஞரின் நிழல்போலிருந்த செயலாளர் திரு கு. தென்னன் அவர்கள்.

எப்படி நடத்திட முடியும்?

இதுபற்றிக் கலைஞரே கூறுகிறார்:

துண்டுத்தாளாக வெளியிட்டுக் கொண்டிருந்த முரசொலியை வார இதழாகத் திருவாரூரிலிருந்து வெளியிடலாம் என்று திட்டமிட்டேன்.

வீட்டிலிருந்த நகை நட்டுக்களை அடகு வைத்து வாரப் பத்திரிகை தொடங்கினேன்.

திருவாரூரில் திரு. கருணை எம். ஜமால் அவர்களை உரிமையாளராகக் கொண்ட கருணாநிதி அச்சகத்தில் முரசொலி அச்சடிக்கப்பட்டது.

பத்திரிகைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. அதில் வரும் எழுத்துக்களை வியக்காதாரில்லை. வாழ்த்துக் கடிதங்களும் வந்து குவிந்தன.

ஆனால், விற்பனையாளரிடமிருந்து பணம்தான் வந்து சேரவில்லை!

வாரந்தோறும் பத்திரிகை வெளியிடுவது என்பது ஓர் அறுவைச் சிகிச்சைப் பிரசவமாகவே இருந்தது.

அச்சக உரிமையாளர் ஒரு வாரம், இரண்டு வாரம் கடனைப் பொறுத்துக் கொண்டார். மூன்றாவது வாரம் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. என்ன செய்வது? அவர் நிலை அப்படி?

என் மனைவி போட்டிருந்த தாலிச் சங்கிலியை தாலிக்கயிறாக மாற்றிவிட்டு - அந்தச் சங்கிலியை விற்று இரண்டு வாரக் கடனை அடைத்து, மூன்றாவது வாரப் பத்திரிகையை 'டெலிவரி' எடுத்தேன்.

விசயபுரம் என்ற பகுதியில் அச்சகத்தில் அச்சடிக்கப்படுகிற பிரதிகளைத் திருவாரூர் அலுவலகத்திற்குக் கொண்டு வர ஆள் வைக்கவோ, வண்டி வைக்கவோ என்னிடம் வசதிகள் இருந்ததில்லை. இரவோடு இரவாக அவைகளை நானும் பத்திரிகை மேனேஜர் கனக சுந்தரமும் தலையில் தூக்கிக்கொண்டு வருவோம்.

> ஆற்றைக் கடக்க அப்போது ஒரு மூங்கில் பாலம் இருந்தது. அந்தப் பாலத்தின் வழியாகப் பத்திரிகைகளைத் தூக்கிக்கொண்டு அலுவலகம் வருவோம்.
>
> நாங்கள் இருவரும் இரவெல்லாம் உட்கார்ந்து, விற்பனையாளர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் ஒட்டி அனுப்புவோம். இப்படி எத்தனை நாளைக்கு ஒரு பத்திரிகையை நடத்த முடியும்?
>
> பத்திரிகை வாழ்வதா? சாவதா? என்ற போராட்டம் நடந்து கொண்டிருந்தது"

என்று வேதனை பொங்கிட எழுதியிருக்கிறார் கலைஞர்.

அதன்பிறகு என்ன நடந்தது? அதையும் கலைஞரே கூறுகிறார்.

> திருவாரூரில் குடும்பம் நடத்திக் கொண்டிருந்த எனக்கு ஒரு நாள் பொழுதைப் போக்குவதே கஷ்டமாக இருந்தது.
>
> முரசொலி வாரப்பத்திரிகையையும் வாரந்தோறும் தொடர்ந்து நடத்த முடியவில்லை.

பள்ளி மாணவப் பருவந்தொட்டே இவ்வாறு கலைஞர் அவர்களுக்கு ஏற்பட்ட தமிழ்க் காதல்தான், இன்றைக்கு அவரை இந்த அளவிற்கு உயர்த்தி, தமிழ்ச் சமுதாயத்தின் உதயசூரியனாக ஒளிமுகம் காட்டச் செய்திருக்கிறது; குன்றின் மேலிட்ட விளக்காக்கிச் சுடர்விடச் செய்திருக்கிறது என்பதே உண்மை.

கலையுலகில் கலைஞர்

திருவாரூரிலிருந்த கலைஞர் அவர்கள், சேலம் மாடர்ன் தியேட்டர்சில் கவி க.மு. ஷெரீஃப்புடன் போய், சில காலம் பணியாற்றிவிட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தார். 8.3.1954இல் கலைஞரின் கனல் நெறிக்கும் வசனத்தோடு 'மனோகரா' திரைப்படம் வெளிவந்தது.

முரசொலி மீண்டும் வருதல்

சென்னையிலிருந்து முரசொலி வார ஏடு வெளியிடும் எண்ணம் வலுப்பெற்றிருந்தது. 2.4.1954இல் அந்த எண்ணம் ஒரு

வழியாக ஈடேறிச் சென்னையிலிருந்து முதலாவது முரசொலி வார ஏடு 8 பக்கங்களுடன் அச்சில் வெளிவந்தது. பெரும் சிக்கலுக்குப் பின், சென்னை - சூளையில் உள்ள பாரதி அச்சகத்தில்தான் முதல் இதழ் அச்சிடப்பட்டது.

தொடக்ககாலச் சிக்கல்

முதல் இதழை அச்சிட்ட சம்பவமே சுவையானது; முரசொலி அலுவலகத்திற்கு உரிய நேரத்தில் அச்சிடும் இயந்திரம் வந்து சேரவில்லை; இதனால், புகழ் பெற்றிருந்த 'பேசும் படம்' அச்சகத்தில் அச்சிடுவதென்று பேசி முடிவு செய்யப்பட்டது. அச்சிடத் தயாரிக்கப்பட்ட பாரங்களை எடுத்துக் கொண்டு நிர்வாகி சி.டி.எம்., அண்ணன் கே. சொர்ணம் முதலானோர் அங்கு சென்றனர். ஆனால், அவர்களுக்கு அங்கு ஒரு அதிர்ச்சி காத்திருந்தது!

'பேசும் படம்' அச்சு இயந்திரம் பழுதாகிவிட்டதாம்! அதன் ஆசிரியர் டி.வி. ராம்நாத் இப்படிச் சொல்ல, கொண்டு சென்றோர் கைபிசைந்து நின்றனர். இந்த ஆரம்பத் தடங்கலை எப்படிப் போய்க் கலைஞரிடம் சொல்லுவது?

இதைப் புரிந்துகொண்ட ராம்நாத், சூளையில் இருக்கும் பாரதி அச்சகத்திற்குத் தாமே தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசி, அதை அச்சிட்டுத் தர ஏற்பாடு செய்தார்; "எல்லாம் நல்லபடி நடக்கும் போய்வாருங்கள்'' என்று வாழ்த்தியும் அனுப்பினார். அவ்வாறே நடந்தது.

இப்படித்தான், சென்னையிலிருந்து முதல் வார ஏடான முரசொலி வெளிவந்தது. அப்போதெல்லாம் ஏடுகளைப் பார்சல் கட்டும் வேலையில் கலைஞர் மட்டுமல்லாமல் பிற்காலத்தில் பிரபல திரைப்பட இயக்குநராக இருந்த ஏ. பீம்சிங் அவர்களும் முனைந்து நின்று பாடுபட்டது உண்டு!

'மனோகரா' திரைப்படக் கதை - வசனத்தைப் புத்தகமாக வெளியிட விரும்பினார் கலைஞர்; அண்ணா சாலையில் இருந்த பாரத தேவி அச்சகத்தில் அச்சிட்டு அது வெளியிடப்பட்டது; பல்லாயிரக் கணக்கில் விற்பனையான அந்தப் புத்தகத்தால் வந்த பணமும் முரசொலி வார வெளியீடு தடையின்றி வெளிவரத் தக்க பலம் சேர்த்தது.

சென்னை - இராயப்பேட்டை பகுதியில் சீனிவாசப் பெருமாள் சந்நிதி தெருவில் முரசொலி அலுவலகம் அமைந்தது; ரூ.35 வாடகை; சி.டி.எம். (C.D.M.) எனச் சுருக்கமாகக் கூறப்படும் சி. தெட்சணாமூர்த்தி என்கிற கலைஞரின் நண்பர்தான் அப்போதும் அலுவலக நிர்வாகியாக இருந்தார்.

சொந்தக் கட்டடம்

முதல் முரசொலி இதழே 3000 படிகள் அச்சிடப்பட்டன. இரண்டாவது இதழ் 10,000, மூன்றாவது இதழ் 20,000, நான்காவது இதழ் 25,000 என்று முரசொலியின் விற்பனை எண்ணிக்கை உயர்ந்து கொண்டே சென்றது. சில மாதங்களிலேயே அந்த எண்ணிக்கை 40,000-த்தைத் தாண்டிய போது, இந்த அலுவலகம் போதாது என்கிற நிலையிலேதான், ஆயிரம் விளக்குப் பகுதியில் அண்ணா சாலையிலேயே, அப்துல் காதர் என்பாரின் கட்டிடமொன்று முரசொலி அலுவலத்திற்காக வாடகைக்கு அமர்த்தப்பட்டது. பெருமுயற்சிக்குப்பின், நாளடைவில் அது சொந்தக் கட்டடமும் ஆகியது. சொந்தமாக, சிலிண்டர் மிஷின் வாங்கப்பட்டது. ஆயிரம் விளக்கில் இப்போது 'ஸ்டேட் பேங்க்'கின் கிளை அலுவலகம் இருக்கிறதே? அதே இடத்தில்தான் அந்தக் கட்டிடம் முன்பு அமைந்திருந்தது.

சென்னையில் முதல் வார ஏடு

சென்னையிலிருந்து 2.4.1954 வெள்ளியன்று வெளியிடப்பட்ட முதல் முரசொலி வார ஏட்டின் முன் பக்கம் தலைப்பில், முரசொலி வார இதழ் - 2 அணா - ஆசிரியர் மு. கருணாநிதி - முரசு 1 - ஒலி 1 என்ற விவரங்கள் இடம் பெற்றிருந்தன.

திருவாரூரிலிருந்து வெளியான முரசொலி துண்டுப் பிரசுரத்தின் அளவு 1/8 டெம்மி அளவு; சென்னையிலிருந்து அச்சியற்றி வெளியிடப்பட்ட முரசொலி வார ஏட்டின் அளவு 'கிரவுன்' சைஸ் ஆகும்.

'கடமை தீர்த்தது வங்கம் - காத்திருக்கிறது திராவிடம்' என்பதே அந்த முதல் ஏட்டின் முதல் பக்கக் கட்டுரை. எழுதியவர் ஆசிரியரே. 'மு.க.' என்று மட்டும் பெயர் போடப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரையின் தொடக்கம் இது :

'செங்கோல் செலுத்திய கட்சி, சீறிப் பாய்ந்து உரிமைப்போர் நடத்திய இயக்கம், பச்சைப் பிறைக்கொடி படர்ந்தோட, வெற்றி மாலை அசைந்தாட அகிலமெங்கும் 'சுதந்திர பாகிஸ்தான் பாரீர்' என்று ஜெயமுரசு கொட்டிய முன்னணி! அந்த அணி சிதறிவிட்டது. ஆம் - புதியதோர் அரசு கண்ட முஸ்லீம் லீக் மூலையில் தள்ளப்பட்டு விட்டது. அரசு கட்டில் ஏறி ஆறு ஆண்டுக் காலத்திற்குள் "ஆண்டி மடத்துக்குப் போ!" என்று ஆணை பிறந்துவிட்டது. குடும்ப அனுபவம் கொஞ்சமும் கிட்டவில்லை. குழந்தைக்குத் தாயாக வேண்டுமென்ற சிறிய ஆவலும் நிறைவேறவில்லை.

வீட்டுக்கு வந்த கோமளவல்லி விதவையாகி விட்டாள் என்பது போல, கொலு மண்டபம் புகுந்த லீக்கில் கொற்றவர்கள் குனிந்த தலை நிமிரா நிலை பெற்று விட்டனர். கிழக்கு வங்காளம் பாகிஸ்தானின் ஒரு பகுதி. அதைப் பெற்றதாக உரிமை கொண்டாடியவர்கள் அதை ஆண்டனர்.

ஆண்டவர்களின் ஆயுள் ஆறுவருடம் நீடிக்க முடியவில்லை. திடீர் வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது.

'மூனா கானா', 'மாலுமி', 'எழுத்தாணி', 'மூக்காஜி' போன்ற பெயர்களிலும் அவர் சிறுகதை, தொடர்கதை, கட்டுரை, கவிதை, நாடகம், இலக்கியத் தொடர்களையெல்லாம் எழுதிவந்தார். 'கடைசிப் பக்கம்', 'சுழல் விளக்கு', 'பொன்முடிக்குக் கடிதம்', 'பேனா ஓவியம்' ஆகிய சிறப்புப் பகுதிகளில் கலைஞரின் கைவண்ணங்கள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து 'நீட்டோலை', 'உடன்பிறப்பே' கடிதங்கள் வெளிவரலாயின.

தாம் சட்டமன்ற உறுப்பினர் ஆவதற்கு முன்பே - 6.4.1956இல், சென்னை ராஜ்யத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயரிடவேண்டும் என்று முரசொலி வார ஏட்டில் எழுதிய தனிச்சிறப்பும் கலைஞருக்கு உண்டு.

முரசொலி வார ஏட்டு அலுவலகம், அறிஞர் அண்ணா அவர்களும் மற்ற கழகத் தலைவர்களும், அறிவகத்தை அடுத்து

அடிக்கடி வந்து செல்ல ஏற்ற இடமாகியது. 1960 ஜூலை வரை இந்த வார ஏட்டில் பயணம் தொடர்ந்தது.

பெரியார் பிறந்த நாளில் இருந்துதான், தி.மு.க.வின் 12ஆம் ஆண்டு முதல் - அதாவது 17.9.1960 முதல் வார ஏடாக இருந்து முரசொலி நாளேடாக வெளிவரலாயிற்று.

1976இல் முரசொலி நாளேட்டில்தான் 'கரிகாலன் பதில்கள்' வினா - விடைப் பகுதி தொடங்கப்பட்டது.

வார ஏட்டின் பெருமை

முரசொலி வார ஏட்டில்தான் கலைஞர் தமது 'புதையல்', 'வெள்ளிக்கிழமை', 'சுருளிமலை', 'ரோமாபுரிப் பாண்டியன்' ஆகிய தொடரோவியங்களையெல்லாம் எழுதினார்.

இவ்வாறெல்லாம் வளர்ந்த முரசொலிதான் திருவாளர்கள் மாறன், கவிஞர் கருணானந்தம், கே. சொர்ணம், அமிர்தம், பி.சி. கணேசன், அடியார், ஏ.கே. வில்வம், சிவ. இளங்கோ, எஸ்.எஸ். தென்னரசு, நாஞ்சில் மனோகரன், செல்வம், பா. ஜெயப்பிரகாசம், மாமூலன், பி.எல். ராஜேந்திரன், என்.வி. கலைமணி, மா. பாண்டியன், கோ. தினகரன், விசுவலிங்கம், அ. சங்கரையா, அதியமான், இருகூரான், முல்லை சத்தி, இளந்துறவி, சொ.அ. முத்துராமன், விவேகானந்தன், மணிமொழி, சீனிவாச மூர்த்தி, நா. கிருஷ்ணமூர்த்தி, ஓவியர் செல்லப்பன், முருகேசன் ஆகியவர்களையெல்லாம் அரசியல் விற்பன்னர்களாக, திரைப்படத்துறை வசனகர்த்தாக்களாக, கதாசிரியர்களாக, எழுத்தாளர்களாக, கட்டுரையாளர்களாக, ஓவியர்களாக, பத்திரிகையாளர்களாகவெல்லாம் தமிழகத்திலே நிலையுயர்த்தி நிமிர்ந்து நடைபோடச் செய்தது.

கனகசுந்தரம், சி.டி.எம்., கரந்தை சண்முக வடிவேலு, 'பாய்' எனச் செல்லமாக அழைக்கப்பட்ட மோகன்தாஸ், அழகு மாணிக்கம், மல்லிகார்ஜுனன், செல்வம், பெரியண்ணன், மு.க. ஸ்டாலின் போன்ற நல்ல பத்திரிகை அலுவலக நிர்வாகிகளை உருவாகச் செய்தது.

'முரசொலி' மாறன்

முரசொலி வார ஏட்டிலும், நாள் ஏட்டிலும் கலைஞர் எழுதிய கடிதங்களை வகையுறத் தொகுத்து, திரு. பனையப்பன்

என்பாரின் 'அபிராமி பதிப்பகம்' மூலம் புத்தகங்களாகப் பத்துத் தொகுதிகள் வெளியிடச் செய்த தனிச் சிறப்பு, என்னுடைய கரங்களுக்கு உண்டு.

முரசொலி வார ஏட்டில் கார்ட்டூன்களும், நகைச்சுவைத் துணுக்குகளும் தொடர்ந்து வெளிவரலாயின. 'மயிலே மயிலே சிறகு போடு என்றால் போடாது; எப்போதாவதுதான் போடும்' என்று உவமைக் கவிஞர் சுரதா பற்றி, அறிஞர் அண்ணா கூறியதுண்டு; அப்படிப்பட்ட சுரதாவிடமிருந்தே முரசொலி வார ஏடு தொடர்ந்து கவிதைகளை எழுதி வாங்கி வெளியிட்டு வந்தது.

வார ஏடான முரசொலி ஆசிரியராக இருந்து, பிற்காலத்தில் மத்தியத் தொழிலமைச்சராகப் புகழ்பெற்றுத் திகழ்ந்த திரு. முரசொலி மாறன் அவர்கள், தமது முதல் சிறுகதையான 'காட்டுப்பூனை'யை வார ஏட்டில்தான் எழுதினார். 'கிரேக்கப் புராணம்', 'கலைத்தோட்டம்' ஆகிய தொடர்க் கட்டுரைகளையும், வேறுபல எழுத்தோவியங்களையும் தம் திறம் பளிச்சிடுமாறு தொடர்ந்து எழுதிடலானார்; பெரும்பாலானவற்றில் அவர் ஏனோ தமது பெயரைப் போட்டுக் கொண்டதில்லை.

'பிறைவானம்' என்ற சிறுவர் பகுதியைத் திரு. கே. சொர்ணம் தொடர்ந்து எழுதிவந்தார். வாசகர் கடிதங்கள் 'உங்கள் பார்வை' என்ற பெயரிலும், கலையுலகச் செய்திகள் 'இயல் இசை கூத்து'ப் பகுதியிலும் (8.4.55) இடம்பெற்றன. 'நில் நண்பா! எங்கே ஓடுகிறாய்?', 'அந்துமணி' ஆகிய பகுதிகளும் இடம் பெறலாயின.

அண்ணாவின் உண்மைத் தம்பி

முரசொலி வார ஏட்டைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் என்னவென்றால் 1948 தூத்துக்குடி மாநாட்டில், அண்ணாவைப் பற்றி எம்.ஆர். இராதா அவதூறாகப் பேசிவிட்டார். அதைக் கண்டித்து - 'நடிகவேள் மாநாட்டில் நஞ்சு கலந்தார்' என்று கலைஞர் எழுதி, தடம்புரளும் தன்மை அண்ணாவுக்கில்லை என்பதை விளக்கி எழுதினார். அதன் மூலம் அண்ணா பெற்ற மக்கள்சக்தி அளவற்றதாகும்.

1947இல் இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்தர நாள் 'துக்க நாளா?- இன்ப நாளா?' என்பதனை ஒட்டி, அறிஞர் அண்ணா அவர்களுக்கும் - தந்தை பெரியார் அவர்களுக்கும் கருத்து மாறுபாடு ஏற்பட்டிருந்த

காலம்; அறிஞர் அண்ணா, திராவிடர் கழக நடவடிக்கைகளிலிருந்து சற்றே ஒதுங்கி நின்ற நேரம்!

கலைஞரவர்கள் 1948 முதலே அறிஞர் அண்ணா அவர்களை அதிதீவிரமாக ஆதரிக்கத் தொடங்கியிருந்தார்!

அப்போதுதான், தூத்துக்குடியில் மிகப் பெரிய அளவில் திராவிடர் கழக மாநாடு நடைபெற ஏற்பாடாகி இருந்தது. இம் மாநாட்டுக்கு அண்ணா செல்லவில்லை. இரு பெரும் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட கசப்பையொட்டி, இயக்கத்தவர்கள், இரு கூறாகப் பிரிந்து நின்றனர்!

அதைப் பற்றிக் கலைஞர் எழுதுகிறார்:

அண்ணனைக் கட்சியிலிருந்து விலக்க வேண்டும் - என்று ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள்; தூத்துக்குடி மாநாட்டில், அண்ணாவின் படத்தைக்கூட - ஆத்திரப்பட்ட சில அவசரக்காரர்கள் - கொளுத்தினர்!

பெரியாருக்கும் - அண்ணாவுக்கும் இடையே பாலம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் முரசொலி வார இதழில் 'கடைசி நாட்கள்' பெரியாரையும் - அண்ணாவையும் ஒன்றுசேர்க்கும் முயற்சிக்கு இடையூறாக நிற்கின்ற சந்தர்ப்பவாதிகளைப் பற்றியெல்லாம் அதில் விமர்சித்திருந்தேன்; அந்தக் கட்டுரைக்கு, திராவிடர் கழகத்தில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது; முரசொலி இதழைப் பல இடங்களில் கொளுத்தினர்; பயமுறுத்தல் கடிதங்கள் பல வந்தன; அடுத்த இதழ் அச்சேற்ற முடியாதபடி அங்கேயுள்ள திராவிடர் கழகத்தினர் எமக்கு இடையூறு விளைவித்தனர்!"

இந்த முக்கியத்துவம் நிரம்பிய 'இறுதி நாட்கள்' என்னும் கட்டுரை, 19.5.48 'முரசொலி' வார இதழில் வெளிவந்தது. முற்றிலும் புதுமையான முறையில், இக்கட்டுரைக்கு - விறுவிறுப்பான துணைத்தலைப்புகளைப் பக்கத்திற்குப் பக்கம் கலைஞர் கொடுத்திருந்தார்:

"வீரச் சிரிப்பிலே.
வெண்தாடி அசைவிலே!"

"புலிக்குட்டிகளின்
புரட்சி முழக்கம்!"

"அண்ணா பாதை!"
அவர்கள் பாதை இல்லை!"

"நடிவேள் - மாநாட்டில்
நஞ்சு கலந்தார்!"

"ஆறிலும் சாவுதான்!
நூறிலும் சாவுதான்!"

"பித்தம் தெளிந்திடுவீர்-
இரத்தம் கொதிப்பேறு முன்பே!"

இக்கட்டுரை, தூத்துக்குடி மாநாட்டைப் பற்றிய நிலைமை விளக்கக் கட்டுரையாகவும் வர்ணனைக் கட்டுரையாகவும் விமரிசனக் கட்டுரையாகவும் அண்ணாவுக்கு ஆதரவான கட்டுரையாகவும் அமைந்திருந்தது!

அண்ணா வேறு கட்சிக்குப் போய்விடுவார் என்று சிலர் பிரச்சாரம் செய்ததைக் கேட்டு குமுறி எழுந்த கலைஞர், இக் கட்டுரையில் எழுதுகிறார்:

> நமக்கு நம்பிக்கை இருக்கிறது. . . உறுதி இருக்கிறது! அண்ணா போகும் பாதை, ஜீவாவின் பாதையல்ல - வல்லத்தரசு வழியல்ல - விசுவநாதம் சாலையல்ல!
>
> . . திராவிடத் தோழர்கள் நம்பவேண்டிய ஓர் உறுதிச் செய்தியுமாகும்.
>
> அண்ணா - எதிரிகள் கோடி இட்டழைத்தாலும், தொடார்! திராவிடத்தைக் காக்கப் போரிடுவார்!

அண்ணாவின் பெருமையையும் கலைஞர் வர்ணிக்கிறார்:

> அண்ணா அவர்கள் பெரியாரின் புரட்சிக் கீதத்திற்குப் புது மெருகு அமைத்து, பல்கலைக்கழகங்களைப் பகுத்தறிவு நிலையங்களாக ஆக்கித் தந்தவர்! தலைவர் தோண்டிக் கொடுத்த பொன்கட்டிகளுக்குப் புது மெருகு கொடுத்து, புலவர் கூட்டத்தை இயக்க

வீரர்களாக்கியவர். 'கம்ப ராமாயணத்தில் கலை வந்து சொட்டுதண்ணே' என்று பாடிக் கிடந்த ரசிகமணிகளின் வாய்களுக்குப் பூட்டு மாட்டியவர்! சரிகைத் தொப்பிகளை - 'சர்'களைச் சாய்க்கும் சேலத்துத் தீர்மானத்தைச் சங்கநாதம் ஆக்கியவர்! 'கனம்'களின் கை குலுக்கல்களை அலட்சியப்படுத்தி, சுயமரியாதைச் சோலையிலே கருத்தை உலவ விட்டவர்!

அத்தகைய ஆற்றல் பெற்ற அண்ணாவின் சேவை, கழகத்திற்குத் தேவை

என்று வாதிட்டார்!

நடிகவேள் எம்.ஆர். இராதா மேற்படி மாநாட்டில் நடைபெற்ற நாடகத்தில், "நான் சொல்லுகிறேன் - தளபதியை இனி எந்தக் கூட்டத்திற்கும், நாடகத் தலைமைகளுக்கும், விழாவுக்கும் அழைக்காதீர்கள்" என்று வசனம் பேசினார்!

கலைஞர், இக்கட்டுரையிலேயே இதற்கும் பதில் கொடுத்தார்:

திராவிடர் கழகத்திற்கு, மின்னல் நடிகர் இராதா அவர்களின் நடிப்புத் தொண்டு எவ்வளவு தேவையோ - அவருடைய புரட்சி நாடகங்கள் எவ்வளவு தேவையோ அதைவிட, அண்ணா தரும் அறிவுக் கருவூலங்கள் இன்னும் அதிமாகத் தேவை! அந்தத் தேவையைத் 'தேள் கடி' என்று கூறுவதா? தேனை - 'நஞ்சு' என்பதா? தென்றலை - 'சூறைக் காற்று' என்பதா? தித்திக்கும் தீந்தமிழை வெறுக்க உபதேசிப்பதா? அதுவும் தலைவர் பெரியார் (பேசி முடிந்ததும்) பேசாத வார்த்தைகளை . . . அண்ணாவையே ஒழித்துக் கட்டும் வகையில் வாரி இறைப்பதா?

இக்கட்டுரை திராவிடர் இயக்கத்தில், 1948இல் பெரும் பூகம்பத்தைக் கிளப்பிவிட்டது! முரசொலியும் தாக்குதலுக்குள்ளானது!

கலைஞரின் எழுத்தாற்றல் முழுமையையும் - அரசியல் விவேகத்தையும் இக்கட்டுரையிலிருந்தே நாம் உணரலாம்!

தளபதிக்கு வாழ்த்து

1948இல், இந்தி, கட்டாயமாகத் திணிக்கப்பட்டது. அரசியலில் ஒதுங்கி நின்ற அண்ணா, திருவாரூரில் நடைபெற்ற தமிழிசைச் செல்வர் டி.வி. நமச்சிவாயம் திருமணத்தில் கலந்துகொண்ட போது, 17.6.48இல் பேசியதாக, 10.8.48 முரசொலி இதழில் ஒரு செய்தி வெளிவந்தது:

> அண்ணாதுரை பாரத காலத்துப் பாண்டவர்போல் அஞ்ஞாத வாசம் புரிகிறாரே ஒழிய, விதுரனைப் போல் வில்லை ஒடித்துவிடவில்லை!
>
> நாளைக்கே 'விடுதலை'யில் ஒரு அறிக்கை வெளிவந்து, 'போருக்குப் புறப்படுக' என்றால், முதல் வரிசையில் அண்ணாதுரையின் பெயர்தான் இருக்கும்!

1948 ஜூலை 10இல் இந்தியை எதிர்த்துத் தொடங்கிய முதற்படைத் தலைவராக (சர்வாதிகாரியாக) இருந்து மறியலைத் துவக்கி நடத்தும்படி, தோழர் சி.என். அண்ணாதுரை எம்.ஏ. அவர்களை மத்திய திராவிடர் கழக நிர்வாகக் குழு நியமித்தது!

இதனால் மனம் மகிழ்ந்த கலைஞர், 'அண்ணாவுக்கு வாழ்த்து' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினார்: இக்கட்டுரை வெளியான 10.8.48 முரசொலியிலேயும் - முன்னர் குறிப்பிட்டது போன்று - அண்ணாவை, அட்டையில் முழுப்பக்க அளவில் குதிரை மீதேற்றி, திராவிடர்க் கழகக் கொடி பறக்கும் கோட்டையை விட்டுப் போருக்குப் புறப்படும் தளபதியாகச் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. அதே அட்டைப் படம் தொடர்ந்து மூன்று வார முரசொலி இதழ்களில் இடம் பெற்றது.

> எழுத்தின் வேந்தரே! இளத் தலைவா! 'போர் வந்தால், பட்டாளத்தார் பட்டியலில், அண்ணாதுரையின் பெயர்தான் முதலில் எழுதப்படும்' எனத் திருவாரூரில் முழக்கமிட்டீர்! மாதமிரண்டு மறையவில்லை! மறக்குல மகிபா! இதோ - களத்தில் உங்களைக் காண்கிறோம்!
>
> அண்ணா! அறிஞரே! தளபதியே! அடக்குமுறையை எதிர்த்துச் செல்கிறீர்! இன்னும் மனம் விட்டுச் சொல்ல வேண்டுமானால், 'சாவுமுனை' நோக்கிச் செல்கிறீர்! ஆ!

எழுதவே கை நடுங்குகிறது! உள்ளம் குலுங்குகிறது! கண்ணீர் பெருகுகிறது! வெற்றியுடன் திரும்பி வருமாறு வாழ்த்துகிறோம்! ஆயிரம் முறை வணங்கி அனுப்புகிறோம்! அண்ணா திரும்பி வருக!

இக்கட்டுரை, முரசொலியின் 19ஆவது இதழில் வெளிவந்தது. இன்னொரு முக்கியச் சிறப்பு. கலைஞரின் 'குறளோவியம்' முதன்முதலில் முரசொலியில்தான் வெளிவந்தது.

முதல் குறளோவியம்

6.8.1954 முரசொலி வார ஏட்டில் கலைஞர் எழுதி இடம் பெற்ற அந்த முதலாவது குறளோவியம் இதுதான்:

பண்பாடும் தென்றல் தவழ் சோலை - நேரமோ மாலை - கண் பாடும் காதல் பாட்டால் கட்டழகன் ஒருவனை மயக்கி நிற்கிறாள் கனங்குழை அணங்கொருத்தி. அவள் மாதோ - மயிலோ என ஐயுற்று நிற்கிறான் அந்தப் பருவ இளைஞன்.

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு

என ஏங்குகிறான். மனம் வீங்குகிறான். இவன் அவளைப் பார்த்துவிட்டான். அவளும் இவனைப் பார்த்துவிட்டாள். அவள்மீது எந்தக் குற்றமுமில்லை. ஆனாலும் அவள்மீது அவன்பழி சுமத்துகிறான். மின்னல் கண்ணைப் பறிக்கிறது. அது மின்னலின் குற்றமா? அதைப் பார்ப்பவர் குற்றமா? மின்னலைப் பார்த்து ரசிக்க விரும்புகிறவன் அந்த மின்னல் தரும் இன்னலைக் குறித்து வருந்துவது போல - வள்ளுவர் படைத்துள்ள கதாநாயகனும் வருந்துகிறானாம். வள்ளுவரின் வயது என்னவோ; நமக்குத் தெரியாது - ஆனாலும் காதலைப் பற்றி எழுதும்போது அவர் ஒரு கிண்டற்கார வாலிபப் புலவராகவே மாறிவிடுகிறார்.

என்னுடைய நோக்கிற்கு, எதிர் நோக்கு வழங்கும் அந்த அணங்கு, சேனையைக் கொண்டு வந்து என்னை எதிர்த்து வருத்துவது போலிருக்கிறது எனப் புலம்புகிறான். அந்தக் குறளோவியம் இதோ!

நோக்கினா ணோக்கெதிர் நோக்குத றாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

இலட்சிய வாசகங்கள்

தொடக்க காலத்தில் முரசொலி வார ஏட்டின் இலட்சிய வாசகங்கள் என்ன தெரியுமா?

'சோலையிலே தென்றலிலே சொகுசு - பின்னர்
சொந்தநாட்டைக் காப்பாற்றச் சுழற்று வாளை!'

'காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு'

இவ்வாறாக அந்த வாசகங்கள் எழுச்சியும், இனிப்பும் கொண்டு விளங்கின. முரசொலிக்கென்று தனி இலச்சினைகள் கலைஞரால் உருவாக்கப்பட்டன.

* பூமி உருண்டையை ஓர் உழைப்பாளி தன் தோளிலே தூக்கி நிறுத்துவான்!
* கொத்த வரும் பருந்திடமிருந்து ஒரு தாய் தன் குழந்தையைக் காப்பாற்றப் போராடுவாள்!
* அதன் பிறகு, இப்போதெல்லாம் முரசொலியில் நாள்தோறும் காணப்படும் முரட்டுக் காட்டெருமை யோடு ஒரு கட்டிளங்காளை போராடும் சின்னம் அதுதான்!

பத்திரிகைத் தர்மம்

பத்திரிகைத் தர்மம் என்கிறார்களே? அதைக் காப்பதிலும் ஒரு போதும் கவனம் பிசகியதில்லை கலைஞர். ஒருமுறை ஏ.கே. வில்வம் எழுதியிருந்த ஒரு சிறுகதை, யாரையோ கேவலப்படுத்துவதுபோல் தெரியவே,அச்சான 25,000 பிரதிகளையும் கொளுத்திவிடச் சொல்லிவிட்டார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

'முரசொலி' பத்திரிகை வார ஏடாக இருந்த போதும் சரி; நாளேடான பிறகும் சரி; குறித்த நேரத்திற்கு வந்தாக வேண்டும் - வெளியூரிலெல்லாம் குறித்த காலத்தில் கிடைத்தாக வேண்டும் - பிழையின்றி வந்தாக வேண்டும் என்பன, கலைஞர் அவர்களின் முக்கிய நோக்கங்களாக இருந்தன; இருந்து வருகின்றன.

கலைஞரின் கண்டிப்பு

கலைஞருக்கு அவ்வாறு வரும் கோபத்தால் சில நேரங்களில் அலுவலகத்தையே இழுத்துப் பூட்டிவிட்டு, அவரே சாவியை எடுத்துக்கொண்டு போய்விட்டதும் உண்டு; அவரோடு வெளியே வந்தவர்கள் வந்தவர்கள்தான்; உள்ளே சிக்கியோர் சிக்கியோர்தான்! பிறகு யாராவது போய், பாட்டியாரிடம் (கலைஞரின் தாயார் அஞ்சுகத்தம்மையார்) அழுது புலம்பிச் சாவியை வாங்கிவருவோம்.

கழகப் பணி காரணமாக எந்த ஊருக்குச் சென்றாலும் சரி; எதிர்ப்படும் தோழர்களிடம் 'முரசொலி குறித்த நாளில் வருகிறதா?. . . படிக்கிறீர்களா?. . . எப்படியிருக்கிறது' என்றெல்லாம் கேட்பது கலைஞர் வழக்கம்.

ஆசிரியர் கலைஞரை அன்றும் சரி; இன்றும் சரி; ஆசிரியர் என்றுதான் நாங்கள் எல்லாம் குறிப்பிடுவோம். 1962ஆம் ஆண்டில், அதாவது 'முரசொலி' நாளேடு ஆன பிறகு ஒருமுறை, தம் சொந்த ஊரான திருவாரூருக்குச் சென்றிருந்த அவர், அதேபோல் ஒரு தோழரிடம் விசாரிக்கப்போய், விஷயம் விபரீதமாகிவிட்டது. வந்த மனிதர், "நேற்றைய முரசொலிதான் இன்று வந்தது" என்று கூறி விட்டார்; போதாக்குறைக்குத் தம் கையிலிருந்த அந்த ஏட்டினையும் அவரிடம் கொடுத்து விட்டிருக்கிறார்.

அவ்வளவுதான், அஞ்சலட்டை ஒன்று வாங்கி வரச்செய்து, உடனே முரசொலி நிர்வாகியாக அப்போது இருந்த, திரு. மல்லிகார்ஜுனனுக்கு, ஒரு கடிதத்தைக் கோபமும், கிண்டலும் குழைத்து எழுதிப்போட்டுவிட்டார் கலைஞர்.

பெரியார், அண்ணா, கலைஞர்

அயராத அரசியல் பணி, கலையுலகத் தொண்டு, முதலமைச்சர் பொறுப்பு போன்ற ஓய்வற்ற பலவித உழைப்புகளுக்கு நடுவே இன்றைக்கும் கலைஞர் அவர்கள் முரசொலியின் ஒலி ஓங்கி ஒலிக்கச் செய்வதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். இதற்கு முழுமுதல் காரணமே அவர் அதைத் தம் முதல் ஏடாக மட்டுமல்ல - முதல் குழந்தை போலவே கருதிப் பேணிக் காத்துப் பராமரித்து வருகிறார்.

அந்தக் காலத்தில் - அதாவது 1930-40ஆம் ஆண்டுகளில், தந்தை பெரியார் அவர்களின் பச்சை அட்டைக் குடி அரசு ஏடும்,

1940-50களில் அறிஞர் அண்ணாவின் திராவிட நாடும் எப்படி இளைஞர் தம் உள்ளங்களில் தனியாட்சி நடத்தி வந்தனவோ, அதைப்போலவே முரசொலியும் இளைஞர்தம் உள்ளத்தையெல்லாம் உணர்ச்சி ததும்பும் நடையில், கிளர்ச்சியூட்டும் கருத்துக்களை மாற்றுக் கட்சியினரின் நெஞ்சங்களிலும் பண்படுத்தி விதைக்கும் அளவில் வெளிவந்தது.

முரசொலியின் வளர்ச்சி, தமிழின் வளர்ச்சி; தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி; நமது இன, மான முன்னேற்றத்திற்கான மைல் கல்; முரசொலியின் பணி, தமிழ் அன்னைக்குப் புதிய பல அணிமணிகளைப் பூட்டி மகிழ்ந்திடச் செய்த பெரும் பணி - அரும்பணி; கண்மூடிக் கருத்துக்களெல்லாம் மண்மூடச் செய்து, மூடநம்பிக்கையாம் முடைநாற்றம் வீசும் சூழலிலிருந்து கைதூக்கி விட்டு நமக்கெல்லாம் நிம்மதியும், நீங்கா மகிழ்ச்சியும், எழுச்சியும் தரும்பணியாகும் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சியல்ல!

எழுத்தாளர் கருணாநிதி

திருவாரூர் கருணாநிதி இளமைக் காலத்திலேயே சிறந்த பேச்சாளராக மட்டுமல்ல, ஏற்றமிகு எழுத்தாளராகவும் விளங்கிய பெருமையாளர். அக்காலத்தில் திருவாரூர் முரசொலி எழுத்தாளர் மு. கருணாநிதி என்றால்தான் எல்லோருக்கும் தெரியும்.

குடி அரசு ஏட்டில், ஈரோட்டில் பணியாற்றியபோது கூட, துணை ஆசிரியராக அந்த ஏட்டில் 13.10.1945இல் வெளியிடப்பட்ட ஒரு சிறு விளம்பரம் இங்கே குறிப்பிடத்தக்கது.

> திருவாரூர் 'முரசொலி' எழுத்தாளர்
> தோழர் மு. கருணாநிதி அவர்களின்
> தற்கால முகவரி :-
> மு. கருணாநிதி
> C/o குடி அரசு ஆபீஸ்,
> ஈரோடு

இருபது இருபத்தோராண்டுகளில், மேலே நாம் குறிப்பிட்ட ஏடுகளெல்லாம் தம் பயணத்தைப் பல்வேறு காரணங்களால் நிறுத்திக் கொண்டுவிட்டன; 'முரசொலி' மட்டுமே இன்னமும் வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறது.

எவ்வளவு பெரிய கண்டங்களையெல்லாம் தாண்டி, ஏச்சுக்களையும் பேச்சுக்களையும், எதிர்ப்புகளையும் கடந்து இந்த நிலை முரசொலிக்கு வாய்த்தது? இது பற்றி மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கட்டுரைகள் இங்கே வெளியிடப்படுகின்றன.

முரசொலி என் முதல் குழந்தை

1941ஆம் ஆண்டில் 'மாணவ் நேசன்' என்பது நான் நடத்திய கையெழுத்து ஏடு! இப்போதுகூட மாணவர்கள் பல இடங்களில் கையெழுத்து ஏடுகள் நடத்துகிறார்கள். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், ஒருமுறை ஒரு மாணவர் தந்த கையெழுத்து ஏட்டைப் படித்துவிட்டு "கைராட்டையால் நாடு முன்னேறும் என்பது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ அவ்வளவு பைத்தியக்காரத்தனம் இந்தக் கையெழுத்து ஏடு நடத்துவதும்" என்று எழுதிக் கொடுத்தார். மாணவர்கள் நடத்தும் கையெழுத்து ஏடுகளால் நாடு ஒரேயடியாக முன்னேறி விடுமென்று யாரும் கூறவில்லை. சிறுதுளி பெருவெள்ளம்; பலர் சேர்ந்ததே நாடு. அந்த நாட்டின் எதிர்காலத்திற்குரியவர்கள் மாணவர்கள், அவர்கள் தங்கள் எண்ணங்களைச் செம்மைப்படுத்திக் கொள்ள மெருகேற்றிக்கொள்ள, கையெழுத்து ஏடுகள் நல்ல வாய்ப்பு அளிக்கின்றன என்பதே என் நம்பிக்கை. இளமைப் பருவத்தில் எழுதுகின்றவர்களைப் பெரிய பத்திரிகைகள் எடுத்துக் கொள்வதில்லை. அந்தப் பத்திரிகைகளுக்கு எழுதுவது போன்ற தகுதியைக் கையெழுத்துப் பிரதியில் ஏற்படும் பயிற்சி, தாராளமாகத் தருகிறது என்பேன். பள்ளியில் நடத்தும் கையெழுத்து ஏடுகளை ஒரு சமயம் ஒருவர்தான் படிக்கமுடியும். ஆனால் நான் நடத்திய ஏடு மாதத்திற்கு இரண்டு வெளியீடு. ஒவ்வொரு வெளியீடும் எட்டுப் பக்கங்கள். பிரதிகளோ ஐம்பதுக்கும் குறையாது. ஐம்பது பிரதிகளையும் நானும் சில நண்பர்களும் மட்டுமே உட்கார்ந்து 'காப்பி' எடுப்போம். 'டெம்மி பேப்பர்' செலவை மட்டும் வசூல் செய்து கொள்வோம்; உழைப்பும் கட்டுரைகளும் இனாம். இந்த ரீதியில்

மாணவ நேசன் ஏழெட்டு மாதங்கள் நடைபெற்றது. இப்படி ஐம்பது பிரதிகள் கையாலேயே எழுதி வழங்குவது சிரமமாயிருக்கிறதே, வேறு என்ன செய்யலாம் என்று சிந்தித்த போதுதான் முரசொலி தோன்றியது. வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை என்ற அளவிலே அல்ல! துண்டு வெளியீடுகளாக!

இன்றைய நாளிதழ் முரசொலி துண்டு வெளியீடாகத் தொடங்கப்பட்ட கதையைத்தான் 'நெஞ்சுக்கு நீதி' முதல் பாகத்தில் குறிப்பிட்டிருந்தேன். அப்படி தொடங்கப் பட்ட ஆண்டு 1942ஆம் ஆண்டு! ஆம்! இன்றைக்கு நாற்பத்து ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் - 1942ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட முரசொலி தான் நான் பெற்ற முதல் குழந்தை!

வார இதழ் நாளிதழாக மாறிய பிறகு, படத்துறையில் நானும் தம்பி மாறனும் ஈட்டிய பணத்தையெல்லாம் முரசொலி விழுங்கியும் கூட, ஒவ்வொரு நாளும் மூச்சு நின்று விடுமோ என்று சந்தேகத்துடன்தான் நாளிதழ் வெளிவர வேண்டியிருந்தது! விற்பனையாளர்களோ பெருந்தொகை பாக்கி வைத்தனர்! ஒரு கட்டத்தில் - 1960ஆம் ஆண்டின் இறுதியில் முரசொலியை முழுமையாக நிறுத்திவிட எண்ணி அறிவிப்புச் செய்தபோது - அண்ணா அவர்கள் அதைத் தடுத்துக் கூறி, "தொடர்ந்து நடத்துக" என ஆணை பிறப்பித்தார்கள்!

முரசொலி வெளியிட்ட ஒவ்வொரு பொங்கல் மலருக்கும் அண்ணா எழுதிய வாழ்த்துக் கட்டுரைகள் ஒரு இலட்சியக் காவியமாகும்!

மாற்றாரால் முரசொலி அலுவலகம் பலமுறை தாக்கப்பட்டதுண்டு! நானும் தம்பி மாறனும் அரசின் அடக்குமுறைக்கு ஆளானதுண்டு! சிறைபுகுந்ததும் உண்டு - முரசொலியினால்!

இவ்வாறு 1942இல் ஒலிக்கத் தொடங்கிய முரசொலி நாற்பத்து ஏழாவது வயதை நிறைவு செய்கிறது.

முரசொலி நாளிதழ்! அன்றைக்குத் துண்டு வெளியீடாக (நோட்டீஸ் போல) வந்தபோது எத்தகைய இலட்சிய நோக்கு கொண்டிருந்ததோ அந்த நோக்கிலிருந்து இன்றைக்கும் கழகத்தின் கண்மணிகளாம் தொண்டர்களுக்கு "முரசொலி" ஒரு போர்வாள்தான்!

முதலில் ஒருமுறை மதுரையில் ஒரு பதிப்பு தொடங்கி இடையில் துவண்டு, மீண்டும் இதோ இன்று முரசொலி மதுரைப் பதிப்பு வெளிவருகிறது. தென் பாண்டி மண்டலத்தில் ஒலிக்கும் இந்த முரசு தமிழர் உரிமைகளுக்காகத் தமிழின மேன்மைக்காகத் தொடர்ந்து ஒலித்திட என் வாழ்த்துக்களை வழங்குகிறேன்.

முரசொலி - 13.8.1989.

துண்டு வெளியீடு
வார இதழ் -
நாளேடு -

இப்படி ஐம்பது ஆண்டுக் கால வளர்ச்சியின் இடையிடையே தொய்வுகள் உண்டு! ஆனால் என் தலை தொங்கியதில்லை! நிமிர்ந்து நின்று நான் முரசு கொட்டியதற்கு மட்டுமல்லாமல் நேர்த்தியான முறையில் இன்று முரசு கொட்டப்படுவதற்கும் தம்பி முரசொலி மாறனின் உழைப்பு காரணம்! திறன் காரணம்!

எனக்கு ஈடுகொடுத்து அலுவலகத்தில் பணியாற்றிய வர்கள் - பணியாற்றுகிறவர்கள் என உழைத்த, உழைக்கின்ற உடன்பிறப்புகள் காரணம்! நண்பர்கள் காரணம்! நல்லோர்கள் காரணம்!

முரசொலியைப் போர் வாளாகவும், கேடயமாகவும் ஏந்திக் கொண்டு கழகம் நடத்துகிற என் உயிரினும் மேலான உடன்பிறப்புகள் காரணம்!

இதோ; முரசொலியின் ஐம்பது ஆண்டுக் காலத்தொண்டு; மலராகத் தொகுக்கப் பெற்று உங்கள் கரங்களில் மணம் வீசிக் கொண்டிருக்கிறது!

ஐம்பது ஆண்டுகளில் எத்தனையோ நிகழ்ச்சிகள் - எத்தனையோ அரசியல் திருப்பங்கள் - கனிவு ஒரு காலக்கட்டம் - கசப்பு ஒரு காலகட்டம் - இந்தத் தட்பவெப்ப மாறுதல்கள் மலரில் தெரியும்! எனினும் வரலாற்றை மறைக்கக் கூடாதென ஓரளவு சிலவற்றை வெளியிட்டுத் தீரவேண்டிய நிலை! இந்த நிலையை இம்மலர் புரியவைக்கும்! எனவே பொறுத்தருள்க!

மலர் தயாரிக்கும் பணியை அழகுற நிறைவேற்றியுள்ளார் எனது அன்புக்குரிய நண்பர் க. திருநாவுக்கரசு அவர்கள்! அவருக்கு என் பாராட்டு!

அன்புள்ள
மு. கருணாநிதி

முரசொலி பொன்விழா மலருக்காகக் கலைஞர் அவர்கள் எழுதிய கடிதம் இது. 2/8/92இல்

'முரசொலி வார இதழாகத் தொடங்கப்பெற்ற விவரங்களை - அதன் மூலம் தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழகத்திற்கும் ஆற்றப்பட்ட இணையற்ற பணிகளை மட்டுமே நாம் இதுவரை பார்த்தோம்.

போர்வாள்

ப. மகாலிங்கம்

போர்வாளின் புறப்பாடு

இந்தியத் திருநாடு விடுதலைப் பொன்விழா காணுகின்ற இந்தக் காலகட்டத்தில் திராவிட இயக்க இதழ்கள் குறித்த ஆய்வு நிகழ்த்தப்பெறுவது பொருத்தமுடையது. ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் நாடு விடுதலை பெற்ற அந்த 1947 ஆகஸ்டு 15ஆம் நாளுக்கு மறுநாளிலே மலர்ந்த திராவிட இயக்க வார இதழ்தான் – 'போர்வாள்'.

விடுதலை இந்தியாவில் வெளிவந்த முதல் வார இதழ் என்கிற பெருமை சில இதழ்களுக்கு உண்டு என்றால், அதிலே குறிப்பிடத்தக்க ஒன்று, காஞ்சி மணிமொழியாரும், பேராசிரியர் மா. இளஞ்செழியனும் இணைந்து நடத்திய இந்தப் போர்வாள். அதே நாளிலே இன்னொரு இதழ் வெளிவந்திருக்கிறது; திராவிட இயக்கத் தூணாக விளங்கிய திரு. என்.வி. நடராசன் அவர்கள் தொடங்கிய 'திராவிடன்' என்ற இதழ்.

விடுதலை பெற்றுப் புது எழுச்சியாக உதயமாகிடும் இந்திய நாட்டு விடுதலைச் சூழலில் போர்வாள் தன்னை இணைத்துக் கொள்கிறதா? அல்லது அதிலிருந்து மாறுபட்டு நிற்கின்றதா? எந்த அளவில் உடன்படுகிறது; எந்த அளவிலே மாறுபடுகிறது என்கிற அடிப்படையில் போர்வளை அணுகிப் பார்ப்பதுதான் பொருத்தமாக அமையும்.

போர்வாள் இதழ் வரலாற்று அடிப்படையில் விடுதலையை ஏற்றுக்கொள்கிறது – அறிஞர் அண்ணாவின் வழிநின்று நாட்டு விடுதலையை ஏற்றுக்கொள்கிறது. அதே நேரத்திலே நாடு முழுமையான விடுதலையை இன்னமும் பெறவில்லையே. . . ! வெறும் ஆட்சிக் கைமாற்றம்தானே நிகழ்ந்திருக்கிறது! என்கின்ற ஆதங்கத்தையும் கொண்ட ஓர் இதழாகப் போர்வாள் புறப்படுகின்றது.

ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திரம் பெற்ற அன்றைக்கே இந்த இதழ் வந்திருக்கலாம். ஆனால், அதற்குப் பதிலாக ஒரு நாள் தள்ளி

வந்ததற்கான காரணமாகப் பார்க்கின்றபோது, அன்றைய இதழ்களெல்லாம் ஞாயிற்றுக் கிழமையிலே வருகின்ற இதழ்களாக இருந்திருக்க, அதிலிருந்து சற்று மாற்றத்தை ஏற்படுத்தி, பிற இதழ்களின் வருகைக்கு முந்தைய நாளில் வருகின்ற ஒரு புது இதழாகப் போர்வாளை அமைக்க வேண்டும் என்பதற்காக - வாரந்தோறும் இதழ் வெளிவரும் நாளாகச் சனிக்கிழமையை அவர்கள் தெரிவு செய்திருக்கிறார்கள். சனிக்கிழமை என்று குறிப்பிட்ட காரணத்திலே, விடுதலை பெற்ற நாள் என்பதற்காக வெள்ளியன்று தொடங்கினால், தொடர்ந்து வரும் வாரங்களில் சரிப்பட்டு வராது என்பதாலே விடுதலை நாட்டிலே வருகின்ற முதல் இதழாக சனிக்கிழமையிலே - விடுதலைக்கு மறுநாள் 'போர்வாள்' மலர்ந்திருக்கிறது என்ற காரணத்தை அறிய முடிகிறது.

போர்வாளின் முதல் வீச்சு

போர்வாளின் அந்த முதல் இதழில் ஆகஸ்டு 1947, 16ஆம் நாள், சனிக்கிழமை எனப் பதிவாகியுள்ளது. திராவிடர் வார வெளியீடு என்ற குறிப்போடு வாள்: ஒன்று; வீச்சு: ஒன்றாக இது வெளிப்பட்டுள்ளது. இந்தப் போர்வாள் முதல் இதழின் அட்டைப் படத்திலேயே கேலிச்சித்திரம் எனப்படும் 'கருத்துப்படம்' இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. அரசியல் கருத்தை - ஆழமான ஒரு கருத்தை அது வெளிப்படுத்துகிறது. ஏற்கெனவே சொன்ன சிந்தனைகளை அடியொற்றிய நிலையிலே விடுதலையை ஏற்றுக் கொள்கிறது.

விடுதலை நாட்டிலே நாடெங்கும் சுதந்திரப் பேச்சு நிலவிக்கொண்டிருக்கிற நேரத்திலே மலர்கிற முதல் இதழ் போர்வாள் - சுதந்திரம் பெற்றால் மட்டும் போதாது எல்லோருக்கும் உரிமை என்கிற நிலை இன்னும் இந்த மண்ணில் வாய்க்கவில்லையே என்கிற ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறது.

முதல் இதழின் அட்டைப் படக் கருத்து - விளக்கம்

போர்வாளின் முதல் இதழ் கருத்துப்படத்தில் இந்திய வரைபடம். அதிலே வட இந்தியப்பகுதிகளில் அமர்ந்திருப்போராகப் பாணியர்களும் இராஷ்டிரபதிகளும் எனக் குறிக்கப்பட்டுள்ளனர். தென்னகம் என்கிற அந்த எல்லைப் பகுதிகள் எல்லாம் கைகள் வரையப்பட்டிருக்கின்றன. அந்தக் கைகளெல்லாம் இரும்புச்

சங்கிலியாலே பிணைக்கப்பட்டுள்ளன. அந்தப் பிணைப்பை வடவர்கள் கையிலே ஏந்தியிருக்கிறார்கள். இத்தகு காட்சி ஓவியத்தை அட்டைப்படமாக முதல் பக்கத்தில் தாங்கியுள்ளது. பெற்ற இந்த விடுதலையால் ஆங்கிலேயர் கையிலிருந்து மாறி, வடவர்களுடைய ஆதிக்கத்தாலே தென்னகம் சிக்குண்டு கிடக்கிற ஓர் அவலத்தைச் சுட்டிக்காட்டி எச்சரிக்கின்ற கருத்துப்பட விளக்கத்தோடு இந்த முதல் இதழ் வெளிவந்துள்ளது.

இந்த முதல் இதழே போர்வாளின் நோக்கத்தை நமக்குத் தெரியப்படுத்துகின்ற வகையில் அமைந்துள்ளது. 'இன்பத்திராவிடமே நமது இலட்சியம்' என்கிற ஒரு முழக்கத்தைத் தலைப்புப் பகுதியிலேயே கொண்டிருக்கிறது.

காஞ்சி மணிமொழியாரின் இதழ் துறை முன் அனுபவங்கள்

போர்வாள் குறித்து அதன் ஆசிரியர்களிலே ஒருவராக இருந்து, சிறக்க விளங்கிய பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்களிடத்திலே கலந்துரையாடியதன்வழி, போர்வாள் குறித்தும் நிறுவனராகவும் ஆசிரியராகவும் இருந்து, அதனை நடத்திய காஞ்சி மணிமொழியார் குறித்தும் முதல்நிலை ஆதாரத் தகவல்கள் பலவற்றைப் பதிவாக்கிடும் வாய்ப்பு கிட்டியது.

காஞ்சி மணிமொழியார் அவர்களுக்குத் திராவிட இயக்கத்திலேயும் இதழ் துறையிலேயும் நீண்ட நெடிய அனுபவமும் பட்டறிவுத் திறமும் உண்டு. இதன் தொடக்கமாக 1927ஆம் ஆண்டில் காஞ்சிபுரத்தில் அவர் இருந்த காலத்திலேயே அங்கிருந்து வெளிவந்த 'பாரதம்' என்ற ஓர் இதழை அவர் ஆசிரியராக இருந்து நடத்தியிருக்கிறார். வேறு ஒரு சாரார் நடத்திய இதழ் அது என்றாலும் கூட, இதழ் ஆசிரிய அனுபவத்தை அவர் பெறுவதற்கான வாய்ப்பாக அது அமைந்தது. அதேபோல தொடர்ந்து 1929 தொடங்கி 15 ஆண்டுகள் 'செங்குந்தமித்திரன்' என்ற இதழின் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் இருந்து பணியாற்றிய அனுபவத்தை மெத்தப் பெற்றவர் மணிமொழியார். ஒரு இனம் சார்ந்த இதழுக்குக் காஞ்சி மணிமொழியார் ஆசிரியரா? என்கிற வியப்பும் ஐயப்பாடும் தோன்றலாம். கால வளர்ச்சிநிலை - பரிணாம வளர்ச்சி என்று பார்க்கிறபோது, காஞ்சியிலே இருந்து மணிமொழியாரைத் தலைநகரத்துக்கு - சென்னைக்கு வருகிற சூழலைத் தந்தது அந்த செங்குந்தமித்திரன் என்னும் இதழ்தான். அத்தோடு மட்டுமல்லாமல்

திராவிட இயக்கத் தொடக்ககால வெளியீடுகளுக்கு - பிரசுரங்களுக்கு - இதழ்களுக்கு அச்சு வடிவில் எவையெவை வந்தனவோ அவற்றுக்கெல்லாம் ஓர் உருவாக்கக் களமாக அமைந்திருக்கிற நிலையும் காஞ்சி மணிமொழியார் ஒப்பந்த அடிப்படையில் தம் பொறுப்பில் ஏற்று நடத்திவந்த 'செங்குந்தமித்திரன் அச்சகம்' எனும் அந்த இதழ்சார் அச்சுக்கூடத்திற்கே உரியது.

அவ்வகையில், திராவிட இயக்கத்தின் தொடக்ககால எழுச்சிப் பயணத்தில் மணிமொழியார் சார்ந்த இந்த அச்சகம் பின்னிப் பிணைந்திருக்கிற நிலைகளை வரலாற்று அடிப்படையில் அறியமுடிகிறது. அத்தோடு மட்டுமல்லாமல் நெசவாளக் குடும்பங்களுடைய நொடிந்த நிலைக்காகக் குரல்கொடுக்க முற்படுகின்ற மணிமொழியார் படிப்படியாகப் பாதிக்கப்பட்ட இனத்தவர் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ அவர்களுக்கெல்லாம் குரல் கொடுக்கிற - போராடுகிற போராளியாக உயர்வதற்கு இந்தச் சூழல் ஒரு முதல் படிக்கல்லாக அமைந்தது என்ற அளவிலே மணிமொழியாருக்கு அந்த இனம் சார்ந்த அமைப்புகளோடு இருக்கிற தொடர்புகளைக் கருதிப்பார்க்க முடிகிறது.

செங்குந்தமித்திரன் இதழில் மணிமொழியாருடைய ஆசிரியர் பொறுப்பு மிகச்சிறந்த பயிற்சிக் களமாகவே அவருக்கு அமைந்திருக்கிறது. இதழ் துறையிலே என்னென்ன புதுப்புதுச் சாதனைகளையெல்லாம் - சோதனை அடிப்படையிலே செய்து பார்க்கமுடியுமோ அவற்றுக்கெல்லாம் இடந்தந்த இதழாக செங்குந்தமித்திரனை அறியமுடிகிறது. அதைப்பற்றிக் குறிப்பிடும்போது,

> இனத்திற்கான இதழ் என்பது பெயரில்தான். ஆனால் அது ஓர் இலக்கிய இதழாக - சமுதாய விமர்சன இதழாக - அரசியல் செய்திகளையெல்லாம் மக்களுக்குச் சென்றுசேர்க்கிற இதழாக - ஓர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து இன மக்களுக்கும் உரித்தான ஒரு பொது இதழாக மணிமொழியாருடைய அந்த ஆசிரியத்திறனாலே இலங்கியது

என்ற நிலையைப் பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த அனுபவத்தையெல்லாம் பெற்றுவந்த மணிமொழியார், 1947இலே போர்வாள் என்னும் பத்திரிகையைத் தொடங்குகிறார்.

'நவயுக' இதழாசிரியராக அறிஞர் அண்ணா

அண்ணா அவர்களுக்கும் மணிமொழியார் அவர்களுக்கும் இருக்கிற தொடர்பு, நினைவு கொள்ளத் தக்கது. அறிஞர் அண்ணா அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் முதுகலை படித்துவிட்டு, இளம் பட்டதாரியாக வெளிவந்த நேரம் - அண்ணாவின் பேச்சாற்றலை உலகமெல்லாம் அறிந்திருந்த நேரம் - ஆனாலும் கூட அண்ணா அவர்கள் எத்தகைய எழுத்து வல்லமை வாய்க்கப் பெற்றவர் என்பதை மக்கள் அறியாத காலம் - அந்தக் காலக் கட்டத்திலே இளைஞராக இருக்கிற அண்ணா அவர்களை மணிமொழியார் அன்போடு ஒருங்கிணைத்து அவருடைய ஆற்றலைச் சமுதாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடு, 'நவயுகம்' என்னும் இதழை 1937 ஆம் ஆண்டிலே தொடங்குகிறார். அது தொடங்கப்பட்டுப் பதின்மூன்று வாரங்கள் வெளிவந்த இதழாக அதனை வரலாற்றுப் பதிவாக அறிய முடிகிறது.

பதின்மூன்று வாரங்கள் வந்த இதழ் என்றாலும் கூட அறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையிலே மிக அழுத்தமான சுவடு பதித்த ஓர் இதழ் என்ற நிலையை அது பெற்றுத் திகழ்கிறது. அண்ணா அவர்களே அதைப் பெருமிதத்தோடு குறிப்பிடுகின்றார். மணிமொழியாருடைய அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழாவிலே அண்ணா அவர்கள் உரையாற்றுகின்றபோது,

> என்னுடைய ஆற்றல் எனக்கே தெரியாத காலத்திலே - எழுத்தாற்றல் எனக்கே தெரியாத காலத்திலே, மணிமொழியார் அவர்கள் என்னை அன்போடு அரவணைத்து இதழ் ஆசிரியராக ஆக்கி, நவயுகத்தை நடைமுறைப் படுத்தினார். அத்தோடு இதழுக்கு உரிய அந்தப் பொருளாதார நெருக்கடிகளெல்லாம் இருந்த சூழலிலே, நான் அவரிடத்திலே - மணிமொழியாரிடத்திலே அணுகி, ஏதாவது சிரமம் இருக்கிறதா? என்று வினவுகிறபோது அவர் பதிலாக எதையும் சொல்லமாட்டார். ஒரே ஒரு புன்னகை பூப்பார். இளம் வயதுடைய எனக்கு, இதழினுடைய பொருளாதார நெருக்கடிகளையெல்லாம் சொல்லி, ஏன் சுமையை ஏற்படுத்தவேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு அந்தச் சுமைகளையெல்லாம் மணிமொழியார் தாங்கிக் கொண்டார். என்னை இதழாளனாக அறிமுகம் செய்து வைத்தார்

என்று அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிடுகின்றார். அத்தகு நவயுகம் இதழ் மணிமொழியாருடைய அந்த வளர்ச்சிப் பாதையிலே அமைந்திருக்கிறது என்றறிகிறோம். ஆக, இந்தப் பின்னணிகளை யெல்லாம் கொண்டிருக்கின்ற மணிமொழியாருக்குப் பின்னாளில் போர்வாள் என்ற இதழைத் தொடங்குவதற்கான சூழல் உருக்கொண்டது எனலாம்.

இணை ஆசிரியராக மா. இளஞ்செழியன்

போர்வாள் இதழை மணிமொழியார் தொடங்குகிறபோது அவருக்கு வயது 47. அவருடைய மைந்தர் பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்களுடைய வயது 22. பச்சையப்பன் கல்லூரியில் பொருளாதாரம் பி.ஏ., (ஆனர்ஸ்) பட்டம் படித்துவிட்டு, 1947இல்தான் இவர் வெளியிலே வருகின்றார். தன்னுடைய மைந்தன் ஒரு பட்டதாரியாக வந்த சூழ்நிலையிலே மணிமொழியார் போர்வாள் இதழைத் தொடங்குகிறார். பட்டதாரி மைந்தன் என்கிற காரணத்தினால் மட்டும் மணிமொழியாருக்கு அவர்மீது நம்பிக்கை வந்துவிடவில்லை. பேராசிரியர் இளஞ்செழியன் அவர்கள் மாணவராக இருந்த காலத்திலேயே 'திராவிட நாடு' இதழில் தொடர்ந்து எழுதி வந்திருக்கின்றார். அத்தொடு மற்ற திராவிட இயக்க இதழ்களிலே எழுதக் கூடிய வாய்ப்பும் அவருக்கு அமைந்திருக்கின்றது. திராவிட இயக்கத்தில் மாணவப் பருவம் முதலே தன்னை இணைத்துக் கொண்டிருக்கக்கூடிய ஓர் இனமான உணர்வுகொண்ட மைந்தனாக வாய்க்கப் பெற்றிருப்பதனாலே மணிமொழியார் தன் மைந்தன் வருகைக்கு ஏற்ற அந்தச் சூழல் அமைந்திட, போர்வாள் இதழைத் தொடங்குகிறார்.

மணிமொழியாரின் இளமையைப் போற்றும் மாண்பு

நல்ல பட்டறிவு அனுபவங்கள் வாய்க்கப் பெற்றிருந்த மணிமொழியாருக்கு அப்போது வயது 47; செயல் ஆளுமைக்கு உகந்த நடுவயதைக் கொண்டிருக்கிற மணிமொழியார் தான் தொடங்குகிற போர்வாள் இதழ்ப் பணிகளில் தன் இள வயது மகனை நம்பிக்கையோடு ஈடுபடுத்துகின்றார். போர்வளைத் தொடங்கியவர் மணிமொழியார் - அதை நிர்வாகம் செய்தவர் மணிமொழியார்; ஆனால் எந்தவிதமான தலையீட்டையும் தன் மைந்தனிடத்திலே கொள்ளாமல் முழுஉரிமையைத் தன் மைந்தனிடத்திலே தந்து இதழை நடத்தச் செய்தார் என்ற செய்தியை அறிகிறபோது எந்த அளவுக்கு

விட்டுக் கொடுக்கிற பண்பும் இளமையை வரவேற்றுப் போற்றுகிற அந்தத் தன்மையும் அவரிடத்தில் அமைந்திருக்கிறது என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அந்த மாண்பை அவர்தம் மைந்தர் பேராசிரியர் இளஞ்செழியனே எண்ணி எண்ணி வியக்கின்றார்.

காலங்கள் பல கடந்துவிட்டன. ஐம்பதாண்டுகளுக்கு முந்தைய வரலாறு என்றாலும்கூட இன்றைக்கு மணிமொழியாரைத் தன்னுடைய தந்தையாக மட்டும் அல்லாமல் ஓர் அரசியல் தலைவராக - அரசியல் ஞானம் படைத்த ஒரு பெருந்தகையாக எண்ணிப் பார்த்து, இப்படிச் செய்திருக்கிறாரே என்று வியக்கிற அளவுக்கு மணிமொழியாருடைய அணுகுமுறை அமைந்திருக்கிறது.

தொடக்கப் பின்னணியும் தொடர் பயணமும்

போர்வாள் இதழ் 1947ஆம் ஆண்டு தொடங்கி 1958ஆம் ஆண்டு வரையிலே ஒரு பதினொரு ஆண்டுகால வரலாற்றைத் தம் வரவால் பதிவு செய்துள்ளது. இந்தத் தமிழகத்திலே அதனுடைய தாக்கத்தைப் பெருமளவில் ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் இடையில் இரண்டாண்டு காலம் வராமல் தவிர்க்கப்பட்டிருக்கின்ற நிலையும் அறியப்படுகிறது.

1954ஆம் ஆண்டு ஆகஸ்டு மூன்றாம் வாரத்திலிருந்து 1956ஆம் ஆண்டு டிசம்பர் முடிய போர்வாள் இல்லாத் தமிழகமாக இருந்திருக்கிறது. இதற்கிடையில், 1956ஆம் ஆண்டிலே திருச்சியில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இரண்டாவது மாநில மாநாடு நடைபெறுகிறது. நாவலர் அவர்களை அண்ணா அவர்கள் அன்போடு - உரிமையோடு அழைத்து, 'தம்பி வா! தலைமையேற்க வா!!' என்று அழைத்த அந்த வரலாற்றுப் புகழ்மிக்க மாநாடு! ஏறக்குறைய இவர்களுடைய உணர்வுகளெல்லாம் ஒன்றுபோலவே இருக்கின்ற தன்மைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. இளமையைப் போற்றுகின்ற அந்த நிலை! அந்த மாநாட்டிலே, நேரடித் தேர்தலில் ஈடுபடுவது என்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தீர்மானத்தின் அடிப்படையிலே அது தேர்தலைச் சந்திக்க விழைகிறது. அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தொடர்பான இதழ் இன்றியமையாத தேவையாக இருப்பதினால் நின்றுவிட்டிருந்த போர்வாள் மீண்டும் வெளிவரத் தொடங்கியது.

5.1.1957 முதல் 3.5.1958 வரையிலே போர்வாள் தன்னுடைய பயணத்தைத் தொடர்கிறது. போர்வாளைப் பொறுத்த வரையில் அது

எந்தெந்தக் காலங்களிலே வெளிவந்து செயல்பட்டிருக்கிறது என்ற குறிப்பை இதன் வாயிலாக நாம் அறிய முடிகிறது. ஆக எட்டரை ஆண்டுகள் இந்தப் போர்வாள் தன்னுடைய பணியை இந்த மண்ணிலே ஆற்றியிருக்கிறது.

துணை ஆசிரியர்கள்

போர்வாள் இதழின் ஆசிரியர்களாகத் தொடக்கத்தில் காஞ்சி மணிமொழியார் அவர்களும் பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்களும் இணைந்து பணியாற்றியுள்ளார்கள். ஆனால் 1952 ஆம் ஆண்டில் பேராசிரியர் இளஞ்செழியன் அவர்கள் பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் பேராசிரியராகப் பணியை ஏற்றுச் செல்கிறார். அந்தக் காலந் தொடங்கி நேரடியாக இதழ்ப் பணிகளில் பேராசிரியர் இளஞ்செழியன் அவர்கள் இணைந்திருக்கக் கூடிய சூழல் அமையவில்லை. தந்தைக்கு உதவியாக இதழ்ப் பணிகளில் இருந்தாரே தவிர, நேரடியாக அதிலே தன்னை இணைத்துக்கொள்ளுகிற நிலை அமையவில்லை. இந்த நிலைக்கிடையில் பேராசிரியர் இளஞ்செழியன் அவர்களும் தந்தையார் மணிமொழியார் அவர்களும் ஆசிரியர்களாக இருந்த அதே காலக் கட்டத்தில் 1951-52ஆம் ஆண்டுகளில் திருமிகு காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் போர்வாளினுடைய துணை ஆசிரியராக இருந்து செயல்பட்டிருக்கிறார்.

காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகவும் புதுவைத் தொழிலாளர்மித்திரனுடைய ஆசிரியராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. காஞ்சி மணிமொழியாருடைய மாணவர் என்கிற உறவு நிலையும் காஞ்சி கல்யாணசுந்தரத்திற்கு உரியது. காஞ்சிபுரம் பச்சையப்பன் கிளைப் பள்ளியில் மணிமொழியார் தமிழாசிரியராகப் பணியாற்றிய காலகட்டத்தில் 1927களில் மாணவராக இவர் அங்கே பயின்றிருக்கிறார். அந்த வகையில் தன் ஆசிரியரிடத்திலேயே இவர் துணை ஆசிரியராகப் போர்வாளுக்குத் தொண்டாற்றியிருக்கிற நிலை அமைகிறது.

காஞ்சி மணிமொழியாருடைய இந்த இதழ்ப் பணிக்கு அந்தக் காலக்கட்டங்களிலே திருமிகு என்.வி. கலைமணி அவர்கள், திருமிகு மா.கு. நெடுமாறன் அவர்கள், திருமிகு மா. சேரலாதன் அவர்கள் முதலியோர் துணை ஆசிரியர்களாக இருந்து, அளப்பரிய பணிகளையெல்லாம் செய்து வந்திருக்கிறார்கள் என்பது

குறிப்பிடத்தக்கது. ஆக, இத்தகைய வடிவமைப்போடு இத்தகைய பின்னணியோடு தொடங்கப்பட்ட இதழ்தான் இந்தப் போர்வாள். போர்வாளிலே எழுதிய படைப்பாளர்கள் - போர்வாள் வாயிலாக அறிமுகமான எழுத்தாளர்கள் எனப் பலரைக் குறிப்பிடலாம். இத்தகு ஆற்றல் மிக்க இளைஞர்கள் உள்ளிட்ட பலரையும் மக்கள் பலரும் அறிவதற்கான வாய்ப்பாக இந்தப் போர்வாள் அந்தக் காலகட்டங்களில் அமைந்திருக்கிறது. அந்த வகையிலே திண்டுக்கல் தங்கவேலர், திருவனந்தபுரம் இளஞ்சேரன், தில்லை வில்லாளன், தில்லை மறைமுதல்வன், தத்துவமேதை டி.கே.சீனிவாசன், கே.ஜி. இராதாமணாளன், ந.ஜெகன்நாதன், ஆ.ல. நாராயணன், க. அறிவழகன், கௌதமன், பி.சி. கணேசன், தாமரைக்கண்ணன், எஸ்.எஸ். தென்னரசு போன்றவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். அத்தோடு மட்டுமல்லாமல் கவிஞர் தமிழ்ஒளி, கவிஞர் முடியரசன், கவிஞர் வாணிதாசன் முதலியோரின் கவிதைகள் பல நேரங்களில் இதிலே மலர்ந்திருக்கின்றன.

டாக்டர் மு. வரதராசனார் உள்ளிட்ட அறிஞர் பெருமக்களின் கட்டுரைகள் போர்வாள் சிறப்பு மலர்களிலே வந்திருக்கின்றன என்ற நிலைகளையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற போது, பரவலாகப் பலரும் எழுதுவதற்குரிய ஒரு களமாகப் போர்வாள் அமைந்து, தமிழ்மொழி - இனம் உணர்வுக்குத் துணை செய்திருக்கின்றது என்ற நிலையை அறிய முடிகிறது.

முதல் இதழின் தலையங்கம்

போர்வாள் முதல் இதழின் தலையங்கம், 'போர்வாள் புறப்படுகிறது' என்பதுதான். போர்வாள் புறப்படுகிறது! இதைப் பற்றிச் சொல்லுகிறபோது பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்கள், தந்தையார் மணிமொழியாருடைய வழிகாட்டல் எந்த அளவுக்கு இருந்திருக்கிறது என்பதைக் குறிப்பிடுகின்றார்கள். முதல் நாள் இதழுக்குத் தலையங்கம் வடிவமைக்கப்பட்டுவிட்டது. அச்சுக்குக் கொடுக்கும் நேரம்; தந்தையார் மணிமொழியார் அதைப் பார்வையிடுகின்றார்; தலைப்பு 'போர்வாள் தயாராகிறது' என்று இருக்க, உடனே தன் மைந்தனிடத்தில் இவ்வாறு குறிப்பிடுகின்றாராம்: 'தயாராகிறது' என்ற சொல் போர்த்துகீசியச் சொல். ஆகவே, அதைத் தவிர்க்கலாமே என்று சொல்லிவிட்டு நகர்ந்துவிடுகின்றாராம். அடுத்து, இவர் அதை மாற்றி, 'போர்வாள் புறப்படுகிறது' என்ற சொல்லை அங்கே அமைக்கின்றார். ஆக, தவறு வந்துவிடுமோ என்று

எண்ணுகிறபோது அதற்கு வழிகாட்டுகிற பொறுப்பை மணிமொழியார் ஏற்றுக் கொள்கிறார்; அதே நேரத்தில் தமிழிலே ஆழ்ந்த புலவராக இருக்கின்ற அவர், அதற்கு மாற்றுச்சொல்லைத் தான் சொல்லலாம் என்கிற ஆதிக்க மனப்பாங்குகூட இல்லாமல் அதையும் சுதந்திரமாகத் தன் மைந்தனுக்கே - இளமைக்கே விட்டுச் செல்லுகிற நிலையை அறியமுடிகிறது.

மா. இளஞ்செழியனின் எழுத்தாளுமை

போர்வாளின் தொடக்க இதழின் தலையங்கம் அதனுடைய இலட்சியத்தை நமக்கு உணர்த்துவதாக அமைகிறது. பேராசிரியர் மா. இளஞ்செழியனுடைய எழுத்து நடையைப் பற்றிக் குறிப்பிடுகின்ற எழுத்தாளர் திருமிகு கே.ஜி. இராதாமணாளன் பின்வருமாறு சொல்லுகின்றார்:

> அந்தக் காலக்கட்டங்களிலே குமாரசாமி என்ற பேராலும் பிறகு, இளஞ்செழியன் என்ற பேராலும் திராவிட இயக்க இதழ்களிலே எழுதிவந்த அவர் அன்றைய திராவிட இயக்கத்தார் மத்தியிலே ஒரு வியப்பாகத் திகழ்ந்தாராம்; யார் இவர்? யார் இவர்? என்று ஆவலாகக் கேட்டு அறியக் கூடிய அளவுக்கு ஒரு கருத்து ஆழத்தையும் நடையின் வீச்சையும் கொண்டதாகப் பேராசிரியர் இளஞ்செழியனின் நடை அமைந்தது.

அறிஞர் அண்ணாவினுடைய பாசறையிலே அறிஞர் அண்ணாவினுடைய அந்த உணர்வை, வேகத்தை அப்படியே தனதாக்கிக் கொண்ட ஒருநிலை - இரண்டல்ல ஒன்று என்று சொல்லக்கூடிய அளவுக்கு ஐக்கியப்பட்ட மனநிலையின் காரணமாக அண்ணாவினுடைய அதே வேகம் - அண்ணாவினுடைய அதே தாக்கம் இளைஞர் பேராசிரியர் இளஞ்செழியனுடைய போக்கிலும் அமைந்துவிடுகிறது. ஆகவே, இக்காலகட்டங்களிலே இது எழுதியது இளஞ்செழியன் என்று சொல்லவில்லை என்றால் அண்ணாவினுடைய நடையோ என்று - அண்ணாவினுடைய வரலாறு படைத்திடும் முத்திரை பதித்திடும் நடை வேறுதான் என்றாலும் கூட - ஓர் ஐயப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு இவருடைய நடைவீச்சு இருக்குமென்று இராதாமணாளன் குறிப்பிடுகின்றார். அப்படிப்பட்ட ஆற்றல் மிக்க போக்குடைய இளஞ்செழியனுடைய எழுத்தை

அவருடைய தந்தையார் காலவேகத்துக்கு ஏற்ற நடைஇது என்று கண்டு தெளிந்ததனாலே, தான் ஒதுங்கிக் கொண்டு தன்னுடைய மைந்தரின் போர்வாளாகவே அதை உலாவரச் செய்திருக்கிறார் என்று கொள்வது தெளிவு.

நோக்கும் போக்கும்

போர்வாள் முதல் இதழின் தலையங்கத்திலேயே அதன் இணையாசிரியர் மா. இளஞ்செழியன் அவர்கள் போர்வாளின் குறிக்கோளையும் அதன் அணுகுமுறை பற்றியும் குறிப்பிடுகின்றார்.

> இன்பத் திராவிடம் தனது போர்ப்பாதையை அமைத்துக் கொண்டிருக்கும் பொன்னான நேரத்தில் போர்வாள் வருகின்றது, தமிழர்களைக்காண - கண்டு கைகுலுக்க! நாம் தமிழகத்துக்குத் தரும் போர்வாள் அலங்காரத்திற்காக உருக்கி வார்க்கப்பட்ட தங்கவாள் அல்ல; குறை உலகை ஆட்டிப்படைக்கும் உல்லாசச் சீமான்களின் இடுப்புப் பட்டாடையில் தொங்குவதற்குத் தீட்டப்பட்ட வைரவாளும் அல்ல; ஆயிரம் உண்டிங்கு சாதி என்று பாசுரம் பாடிக்கொண்டு, அந்தச் சாதி வேறுபாட்டை நிலைநாட்டும் வருணாச்சிரம தருமத்தையும் அதற்கு ஆதாரமான இந்து மதத்தையும் மாபாவிகளிடமிருந்து காப்பாற்றுவதற்காகக் கொதிக்கும் கண்களும் கொந்தளிக்கும் உள்ளமும் உரையவராய் உலாவுகின்ற பத்தாம் பசலைகளின் கையிருப்பு வாளும் அல்ல; நறுமண நெய்தடவி அழகிய பூச்சூடி முத்தை, மரகதத்தை, மாணிக்கத்தை, வைடூரியத்தை ஆங்காங்கே பொருத்தி வைத்து, 'பளீர்', 'பளீர்' என்று மின்னும் படியாக மன்னாதி மன்னர்கள் பட்டாடைமீது தவழுமே அத்தகைய வாளும் அல்ல; வெளிப்படையாகவே சொல்லிவிடுகின்றோம். அழகுக்கோ, அலங்காரத்திற்கோ பிறர் பார்த்து மெச்சுவதற்கோ பலரது கண்பார்வையைக் கவர்வதற்கோ ஏற்ற வாள் அல்ல; இன்பத் திராவிடமே இந்தா! என்று இந்நாள் நாம் தரும் இப்போர்வாள் - நமது போர்வாள் - போர்வாளேதான்! இழந்த விடுதலையைத் திரும்பப் பெறவேண்டும் என்று உறுதி செய்து கொண்டு, 'பெற்றால் திராவிட நாடு',

> இல்லையேல் இடுகாடு, என்று சூளுரை தந்துவிட்டு, வீரம் ததும்பும் நெஞ்சமும் த:மிழ்க் கனல் கக்கும் கண்களை உடையவராய் அதே ' திராவிடர் பாசறையில் நிரல்நிரலே அணிவகுத்து நிற்கும் அந்த ஆயிரமாயிரம் இளங்காளைகளின் கரங்களிலே நேரே சென்று தங்குவது இவ்வாள்

என்று தன்னுடைய அந்த முதல் இதழின் தலையங்கத்திலேயே இந்த ஒரு வீச்சோடு வாள் புறப்படுகிறது. அடுத்துச் சொல்லுகிறபோது,

"எஞ்ஞான்றும் போர்வாள் நேர்மையின் பக்கமே இருக்கும். நியாயத்தின் வெற்றிக்கே போராடும். திராவிடர்தம் பண்பாட்டைப் பழுதுறா வண்ணம் போற்றவும் கால நிலைக்கு ஏற்பப் புதுக்கவும் அது சிறிதும் அஞ்சாது. ஆணவம் எங்கெங்கே கொடிகட்டி வாழ்கிறதோ, அநீதி எந்தெந்த இடத்தில் அரசாள்கிறதோ, அக்கிரமம் யாராரிடத்தில் என்னென்ன உருவத்தில் உலவுகிறதோ அங்கெல்லாம் சென்று சென்று போர்வாள் அறப்பணி ஆற்றும்" என்கிற உறுதிப்பாட்டையும் சூளுரையையும் போர்வாள் தருகிறது.

"உண்மையை ஒளிக்காது எடுத்துச் சொல்வதே நமது இலட்சியம், அது யாருக்கு எவ்வளவு குமட்டலாக இருந்தாலும் சரி அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல், இரட்டுறமொழிதல், ஒன்றுக்கொன்று நேர்முரணான எட்டுக் கருத்தை உள்ளமைத்துச் சொற்றொடர்கள் தீட்டுதல், அதுவும் சரி, இதுவும் சரி, எல்லாம் சரி, என்று வேதாந்த வெற்றுரையாடுதல் முதலிய வழிகள் நமக்குத் தெரியா. அவை நமக்குத் தெரிய வேண்டிய தேவையும் இல்லை. நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைக்கும் நேரிய வழி ஒன்றுதான் நமக்குத் தெரியும். அது ஒன்றே போதும். புத்துலகப் பாதையில் தமிழகத்தைச் செவ்வனே செலுத்தும் சீரிய பணியை மேற்போட்டுக் கொண்டுள்ள நமக்கு வேறுவழி ஏனோ?" என்ற அளவிலே இந்த முதல் இதழினுடைய தலையங்கம், தன்னுடைய போர்வாள் பயணத்தினுடைய முழுக்கருத்தையும் - இலட்சியத்தையும் - வேகத்தையும் சொல்லி முடிக்கிற திறத்தை அறியமுடிகிறது.

மாற்றுக் கருத்துகளும் போர்வாளும்

போர்வாள் இதழிலே, எழுத்துப் போர்கள் பலவற்றிற்கு இடந்தந்திருக்கிற புதிய முயற்சியை அறிய முடிகிறது.போர்வாள்

ஆசிரியர், அதிலே படைக்கிற எழுத்தாளர்கள், அவர்களுடைய படைப்புகள் என்ற நிலை மட்டும் அல்லாமல் மாற்றுச் சிந்தனை உடையவர்களுக்கும் இடம் தந்து, கருத்துப் புரட்சியைப் பொதுமைப்படுத்துகிற முயற்சியைப் போர்வாள் செய்திருக்கிறது. பொதுவுடைமை இயக்கத்தைச் சேர்ந்த சிந்தனையாளர் திரு. ஜி.வி. சங்கரன் எம்.ஏ., அவர்கள் திராவிட நாடு என்ற கோரிக்கை பயனற்றது - தேவையற்றது என்ற வாதத்தை முன்வைத்து ஒரு கட்டுரையை - ஒரு கடிதத்தைப் போர்வாள் ஆசிரியருக்கு எழுதுகின்றார். அதனைத் தொடர்ந்து போர்வாள் ஆசிரியர் அவரிடத்தில் ஒரு நிபந்தனை வைக்கின்றார்; உங்களுடைய கட்டுரையை முதலில் வெளியிடுகின்றோம், அதே நேரத்தில் உங்கள் கருத்துக்கு மாறான எங்கள் கொள்கைகளைப் பதிலாக அடுத்தடுத்து வருகின்ற இதழ்களிலே வெளியிட எண்ணுகிறோம்; அதற்கு ஒப்புக் கொண்டால் தங்கள் கட்டுரையை வெளியிடுகிறோம் என்று சொல்ல, அந்தப் பொதுவுடைமைச் சிந்தனையாளர் சங்கரன் அவர்களுடைய கட்டுரை - 'திராவிட நாடு கோரிக்கை தேவையற்றது', என்கிற நிலைப்பாடு கொண்ட கட்டுரை போர்வாளில் வெளியிடப்படுகின்ற வாய்ப்பு உருவாகியது.

மாற்றுக் கருத்திற்குக் கூட இடமுண்டு என்ற புதுப்போக்கிற்குப் போர்வாள் இடந்தருகிறது. அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுகிற பேராசிரியர் இளஞ்செழியன், அடுத்து மூன்று நான்கு இதழ்களிலே இந்தத் திராவிட நாடு கோரிக்கை எந்த அளவுக்கு நியாயமானது என்பதை வலியுறுத்திக் கட்டுரைகளைத் தொடர்ந்து எழுதுகிறார். அந்த வகையில் 'பொதுவுடைமைத் திராவிடம் படைப்போம்' என்ற அழைப்பாகப் பேராசிரியர் இளஞ்செழியன் அவர்களின் இக்கட்டுரைகள் அமைந்திட, எல்லோருக்குமாகச் சேர்த்து, பொது அழைப்பாக அவற்றை அவர் எழுதி வெளியிடுகின்றார். எழுத்துப்போர் ஒன்று நடப்பதற்குக் களமாக இந்தப் போர்வாள் அமைந்து, ஆங்காங்கே இருக்கின்ற எல்லா மக்களுக்கும் ஒரு சிந்தனை வெளிச்சத்தைத் தருகின்ற முயற்சியிலே போர்வாள் அன்றே வெற்றி கண்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

அரசியல் தொலைநோக்கு

அன்றாட அரசியல் செய்திகள் என்கிற அளவில் மட்டுமல்லாமல் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய சிந்தனைகளைக்

கோவையாகக் கட்டுரையாக அளிக்கிற நிலையைப் போர்வாள் மேற்கொண்டிருக்கிறது. வாரந்தோறும் அறிஞர் பெருமக்களின் அரிய கட்டுரைத் தொடர்கள் இதழை அணி செய்திருக்கின்றன. அவ்வகையில் 'இந்திய அரசியல் திட்டம்' என்னும் தலைப்பிலே, பேராசிரியர் இளஞ்செழியன் கட்டுரைகளை எழுதியிருக்கிறார்; நாட்டுக்கு அரசியல் சாசனம் தீட்டப்படுகிற தொடக்க காலத்திலேயே இருக்கிற குறைபாடுகளைக்கூட விமர்சித்து உடனுக்குடனாகச் சுடச்சுடப் போர்வாள் சட்ட நுணுக்கங்களைத் தந்திருக்கிறது. அது பின்னர் நூலாகவும் வந்திருக்கிறது.

புரட்சிக் கவிஞர் – அறிஞர் அண்ணா பாராட்டு

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தன்னுடைய குயில் இதழிலே போர்வாளினுடைய சிறப்புகளையெல்லாம் உளமாரப் பாராட்டுகின்ற நிலையை நாம் அறியமுடிகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள், பேராசிரியர் இளஞ்செழியன் எழுதியுள்ள முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றிய 'தமிழன் தொடுத்தபோர்' என்கிற நூலுக்கு அணிந்துரை வழங்குகிற அந்த சூழலிலே போர்வாளைப் பற்றிய குறிப்புகளையும் பாராட்டுரை களையும் நிரம்ப வழங்கியிருக்கின்றார்.

மக்கள் ஈர்ப்பு இதழ்

போர்வாள் வெளிவரத் தொடங்கிய அதே காலகட்டத்தில் 10.1.1948 அன்றைக்குத் தந்தை பெரியாரிடத்திலிருந்து போர்வாளுக்கு வந்த கடிதத்தை அது வெளியிட்டுள்ளது. அதிலே பெரியார் அவர்கள் போர்வாளைப் பற்றிய தன்னுடைய எண்ணத்தை வெளிப்படையாகப் பதிவாக்கியுள்ளார். இந்தப் பதிவின்வழி போர்வாள் எத்தகைய ஆளுமைசார் தாக்கத்தைத் தமிழ்ச் சமுதாயத்திலே செய்திருக்கிறது என்பதைத் தெளிவாகவே அறியமுடிகிறது.

'போர்வாளின் திறன் கண்ட படைத்தலைவர் பெருமகிழ்ச்சி' எனத் தலைப்பிட்டுத் தந்தை பெரியார் அவர்களின் கடிதப் பதிவைப் போர்வாள் பின்வருமாறு வெளியிட்டுள்ளது.

> போர்வாள் பத்திரிகை பற்றிய விஷயம் எனக்கு நன்றாகத் தெரியும். எப்படியென்றால் நான் செல்லும் இடங்களிலெல்லாம் நமது இயக்கத் தோழர்களில் பெரும்பாலோர் போர்வாள் வார வெளியீட்டைப் பற்றி

என்னிடம் வந்து சொல்வதாலும் அதைப் பாராட்டிப் பேசுவதாலும் அதன்மீது எனக்குப் பொறாமை ஏற்படுமளவுக்கு அதைப் பற்றித் தெரிந்திருக்கிறேன். போர்வாள் பத்திரிகை பற்றிய என் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் போர்வாள் பத்திரிகையைக் கண்டு அதற்குப் பொதுமக்களின் பாராட்டு இருப்பதை உணர்ந்து சில பத்திரிகைக் காரர்கள் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு, போர்வாளின் போக்கைப் பின்பற்றுகிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

இதன்வழி அந்தக் காலகட்டத்திலே வெளியான இதழ்களுக்குகெல்லாம் ஒரு முன்னோடியாகக் கொள்ளத்தக்க அளவிலே இந்தப் போர்வாள் திகழ்ந்தது என்பதைப் பெரியாருடைய கருத்தாகவே நாம் அறிய முடிகிறது. மற்றும், "போர்வாளின் போக்கு இயக்கத்தினிடத்திலும் என்னிடத்திலும் பற்றுதலும் நம்பிக்கையும் கொண்டதாக இருப்பதையும் காண்கின்றேன். திராவிட நாட்டில் போர்வாள் நீண்டநாள் நிலவி நின்று இதே போக்கில் தொண்டாற்றி வரவேண்டுமென்ற ஆசையும் அதுபோலவே தொண்டாற்றிவரும் என்ற நம்பிக்கையும் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டு அந்தக் கடிதத்தைப் பெரியார் அவர்கள் அனுப்பியிருக்கின்றார். ஆக, இந்தச் செய்தி போர்வாள் இதழ், திராவிட இயக்க இதழ்களுக்கு இடையிலே குறிப்பிடத்தக்க ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதற்கான சான்றாக விளங்குகின்றது.

வடிவமும் அமைப்பு முறையும்

போர்வாள் இதழ் தொடக்கத்தில் 10 அங்குல நீளமும் 7½ அங்குல அகலமும் கொண்ட வடிவத்தில் 12 பக்கங்களைத் தாங்கிய இதழாக 1½ அணா விலையில் வெளிவந்திருக்கிறது. சில காலங்களுக்குப் பின்னர் போர்வாள் வடிவத்தில் மாற்றம் கொள்கிறது. நீள அகல வாக்கில் சற்றுக் கூடுதலாகி 15 அங்குலத்திற்கு 10 அங்குலம் என்னும் வடிவத்தைக் கொண்டு 8 பக்க இதழாக 2 அணா விலையில் வெளிவருகின்றது. போர்வாள் பயணத்தின் இந்தப் பத்தாண்டுகளிலும் பார்க்கின்றபோது, விலை மாற்றம் என்பது அதிகமாக இல்லை. விலைவாசி ஏற்றத்திற்குத் தன்னை ஆட்படுத்திக்கொள்ளாத இதழாகவே போர்வாள் தொண்டாற்றி வந்திருக்கிறது.

போர்வாளினுடைய விற்பனை நடைமுறைகள் - வருவாய் நிலை எப்படி இருந்தன என்பது அறியப்பட வேண்டிய ஒன்றாகும். தொடர்ந்து இதழ்களை நடத்தமுடியாமல் பொருள் இழப்புகளால் நொடிந்து போய்விடுவதுதான் இதழ்வெளியீட்டின் பொது அனுபவம். இருநூற்றுக்கும் மேற்பட்ட திராவிட இயக்க இதழ்கள் இன்றைக்கு இல்லாமல் போயிருப்பதற்கு இந்தப் பொருளாதார நெருக்கடி ஒரு முக்கிய காரணம்.

செல்வாக்கான இதழாக - செல்வச் செழிப்பிலே திளைக்கின்ற இதழாக இருக்கிற நிலையைப் பெற்றிருந்த 'ஊழியன்' இதழோடு போர்வாளை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களுடைய அந்தப் பின்னணி ஊழியன் ஆசிரியர் தமிழ்க்கடல் இராய. சொ. அவர்களுக்கு உறுதுணை செய்திருக்கிறது; விளம்பரங்கள் அதற்கு ஏராளமாகக் கிடைத்திருக் கின்றன. ஆனால், அத்தகைய நிலை போர்வாளுக்கு வாய்க்கப் பெறவில்லை. விளம்பர வாய்ப்பு இல்லாத இதழாக நடந்திருக்கிற நிலை போர்வாளுக்கு என்றாலும் இந்தப் போர்வாள் இலக்கு நோக்கிய இதழ்த் துறைப் பயணத்தில் கால வெள்ளத்தினைக் கடந்து நிற்கக் கூடிய சில பணிகளைச் சுவடாக ஆக்கியுள்ளது.

போர்வாள் – சிறப்பு மலர்கள்

வார இதழ் என்பது மட்டுமல்லாமல் சிறப்பு மலர்களையும் போர்வாள் அணி செய்து வெளியிட்டிருக்கிறது. இதழ் தொடங்கிய ஒருசில மாதத்திலேயே 1947ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 'பெரியார் மலர'ாகப் போர்வாள் மலர்ந்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் பெரியார் அவர்களுக்குத் தனியாகப் 'பிறந்தநாள் மலர்' எனப் புதியதொரு முயற்சியாக வெளியிட்டுத் தன்னைப் பெருமை படுத்திக் கொண்ட முதன்மை இதழ் போர்வாள்தான் என்பதை வரலாற்று அடிப்படையில் அறிய முடிகிறது.

ஒரு குறிப்பிட்ட சாரார் மட்டுமே எழில்மிகு வண்ண மலர்களை வெளியிட முடியும் என்று நிலையை மாற்றி, நம்மாலும் முடியும் என்று நடைமுறையில் சாதித்துக்காட்டிய பெருமை போர்வாளுக்கு உரியது. போர்வாள் மலர்களுள் குறிப்பிடத்தக்கன பெரியார் பிறந்தநாள் மலர் (1947), தி.மு.க. முதல் ஆண்டு நிறைவுநாள் மலர் (1950), தி.மு.க. முதலாவது மாநில மாநாட்டு மலர் (1951), பல ஆண்டுகளில் வெளியான பொங்கல் மலர்கள் (1948-1958), 'பராசக்தி'

திரைப்பட வெற்றிவிழா மலர் (1952), கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் நினைவு மலர் (1957) ஆகியனவாகும். இம்மலர்கள் அக்காலகட்டத்து இளைஞர்களைத் தன்பால் ஈர்த்த சிறப்புக்குரியனவாக விளங்கின.

அண்ணா - பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரின் எழுத்துக்களைத் தாங்கி வந்து போர்வாள் மலர்கள் மணம் பரப்பியிருப்பது சிறப்புக்குரியது. 1958ஆம் ஆண்டு வெளிவந்த போர்வாள் பயணத்தின் கடைசி மலரான 'பொங்கல் மலர்' திராவிட இயக்க முதன்மையாளர்களின் - முன்னணித் தலைவர்கள் அனைவரின் உருவப் படங்களையும் அண்ணாவை மையப்படுத்தி முழுப்பக்க அளவில் ஓர் உன்னத வரலாற்றுப் பெட்டமாக வெளியிட்டுப் பெருமை சேர்த்துள்ளது.

நடுநிலைப் பண்பு

போர்வாள் கூர்மையானது; அதே நேரத்தில் அதன் செயல்பாட்டு நிலைகளிலே மிகவும் நுணுக்கமான தன்மைகளை யெல்லாம் எதிர்கொண்டிருக்கிறது. போர்வாள் தொடங்கப்பட்ட போது அந்த 1947ஆம் ஆண்டில் திராவிட இயக்க இதழாக அமைகிறது. ஆனால், அதற்குப் பிறகுதான் திராவிடர் இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம் - திராவிடர் கழகம் என்ற நிலைகளிலெல்லாம் பிரிகிற சூழலைப் போர்வாள் எதிர்கொள்கிறது. அறிஞர் அண்ணா அவர்களுக்கும் தந்தை பெரியார் அவர்களுக்கும் ஒரு பனிப்போர் நிகழ்ந்துக்கொண்டிந்த காலக்கட்டம் அது. அந்தச் சூழலிலும் போர்வாள் இதழ் ஒருபால் கோடாது நடுநிலைமையோடு இருந்து செயல்பட்டிருக்கிறது.

பெரியாருடைய சமூகச் சீர்திருத்த இயக்கத்தைப் போர்வாள் தன் காலம் முழுவதும் பின்பற்றி வந்திருக்கிறது. அரசியல் நிலை என்று வருகிறபோது, அறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கை முழக்கச் செயல்பாடாக இந்தப் போர்வாள் திகழ்ந்திருக்கிறது. ஆக, தொடக்கத்தில் பார்க்கிறபோது, அண்ணாவினுடைய நிலையையும் ஏற்றுக்கொள்கிறது; பெரியாருடைய நிலையையும் ஏற்றுக் கொள்கிறது. சுதந்திரத்தைப் பற்றி வருகிறபோதுகூட அங்கே பெரியாருக்கு என்று ஒரு நிலை, அண்ணா அவர்களுக்கு வேறொரு நிலை இருக்கிறது. பெரியார் விடுதலை நாளைத் துக்க நாளாக மேற்கொள்கிறபோது அதை மகிழ்ச்சிக்கு உரியதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அண்ணா குறிப்பிடுகின்றார்கள்.

அந்த நேரத்திலே வெளிவருகின்ற போர்வாள் இதழ் இரண்டு தலைவர்களுடைய உணர்வுகளையும் மதித்து நடக்கிற போக்கிலே அமைந்திருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. போர்வாளின் இரண்டாவது இதழிலே வெளியான 'ஆமாம், ஆனால். . .' என்னும் தலையங்கம்தான் மேற்குறித்த உணர்வுகளைத் தாங்கி நிற்கின்றது. 'ஆமாம்' என்பது அண்ணாவின் கொள்கைக்கு அரண்சேர்ப்பது; 'ஆனால்' என்பது பெரியாருடைய கொள்கையைச் சார்ந்து நிற்பது. ஆக, இரண்டையும் தழுவி, நடுநிலைப்பாங்குடன் இருந்து தன்னுடைய அணுகுமுறையை அமைத்துக்கொண்ட ஓர் இதழாகப் போர்வாள் நடைபோட்டிருக்கிறது எனலாம்.

அதேபோல 1948ஆம் ஆண்டு ஈரோட்டில் திராவிடர் கழகச் சிறப்பு மாநாடு; கறுப்புச் சட்டை அணிவதில் தனக்கு நாட்டமில்லாத காரணத்தினால் அண்ணா அவர்கள் திராவிடர் கழகக் கூட்டங்களில் கலந்துகொள்ளாமல் சிலகாலம் இருந்துவிட்டு மீண்டும் அவர் பங்கேற்கத் தொடங்குகிறார்; ஈரோடு மாநாட்டில் பங்கேற்க வருகிறார். அந்த மாநாட்டைப் பற்றி எழுதுகிறபோது போர்வாள் தலையங்கம், 'அப்பாவும் மகனும்' என்று குறிப்பிடுகின்றது. சிக்கல்கள் இருந்தாலும் கூட, அப்பாவும் மகனும் என்னும் நேச உறவு எப்படியோ அப்படித்தான், தந்தை பெரியாரும் அறிஞர் அண்ணாவும் ஒன்றாக இணைந்து அங்கே செயல்படுகிறார்கள் என்ற கருத்தைப் போர்வாள் வெளியிட்டுள்ளதன் வழி, அதன் பரந்த பெரு நோக்கம் நன்கு வெளிப்படுகிறது.

புதுமை உத்திகளின் முன்னோடி

உரையாடல் அடிப்படையில் செய்திகளை வெளியிடுகிற ஒரு நுட்பத்தையும் போர்வாள் கொண்டிருக்கிறது. 'பாண்டியன்' 'சேரன்' எனப் பெயர்களையிட்டு, அரசியல் செய்திகளையெல்லாம் உரையாடல்களாக மக்களிடையே கொண்டு சேர்க்கின்ற முயற்சியிலும் இது வெற்றி கண்டிருக்கிறது. அதேபோல, 'திறந்த மடல்', 'கட்டில் சேராத கடிதம்' உள்ளிட்ட பகுதிகளைப் போர்வாளில் இடம்பெறச் செய்துள்ளனர். இத்தகு பகுதிகளின் வாயிலாக, பொதுவுடைமைச் செம்மல் பா. ஜீவானந்தம் போன்றோருடைய கருத்துகளுக்கெல்லாம் பதில் உரைப்பது என்கிற போக்கில் போர்வாள் வெற்றி கண்டுள்ளது.

புதிய இதழ்களை அரவணைத்தல்

இந்தத் தன்மைக்கிடையிலே புதுப்புது இதழ்கள் வந்தால் அவற்றையெல்லாம் அரவணைத்து வரவேற்கிற பண்பு போர்வாளுக்குரியதாக வெளிப்படுகிறது. நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் 'மன்றம்' வருகிறது. அதைப் போர்வாள் வாழ்த்துகிறது. பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் 'புதுவாழ்வு' மலர்கிறது. அதைப் போர்வாள் வரவேற்கிறது - என்றெல்லாம் நாம் அறிய முடிகிறது. திராவிட இயக்க இதழ்கள் பல இருந்தாலும்கூட இதழ்களுக்கிடையே காழ்ப்புணர்ச்சி இல்லை என்பதைப் பொதுக் கருத்தாக அறியமுடிகிறது. இதழ் என்றாலே ஒரு காழ்ப்புணர்ச்சி இருக்கும்; ஆனால் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் எல்லாம் ஒன்று சேர்ந்து திராவிட இயக்கத்திற்காகப் பாடுபட்ட நிலையை - பொதுக் கண்ணோட்டமாகக் கொண்டிருந்த நிலையைப் போர்வாள் வாயிலாக நாம் அறிய முடிகிறது.

திராவிட இதழ்களுக்கு ஆதரவு

எல்லா இதழ்களையும் அரவணைத்துச் செல்லுகின்ற போர்வாள், கொள்கை அடிப்படையில் இதழ் உலகில் ஒரு மோதலையும் எதிர் கொண்டிருக்கிறது; கல்கி இதழோடு நேர்ந்த மோதல் அது. போர்வாளுக்குரிய தனி மோதலாக இல்லாமல் திராவிட இயக்க இதழ்கள் எல்லாவற்றுக்குமாகச் சேர்த்து அந்த மோதலைப் போர்வாள் ஏற்றுக் கொண்டிருக்கிறது. திராவிட இயக்கத்தைச் சிங்கமாகவும் கல்கி கும்பலைச் சுண்டெலியாகவும் சித்தரித்து, சிங்கத்தைப் பார்த்துச் சுண்டெலி 'ஓடு பிசாசே ஓடு' என அச்சுறுத்துவதாகக் கருத்துப்படம் ஒன்றைப் போர்வாள் வெளியிட்டுள்ளது. "இதோ பார்! உனக்கு உயிர்ப் பிச்சையளிக்கிறேன். இங்கே நிற்காதே, ஓடி விடு, நின்றால் நிர்மூலமாவாய். என்னொடு எத்தனையோ சின்னதுகள் சேர்ந்துள்ளன. ஜாக்கிரதை" எனச் சுண்டெலி வீரமுழக்கம் செய்திட, சிங்கம் சிரித்தது; 'தன் தயவிலே ஒண்டிக் குடித்தனம் செய்யும் இந்த அற்ப உயிர்களின் அறியாமை கண்டு சிரிக்காமல் சீறவா செய்யும்!' என்னும் குறிப்போடு அந்தக் கருத்துப்படம் 1951ஆம் ஆண்டில் போர்வாள் இதழில் வெளியாகியிருக்கிறது. ஆக, இதழ் உலக அடிப்படையில் பார்க்கிறபோது, கல்கிக்கு எதிரான திராவிட இயக்க இதழ்களின் சார்பாக எழுந்த சிந்தனைப் போக்கைப் போர்வாள் தாங்கி நின்றதை அறிய முடிகிறது. திராவிட இயக்க உணர்வு கொண்ட அக்காலத்துக்

கல்லூரி மாணவர்களையும் இளைஞர்களையும் வெகுவாக ஈர்த்த இதழ்களில் குறிப்பிடத்தக்கது போர்வாள் என்று சொல்லப்படுகிறது.

'பகுத்தறிவுப் பாசறை' வெளியீடுகள்

போர்வாள் இதழின் துணை விளைவுகளில் ஒன்றாகப் 'பகுத்தறிவுப் பாசறை' என்ற ஒரு வெளியீட்டகம் சிறக்கத் தொண்டாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது. பகுத்தறிவுத் தந்தை பெரியார், இனமானப் பேராசிரியர் க. அன்பழகன், பேராசிரியர் மா. இளஞ்செழியன் உள்ளிட்ட புதுமைச் சிந்தனையாளர்கள் பலருடைய அரிய படைப்புகளையும் பொதுமக்கள் பயன்கொள்ளும் வண்ணம் வெளியிட்டு அறிவுக் கலங்கரை விளக்கமாகத் தொண்டாற்றிய வரலாற்றுப் பெருமை, இந்தப் போர்வாளின் பகுத்தறிவுப் பாசறைக்கு உரியது. பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் இயற்றிய 'வகுப்புரிமைப் போராட்டம்', பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்கள் இயற்றிய 'தமிழன் தொடுத்த போர்', 'ஈரோட்டுப்பாதை', 'சரிந்த சாம்ராஜ்யம்', 'அறிஞர் அண்ணாதுரை', 'இந்திய அரசியல் திட்டம்', அஞ்சாநெஞ்சன் வால்டேர், திருமிகு கே.ஜி. இராதாமணாளன் இயற்றிய 'மனப்புயல்', 'இளவரசி', 'தேன்மொழி', 'புதுவெள்ளம்', 'பொற்சிலை', 'ருஷ்ய நாட்டு அழகி' முதலிய புகழ் வாய்ந்த அரும்பெரும் நூல்கள் பலவற்றையும் இப்பதிப்பகம் வெளியிட்டுள்ளது. தந்தை பெரியார் அவர்களின் 'சித்திர புத்திரன் எழுதுகிறார்' என்னும் இதழ் எழுத்து நூலும் 'புதியதோர் உலகம் செய்வோம்' என்னும் சொற்பொழிவு நூலும் மணிமொழியாரின் பகுத்தறிவுப் பாசறை வெளியீடே என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிடர் நாட்குறிப்பும் நாட்காட்டியும்

அதேபோல, 'திராவிடர் நாட்குறிப்பு' என்னும் டைரியை 'போர்வாள்' வாயிலாக மணிமொழியார் வெளிக்கொண்டு வந்தமை மற்றுமொரு புதுமை. 1950 முதல் 1958 வரையில் இந்த நாட்குறிப்பு வெளிவந்துள்ளது. கழகத்தைச் சார்ந்தவர் ஒவ்வொருவரிடத்திலும் சென்று சேரக் கூடிய ஒரு வாய்ப்பாக அமைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கோட்பாடுகள் - சட்டதிட்டங்கள் கழகத் தலைவர்கள் - கிளைகளின் செயலாளர்கள் - சொற்பொழிவாளர்கள் ஆகியோரின் முகவரிகள் - கழக உறுப்பினர்களின் பெயர்கள் என எல்லா விவரங்களும் அடங்கிய கழகக் கையேட்டுப் பெட்டகமாக வெளிவந்துள்ளது. இந்த

நாட்குறிப்பில் ஒவ்வொரு நாளுக்குரிய பக்கத்திலும் உலக அறிஞர்களின் பொன்மொழிகளையும் அறிஞர் அண்ணா அவர்களின் சிந்தனைகளையும் இடம் பெறச் செய்திருப்பது இதன் குறிப்பிடத்தக்க சிறப்புத் தன்மையாகும். உலக அறிஞர்கள் வரிசையில் பேரறிஞர் அண்ணா அவர்களை வைத்துப் போற்றிய 'போர்வாள்' நிறுவனத்தின் - காஞ்சி மணிமொழியாரின் உணர்வு இதில் வெளிப்படுகின்றது.

இன்னொரு புதுமைச் செயல்பாடாகப் போர்வாள் நிறுவனம் ஆண்டுதோறும் நாட்காட்டியையும் வெளியிட்டு வந்துள்ளது. ஒவ்வொரு மாதத்திற்கும் திராவிட இயக்கத் தலைவர் ஒருவரின் உருவப்படத்தை இடம்பெறச் செய்து, அந்தப் 'போர்வாள்' நாட்காட்டியைப் போர்வாள் நிறுவனம் வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. திராவிட இயக்க உணர்வுகளை இல்லந்தோறும் - உள்ளந்தோறும் கொண்டு சேர்க்கிற - காலத்திற்கு உகந்த சீரிய தொண்டில், ஓர் இதழ் வெளியீட்டுப் பணியோடு மட்டும் நின்றுவிடாமல், அதனோடு பின்னிப் பிணைந்திருக்கக் கூடிய எல்லா வகையான வெளியீட்டுத் தன்மைகளுக்கும் இந்தப் போர்வாள் இதழ் ஊற்றுக் களனாக இருந்து செயலாற்றியுள்ளமை, அக்காலச் சூழலுக்கிடையில் வியப்பிற்குரிய அரிய பணியாக அடையாளம் காணமுடிகிறது.

திராவிடப் பத்திரிகையாசிரியர் சங்கம்

போர்வாள் உள்ளிட்ட பல திராவிட இயக்க இதழ்கள் வெளிவந்திருந்தும்கூட, தென்னகத்திலே திராவிட இதழ்களுக்கு அப்போது பாதுகாப்பற்ற ஒரு சூழல் நிலவி வந்திருக்கிறது. இத்தகு சூழலில், பாதுகாப்பு கருதி, முறையான ஓர் இயக்கம் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் காஞ்சி மணிமொழியார் அவர்கள் 1948ஆம் ஆண்டிலேயே ஓர் அமைப்பை ஏற்படுத்துகிறார். அதுதான் 'திராவிடப் பத்திரிகையாசிரியர் சங்கம்' என்ற அமைப்பு. திராவிட இயக்க இதழ்களின் வளர்ச்சி வரலாற்றில் இந்தச் சங்கத்தின் உருவாக்கம் ஓர் இன்றியமையா இடத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அந்தச் சங்க அமைப்புக்கு உற்ற துணையாக அமைந்தவர், அறிஞர் அண்ணா அவர்களோடு அணுக்கமாக இருந்து உதவிடும் வாய்ப்பைப் பெற்றிருந்த பண்பாளர்; 'கதிரவன்' இதழாசிரியர் புலவர்

திருமிகு பு. செல்வராசு அவர்கள். இன்றைய காலக்கட்டத்தில், தமிழ் இதழியல் கொடைகளை ஆய்வுக் களங்களில் நிறுத்தி, தகுதி வாய்ந்த நிறுவனங்களோடு இணைந்து அத்துறை வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வருகின்ற சிறப்புக்குரியவர் 'டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மைய'த்தின் நிறுவனர் - இயக்குநர் பேராசிரியர் முனைவர் மா.ரா. அரசு அவர்கள்; முனைவர் அரசு அவர்கள்தம் தாய்மாமன், புலவர் செல்வராசு அவர்கள் என்பது இங்கு நினைந்து போற்றுதற்குரியது. 'கதிரவன்' ஆசிரியர் புலவர் செல்வராசு அவர்களுடன் இணைந்து, திராவிடப் பத்திரிகையாசிரியர் சங்கத்தை அமைத்து, தென்னகத்து அரசியல் உலகில் திராவிட இயக்க இதழ்கள் செல்வாக்குப் பெற்றிட - ஒற்றுமை மிளிர்ந்திட ஒரு கேடயமாக அதனைப் பயன்படுத்தி, வழிநடத்திச் சென்ற வரலாறு போர்வாள் ஆசிரியர் காஞ்சி மணிமொழியாருக்கு உரியது.

கருத்துப் படங்கள்

போர்வாள் இதழ், தம் பணியை ஓர் இதழ்ப் பணியாக மட்டும் கொள்ளாமல் சமுதாயத்தின் ஓர் இயக்கமாக - இயக்க உணர்வின் வெளிப்பாடாக - அதன் பிழிவாக - அந்தக் காலக்கட்டத்து இதழ்களுக்கெல்லாம் நல்லதொரு முன்னோடியாக விளங்கிச் செம்மையாகத் தொண்டாற்றியிருக்கிறது. குறிப்பாக, கருத்துப்படம் வெளியிடுவதில் போர்வாள் இதழ், திராவிட இயக்க இதழ்களுக்குள் எடுத்துக்காட்டாக விளங்கியிருக்கிறது.

கருத்துப் படங்களை வெளியிடுவதில் பாரதியின் 'இந்தியா' இதழை இது ஒப்புநோக்கச் செய்கின்றது. கருத்துப்படம் இடம்பெறாத போர்வாளே இல்லை என்னும்படி இதழ்தோறும் கருத்துப்படம் வெளியிடப்பட்டமை அதன் மற்றொரு தனித்தன்மையின் அடையாளமாகும். கருத்துப் படங்களின் வரைவாக்கத்தில் ஓவியர் திரு. சுவாமி அவர்களும் ஓவியர் திரு. கணேசன் அவர்களும் போர்வாளுக்குத் தக்க துணையாக அமைந்து உதவியுள்ளனர்.

போர்வாள் ஆசிரியர் காஞ்சி மணிமொழியார், இயக்கப் போராட்ட வரலாற்றில் ஆறுமுறை சிறை சென்றவர் என்னும் பதிவில், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்காக 1948ஆம் ஆண்டில் இருமுறை சிறை சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தி

எதிர்ப்புக் காலச் சூழலில் போர்வாள் இதழ் ஒன்றில் ஒரு கருத்துப்படம் வெளியாகியுள்ளது. பெட்ரோல் விற்பனைக்குரிய பெட்ரோல் பங்கில் அந்த இயந்திரத்தின் மீது சாய்ந்தபடி ஒருவர் சுருட்டு பிடித்துப் புகைவிட்டுக் கொண்டிருக்கும் காட்சி கருத்துப்படமாக அமைந்துள்ளது. அந்த பெட்ரோல் பங்க் - 'தமிழ்நாடு' எனவும் சுருட்டு - 'இந்தி' எனவும் குறிக்கப்பட்டுள்ளது. கருத்துப்படத்திற்கான விளக்கம் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு அதில் தரப்பட்டுள்ளது. பெட்ரோல் பங்க் பக்கத்தில் புகைக்கலாமா? கூடாது என்பது எல்லோருக்கும் அடிப்படையாகத் தெரிந்த விசயம். ஆனால் அன்றைய கல்வி அமைச்சராக இருக்கிற திரு. அவினாசிலிங்கம் இதை உணர்ந்து கொள்ளாமல் இத்தகைய தவற்றைச் செய்கிறாரே எனக் குறிக்கப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு போர்வாள் இதழும் அன்றைய அரசியல் - சமுதாய அநீதிகளைச் சாதாரண மக்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ளும் வகையில் கருத்துப்படங்கள் வாயிலாக உணர்த்தியிருப்பது பாராட்டுக்குரியது.

வெற்றிப் பயணம்

போர்வாள் இதழ் வெளிவந்த அந்த எட்டரை ஆண்டுகளும் அதன் வெற்றிப் பயணமாகவே அமைந்தது. காஞ்சி மணிமொழியாரால், பொருள் இழப்பு இல்லாமல் எப்படி இந்த இதழை நடத்த முடிந்தது? திராவிட இயக்கத்திற்கும் தன்னால் முடிந்த அளவில் பொருள் நிலைப் பங்களிப்பையும் எப்படித் தரமுடிந்தது? என்னும் கேள்விகளே சிந்தனையாக மலர்கிறபோது, அதற்கு விடையாக அமைவது சிக்கனம் - மணிமொழியாருடைய சிக்கனம்தான் இந்த இதழை வெற்றிகரமாக வழிநடத்தத் துணை செய்துள்ளது என அறிய முடிகிறது.

போர்வாள் இதழுக்குச் சந்தாதாரர்கள் என்று அதிகமாக இல்லை. ஆனால் ஆங்காங்கே இதழ் முகவர்கள் (ஏஜெண்டுகள்) நிறையபேர் இருந்திருக்கிறார்கள். இத்தகு போர்வாள் முகவர்கள் வரிசையில் மதுரையில் திரு. முத்து அவர்கள், சிதம்பரத்தில் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் தந்தையார் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் உள்ளிட்டோர் திராவிட இயக்கப்பணியைச் செய்கிற ஆர்வத்தோடு போர்வாளின் குறிப்பிடத்தக்க முகவர்களாக இருந்து தொண்டாற்றியிருக்கிறார்கள் என்பது வரலாற்றின் வியக்கத்தக்க பக்கங்களாக உள்ளன.

போர்வாள் தன் பயண எல்லையாகத் தமிழகத்தை மட்டும் கொள்ளாமல், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, பினாங்கு, ஆந்திரம், கர்நாடகம், கோலார் தங்கவயல் (கே.ஜி.எப்.) எனப் பல பகுதிகளிலேயும் சென்று, போர்வாள் தன் பணியைச் செய்திருக்கின்றது. ஏறக்குறைய ஐந்தாயிரத்திலிருந்து பத்தாயிரம் பிரதிகள் வரை வெளிக்கொண்டு வந்த இதழ் போர்வாள் என்பதை அடையாளம் காணமுடிகிறது.

எட்டு பக்கங்கள் பன்னிரெண்டு பக்கங்கள் என்ற அளவில் போர்வாள் வெளிவந்திருக்கிறது; என்றாலும் புத்தகத்தைப் புரட்டுவதுபோல் ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிப் படிக்க இயலாத நிலையில், அதன் விளிம்புப் பகுதிகள் வெட்டப்படாமல் அப்படியே வெளியிடப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது. இதழை இப்படியும் அப்படியுமாக விரித்தும் திருப்பிப் பார்த்தும் அரிதின் முயன்று படிக்கவேண்டியுள்ள அதன் வடிவமைப்பு ஒரு சிறு குறையாகவே தெரிகிறது. என்றாலும் அக்கால இதழ்கள் பலவற்றின் பொது இயல்பாக இப்படி இருப்பதை அறிந்து ஆறுதல் கொள்ளவேண்டியுள்ளது. அச்சாகி வந்தவுடன் விரைந்து இதழ்களை அனுப்பி வைக்கவேண்டும் என்னும் கால நெருக்கடியும் பணிசெய்கின்ற ஆட்களின் எண்ணிக்கைக் குறைவும்தான் இதற்குக் காரணம்; அச்சகத்திலிருந்து வந்தவுடன் அப்படியே அவசரமாக மடித்து அனுப்பிவிட வேண்டியிருக்கும் எனப் போர்வாள் ஆசிரியர் பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்கள் இக்குறைக்கான காரணத்தைச் சுட்டிக்காட்டுகின்றார்.

திராவிட இயக்க இதழ்களிலே எல்லோராலும் பெருமையோடு பேசப்படுகின்ற போர்வாள் இதழ் அலுவலகத்தில் ஒரே ஒரு உதவியாளர் மட்டும்தான் வெளியாள் என்ற நிலையொடு பணிபுரிந்துள்ளார். அச்சுக்கோக்கிற பணியைக் காஞ்சி மணிமொழியாருடைய துணைவியார் திருமதி அபிராமி அம்மாள் அவர்களே செய்துள்ளார். இதழாசிரியர் பணியோடு மெய்ப்புத் திருத்துகிற பணியையும் காஞ்சி மணிமொழியார் அவர்களும் அவர்தம் மூத்த மைந்தர் பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்களும் மேற்கொள்வர். இதழ்களை மடிப்பதிலும் வெளியிடங்களுக்கு அனுப்பிவைப்பதிலும் இளைய மைந்தர் திரு. மா. நடராசன் அவர்களும், மகள் செல்வி மா. தமிழ்ச்செல்வி அவர்களும் படிக்கின்ற இளையோராயினும் சிறுசிறு உதவிகளைச் செய்து வந்துள்ளனர். துணை ஆசிரியர்கள் செய்தி சேகரிப்பிலும் எழுத்துப் பணிகளிலும்

போர்வாளுக்குத் தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். இப்படிச் செயல்பட்ட காரணத்தினால் - சிக்கன நடவடிக்கையினால் பல தொல்லைகளை எதிர்கொண்டும்கூட, போர்வாள் இதழ் துணிந்து தன்னுடைய திராவிட இயக்கப்பணியை - பயணத்தை வெற்றியுடன் மேற்கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் திராவிட இயக்க இதழ்கள் வரிசையில் போர்வாள் என்றாலேயே காஞ்சி மணிமொழியாரால் நிறுவப்பட்டு, தன் மகன் மா. இளஞ்செழியன் அவர்களுடன் இணைந்து நடத்திய போர்வாள்தான் அனைவர் பேரேட்டிலும் நிலவி, ஓர் எடுத்துக் காட்டுக்குரிய இதழாக அரிய சாதனைகள் பல புரியும் இதழாக நிலவி வந்திருக்கிறது.

1958ஆம் ஆண்டிற்குப்பின் காஞ்சி மணிமொழியார் பொறுப்பிலிருந்த போர்வாளின் பயணம் நிறைவு பெறுகின்றது. என்றாலும் அதே போர்வாள் என்னும் பெயரில் சில காலத்திற்குப் பின்னர் திரு. ஏ.கே. வில்வம் அவர்களை ஆசிரியராகக் கொண்டும் திரு. அ. மறைமலையான் அவர்களை ஆசிரியராகக் கொண்டும் வெவ்வேறு இதழ்களாக இயங்கியதை அறிய முடிகிறது.

பயணத்தின் நிறைவு

காஞ்சி மணிமொழியார் அவர்களின் பெருமைக்குரிய வாழ்வு 1971ஆம் ஆண்டு வரையில் திராவிட இயக்கத்திற்குப் பயன்சேர்க்கிற பெருவாழ்வாகத் தொடர்கிறது; அரசியல் அறிவும் பகுத்தறிவு இயக்க உணர்வும் கொண்டு, துடிப்பும் செயலாண்மையும் மிக்க இளமைக்கு ஓர் அடையாளமான அவர்தம் மைந்தர் பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்களின் தக்க துணையும் மணிமொழியார் அவர்களுக்கு அமைந்த சூழல்; என்றாலும் போர்வாள் இதழ் 1958 ஆம் ஆண்டோடு தம் பயணத்தை முடித்துக் கொண்டமை தமிழகமும் திராவிட இயக்கமும் எதிர்கொண்ட பேரிழப்பாகும். போர்வாளின் பயணம் தொடராமைக்குப் பல்வேறு காரணங்களை எண்ணிப் பார்க்க வாய்ப்புண்டு என்றாலும் இதழ்ப் பயணம் மேற்கொண்ட காலங்களில் போர்வாள் மிகச் சரியாகவும் முறையாகவும் நடந்து, கால எல்லைகளைக் கடந்தும் சமுதாயப்பயன் சேர்த்துள்ளமை பாராட்டுதற்குரியது; நெஞ்சில் வைத்துப் போற்றுதற்குரியது.

பயன்பயந்த நூல்கள்

1. போர்வாள் வார இதழ்கள், போர்வாள் மலர்கள், திராவிடர் நாட்குறிப்புகள்

2. காஞ்சி மணிமொழியார் மணிவிழா மலர், சென்னை, 1960

3. காஞ்சி மணிமொழியார் 71ஆவது ஆண்டு பிறந்தநாள் மலர், சென்னை, 1970

4. தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் திரு. காஞ்சி மணிமொழியார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், சென்னை, 1970

5. பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள், சென்னை, 1985

6. இளஞ்செழியன், மா., தமிழன் தொடுத்த போர் (முதல் இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாறு), பகுத்தறிவுப் பாசறை, சென்னை, 1948

7. திருநாவுக்கரசு, கா., திராவிட இயக்க இதழ்கள் - ஒரு பார்வை, நக்கீரன் பதிப்பகம், சென்னை, 1998

கலந்துரையாடல்

1. பேராசிரியர் மா. இளஞ்செழியன், (காஞ்சி மணிமொழியாரின் மூத்த மைந்தர்), புரவலர், காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை, நாள்: 7.01.1998

2. திருமிகு கே.ஜி. இராதாமணாளன், துணை ஆசிரியர் மற்றும் எழுத்தாளர், போர்வாள், நாள் : 12.01.1998

3. திருமிகு மா. நடராசன், (காஞ்சி மணிமொழியாரின் இளைய மைந்தர்), புரவலர், காஞ்சி மணிமொழியார் தமிழ்ப் பேரவை, நாள்: 16.01.1998

புதுவாழ்வு

கூ.வ. எழிலரசு

முன்னுரை

திராவிட இயக்க இதழ்களுள் 'புதுவாழ்வு' என்ற திங்களிதழ், குறிப்பிடத்தக்க ஓர் இதழாகும். இவ்விதழின் ஆசிரியர் இன்றைய மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள். துணையாசிரியர் திரு. கே.ஜி. இராதாமணாளன் அவர்கள்.

தமிழர்களுக்குக் கருத்துத் தெளிவும் - கொள்கை விளக்கமும் அளிக்க ஏராளமான இதழ்கள் தேவைப்பட்டன. தந்தை பெரியாரின் 'குடியரசு' 'பகுத்தறிவு' வார இதழ்களும், 'விடுதலை' நாளிதழும் நீண்ட காலமாக இப்பணியில் ஈடுபட்டிருந்தன. இச்சூழலில் 1942ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் எட்டாம் நாள் வெளிவந்த பேரறிஞர் அண்ணாவின் 'திராவிட நாடு' வார இதழ், தமிழர்கள் உள்ளத்தில் தனி இடம் பெற்றது. அரசியல் - கலை - இலக்கியம் - மதம் பற்றி எழுதிய பேரறிஞர் அண்ணாவின் இவ்விதழ், தமிழ் இளைஞர்களின் கரங்களில் வாளாக விளங்கிற்று. இவ்விதழின் கருத்தழகில் ஈடுபட்ட அக்காலத்து இளைஞர்கள் 'தாங்களும் ஏடு நடத்த வேண்டும் - கொள்கை விளக்கம் தர வேண்டும்' என்னும் முயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இத்தகைய இயக்க ஈடுபாட்டாலும், தொண்டார்வத்தாலும் பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள் தம்முடைய 26ஆம் அகவையில் 1948ஆம் ஆண்டு தைப்பொங்கல் நாளில் புதுவாழ்வு திங்களிதழைத் தொடங்கினார்.

புதுவாழ்வு இதழ், 1948 ஜனவரியில் தொடங்கி, 1949 ஜனவரி வரையில் 10 இதழ்கள் மட்டுமே வெளிவந்து நின்றுவிட்டதாக அறியமுடிகிறது. 1/8 டெமி அளவில் 4 அணா விலையில் இவ்விதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்விதழ்களின் பணிகளை, தலையங்கங்கள், கட்டுரைகள், சொற்பொழிவுகள், கவிதைகள், கதைகள், மொழியாக்கப் படைப்புகள், செய்திகள், பெட்டிச் செய்திகள், அறிவியல் கட்டுரைகள், நூல்கள் - இதழ்கள் - மதிப்புரைகள், திரைப்படத்திறனாய்வு, விளம்பரங்கள் எனப் பகுத்தாய்ந்து அறிவதே இக்கருத்தரங்க ஆய்வின் நோக்கமாகும்.

தலையங்கங்கள்

புதுவாழ்வு இதழ்களில் 10 (பத்து) தலையங்கங்கள் இடம் பெற்றுள்ளன. 'புத்தாண்டும் புதுவாழ்வும்', 'இமயம் சரிந்தது', 'தீர்ப்பு கூறுங்கள்', 'தூத்துக்குடி அழைப்பு', 'இன்பத் தமிழும் இந்துத் தானியும்', 'தூத்துக்குடி அறிவிப்பு' 'போர்க்களம் புகுமுன்', 'வீட்டுக்கொரு பிள்ளை', 'ஈரோடு மாநாடு ஓர் எச்சரிக்கை', 'பொங்குக புதுமை' - எனும் தலைப்புகளில் இத் தலையங்கங்கள் அமைந்துள்ளன.

'புத்தாண்டும் புது வாழ்வும்' என்ற தலையங்கம்,

> மற்ற நாடுகளில் எல்லாம் அறிவியல் ஆராய்ச்சியின் பயனாகப் பயிர்த்தொழில் பல வகைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளது. உழவுக்கு ஒரு இயந்திரம்; அறுவடைக்கு மற்றொன்று; விதைக்க விமானம்; மேகத்தைக் குளிரச் செய்து மழை பெய்யவைக்க ஒரு முறை; மழை அதிகமானால் கார்முகிலைக் கலைக்க ஒரு வழி, இவ்வளவும் கண்டுபிடிக்கப்பட்டு நடைமுறையில் கொண்டுவரப்பட்டுள்ளன மேல் நாட்டில். இங்கோயோ இடி ஒலி கேட்டால் 'அர்ச்சுனா அர்ச்சுனா' என்று அழைப்பதும், மழை பெய்யாவிடில் கொடும்பாவி கட்டி இழுப்பதும், நாட்டிலே விளைவு ஏற்பட என்று யாகஞ் செய்வதும், விதைக்க நாள்பார்க்க ஐயரை அழைப்பதும், அறுவடைக்குமுன் சகுனம் பார்ப்பதும் நடைபெற்றுவருகின்றன. இவ்வளவும் நடைபெற்று விளையாவிட்டால், ஆற்றுக் கால்வாய்களை அதிகப்படுத்துவது குறித்தோ, அரசியல் வரியைக் குறைப்பது - தவிர்ப்பது குறித்தோகூடச் சிந்திக்காமல் 'அவன் விட்ட வழி' என்று தலையிலே கை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிடுகின்றனர் மக்கள். இந்த மனப்பான்மை ஒழியா முன்னம் இந்நிலை மாறுவது எங்ஙனம்? பொங்கல் சிறப்படைவதுதான் எவ்வாறு? . . . . மத மாறுபட்டால் - பகை வளர்ந்து அறிவு தேய்ந்தது; சாதிப் பற்றினால் - பேதம் வளர்ந்து பெருநோக்கம் சிதைந்தது; புராணப் பெருக்கால் - புல்லறிவு வளர்ந்து பகுத்தறிவு மாய்ந்தது; வாழ்விழந்து வகைகெட்டு நிலை குலைந்துள்ளனர் நம் நாட்டவர்கள்.

> அவர்களுடைய உள்ளத்திலே மாற்றம் ஏற்பட்டா லொழிய வாழ்விலே மாற்றம் இல்லை. புத்துணர்வு பிறக்கவும் வழியில்லை. . . . புத்தாண்டு பிறப்பது இயற்கை. புதுவாழ்வு பிறப்பது நம் முயற்சியின் விளைவு

எனத் தமிழர்களின் நிலையைச் சுட்டிக்காட்டிப் பகுத்தறிவையும், இன ஒற்றுமை உணர்வையும் அவர்களின் உள்ளங்களிலே விதைக்கின்றது.

'இமயம் சரிந்தது' என்ற தலையங்கம், காந்தியடிகள் படுகொலையைத் துயரத்துடன் கண்டிக்கிறது. காந்தியடிகள் இழப்பை,

> பிறவிக்குருடன் ஒருவன் கண்ணொளி பெற்று மறுபடியும் இழந்ததைப்போல, ஏழையொருவன் பெருஞ்செல்வம் பெற்று மறுபடியும் கெடுத்து விட்டதைப்போல, முடவன் ஒருவன் கிடைத்த கொம்புத் தேனைக் கொட்டிவிட்டுக் கலங்கியதைப் போல, மணமான தம்பதிகள் ஒருவரை இழந்ததைப் போல

என அடுக்குவமைகளால் நம் கண்முன்னே நிறுத்தி,

> . . . . இந்தக் கொலை உணர்ச்சி, மதப்பற்றினாலும், அதைவிட அதிகமான வைதீகப் பற்றினாலுமே வளருகிறது என்பதைப் பொதுமக்கள் உணர வேண்டும். நாமும் காந்தியார் கொண்டிருந்த பல கொள்கைகளை ஒப்புக் கொள்ளாததோடு, சிலவற்றை மிக வன்மையாகக் கண்டித்துள்ளோம் என்றாலும், அவையாவும் மனிதப் பண்பாட்டுடனேயன்றி, மிருகத்தனமாகவன்று; அறிவுக் கண்கொண்டேயன்றி வெறுப்பு மனப்பான்மையா லன்று. . . இமயம் சரிந்தது; இருள் கவிந்தது; உலகம் அதிர்ந்தது. புகை நிறைந்தது, மக்கள் துன்புற்று உள்ளம் குலைந்து நிலை கலங்கினர்

எனக் கொலைக்கான காரணத்தைத் தெளிவுபடுத்தி, காந்தியார் இழப்பில் திராவிட இயக்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதையும் புலப்படுத்துகிறது.

அக்காலத்தில் இருந்தே அரசு 2.3.48இல் கருப்புச் சட்டைப் படையைத் தடை செய்தது. புதுவாழ்வு இதழில் வெளிவந்த 'தீர்ப்பு கூறுங்கள்' என்ற தலையங்கம் அரசின் இச்செயலை எள்ளல் நகைச்சுவையோடு விளக்கி, இது நியாயந்தானா? தீர்ப்பு கூறுங்கள் எனக் கேட்கிறது.

> உண்மையில் அரசாங்கம் எதைத் தடை செய்துள்ளதோ, அது இல்லை. 'கருப்புச் சட்டைப் படை' என்ற ஒரு அமைப்பு இல்லை. படைக்குரிய பயிற்சியும், அணிவகுப்பும் இல்லாதது ஒரு புறமுமிருக்க, படையில் ஆட்களே இல்லை. படைஒன்று அமைக்கப்பட்டால் அதில் சேர விரும்பியவர்கள் பலர் இருந்தனர். படை என்ற பெயரும் இருந்தது. படை அமைந்தால் 'கருப்புச் சட்டைதான்' அதன் உடையாக இருக்கவேண்டும் என்ற கருத்தும் இருந்தது. ஆனால் படை அமைக்கப்படாத காரணத்தால் தான், அந்தக் கருப்புடையை விரும்பியவர்க ளெல்லாம் அணிந்து கொள்ளத் தலைப்பட்டனர். இவ்வாறு ஒரு படை சரியான அமைப்பில் ஏற்படுத்தப்படாமல், 'கருப்புச் சட்டைப் படை' என்ற பெயர்மட்டும் வழங்கப்பட்டு வந்த காரணத்தால்தான் இயக்கத்தின் வாலிபத் தோழர்கள் சிலர் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களோடு கூட கருத்து வேறுபட்டார்கள். வாலிபர்கள் கூறிய குறை எல்லாம் படை அமைக்கப்படவில்லை என்பதுதான்.

என அரசின் அறியாமையை இயக்கத் தோழர்களுக்குத் தெளிவாக உணர்த்துகிறது இத்தலையங்கம். அரசின் இச்செயலின் விளைவாகத் தூத்துக்குடியில் (1948இல் மே மாதம் 1,2 நாள்களில்) நடைபெற்ற தி.க. மாகாண மாநாட்டில்,

> திராவிடர் கழக நிர்வாக உறுப்பினர்கள், கழகப்பணிகளில் ஈடுபடும்போதும், பிரசாரகர்களும் பிறரும் மேடையில் பேச நேரும்போதும் கருப்புச் சட்டை அணிந்திருக்க வேண்டும்

எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைப் பெருமிதத்துடன் குறிப்பிடுகிறது 'தூத்துக்குடி அறிவிப்பு' என்ற தலையங்கம்.

இம்மாநாட்டிற்குத் தொண்டர்களை அழைப்பதற்காகத் தீட்டப்பட்டது 'தூத்துக்குடி அழைப்பு' என்ற தலையங்கம்.

இக்காலக் கட்டத்தில், இந்துஸ்தானியை, கட்டாய இரண்டாம் மொழிப்பாடமாக அவினாசியார் அறிவித்தார். தமிழர்க்கு இந்துஸ்தானியைக் கட்டாயமாகப் படிப்பதால் ஏற்படும் இழப்புகளை, ஆங்கிலத்தை அறவே இழந்து விடும் ஆபத்தை எடுத்துரைக்கிறது 'இன்பத் தமிழும் இந்துத்தானியும்' என்ற தலையங்கம்.

> நான்கு வேதம், ஆறு சாத்திரம், பதினெண் புராணம், அறுபத்து நான்கு கலைஞானம் ஆகியவைமட்டுமோ, இராமாயணம், பாரதம், சித்தாந்தம், பிரபந்தம் ஆகியவை மட்டுமோ, வேத பாடசாலை, தேவார பாட சாலை, ஆலமரத்தடி, ஆற்றங்கரையோரம், குருவினது குடில், சரஸ்வதி கடாட்சம், காளியின் அருள் ஆகியவை மட்டுமே நம் நாட்டை, நாட்டு மக்களை இந்த அளவிற்கு உயர்த்தி இருக்க முடியாது. ஆங்கிலமும் அதனோடு இணைந்து நின்ற விஞ்ஞானமுமே நம்மை முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கச் செய்துள்ளன. . . . விஞ்ஞான உலகத் தொடர்பே - தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் - ஆங்கில ஏடுகளினின்றும் மொழிபெயர்த்தே வளர வேண்டியதாகவும், ஆராய்ச்சிக்கு ஆங்கில அறிவு இன்றியமையாததாகவும் ஆகிவிட்டது. . . . ஆங்கிலத்தைக் கைவிடுவது தாய்மொழிப் பற்றின் விளைவு என்று கருதுவதும் தவறு. இந்துஸ்தானியைப் பொது மொழியாக ஏற்பது தமிழர்க்கும், அவர்தம் கலை, மொழி, நாகரிகப் பண்பாட்டிற்கும் இழுக்கேயாகும்.

என்பன அத்தலையங்கத்தின் சில பகுதிகள்.

இந்நிலைமையைத் தொடர்ந்து, நாடு இந்தி எதிர்ப்புப் போருக்குத் தயாராகிறது. 'போர்க்களம் புகுமுன்' என்ற தலையங்கம்,

> இந்தி எதிர்ப்புப் போர்க்களம் புகுமுன், தம் தவறைத் திருத்திக் கொள்ளட்டும் ஆளவந்தார். இல்லையானால்

> விளைவு எதுவாயினும் ஆகட்டும். புறமுதுகிட்டறியாத தமிழன் தமிழைக் காப்பாற்றத் தொடங்கும் போரில் வாகை சூடிடத் தவறப்போவதில்லை. தவறினால் தாளமுத்து, நடராசன்களாக நிலைக்கத்தான் போகிறார்கள்

என அரசுக்கு உணர்த்தும் பணியையும் தமிழர்களுக்கு உணர்வூட்டும் பணியையும் ஒருங்கே செய்கிறது. 'வீட்டுக்கொரு பிள்ளை' என்ற தலையங்கம் தமிழ் காக்கும் போருக்கு வீட்டுக்கொரு பிள்ளையை அனுப்புமாறு கேட்கிறது.

புதுவாழ்வு வெளிவந்த காலத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் ஐயா (தந்தை பெரியார்) அவர்களுடன் பிணக்குக்கொண்டு-கழக நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருந்தார்; தூத்துக்குடி மாநாட்டிலும் அண்ணா கலந்து கொள்ளவில்லை. பேரறிஞர் அண்ணா இயக்கத்தைவிட்டே போய்விடுவார் என்றெல்லாம் இயக்க எதிரிகள் கருதி மகிழ்ந்து கொண்டிருந்தனர். இச் சூழ்நிலையில் 1948, அக்டோபர் 23,24 நாள்களில் ஈரோட்டில் நடைபெற்ற மாநாட்டு பேரறிஞர் அண்ணா வருகைதந்து தலைமையும் ஏற்றார். இதற்கு மகிழ்ச்சி தெரிவித்து, இயக்கத்தின் வலிமையையும் கடமையையும் இயக்கத் தோழர்களுக்கு எடுத்துரைக்கிறது 'ஈரோடு மாநாடு ஓர் எச்சரிக்கை' என்ற தலையங்கம்.

இவ்வாறு பேராசிரியர் அவர்களின் கைவண்ணத்தில் வெளிவந்த புதுவாழ்வு தலையங்கங்கள் மனிதநேயம்காத்து, பகுத்தறிவூட்டி, மொழியுணர்வூட்டி, இயக்கக் கடமைகளை நினைவூட்டி - திராவிட இயக்கத்தின் காலக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

கட்டுரைகள்

புதுவாழ்வு இதழ்களில் 24 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

கலைமகள்	-	கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்
பொங்கல்விழா	-	அ. மீனாம்பாள்
ஒலிக்கும் சிலம்பு (தொடர் கட்டுரை)	-	இரா. குழூஉத்தலைவன்

பண்டைத்தமிழகத்தில் தாலி அவன் செய்த தீங்கு	- எழிலன்
களம் நோக்கிக்காளைகள் அறுவடை கண்டு மகிழ	- இரா. நெடுஞ்செழியன்
சிவப்பேறும் சீனா	- அப்துல் அஜீஸ்
உலகச் சுழல் (3)	- அரங்கண்ணல் (2), வள்ளல் (1)
வலைகண்ட மான் தேட முடியுமே உறுதிப்பாடா? உடன்பாடா உண்மை இதுதான்	- டாக்டர் மு. வரதராசனார்
சாந்திக் கொலை வேண்டாம் புலவருக்குப் பரிசு நீதிக் கொலை வாபஸ் பெறுக தீபமும் திகைப்பும்	- பேராசிரியர் க. அன்பழகனார்
ஹைதராபாத் ஆபத்து கைகளிலே தளை தமிழாசிரியர் எல்டி. சம்பளம் களஞ்சியப்பணி	- பேராசிரியர் க. அன்பழகனார்

இக்கட்டுரைகள் பகுத்தறிவு, சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் ஆகியவற்றை எளிமையாக்கிக் கருத்து விளக்கம் தருதல், இயக்கப் பணிகளை ஊக்குவித்தல், உலகைப் பற்றிய பொது அறிவைத் தமிழர்களுக்குத் தருதல், தமிழ்வளர்ச்சி எனப் பல்வேறு கருத்துகளுக்கு ஆக்கம் சேர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

'கலைமகள்' என்ற கட்டுரையில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்,

> கலைமகளை ஒரு இளம்பெண்ணாக்கி வைத்தார்கள் முதலிலே. பின்னால் ஒரு ஆசனம் கொடுக்க வேண்டாமா? தாமரை மலரை அதுவும் வெள்ளைத் தாமரையைக் கொடுத்தார்கள். பாவம்! எவ்வளவு நேரம்தான் இந்த மலரில் அமர்ந்திருப்பாள். மெல்லிய தாமரை இதழ்களில் அமர்ந்திருக்க முடியுமா? அவைதான் ஒரு

> அம்மையாரின் சுமையைத் தாங்குமா? இப்படியெல்லாம் நியாயமாகக் கேட்டால் பெரிய மனிதர்களுக்குக் கோபம் வந்துவிடுகிறது. பதில் சொல்லத் தெரியாவிட்டால் கேட்பவருக்கு அதிகப் பிரசங்கிப் பட்டம் சூட்டப்படுகிறது. கேள்வியைப் பற்றி யோசிப்பதே கிடையாது. ஏனென்றால் அவர்கள் பெரியமனிதர்கள்

எனப் பகுத்தறிவூட்டுகிறார்.

தொடர்ந்து சங்க இலக்கிய விளக்கங்களாகவே எழுதிவந்த டாக்டர் மு.வ. 'உண்மை இதுதான்' என்ற கட்டுரையில் மொழிச் சிக்கலைத் தீர்க்கும் கருத்தை மிக எளிமையாகவும், வலிமையாகவும் அளித்துள்ளார்.

> தமிழ் பல வளம் படைத்துப் பல மொழிக்கும் தாயாகும் பெருமையும் பெற்றுத் தொன்மைச் சிறப்புடையதாய் விளங்குவதாகப் பெருமை கொள்ளலாம். அதனால் அது வாழ முடியாது. மொழியின் உயிர் புலவரிடம் இல்லை. பொதுமக்களின் உள்ளத்தில்தான் உள்ளது. மக்களின் வாழ்க்கை அரசியலை அடிப்படையாகக் கொண்டது. ஆகையால் எந்த மொழி அரசியல் மொழியாக விளங்குமோ அந்த மொழிதான் மக்கள் மொழியாக விளங்கும். நேற்றுத் தோன்றிய கொச்சை மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியானால் ஓங்கி வாழ முடியும். உலகம் தோன்றிய நாளில் தோன்றிய பண்பட்ட மொழியாக இருந்தாலும் அரசியல் மொழியாக விளங்கவில்லையானால் வாழ வழியில்லை. ஆகவே தமிழ் நாட்டின் ஆட்சி தமிழில் நடைபெற்றதால்தான் தமிழன் தமிழைப் படிப்பான்.

இரா. குழூஉத்தலைவன் எழுதிய 'ஒலிக்கும் சிலம்பு' என்ற கட்டுரை எல்லா இதழ்களிலும் தொடர்ந்து வெளிவந்து சிலப்பதிகாரத்தை எளிய முறையில் - ஓரளவு கற்றவரும் புரிந்து கொள்ள உதவி செய்திருக்கிறது.

பேராசிரியர் க. அன்பழகனார் தீட்டியுள்ள கட்டுரைகள் காலத்திற்கேற்ப கருத்து விளக்கங்களைத் துணிவாகவும், ஆழமாகவும் தருகின்றன.

புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' தடை செய்யப் பட்டதை எள்ளி நகையாடிக் கண்டிக்கிறது 'புலவருக்குப் பரிசு' என்ற கட்டுரை.

> நம் நாட்டு மக்களோ, நந்தனாரை நெருப்பிலிட்டுப் பொசுக்கிய பார்ப்பனீயம், இராமலிங்கனாரைச் சமாதி அடையச் செய்த வைதீகம், சிரத்தானந்தரைக் கொலைசெய்த ஆரியம், இன்று காந்தியாரையும் கொலை செய்தது என்பதையும் உணர்ந்து கொள்ளாமல் இஸ்லாமியர்மீது பாய்வது வெட்கக் கேடாகும்

என்றும், காந்தியைத்தான் கொலை செய்துவிட்டீர்கள், நாட்டில் நிலவும் சாந்தியை (அமைதியை) யும் கொலை செய்யாதீர்கள் என்றும் துணிந்து கருத்துரைக்கிறது, 'சாந்திக் கொலை வேண்டாம்' என்ற கட்டுரை.

'கைகளிலே தளை' என்ற கட்டுரை, 'இரணியன்' என்ற இயக்க நாடகம் தடை செய்யப்பட்டதை எள்ளி நகையாடிக் கண்டிக்கிறது. 'நீதிக்கொலை' என்ற கட்டுரை, மொழிப்போர் வீரர் உடையார் பாளையம் வேலாயுதம் (ஆசிரியர்) கொலை வழக்கில் அரசு மேற்கொண்ட ஒருதலைசார்பான நடவடிக்கையைச் சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளுமாறு அறிவுரை கூறுகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கல்லூரி மாணவர் தலைவராக இருந்த கே.ஏ. மதியழகன், அங்கு நடந்த கலவரத்தில் ஈடுபட்டதாகக் கூறி, பி.ஏ. தேர்வு எழுதத் தடை விதிக்கப்பட்டார். இவ்வழக்கின் உண்மைகளைத் தெளிவாக்கி, தடையை நீக்க வலியுறுத்தியது 'வாபஸ் பெறுக' என்ற கட்டுரை.

'தமிழாசிரியர்களுக்கு எல்.டி. சம்பளம்' என்ற கட்டுரை பிற மொழியாசிரியர்களைப் போலவே தமிழாசிரியர்களுக்கும் மதிப்பளிக்கப் படவேண்டும்; ஊதியம் வழங்கப்படவேண்டும், குழறுபடியான ஆணைகளால் (வித்துவான் - 15ஆண்டுகள் ஒரே இடத்தில் பணி - எல்டி சம்பளம்) அவர்களின் வாழ்வைக் குலைத்துவிடக்கூடாது என அரசுக்கு எச்சரிக்கை செய்கிறது.

'களஞ்சியப்பணி' என்ற கட்டுரை,

> நம் நாட்டு மக்களோ அறிவுத்துறையில் ஈடுபாடின்றி, புராணத் துறையிலே புகுந்து கிடந்ததால், களஞ்சியத்தின் அவசியத்தைக் கூட உணர்ந்தபாடில்லை. . . இந்தப் புண்ய பூமியிலே பிறந்த கடவுள் அவதாரமான இராமனே

> கண்டறியாத - கேட்டறியாத, புதுமைகளை இன்று வாழும் விஞ்ஞான இராமன்கள் கண்டுபிடித்துள்ளார்கள். . . (களஞ்சியத்தில்) புராணக் கருத்துக்கு இடமிருந்தால், அறிவு வளர்ச்சிக்கு இடமிருக்காது. வடமொழியை நுழைக்க இடமிருந்தால் அது தமிழ்க் களஞ்சியமாகவே உருப்பெறாது. . . . 'சிவபெருமான்' படம் போட்டுக் காட்டினாலும் அதன் கீழே இவ்வாறு மக்கள் கற்பித்துக் கொண்டுள்ளனர் என்று குறிக்கவேண்டுமே தவிர்த்துச் சிவபெருமான் செய்த திருவிளையாடல்களை எல்லாம் குறிப்பது தவறாகும்.

எனக் களஞ்சியப் பணி அமைய வேண்டிய முறை குறித்தும், அதைச் செய்து முடிக்கவல்ல ஆற்றல்மிக்க தமிழறிஞர்கள் பலர் உள்ளனர் எனப் பட்டியலிட்டுக் காட்டியும் நெறிப்படுத்த விழைகிறது.

'உலகச் சூழல்' என்ற கட்டுரைப் பகுதி உலக நடப்புகளைத் தமிழர்கள் காணும் சாளரமாகவே அமைந்துள்ளது. ஒவ்வொரு கட்டுரையும் எடுத்தாண்ட கருத்துகளைத் தெளிவாக விளக்குகின்றன.

சொற்பொழிவுகள்

'புதுவாழ்வு' இதழ்களில் அறிஞர் அண்ணாவின் 'மேடைப் பேச்சு' 'ஸ்தாபன ஐக்கியம்' 'வீட்டிற்கொரு புத்தகசாலை' - 'விதிக்கு அடிமைத்தனம்' ஆகிய வானொலிச் சொற்பொழிவுகள் தொடர்ந்து வெளியிடப்பட்டுள்ளன. இவை பிறகு நூல்களாக வெளிவந்துள்ளன. நாட்டில் நிலவிய மொழிப்போர் சூழலில், தமிழர்களுக்கு இந்துத்தானி பொது மொழியாவதால் ஏற்படும் ஆபத்துகளை எடுத்துரைத்து விளக்கம் அறியச் செய்யவேண்டிய நிலை உருவானது. இதன் விளைவாக 1930ஆம் ஆண்டின் இந்தி எதிப்புப் போராட்டத்தின் போது - காஞ்சி இந்தி எதிர்ப்பு மாநாட்டில் ஆந்திராவைச் சேர்ந்த சர்.கே.வி. ரெட்டி நாயுடு, கேரளாவைச் சேர்ந்த சர் எம். கிருஷ்ண நாயர் ஆகியோர் ஆக்கிய சொற்பொழிவுகள் காலமறிந்து வெளியிடப்பட்டுள்ளன.

'இந்தி பொது மொழியாகுமா?' என்ற சொற்பொழிவில் சர்.கே.வி. ரெட்டி நாயுடு,

> நிரந்தரமான ஒரு அகில இந்தியப் பொது மொழி சொப்பன உலகில்தான் இருக்க முடியும். தாய் மொழியைப் பாராட்டாதவன், தாய்மொழியைக் காட்டிக்கொடுத்த துரோகியாவான். ஏசுநாதரைக்

> கொஞ்சம் பணத்துக்காகக் காட்டிக்கொடுத்த ஜூடாஸ் என்று தாய் மொழியைக் காட்டிக் கொடுப்பவனை நாம் கூறுவோமாக. ஜூடாஸ் செய்த சதி காரணமாக ஏசுநாதர் கொல்லப்பட்டார். ஆனால் கிருஸ்து மார்க்கம் நிலைத்து நிற்கிறது. அது போன்றே திராவிட மொழிகளும் நிலைத்து நிற்கும்.

எனத் தன் கருத்தைக் கூறுகிறார். சர்.எம். கிருஷ்ணா நாயரின் 'இந்திக் கொடுமை' என்ற சொற்பொழிவும் இந்துத்தானி பொதுமொழியாவதை எதிர்க்கிறது.

இதே நோக்கத்தில் கருத்தில் மறைந்த பல்கலைப் புலவர் கா.சு.பிள்ளை அவர்கள் 26.12.37இல் ஆற்றிய (திருச்சி - தமிழர் மாநாட்டுத் திறப்பு விழாவில்) சொற்பொழிவு 'குளிர் செந்தீ' எனும் தலைப்பில் வெளியிடப்பள்ளது. டாக்டர் அ.சி. செட்டியார் அவர்களின் 'தாய் மொழி வழியாக உயர்தரக் கல்வி கற்பித்தல்' என்ற சொற்பொழிவும், தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் 'தமிழர்கள் பெருமை' என்ற சொற்பொழிவும் தமிழ் உணர்வூட்ட, காலமறிந்து வெளியிடப்பட்டுள்ளன.

ஈரோட்டில் 23.10.48இல் நடைபெற்ற தி.க. மாநாட்டில் கலைவாணர் ஆற்றிய சொற்பொழிவு - (காந்தியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து) 'அணையா ஜோதி' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிஞர்களின் சொற்பொழிவுகள், தமிழர்களுக்கு இனவுணர்வூட்டவும், கருத்து வளம் சேர்க்கவும் வெளியிடப்பட்டுள்ளன.

கவிதைகள்

புதுவாழ்வின் முதல் இதழின் முதற்பக்கமே புரட்சிக் கவிஞரின் வாழ்த்துக் கவிதையைத் தாங்கி வெளிவந்துள்ளது.

> 'திராவிடரின் நன்மைக்கே உழைப்போன்; எந்தத்
> தீமைக்கும் உளம் அசையான்; அறிவுமிக்கான்'

எனப் பேராசிரியரைப் பாராட்டி, புதுவாழ்வு இதழுக்கு வாழ்த்துக் கூறியுள்ளார் புரட்சிக்கவிஞர். புரட்சிக்கவிஞரின்,

> ஆங்கிலத்தைக் கற்கையிலும்
> அயல்மொழியைக் கற்கையிலும்
> எந்த நாளும்

தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்
ஏங்கவைக்கும் வடமொழியை
இந்தியினை எதிர்த்திடுவீர்
அஞ்ச வேண்டாம்"

எனத் தொடங்கும் 'மொழிப்போர் வெல்க' என்ற கவிதையும், இந்தியை எதிர்க்கத் தமிழர்களை அழைக்க, 'வாரீர்' என்ற தலைப்பில் குயில் ஏட்டில் வெளிவந்த அவருடைய கவிதையும் புதுவாழ்வு இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

புதுவாழ்வு இதழ்களில் 17 கவிதைகள் வெளிவந்துள்ளன. புரட்சிக்கவிஞரின் கவிதைகள் மூன்று.

இரா. குழூஉத்தலைவன் - புத்தம் புதுவாழ்வு, முழங்குக முரசம், வள்ளுவன் மகள் - 3

கருணா (கருணானந்தம்) - பொங்கும் புதுவாழ்வு, முடிவுண்டா?-2

நாரரா. நாச்சியப்பன் - எங்கள் வளநாடு, தீர்ப்புக்கூறு - 2

புலவர். பாலதண்டாயுதபாணி - சிறுவனும் காக்கையும் - 1
(நன்னிலம்)

ரவி - உழத்தி - 1

தமிழ் ஒளி - தாவி எழு - 1

உடுமலை நாராயணக்கவி - திராவிட மாநாடு வாழ்த்துக்கண்ணி-1

மணிநீலவன் - புவி மகிழ் கவிமுகில் (பாரதிதாசன் புகழ்) - 1

தமிழ்ப்பித்தன் - புதுமை கொள்தமிழா - 1

நலங்கிள்ளி - இது என்ன மதமோ? - 1

கவிதைகளில் பகுத்தறிவூட்டலும், இனவுணர்வூட்டலுமே உள்ளீடாகத் திகழ்கின்றன.

தமிழன் என்றொரு இனமுண்டா?
தனியே அவர்க்கொரு குணமுண்டா?
தமிழிற் பேசுவோர் யாவருமா?
தமிழ் நாட்டுள்ளவர் அனைவருமா?
இந்தி மொழியினைப் பேணுபவர்
எதிலும் வடமொழி காணுபவர்

சொந்தம் தமிழெனா நாணுபவர்
சூத்திரன் மொழியெனக் கோணுபவர்
இத்தனை பேரும் இந்நாளில்
யாமும் தமிழர் பன்னாளாய்
இத்தரை மீதில் வாழ்கின்றோம்
என்று தானே மொழிகின்றார்

என்னும் 'கருணா'வின் 'முடிவுண்டா?' என்ற கவிதையையும்,

மூக்கைத் தொட்டும் பகைவர்கள் வீழ
முணகிடும் மந்திரம் நம்மவர்க் கில்லை
நாக்கிடும் வடமொழி தாண்டவ மாடிட
நச்சிடும் வஞ்சகர் வேறின மென்றே (தீர்ப்புக்கூறிடு)

என்னும் நாரா. நாச்சியப்பனின் கவிதையையும் (தீர்ப்புக்கூறு),

எல்லாம் அவன் செயல் என்று தூங்காதே
எழுதிய பழமையில் மூழ்கி ஏங்காதே

என்னும் தமிழ்ப் பித்தனின் 'புதுமைகொள் தமிழா' என்ற கவிதையையும் சான்றுகளாகக் கொள்ளலாம்.

கதைகள்

புதுவாழ்வு இதழ்களில் அறிஞர் அண்ணாவின் 'ஜெபமாலை', இராதாமணாளனின் 'புதுவெள்ளம்', 'உறைந்த இரத்தம்', தி.க. நாகம்மாளின் 'நிர்மலா', ம. இராதாகிருஷ்ணனின் 'சாவா மருந்து', சரசா நாதனின் 'அவள்' - என 6 சிறுகதைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றுள் 'உறைந்த இரத்தம்' வரலாற்றுச் சிறுகதையாகவும் 'சாவா மருந்து' சீனமொழிச் சிறுகதையாகவும் அமைந்துள்ளன. 'புதுவெள்ளம்' என்ற சிறுகதை விதவை மணத்தை வலியுறுத்துகிறது.

சிறுகதைகள் மட்டுமன்றி இராதாமணாளனின் 'பொற்சிலை' என்ற தொடர்கதையும் 'புதுவாழ்வு' இதழ்களில் வெளிவந்தது. பிறகு நூலாகவும் வெளிவந்து தமிழுலகின் பாராட்டைப் பெற்றது.

பகுத்தறிவும் தமிழுணர்வுமே கதைகளின் குறிக்கோள்களாகப் பொலிகின்றன.

> என் இளமையையும், உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சியையும் உடலின் துடிப்பையும் சமுதாயம் விதவை என்ற சாட்டையினால் அடித்து அடக்கப் பார்க்கிறது

என்று ஒரு விதவைப் பெண்ணை, 'புதுவெள்ளம்' என்ற சிறுகதையில் பேசவைத்துள்ளார் இராதாமணாளன்

மொழியாக்கப் படைப்புகள்

உலகின் பல்வேறு அறிஞர்களைப் பற்றியும், உரிமைப் போராட்டங்கள் பற்றியும் தமிழர்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தில் பல மொழியாக்கப் படைப்புகளைப் புதுவாழ்வு இதழ்கள் வெளியிட்டன.

உண்மை அறிவியலின் இன்றியமையாத பகுதி பரிசோதனை (Experiment) என்பதைக் கண்டுரைத்த அறிஞர் பேகனின் வாழ்க்கை வரலாற்றையும் அறிவியல் முயற்சிகளையும் அழகு தமிழில் தருகிறது அறிவழகனின் 'அறிவியல் தந்தை ரோஜர் பேகன்' என்ற கட்டுரை.

புற்றுநோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தும் ரேடியத்தைக் கண்டுபிடித்த 'கியூரி'யின் வாழ்க்கை வரலாற்றைச் சுவையாகத் தருகிறது மு. குழந்தைவேலனின் 'மாதரசி கியூரி' என்ற கட்டுரை.

வட அமெரிக்காவின் வடபகுதியில் இனவெறியை எதிர்த்துப் போராடிய 'ஜான்பிரௌனின்' வரலாற்றைத் தருகிறது இளவழகனின் கட்டுரை.

பிரெஞ்சு இலக்கிய மேதைகளான வால்டேரும் - ரூசோவும் ஒன்றுபட்டிருந்தால் இன்னும் பயன் கிடைத்திருக்கும் என்பதை ஆழமாக விதந்துரைக்கிறது 'கழல்' எழுதிய 'ஒன்றுபட்டிருந்தால்' என்ற கட்டுரை.

கே.ஏ. மதியழகனின், புரூனோ வரலாற்றைக் கூறும் 'புரட்சிவீரன் புரூனோ' என்ற கட்டுரையும், கிரேக்கத்தின் பண்பாட்டு கூறுகளை விளக்கும் 'கிரேக்கத்தின் கீர்த்தி' என்ற கட்டுரையும் குறிப்பிடத்தக்க மொழியாக்கப் படைப்புகளாக அமைந்துள்ளன.

அறிவியல் கட்டுரைகள்

புதுவாழ்வு இதழ்களின் படைப்புகள் பலவற்றில் மூடநம்பிக்கை ஒழிப்பு என்ற நோக்கத்தில் அறிவுத்துறைச் சீர்த்திருத்தம் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும், முழுமையும் அறிவியல் பாங்கில் இரண்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. 'வான மண்டலம்' என்ற கட்டுரை, வானமண்டலத்துக் கோள்களைக் கொண்டு - சோதிடம் சொன்னது - நம் நாட்டவர் சூரியனைப் பகவானாக்கியது - வான மண்டலத்தைத் தெளிவாக அறிய எகிப்தின் தலைநகர்

அலெக்ஸாண்டரியாவில் கி.பி. 2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அறிஞன் டாலமி மேற்கொண்ட முயற்சிகள் - 17ஆம் நூற்றாண்டில் வானியல் ஆய்வு மேற்கொண்ட கலிலியோ சந்தித்த துன்பங்கள் - எனப் பல தகவல்களையும் கோள்களைப் பற்றிய அறிவியல் உண்மைகளையும் எடுத்து, நம் நாட்டவர் அறிவியல் ஈடுபாடு காட்டாமையைப் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறது:

> நம் நாட்டவரோ கலீலியோவை, அவர் கருத்தை இன்றுங்கூட மறுக்கவில்லை. தெரிந்தால்தானே மறுக்க! நம் நாட்டவர்க்குக் கலீலியோவா தெரியும்? காலட்சேபம்தானே தெரியும்! இரவு, பகல் பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால் ஏற்படுவது என்பது தெரியாது நம்மவருக்கு. ஆனால் மேருமலையைச் சூரியன் சுற்றிவருவதால் உண்டாகும் நிழலே இரவு பகல் என்று பேசுவார்கள். தட்பவெப்ப மாற்றம் சூரியனைப் பூமி ஒரு நீண்ட வட்டத்தில் அச்சு சாய்ந்து சுற்றுவதால் உண்டாகிறது என்பதை அறியார்கள். சூரிய பகவானின் கோபமும் வருண பகவானின் கோபமுமே என்று பகர்வார்கள். பூமியின் இழுப்புச் சக்தி தெரியாது, சொன்னாலும் புரியாது. பூமி மகாவிஷ்ணுவின் மனைவியாக இருந்த செய்தி தெரியும். ஒன்பதாவது கோளுக்குமேல், பத்தாவது கோளான 'புளூடோ' கண்டுபிடிக்கப்பட்டதை நம்ப மாட்டார்கள். மேலேழுலகம் கீழேழுலகம் அவர்கள் போய் வந்த இடம் போல் பேசுவார்கள்.

'அங்கும் இங்கும்' என்ற தலைப்பில் நா. சகந்நாதன் என்பவர் எழுதிய அறிவியல் கட்டுரையும் இதே பாங்கில் மேலை நாடுகளின் அறிவியல் கண்டுபிடிப்புகளை விளக்கி, நம் நாட்டவரின் மூட நம்பிக்கைகளை எள்ளி நகையாடுகிறது.

செய்திகள்

புதுவாழ்வு இதழ் தொடங்கியமைக்குத் தந்தை பெரியாரும் கலைவாணரும் தந்த வாழ்த்துச் செய்திகள் இரண்டாம் இதழில் இடம்பெற்றுள்ளன.

காந்தியார் கொலை செய்யப்பட்டபோது தந்தை பெரியார் வெளியிட்ட இரங்கல் செய்தியும் 'கவிஞர் இரங்கல்' என்ற தலைப்பில்

புரட்சிக் கவிஞரின் இரங்கல் செய்தியும் 'அறிஞர் துக்கம்' என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணாவின் இரங்கல் செய்தியும் 'கலைஞர் கலக்கம்' என்ற தலைப்பில் கலைவாணரின் இரங்கல் செய்தியும் இடம் பெற்றுள்ளன. காந்தியாரைப் பற்றி உலகின் 83 அறிஞர்கள் தந்த செய்திகள் 'உலகினரின் புகழ்மாலை' என்ற தலைப்பில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

'புதுவாழ்வு' இதழின் துணையாசிரியர் இராதாமணாளனின் தந்தையார் இறப்புக்கு இரங்கல் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இடைக்காலத் துணை வேந்தராக டாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார் நியமிக்கப்பட்டபோது அவரைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவிக்கும் செய்தி 'பாராட்டுகிறோம்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

பெட்டிச் செய்திகள்

புதுவாழ்வு இதழ்களில் 3 செய்திகள் கவனத்தை ஈர்த்து, படிப்பவர்களைச் சிந்திக்கச் செய்யும் முறையில் கட்டங்கள் அமைத்து வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் 2 பண்டிதநேருவின் கருத்துகள். மற்றொன்று 27.3.38இல் காஞ்சியில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் சர். கூர்ம வெங்கட்ட ரெட்டி நாயுடு அவர்கள் ஆற்றிய தலைமையுரையின் ஒரு சிறு பகுதியாகும்.

'ஆரிய திராவிடப் போராட்டமே, இராமாயணம்' என்னும் பண்டித நேருவின் கருத்து, 'இராமாயணத்தின் இனவெறி' எனத் தலைப்பிட்டு அளிக்கப்பட்டுள்ளது.

பண்டித நேரு தன் மகளுக்கு எழுதிய கடிதத்தில் 'இந்தியாவின் மிகப் பழைமையான இனம் திராவிட இனம் - இன்றும் திராவிடப் பரம்பரையினரே தென்னிந்தியாவில் வசிக்கின்றனர் - இவர்கள் உயர்ந்த நாகரிகத்தை உடையவர்களாக விளங்கினார்கள்' என்ற கருத்துகளை எழுதினார். இவ்வாறு கருத்துரைத்த பண்டித நேருவின் 'சீடர்களோ' இதைக் கருதிப்பார்ப்பதில்லை. முற்றிலும் இக்கருத்துக்கு முரண்பட்டுச் செயற்படுகிறார்கள் என்பதை இயக்கத் தோழர்களுக்கு உணர்த்தும் முறையிலும், நேருவின் சீடர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும் என்னும் முறையிலும் எதிர்ப்பார்ப்பிலும் 'அவரது சீடர்களுக்கு' எனத் தலைப்பிட்டு மேற்கூறிய கருத்துகள் பெட்டிச்செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

'அரசின் இந்தி புகுத்தும் திட்டத்தைக் கொண்டுவருகால் வங்காளப் பிரிவினையின்போது நாடு சந்தித்த விளைவுகளை மீண்டும்

தமிழ் மாகாணத்தில் சந்திக்க நேரிடும்' என்று சர். கூர்மவெங்கட்ட ரெட்டி நாயுடு கூறியது இந்தி எதிர்ப்புக் கருத்தாக்கத்திற்கு வலிவூட்டும் வகையில் பெட்டிச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

நூல்கள் – இதழ்கள் – மதிப்புரைகள்

புதுவாழ்வு இதழ் வெளிவந்த காலத்தில், இயக்கத்தைச் சார்ந்தவர்களும், பிறரும் வெளியிட்ட நூல்களுக்கும், இதழ்களுக்கும் மதிப்புரை வழங்கி, புதிய வரைவுகளை ஊக்கப்படுத்தியுள்ளது.

'உரைகல்' என்னும் நூல் மதிப்புரை வழங்கும் பகுதி புதுவாழ்வின் 10 இதழ்களுள் 7 இதழ்களில் வெளிவந்துள்ளன. சில இதழ்களில் 4(அ) 5 பக்கங்கள் வரையிலும்கூட அச்சாகியிருக்கின்றன.

புதுவாழ்வு வெளிவந்த ஓராண்டு காலத்தில் 47 நூல்களுக்கும் 29 இதழ்களுக்கும் மதிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது. மதிப்புரை வழங்குவதிலும் இயக்கத்தின் கொள்கை பிறழாது கருத்துக்களைத் துணிவுடன் கூறியிருப்பதை ஒரு சான்றின் வழி அறியலாம்:

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் 'தமிழ்த் தொண்டன்' என்ற திங்களிதழை மதிப்பிட்ட புதுவாழ்வு,

> தமிழ்த் தொண்டாற்றும் தகுதிகள் யாவும் பெற்ற ஆசிரியரைக் கொண்டு வெளிவரும் இவ்வெளியீடு - சமயத் தொண்டையும் தமிழ்த் தொண்டென்று மயங்காது என எண்ணுகிறோம். 'தமிழ்' இன்று சிறைக்கஞ்சா சிங்கங்களைத் தனது தொண்டாற்ற அழைக்கிறது. 'தமிழ்த்தொண்டன்' அத்தகு வீரர் வரிசையில் நின்று நிலவ வேண்டுமென விழைகின்றோம்.

என மதிப்புரை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

திரைப்படத் திறனாய்வு

'திரைக்காட்சி' என்ற தலைப்பில் 'ஞானசௌந்தரி' என்ற ஒரு திரைப்படத்திற்கு மட்டும் புதுவாழ்வு திறனாய்வை வழங்கியுள்ளது.

> பழைய போக்கிலே அமைந்துள்ள கதையே யானலும் படமெடுத்துள்ள முறை பாராட்டக்கூடியதாகவே இருக்கிறது

என்பது அத்திறனாய்வின் மையக் கருத்தாகத் திகழ்கிறது.

விளம்பரங்கள்

புதுவாழ்வின் 10 இதழ்களில் மொத்தத்தில் 41 விளம்பரங்கள் வெளிவந்துள்ளன. இவற்றுள் புதுவாழ்வு இதழின் விலை - விவரங்கள் தொடர்பானவை 7; வணிகமுறையில் அமைந்தவை 7; திரைப்பட விளம்பரங்கள் 6; நாடக விளம்பரங்கள் 3; இயக்க மாநாட்டின் அறிவிப்பு விளம்பரம் 1; புத்தக விளம்பரங்கள் 17. புத்தக விளம்பரங்களால் - விளம்பரப்படுத்தப்பட்டுள்ள நூல்களும் இதழ்களும் 39. இவ்விவரங்களைக் காணும்போது, அறிவூட்டல் பணிக்கே முதலிடம் கொடுத்துப் புத்தக விளம்பரங்களை அதிகமான எண்ணிக்கையில் புதுவாழ்வு வெளியிட்டுள்ளது எனக் கருத முடிகிறது. இதன் வழியாகப் புதிய நூல்களைத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்தும் தொண்டை, புதுவாழ்வு சீரிய முறையில் செய்திருக்கிறது.

முடிவுரை

இக்காலத்தில் இதழியல் ஆய்வின் எல்லைகளும், முறைகளும் பரந்து, விரிந்துள்ளன என்பது கண்கூடு. எனினும் 50 ஆண்டுகளுக்கு முன்பு (1948) வெளிவந்த புதுவாழ்வு இதழை, இன்றைய நிலையில் தேவையான முறையில் மீளறிமுகப் படுத்துவது இதழியல் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும் என்ற நோக்கத்தில், மேற்கூறிய வகைகளில் ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

ஓராண்டில் 10 இதழ்கள் மட்டுமே வெளிவந்த புதுவாழ்வு இதழியல் துறைக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகத் திகழ்வது மட்டுமன்றி, பல்லாண்டுகள் தமிழர்களிடம் நிலைத்து நிற்க வேண்டிய பகுத்தறிவையும் மொழி இன உணர்வையும் மனித நேயத்தையும் ஒற்றுமையையும் வளர்க்கப் பெருந்தொண்டு புரிந்துள்ளது என்பதில் ஐயமில்லை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறை
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம்

இணைந்து நடத்தும்

திராவிட இயக்க இதழ்கள் கருத்தரங்கம் – 1

அழைப்பிதழ்

(இதழியல் கருத்தரங்கம் – 3)

அன்புடையீர்,

வணக்கம்.

திராவிட இயக்க இதழ்கள் என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத்துறையில் (மெரினா வளாகம், திருவள்ளுவர் சிலை எதிரில்) 6-2-1998, 7-2-1998 ஆகிய இருநாள்களில் நடைபெற உள்ளது.

அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

இயக்குநர்
டாக்டர் மா. இராசமாணிக்கனார்
இதழியல் ஆய்வு மையம், சென்னை

முனைவர் ச. நாகராசன் அவர்கள்
(இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை)

தலைமையில்

6-2-1998 அன்று முற்பகல் 10.00 மணியளவில்

பேராசிரியர் மா. இளஞ்செழியன் அவர்கள்
(முன்னாள் முதல்வர், கந்தசாமி நாயுடு கல்லூரி, சென்னை)

கருத்தரங்கத்தைத் தொடங்கிவைப்பார்கள்

*

முனைவர் பொற்கோ அவர்கள்
(தலைவர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்)

தலைமையில்

7-2-1998 அன்று பிற்பகல் 5.00 மணியளவில்

திருமிகு வே. ஆனைமுத்து அவர்கள்

கருத்தரங்க நிறைவுரை நிகழ்த்துவார்கள்

முதல் அமர்வு

6-2-1998 முற்பகல் 11.00 - 1.00

தலைமை :
முனைவர் இரா. இளவரசு

கட்டுரையாளர்	தலைப்பு
பேராசிரியர் இறையன்	விடுதலை
முனைவர் கு. விவேகானந்தன்	திராவிட நாடு
திரு. பி.எல். இராசேந்திரன்	முரசொலி

இரண்டாம் அமர்வு

6-2-1998 பிற்பகல் 2.00 - 5.00

தலைமை :
முனைவர் இ. சுந்தரமூர்த்தி

கட்டுரையாளர்	தலைப்பு
திரு. கூ.வ. எழிலரசு	புதுவாழ்வு
முனைவர் ந. கடிகாசலம்	முத்தாரம்
திரு. மா.ரா. அரசு	சண்டமாருதம்
முனைவர் ப. மகாலிங்கம்	போர்வாள்

மூன்றாம் அமர்வு

7-2-1998 முற்பகல் 11.00 - 1.00

தலைமை :
திரு. இரா. பரதன்

கட்டுரையாளர்	தலைப்பு
முனைவர் ந. அரணமுறுவல்	மன்றம்
திரு. கயல்தினகரன்	தென்றல்
முனைவர் ச. பார்த்தசாரதி	பொன்னி
முனைவர் மலையமான்	புதுவை முரசு

நான்காம் அமர்வு

7-2-1998 பிற்பகல் 2.00 - '5.00

தலைமை :
திரு. 'கதிர்' ப. புகழேந்தி

கட்டுரையாளர்	தலைப்பு
திரு. பெ.சு. மணி	திராவிடன்
திரு. குருவிக்கரம்பை வேலு	இதழாளர் குருசாமி
திரு. இ. திருவள்ளுவன்	இதழாளர் இலக்குவனார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

தமிழர் கண்ட தாவரவியல்	40.00
திருவாவடுதுறைப் புராணம்	250.00
இலக்கிய இதழ்கள்	110.00
இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3	60.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
சித்தாந்தச்செல்வர் க. வெள்ளை வாரணனார்	25.00
தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள்	25.00
வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை	25.00
இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி	35.00
தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும்	25.00
இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்	40.00
பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும்	80.00
தமிழெனப்படுவது	115.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல்	105.00
வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும்	70.00
தொல்லியல் நோக்கில் சங்ககாலம்	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை)	45.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900)	70.00
பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்	35.00
திருமணம் செல்வக்கேசவராய முதலியார்	30.00
அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்	55.00
சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார்	40.00
மூதறிஞர் மு. இராகவையங்கார்	40.00
ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு	30.00
தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை	50.00
அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா	50.00
ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார்	45.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1	80.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2	85.00
இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3	95.00
திராவிட மொழி இலக்கியங்கள்	180.00
நாவல்கலையியல்	50.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள்	40.00
அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி	60.00
சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும்	30.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் இலக்கியம்	100.00
தமிழக வரலாறு மக்களும் பண்பாடும்	125.00
தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல்	25.00
தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு	50.00
நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும்	60.00
தமிழ்ச் சுருக்கெழுத்து நூல்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	75.00

541 **திராவிட இயக்க இதழ்கள் -1** ***60.00***